அசலும் நகலும்

ஆசிரியர்

ஆ. முத்துசிவன், B. A., (Hon's)

விரிவுரையாளர்

ம. தி. தா. இந்து கலாசாலை, திருநெல்வேலி



காரைக்குடி சென்னை

முதற் பதிப்பு : ஜூலை, 1947

M. I. P. PROJECT
Microfilmed.

விலை ரூபாய் மூன்று

[உரிமை பதிவு]

Printed at Salem Lakshmivilas Prees for Nawayuga Prachuralavam M.S.R. 68

பதிப்புரை

அசலும் நகலும், அழகின் மர்மம், துன்பம், கம்பர் காட்டும் மதம் ஆகிய நான்கு சுவை மிகுந்த கட்டுரைகளே இப்புத்தகத்தை அழகுபடுத்துகின்றன.

அருள் நிறைந்த ஜாதியானன கவிஞனையும், அவன் தன் கற்பனை மிகுந்த கவிதையையும் கண்டனம் செய்யும் ஆசிரியர் பிளேட்டோவின் வாதங்களைத் தவிடு பொடியாக்கும் பொருள் செறிந்த விமர்சனக் கட்டுரையே இப்புத்தகத்தின் தலைப்பு. 'புத்தம் புதிய கலைகள் மேத்த வருகுது தமிழில்' என்ற சொல்லுக் கிணங்க இது ஒரு புது சிருஷ்டி. தமிழ் நாட்டில் இதற்கு நல்ல வரவேற்பு இருக்கும். மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் இவ் அறிவுரைகள் மக்களுக்கு நல்ல பயன் தரும் என்பது எங்கள் எண்ணம்.

அறிவாற்றலும் அடக்கமும் மிகுந்த ஆசிரியருக்குத் தம்முடைய கட்டுரைகள் பெருமைப்படுத்திப் பேசுவதற்குரியனவாக இல்லாதிருக்கலாம். ஆனால், நாங்கள் இக்கட்டுரைகளை வெளியிடுவதில் அளவிலாப் பெருமை அடைகின்றோம். இவற்றை வெளியிட உரிமை தந்த அன்பு கனிந்த நண்பர் ஆ. முத்துசிவன் அவர்களுக்கு எங்கள் இதயம் கனிந்த நன்றி.

சென்னை
31-7-47

டி. ஆர். அருணாசலம்

உள்ளுறை

அசலும் நகலும் 1

அழகின் மர்மம் 75

அன்பம் 144

கம்பர் காட்டும் மதம் 223

ஆசிரியர் முகவுரை

மெத்த உணர்ந்த மேதையிலிருந்து இக்கட்டுரைகள் உதயமாகி விடவில்லை. அப்படி யெல்லாம் பகட்டிக் கொள்வதற்கு என் மனம் மறுக்கின்றது. மற்றும் அன்பர்கள் பலருடைய வேண்டுகோளின் பயனுகவும் வெளியாகிவிடவில்லை. ஏன் இல்லாததைச் சொல்ல வேண்டும்? இவைகளின் தோற்றத்திற்கு ஒரே ஒரு காரணந்தான் உண்டு. புதிய விஷயங்களைப் புகுத்தவேண்டும். நெட்டையோ கட்டையோ அதைப்பற்றி அத்தனை அக்கறை கிடையாது. புகுத்தப்படும் விஷயம் புதிதாக இருக்க வேண்டும். பழைய விஷயமானாலும் புது மோஸ்தரில் அமைய வேண்டும். இந்த ஒரு அடிப்படையான காரணத்தை மதித்துத்தான், ஏதோ எனது அறிவு எனக்குத் துணை செய்த அளவில், இந்நூலில் காணப்படும் நான்கு கட்டுரைகளையும் எழுதியிருக்கின்றேன்.

மறுமலர்ச்சி வேகம் பிரமிக்கும்படியான கதியில், பரவி வருகின்றது. மாமூல் கோட்டைகள் நொறுங்குகின்றன. பழமையின் கொடுங்கோல் ஆட்சி பதுங்கிப் பதுங்கி மறைகின்றது. நம்பக்கூடியதை ஏன் நம்ப வேண்டும், விரும்பக்கூடியதை ஏன் விரும்பவேண்டும், வெறுக்கக்கூடியதையும் ஏன் வெறுக்க வேண்டும் என்றுள்ள மனே நிலை நாளும் நாளும் தடித்து வருகின்றது—காலம் போகிற போக்கைப் பார்த்தால் ஆலயங்களில் இனிமேல் விக்ரகங்களுக்கே இடமிருக்காது என்று

தான் தோன்றுகிறது. அவைகளின் ஸ்தானத்தை 'ஏன்' என்ற (?) கேள்வி அடையாளமே கவர்ந்து கொள்ளும் போலும்! கேள்வி அடையாளத்தைப் பாராட்டி இனி மேல் பிள்ளைத் தமிழும் மற்றும் பிரபந்தங்களும் எழுவதானால் ஆச்சரியங் கொள்வதற்கில்லை.

ஆயிரம் இருந்தாலும் காலப்போக்கை மதிக்கவேண்டும் என்பது என்னுடைய கோட்பாடு. அதனை எத்தனை தூரம் மதித்திருக்கின்றேன் என்பதை அளவிடும் அளவு கோலே இந்நூலிலுள்ள நான்கு கட்டுரைகளும். குணம் குறைவாகத் தான் இருக்கும். எனினும் சொற்பமாகக் காணப்படும் அதுவும், மென்மேலும் ஆராய்ந்து அறிவதற்குரிய நாட்டத்தை எழுப்புமேயானால் அதுவே நான் பெறும் பேறு. அந்த நாட்டத்தை எழுப்பவே நான் பாடுபட்டிருக்கின்றேன்.

வண்ணார்பேட்டை
திருநெல்வேலி
23-7-47

ஆ. முத்துசிவன்,
ஆசிரியன்.

அசலும் நகலும்

அசலும் நகலும் என்ற தலைப்பு ஓரளவு வேடிக்கையாகத்தான் தோன்றும். ஆனாலும் தத்துவக் கண்ணோடு பார்க்கும்போது பொருள் நிறைந்த தலைப்பாகவே காணப்படும்.

ஆசிரியர் பிளேட்டோ, தமது 'இலக்கிய உலகம்' (Republic) என்ற நூலில் எத்தனையோ விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சிசெய்து தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொண்டு வருகிறார். அத்தனை விஷயங்களிலும் நமது தலையங்கத்திற்கு மிகவும் பொருத்தம் உடையதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டியது கவிதை.

கவிதை பற்றி ஆராய்ச்சி செய்யும்போதுதான் அசலும் நகலும் என்ற தலைப்பை நாம் பரிசீலனை செய்ய வேண்டிய திருக்கிறது.

இதோ இந்த வியாசத்தை எழுதுகின்ற பேனா அசல். பத்திரிகையில் அதை விளம்பரம் செய்வதற்காக எழுதப்பட்டுள்ள படம் நகல். உயிரோடிருக்கின்ற ஒரு ஜந்து அசல். அதனுடைய உருவத்தைக் கொண்டுள்ள படம் நகல். ஆசிரியர் பிளேட்டோவின் நியாயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் பூர்வாங்கமான இந்தப் பாகுபாட்டை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

கலையின் உற்பத்திக்கு ஆயிரம்பேர் ஆயிரம் நியாயங்களைக் கூறுகின்றனர். ஆனால் பிளேட்டோ ஒரே ஒரு

நியர்யத்தை மிக அழுத்தமர்கக் கூறுகின்ரூர். மற்றும் அதை அடிப்படையர்க வைத்துக்கொர்ண்டுதான் கவி தைக் கண்டனத்தையே தொடங்குகின்ரூர்; முடிக்கவும் செய்கின்ரூர்.

அது யாது? கலே என்பது அசலுக்கு நகல் திரட்டும் வித்தை. எந்த ஒரு பொருளையும் படி எடுப்பதாகும். படி எடுப்பதை வர்ர்த்தையின் மூலமும் சாதிக்கலாம், வர்ணத்தின் மூலமும் சர்திக்கலாம். இன்னும் எத்தனே யோ முறைகளும் உண்டு. முறையில்தான் மாறுபர்டே யொழிய மூலத்தில் மாறுபர்டு கிடையாது. மூலம் என்பது அசலுக்கு நகல் திரட்டுதல்தான்.

இனிமேல் தர்க்க ரீதியாக அவர் கூறும் நியர்யங் களைப் பர்ர்ப்போம்.

படுக்கை என்ற ஒரு பொர்ருளை எடுத்துக் கொள் வோம். இமயம் முதல் குமரி வரை அந்தப் பொருளுக்கு வழங்கும் பெயர் படுக்கைதான். இப்படி எல்லோ ராலும் எக்காலத்தும் ஒரே பெயரில் ஒரு பொர்ருள் வழங்கப்படுமர்னல் அதை நர்ம் ஒரு சின்னமாக மதிக்க வேண்டும். எதன் சின்னமர்க மதிக்கவேண்டும் என்ற கேள்வி இப்பொழுது எழுகின்றது. அதாவது படுக்கை என்று கருத்தளவில் இருக்கின்ற தத்துவத்தைக் காட்டும் சின்னமாக மதிக்கவேண்டும்.

இரண்டு உண்டு. ஒன்று கருத்துப் பொருள். அதையே நர்ம் தத்துவம் என்கின்ரோம். மற்ரென்று காட்சிப் பொர்ருள். அதை நர்ம் மேலே குறிப்பிட்ட கருத்துப் பொர்ருளைக் குறிக்கும் சின்னம் என்கின்ரோம். இக்கருத்துப் பொருள், அதாவது படுக்கை என்ற தத்துவம், கடவுளுக்குச் சொந்தமானது. மற்றும்

படுக்கை என்ற காட்சிப் பொருளாக நாம் காண்கின்றோமல்லவா, அந்தக் காட்சிப் பொருளின் ஆதியும் அதுதான். இந்த ஆதியை அசல் என்று வழங்குவோம். அதை முன் - மாதிரியாக (Model) வைத்துக்கொண்டு, தச்சன் செய்த படுக்கை இருக்கிறதே, அதை நகல் என்று வழங்குவோம்.

மேலே குறிப்பிட்ட அசல் நகலோடு கதியம் நின்று விடுகிறதா? அப்படியானால்தான், விவகாரமே கிடையாதே! ஊடே வருகின்றான் சைத்திகன். அவன் படுக்கையை வரைகின்றான். அவனுடைய படத்திற்கு எதை முன் - மாதிரியாக வைத்துக்கொள்கின்றான் என்றால் தச்சன் செய்த படுக்கையை.

இங்கேதான் பிளேட்டோவின் தாக்குதல் ஆரம்பமாகிறது. எப்படித் தாக்குகிறார் என்பதைப் பார்ப்போம்.

படுக்கை என்ற தத்துவம்தான் ஆதியானது. அது கடவுளுக்குச் சொந்தமானது. அதுதான் அசல். தச்சன் செய்த படுக்கை அதனுடைய நகல். சைத்திகன் வரைந்த படுக்கை அந்த நகலுக்கு நகல். "படி ஒன்று. படி இரண்டு. படி மூன்று. இந்த மூன்றும் படிச் சின்னம் எதற்கு? அது அநாவசியமானது" என்கிறார் பிளேட்டோ.

அம்மட்டோடு விட்டுவிட்டாரா? இல்லை. அதைத் தொடர்ந்து கிரசாரமாகத் தாக்குகின்றார். 'Imitative art' என்ற தொடரைக் கையாளுகின்றார். நாம் அதை, அநேக வசதிகளை உத்தேசித்து, 'நகல்-கலை' என்று வழங்குவோம். அதாவது அசல் ஒன்று இருக்கிறது. அதன் தோற்றத்தை அப்படியே படம் பிடித்த மாதிரி

உருவாக்கும் கலை, நகல் - கலையாகும். இந்த நகல் - கலையைப்பற்றிக் குறிப்பிடும்போது அவருக்குத்தான் எத்தனை கசப்பு! "நகல் - கலை மிக மட்டமான கலை - மட்டமான பொருளோடு கூடி மட்டமான பலனைத் தரக்கூடியது" என்கிறார். (Imitative art is an inferior which marries an inferior and has inferior offspring)

"தேவர் அனையர் கயவர்"

என்று வள்ளுவர் கூறுவதில் எத்தனை இகழ்ச்சி தொனிக்கிறதோ, அத்தனை இகழ்ச்சி தொனிக்கிறது, நகல் - கலைஞனை சைத்ரிகனை ஆண்டவனோடு ஒப்பிடும் போது. ஏனென்றால் பிளேட்டோ அவனை ஆண்டவனோடு ஒப்பிட்டு நையாண்டி செய்கிறார். ஆண்டவன் எல்லாப் பொருள்களையும் படைக்கின்றான். இவனும் எல்லாப் பொருள்களையும் வரைந்து விடுகின்றான். பார்த்தவர்கள் எல்லோரும் இது மரம், இது மலை, இது மாடு என்று சொல்லி விடுகிறார்கள். கடவுளைப் போன்று இவனும் படைப்பதனால் இவனும் கடவுளுக்கு நிகர் தான். இப்படியாக, பாவம், சைத்ரிகனை நையாண்டி செய்துவிட்டு அவனுடைய கலையிலுள்ள குறையை எடுத்துக்காட்டுகின்றார்.

குதிரைச் சேணம் ஒன்றிருக்கிறது. அதனுடைய படம் ஒன்றும் இருக்கிறது. குதிரைச் சேணத்தினுடைய நிறை குறை, இன்னும் அது பற்றிய மர்மங்கள் எல்லாம் மிக நன்றாகவும் நுட்பமாகவும் யாருக்குத் தெரியும் என்றால் குதிரைக்காரனுக்குத்தான். ஏனென்றால், அவன்தான் அதை எப்பொழுதும் உபயோகிக்கின்றான். சைத்ரிகனுக்கு அந்தச் சேணத்தினுடைய உபயோக மர்மங்களெல்லாம் தெரிய வேண்டிய

அவசியமே கிடையாது. பேசாமல் அதை முன்-மாதிரியாக மட்டிலும் வைத்துக்கொண்டால் போதுமானது. படம் வரைந்து விடலாம்.

பார்க்கின்றவர்களும் தட்டுத் தடையின்றி அது சேணந்தான் என்று சொல்லிவிடுவார்கள். அம்மட்டோடு சரி. அவனுடைய கலை வெற்றிபெற்று விட்டது. இந்த இடத்தில் துர்வாச முனிக்குக் கோபம் வந்த மாதிரி கோபம் வருகிறது பிளேட்டோவுக்கு. "மகா பாவி, படத்தைக் காட்டிப் படத்தைக்காட்டி எத்தனை பேரை ஏமாற்றி விடுகின்றான். பார்த்தவர்களெல்லோரும் இதை வரைந்த சைத்திகன் சேணத்தின் மர்மங்களையெல்லாம் தெரிந்திருக்கிறான் என்று எண்ணிக் கொள்ளும்படியல்லவா ஏமாற்றுகின்றான்! பாவம், பொது மக்களுக்கு அந்தரங்கம் என்ன என்று தெரியுமா? இந்த ஆசாமி வரைகிறதெல்லாம் வெறும் தோற்றத்தை வைத்துக்கொண்டுதான் என்பதை யெல்லாம் ஆழ்ந்து சிந்திக்கவா போகின்றார்கள்? இப்படி ஊரை ஏமாற்றுகிறானே! இவன் என்னுடைய இலக்கிய உலகில் அடியெடுத்து வைக்கக் கூடாது" என்கிறார்.

கையாளுகின்ற பொருளின் மர்மங்களை உணர்ந்து கொள்ளாது, வெறும் வெளித் தோற்றத்தை வைத்துக் கொண்டு, அந்தத் தோற்றத்திற்கு நகல் திரட்டுவதால் என்ன புண்ணியம் என்பதுதான் அவருடைய சித்தாந்தம். இப்படிக் கொள்வதற் கெல்லாம் மூலகாரணம் வேறு ஒன்றும் இல்லை. கலை என்பது அசலுக்கு நகல் திரட்டும் வித்தை என்று கொண்டதனால்தான்.

இதே வெறியோடு கவிஞனையும் தாக்குகின்றார். அவனையும் தமது இலக்கிய உலகத்திற்குள் வரவிடாத

படி விரட்டுகின்றார். இனி அவன்மேல் சுமத்தும் குற்றச்சாட்டு என்ன என்பதைப் பார்ப்போம்.

கவிஞனும் சைத்ரிகன் கூட்டத்தைச் சார்ந்தவன். நகல் - கலைஞன். அவன் வர்ணங்களைத் துணைக் கொண்டு எல்லோரையும் மயக்குகின்றான். இவன் வார்த்தைகளையும் சந்தங்களையும் கொண்டு மயக்குகின்றான். அவன் காட்சிப் பொருள்களை முன் - மாதிரியாக வைத்துக்கொண்டு உருத்தீட்டுகின்றான். இவனும் மக்கள், மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆகிய பொருளையே முன் - மாதிரியாகக் கொண்டு, சொல், சந்தம் ஆகிய இவற்றின் துணையால் சித்திரிக்கின்றான். இவனுடைய பகட்டிலும் மக்கள் ஏமாந்துவிடுகின்றார்கள். உதாரணமாக ஒரு பொருளை எடுத்துக்கொள்வோம். தூரத்திலிருந்து அதைப் பார்த்தோமானால், அது சிறிதாகத் தோன்றும். பக்கத்திலிருந்து பார்த்தால் பெரிதாக இருக்கும். நீருக்குள்ளே அதன் நிழலைப் பார்த்தால் வளைந்து வளைந்து தோன்றும். அதை விட்டுவிட்டு வெளியே பார்த்தால் உள்ளது உள்ளபடி தோன்றும். பார்க்கப்படும் பொருள் ஒன்று தான். அது ஒரே நிலையில்தான் இருக்கின்றது. ஆனாலும் பார்வை முறைகளினால் கட்டையாகவும், நெட்டையாகவும், வளைந்தும், உள்ளது உள்ளபடியாகவும் தெரிகின்றது: இம்மாதிரியே விஷயங்களும் கவிதை வடிவத்திலே உருமாறி வரும் போது பல படியான ஏமாற்றத் தோற்றத்தோடு விளங்கும். எல்லாம் வார்த்தைகளும் சப்தமும் செய்கிற ஜாலவித்தை. இப்படியெல்லாம் சொல்லித் தாக்குகிறார். இம்மட்டோடு படையெடுப்பை நிறுத்தி விட்டாரா என்றால், இல்லை. இனி அடுத்த படையெடுப்பு எப்படியென்பதைப் பார்ப்போம்.

கிரேக்க மகர் கவியாகிய ஹோமரைத் தமது அஸ்திரங்களுக்கு இலக்கர்க வைத்துக்கொண்டு கவிதை - சம்ஹார்த் திருப்பணியை மேற்கொள்கின்றார்.

ஹோமரையே இலக்காக வைத்துக்கொண்டாலும், பிளேட்டோ அடுக்குகின்ற குற்றச்சாட்டுகள் பொதுவாக எல்லா மகர் கவிகளுக்கும் பொருந்தும்.

கவிஞர்கள் தங்களுடைய காவியங்களிலோ நாடகங்களிலோ, பிரமாதமாக அரசியலைப்பற்றி வர்ணிக்கின்றார்கள். அத்தகைய அரசியல் எங்காவது நடைபெறக் கண்டிருப்பார்களா என்றால், இல்லை என்று, கண்ணை மூடிக்கொண்டு சொல்லி விடலாம். தாங்களே, அவர்கள் வகுத்த முறைப்படி அரசியலை நடத்திப் பார்த்திருக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. சரி, அதுதான் போகட்டும். எத்தனை அரசர்களுக்கு இவர்கள் அரசியல் திட்டம் (Constitution) வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள், எத்தனை அரசர்கள் அதை அமுலில் கொண்டு வந்துள்ளார்கள் என்றால், ஒன்றும் இல்லை என்றுதான் சொல்லவேண்டியதிருக்கிறது. அப்படியானால் அரசியலைப் பற்றி அத்தனை பிரமாதமாக எழுதுவானேன்? அதுதான் ஆச்சர்யம். போகட்டும். அரசியல் ஒன்றுதானா? இன்னும் யுத்தங்களைப் பற்றியெல்லாம் ஏக தடபுடலாக எழுதுகின்றார்கள். இவர்கள் எத்தனை யுத்தங்களை நேரிலே சென்று பார்வையிட்டிருப்பார்கள்? எத்தனை யுத்தங்களில் தண்டும் தடியும் எடுத்துப் போர் செய்திருப்பார்கள்? எத்தனை யுத்தங்களை நடத்தியிருப்பார்கள்? சும்மா கேள்விகளைத்தான் அடுக்கிக்கொண்டு போகவேண்டும். விடைகளை வேட்டையாடித்தான் பிடிக்கவேண்டும். அனுபவம், அதாவது நேரடியான அனுபவம், சொற்பமாகத்தான் இருக்கும். ஆனாலும்

வர்ணிக்கிற முறையைப் பார்த்தால் எத்தனையோ அளவில் யுத்தங்களில் கலந்து கொண்ட பாவனையாகவே தோன்றும்.

சரி, அரசியலை விட்டுவிடுவோம். யுத்தத்தையும் விட்டுவிடுவோம். அம்மட்டோடு நின்றுவிடுகிறதா அவர்கள் கைவரிசையெல்லாம்? இல்லை. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்ந்த பாங்கில் எல்லாக் கலைகளையும் தொட்டும் விட்டும் தமது நூல்களிலே குறித்துச் செல்கின்றார்கள். அத்தனை கலைகளிலும் உண்மையான, இன்னும் சொல்லப்போனால் அழுத்தமான ஞானம் உண்டா? கிடையாது. ஏதோ வெளித்தோற்றம் மட்டிலும் தெரியும். சைத்ரிகன் வெறும் வெளித் தோற்றத்தை வைத்துக்கொண்டு தானே படம் எழுதுகிறான்! குதிரைக்காரனுக்கு எத்தனை அளவு சேணத்தின் மர்மம் தெரியுமோ, அத்தனை அளவு இவனுக்கும் தெரியுமா? தெரியாது. பெரும் பாலும் தெரியாது. ஆனாலும் சேணத்தை வரைகிறானே, எப்படி வரைகிறான்? வெறும் வெளித்தோற்றத்தைக் கொண்டு. பார்க்கின்ற பொதுமக்களும், சைத்ரிகனுக்கு உண்மையிலே சேணத்தின் மர்மமெல்லாம் தெரியத் தான் செய்யும் என்று நம்பும்படியல்லவா வரைந்து விடுகிறான்! அத்தனையும் வெறும் மிரட்டல். வெறும் பாவனை. அம்மாதிரியே கவிஞனும், படிக்கின்றவர் களும், மேடையில் நடிப்பதைப் பார்க்கின்றவர்களும், "ஆஹா, இந்தக் காவியத்தை எழுதிய கவிஞன் என்ன ஞானக் கடலா! எத்தனை கலைகளைத் தெரிந்தவனைக் காணப்படுகிறான்!" என்று கூறி வியந்து கொள்வார் கள். அப்படி அவர்களை மயங்க வைப்பன வெறும் வார்த்தைகளும் சந்தங்களும். பொதுமக்களுடைய

அறியாமையைத்தான் என்ன சொல்வது! உண்மையிலே கவிஞனுக்கு அத்தனை கலைகளிலும் பாண்டித்யமும் நேரடியான அனுபவமும் உண்டா என்றால், ஏதோ அற்ப சொற்பம். ஆனாலும் எழுதுகின்றானே என்று தோன்றும். சைத்ரிகன் வரைய வில்லையா? அவனைப் போன்றுதான் கவிஞனும். எல்லாம் மிரட்டும் பாவனையிந்தான். வேறு என்ன?

இன்னும் படையெடுப்பை முடித்து விட்டாரா என்றால், இல்லை. அடுத்ததைத் தொடங்குகிறார்.

நித்ய வாழ்க்கையில் மிதமிஞ்சின காதல், மிதமிஞ்சின காமம், கோபம் ஆகிய இவைகளைக் கண்டால் நமக்குப் பிடிக்காது. எதுவானாலும் மட்டாகத்தான் இருக்கவேண்டும். கலையும் அப்படி இருந்தால்தான் நல்லது. எதுவும் மிதமிஞ்சிப் போய் விட்டால் அடுத்தவர்கள் பார்த்து நகைப்பதற்கும் வெறுப்பதற்கும் ஏதுவாகிவிடும். ஆனால் காவியத்துள்ளும் நாடகத்தினுள்ளும் போய்ப் பார்ப்போம். அங்கே அவைகள் மிக அழுத்தமாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். அப்படிப் பார்க்கும்போது அதனால் வருகிற பலன் என்ன? காமத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். இலைமறைவு காழைமறைவாக மிக்க அடக்கத்தோடு ஈடுபடவேண்டிய ஒரு சுவை அது. விஸ்தாரமாக அது சித்திரித்துக் காட்டப் படுமேயானால், அதைப் பார்க்கின்ற பொது மக்களுடைய உள்ளம் திருந்துமா அல்லது திறம்புமா? திறம்பும் என்பதைச் சொல்லவாவேண்டும்? குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா? அடக்கப் பழகும் மனது அழிக்கப் படுகின்றது. இது பொருந்துமா?

இன்னொரு குற்றச்சாட்டையும் சுமத்துகின்றார். அதை ஆராய்வதற்குமுன், நம் நாட்டிலே, நமது காலத்தில்தானே, நிஜ வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சில சம்பவங்களையும் அவற்றின் மூலம் வடித்தெடுக்கக் கூடிய அனுபவத்தையும் தெரிந்து கொண்டு அப்பாலே பிளேட்டோ சுமத்தும் குற்றச் சாட்டைப் பரிசிலனை செய்வோம்.

சம கால நிகழ்ச்சிகளைக் குறிப்பிடப் போவதனாலே, ஊர், பெயர் ஒன்றும் குறிப்பிடாது மொட்டையாகக் குறிப்பிடுவது நலம் என்று தோன்றுகிறது. குற்ற மானால் மன்னித்துக்கொள்ளவும்.

வட இந்தியாவில் ஒரு ஹைகோர்ட் நீதிபதி. ஒரு நாள் மாலை 7 மணிக்கு ஒரு மகாநாட்டில் தலைமை வகிக்க வேண்டியதிருந்தது. அன்று மத்தியானம் அவருடைய மூத்த மகன், சர்வகலாசாலைப் பட்டதாரி, குடும்பத்தின் பெருமையைத் தாங்க வல்ல தூண் போன்றவன், நல்ல காளைப் பருவம், திடீரென்று மாரடைப்பால் இறந்து விட்டான். நீதிபதி எத்தனை தூரம் வருந்தியிருப்பார் என்பதைச் சொல்லவா வேண்டும்? ஆனாலும் மனித வாழ்வின் உண்மையை உணர்ந்து, வருத்தத்தை அடக்கிக்கொண்டு, மாலையில் நடக்க விருந்த மகா நாட்டில் தலைமை வகிக்கச் சென்றுவிட்டார். ஓர் அரிய செயல்தான் இது.

இன்னொரு நிகழ்ச்சி. ஓர் ஆங்கிலப் பேராசிரியர் ஒரு நாள் கல்லூரியில் ஷேக்ஸ்பியர் எழுதிய 'லியர் மன்னர்' (King Lear) என்ற நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். அவருக்கு ஒரு தந்தி வந்து சேருகின்றது. "ஐயா தங்களுடைய மருமகன் இறந்து

விட்டார்'' என்பது தந்தியின் வாசகம். தம்முடைய மகளுக்கு விவாஹம் நடந்து ஆறு மாதங்கள்தான் ஆகின்றன. அதற்குள் மாப்பிள்ளை மாண்டுவிட்டார். எப்படியிருக்கும் மனது? ஆனாலும் மணி அடிக்கும்வரை பாடத்தைத் தொடர்ந்து நடத்திவிட்டு அப்பாலே புறப்பட்டார். வருத்தம் இல்லை என்று சொல்ல முடியுமா? சொன்னாலுந்தான் பொருந்துமா? அத்தனை தூரம் வருத்தத்தை அடக்கக்கூடிய மேம்பாடு அவரிடத்தில் இருந்தது. அவ்வளவுதான்.

மற்றும் ஒரு நிகழ்ச்சி. ஒரு பிரபல பாரிஸ்டர். வட இந்தியாவில் உள்ளவர். நீதிமன்றத்தில் ஒரு வழக்கை விஸ்தாரமாக நடத்திக்கொண்டிருக்கிறார். அப்பொழுது கிடைக்கிறது ஒரு தந்தி. ''ஐயா, தங்கள் மனைவியார் இறந்துவிட்டார்கள்.'' இது தான் தந்தியில் கண்ட வாசகம். அருமை மனைவி இறந்துவிட்டாள் என்றால் யாருக்குத்தான் பொறுமை சாதிக்க முடியும்? ஆனாலும் அவர் வழக்கை நிறுத்திவிடவில்லை. வருத்தத்தை எல்லாம் ஒருபுறம் ஒதுக்கிக்கொண்டு உண்டான ஜோலியை ஒழுங்காகவே செய்து முடித்தார்.

அதிகம் சொல்வானேன். காந்தியடிகளை எடுத்துக் கொள்வோம். அவரைப் பற்றி வெளிப்படையாகச் சொல்வதில் யாதொரு தோஷமும் இல்லை. தம்முடைய மனைவியை அடக்கம் செய்யும் பொழுது, ஏதோ ஒரு துளிக் கண்ணீர் சற்று வெளித்தோன்றியது என்று தானே நாம் பத்திரிகையில் பார்த்தோம்? அவருக்கென்ன உள்ளம் கல்லா? உலக மக்களுக்கெல்லாம் உருகுகின்ற உள்ளம் மனைவிக்கு மட்டிலும் உருகாது போயிற்று? அப்படியில்லை. எத்தனை வருத்தம் வந்தாலும் மேலோர்களால் அடக்கிக் கொள்ள முடியும்.

மேலும் அப்படி அடக்கிக் கொள்வதுதான் பெருமையுங் கூட. மனைவியையோ பிள்ளையையோ பறி கொடுத்த ஒருவன் தேம்பித் தேம்பி அழுதால், "என்னடா, பெண் பிள்ளை மாதிரி அழுகிறாய்! அடக்கம் வேண்டாமா? அது அல்லவா புருஷ இலக்ஷணம்?" என்பார்கள்.

இந்த இடத்தில் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு இன்னும் சற்று அழுத்தம் கொடுக்கும் பொருட்டு ஒரு கிரேக்க சிற்பத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

லேக்கூன் (Laokoon) என்ற ஒரு கிரேக்க பாதிரி தெய்வ சம்மதத்திற்கு விரோதமாக ஒரு பெண்ணை மணக்கின்றான். தெய்வ கோபம் அவன்மீதும் இரு புதல்வர்கள் மீதும் பாம்பு ரூபத்தில் பாய்கிறது. பாம்புகள் அவனுடைய உடம்பையும் புதல்வர்களுடைய உடம்புகளையும் இறுகப் பற்றி, வளைத்து வளைத்து இறுக்குகின்றன. மூவர்தம் உடம்புகளிலுள்ள ஒவ்வொரு அங்கமும் வேதனையின் கொடுமையை உணர்த்துகிறது. ஒரு பாம்பு பாதிரியின் தொடையையே கௌவுகின்றது. மரணவேதனை. இத்தனை வேதனைக் கிடையிலும் முகத்தில் ஓலமிடும் குறி தெரிகிறதா என்றால் இல்லை. சகிப்புத் தன்மையே தென்படுகிறது. அதனால் தான் அத்தோற்றம் பெருமை வாய்ந்த தோற்றமாக மதிக்கப்படுகிறது. ஆகவே வாழ்க்கையில் நாம் அடக்கத்தையே பெருமையாகக் கொள்கின்றோம்.

இந்த அனுபவத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு பிளேட்டோ கவிஞனைத் தாக்குகின்றார். கவிஞனும் நாடக ஆசிரியனும் என்ன செய்கின்றார்கள்? பெரிய பாத்திரங்களையும், அவர்களுடைய பெருமைக்கு

விரோதமாகவும், உலகோர் கருதும் ஆசாரத்துக்கு விரோதமாகவும் 'கொய்யோ முறையோ' என்று கதற வைக்கின்றார்கள்.

"என்னையே நோக்கியான் இந் நெடும்பகை தேடிக்கொண்டேன்"
"மீதெழும் மொக்குளன்ன யாக்கையை விடுவதல்லால்
சீதையை விடுவதுண்டோ இருபது கிண்தோள் உண்டால்"

என்றெல்லாம் வீரம்பேசுகின்ற அசகாய சூரனாகிய இராவணனையும் கம்பர் எப்படி அழவைக்கிறார்!- தம்பி கும்பகர்ணன் இறந்தான் என்று கேட்டதும் அவன் அழுத அழுகை என்ன! இந்திரசித்தன் இறந்தான் என்றதும் அவன் அழுத அழுகை என்ன! தசரதனும் எப்பேர்ப்பட்ட சிலன்! ராமனைப் பிரிந்தவுடன் அவனும் எப்படி எல்லாம் புலம்புகிறான்!

1. "தருதற்கொத்த ஜனகன் தையல் கையைப் பற்றி
புருதக் கண்ட கண்ணுல் போகக் காணேன் ஐய"
தையல்=சீதை

2. "கள்ளக் கைகேசிக்கே உதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளல் தனம் என்உயிரை மாய்க்கும் மாய்க்கும்"

3. "பெற்றேன் அருமை அறிவேன் பிழையேன்"

என்றெல்லாம் புலம்புகிறானே!

ஏன் இப்படியெல்லாம் பெரிய பாத்திரங்களைப் புலம்ப வைக்கவேண்டும்? இவர்களைப்போன்ற பெரியோர்கள் நிஜ உலகத்தில் இப்படியா புலம்புகின்றார்கள்? நிஜ உலகத்திலுள்ள பெருமையின் இயல்பு வேறு? இப்படியாக பிளேட்டோ கேள்விகளை அடுக்கிவிட்டு முடிவில் ஒரு சமாதானமும் கூறிவிடுகின்றார். ஏன் இப்படியெல்லாம் கவிஞர்கள் எழுதுகிறார்கள் என்றால், (ஸ்ரீமான் பொதுஜனத்தைத் திருப்தி செய்ய. இதுவே அவருடைய சமாதானம்.)

பேர்கட்டும். இப்படியெல்லாம் நிந்திக்கின்ருரே, இந்தக் கவிஞர்களை அடியோடு விரட்டி விடுகின்ருரா அல்லது ஏதாவது ஒதுக்கிடம் கொடுக்கின்ருரா என்ருல், ஒரே ஒரு அந்தஸ்தை வைத்து ஒதுக்கிடம் கொடுக்கின்ருர். பெரியோர்களையும் கடவுளையும் பற்றிப் பாடினுல் தமது இலக்கிய உலகத்தில் ஸ்தானம் உண்டு, அல்லாது போனுல் இல்லை, என்பதே அவருடைய முடிவு.

இனி அவருடைய கட்சிக்குரிய எதிர்ப்பு எவ்வாறு உருவாகிறது என்பதைப் பார்ப்போம்.

முதலாவது சைத்ரிகனை எடுத்துக் கொள்வோம். தச்சன் செய்த படுக்கைதானு சைத்ரிகனுக்கு முன் - மாதிரியாக அமைகின்றது? மேலும் தச்சன் செய்த படுக்கை எப்படியோ அப்படித்தானு சைத்ரிகனுடைய படமும்? ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். தச்சன் ஒரு மேஜையை உண்டாக்குகின்ருன்; சைத்ரிகனும் அதைப்போன்று ஒரு படம் வரைகின்ருன். படம் வரைவதோடு தச்சனுக்கு ஒருபடி மேலாகப் போகின்ருன். எப்படி? மேஜையின்மீது எத்தனையோ வேலைப் பாடுகளைக் கொண்ட மேஜைவிரி ஒன்றையும் விரித்திருக்கிற பாவனையில் வரைகின்ருன். மேஜைப் படத்திற்கு வேண்டுமானுல் தச்சன் செய்த மேஜை முன் - மாதிரி என்று சொல்லலாம். மேஜை விரிக்கு எதனைச் சொல்வது? அது சைத்ரிகனுடைய தனிப்பட்ட கற்பனை சிருஷ்டிதானே? பிளேட்டோ இதற்கு என்ன சமாதானம் சொல்லப் போகிருர்?

மேலும் சைத்ரிகன், ஒன்று எப்படியிருக்கிறதோ அந்த ஒரு நிலையை மட்டிலுந்தானு, வரைகின்ருன்? எப்படி இருக்கிறதோ அதனுடு எப்படி இருக்கவேண்டும் என்ற நிலையையும் வரைகிறதில்லையா?

நதியை வரையலாம். நதியின் மீது படியும் நிலவையும் வரையலாம். இந்த இரண்டினுக்கும் வேண்டுமானால் முன்மாதிரி கிடைத்துவிட்டது என்று சொல்லலாம். ஆனால் சிறு தோர்ணியில் ஒரு ஆண்மகனும் அவனுடைய இருபக்கத்திலும் இரண்டு சேரநாட்டுப் பெண்களும் அமர்ந்துகொண்டு பார்ட்டிசைக்கும் தோற்றத்தோடு விளங்குவதை எழுதினால், இந்தப் பிற்சேர்க்கை அவனுடைய கற்பனை சிருஷ்டியல்லவா?

போகட்டும். வெறுமனே அசலுக்கேற்ற நகல் திரட்டுவதற்குத்தானே சித்திரக்கலை உபயோகப்படுகின்றது? பெரிய உண்மைகளை உணர்த்துவதற்கு அது. உபயோகப்படாதா? கலை என்பது கேவலம் அசலுக்கு நகல் திரட்டுகின்ற வித்தை மட்டிலுந்தானே? புலன்களிடத்துப் பொருந்தும் உணர்ச்சிகளை உணர்த்த உதவாதா?

இந்த இட்த்தில் அனட்டோல் பிரான்ஸ் எழுதிய ஒரு கதையை ஞாபகப்படுத்திக்கொண்டு கல்கத்தாவிலுள்ள பிரபல சைத்திகரான ஸ்ரீ மஜும்தாருடைய "The goal" என்ற தலைப்புள்ள ஒரு படத்தின் பெருமையை மதிப்பிடுவோம்.

ஒரு பெண். துடிக்கும் யௌவனம் தோய்ந்த மேனியள். தன்னை அழகு செய்துகொள்வதில் எல்லையற்ற மோஹம். கர்தலனுடைய ஏக்கத்தை மதிக்கின்றாளில்லை. மனதை விண்ணுலகத்திற்குத் திருப்பும்படி ஒரு பாதிரி உபதேசிக்கிறார். அதையும் மறுக்கிறாள். பாதிரி ஒரு ஊருக்குப் புறப்படுகிறார். "உனக்கு என்ன வேண்டும்" என்று அவளிடம் கேட்க, "அங்கே கிடைக்கும் விசித்திரப் பொருளை வாங்கி வருக" என்கிறாள்

பாதிரி ஊர் போய்த் திரும்பியதும் ஒரு அழகான கைப் பெட்டி ஒன்றைக் கொடுத்தனுப்புகிறார். தன்னுடைய அழகைத் திருத்துவதற்காக வேண்டி கண்ணாடி முன் உட்கார்ந்த அப்பெண் பெட்டியை வாங்கி ஆவலோடு திறக்கிறாள். உள்ளே இருக்கிற பொருளை வெளியே எடுத்துப் பார்த்தாள். அது ஒரு மண்டை ஓடு. "இத்தனை அழகு படுத்தும் தசையுடம்பின் கதி (The goal இதுதானா)" என்ற உண்மை அவள் மனதில் படுகிறது. கதை எப்படி முடிகிறதென்றால் உடனே தன் காதலனிடத்தில் அன்பு செலுத்துவதாக.

இனி மஜும்தார் படத்தைப் பார்ப்போம். வார்த்தை அளவில் கதை தெரிவிக்கிற உண்மையை எத்தனையோ மடங்கு அழுத்தத்துடன், பெண்ணையும் மண்டை ஓட்டையும் காட்சி அளவில் காட்டி, நமது மனதில் பதியச் செய்கிறது. இப்படி யெல்லாம் புனித சேவை செய்கின்ற சைத்ரிகனை ஓட்டிவிட வேண்டும் என்கிறாரே! அது எப்படி முடியும்? இன்னும் தச்சனுக்குக் கிடைத்த மூல—தத்துவதரிசனம் சைத்ரிகனுக்கும் கிடைக்கக் கூடாதா, தச்சனுக்கு மட்டிலும் வாய்த்ததனி உரிமையா, என்றெல்லாம் ஆசிரியர் லெஸ்ஸிங் போன்ற மேதாவிகள் கேட்கின்றனர். அவர்களுடைய கேள்வியிலும் உண்மை இருக்கத்தான் செய்கின்றது. காசுக்காக வேண்டி, கலாமேதையைக் கொடும்பாவி கட்டி இழுக்கின்ற, சழக்கர்களை வேண்டுமானால் விரட்டட்டும்.

அடுத்தாற்போல் பரிசீலனை செய்ய வேண்டுவது பிளேட்டோவின் கவிதைக் கண்டனம்.

அவருடைய கண்டனத்தின் அடிப்படை நமக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் விவாத சௌகரியத்தை

உத்தேசித்து மீண்டும் இங்கே ஞாபகப்படுத்திக் கொள்வோம். கலை என்பது அசலுக்கு நகல் (Imitation) திரட்டும் வித்தை. அதாவது போலிதான் கலையின் அடிப்படை என்பது அவருடைய சித்தாந்தம். மக்கள், மக்களுடைய வாழ்க்கை வேறுபாடுகள் ஆகிய அசலை, முன்—மாதிரியாக வைத்துக்கொண்டு, வார்த்தைகளின் மூலம் நகல் திரட்டுகின்றான் கவிஞன் என்று சொல்லி, "கவிதையே அறிவு மேன்மைக்கு அடாத ஒரு ஈடுபாடு" (Poetry is a Pursuit unworthy of man's intellectual dignity) என்று ஒங்கி அறைந்து விடுகிறார்.

முதலாவது "Imitation", அதாவது போலியின் தத்துவம் என்ன என்பதை ஆராய்ச்சி செய்வோம்.

போலி என்பதற்கு இவர் கற்பிக்கும் அர்த்தமும் அகராதி கற்பிக்கின்ற அர்த்தமும் ஒன்றுதான். அதாவது அசலுக்கு நகல் திரட்டுதல். ஆனால் இவருடைய மாணவராகிய அரிஸ்டாட்டில் போலி என்பதற்குக் கற்பிக்கும் பொருளே வேறு.

மாணவராகிய அரிஸ்டாட்டிலைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு மேலே போவோம்.

குருவாகிய பிளேட்டோ கண்டனத்தில் லயித்து நிற்கிறார். சிஷ்யரோ கவிதையை வரவேற்கிறார். இருவருடைய மனப் போக்கும் தனித் தனியான இயல்புடையது. பிளேட்டோவின் மனம் கருத்துப் பொருளிலிருந்தே காட்சிப் பொருளுக்குப் படரும். ஆனால் அரிஸ்டாட்டிலின் மனமோ காட்சிப் பொருளிலிருந்தே கருத்துப் பொருளுக்குப் படரும்.

போலி (Imitation) என்பதற்கு இவர் கற்பிக்கும் பொருளே வேறு. அசலுக்கு ஏற்ற நகல் என்பதில்லை. பின்னர் என்ன?

நாம் ஒரு பொருளைப் பார்க்கின்றோம். அந்தப் பொருளின் வசீகரமான தோற்றமானது நமது மனதைக் கவருகிறது. கவர்ந்ததின் காரணமாக அதை மிக்க ஈடுபாட்டோடு உற்று நோக்குகிறோம். நோக்கவே நமது மனத்தில் ஒரு பாவனை உருவாகின்றது. அப்படி உருவாகும் பாவனைதான் போலி எனப்படுவது.) அந்தப் பாவனையைக் கல்லிலும் தீட்டலாம், சொல்லிலும் தீட்டலாம்.

சில உதாரணங்களைப் பார்ப்போம். அமரகவி பாரதியார் சூரிய உதயத்தைப் பார்க்கிறார். சூரியனுடைய பரிமாணம், சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம், சூரியனிடமிருந்து பூமிக்கு ஒளி வர எத்தனை கால்ம் பிடிக்கும் என்பதைக் கணக்கிட்டு அவர் பாடினால், அவருடைய பாட்டை பிளேட்டோவின் சித்தாந்தப்படி அசலுக்கேற்ற நகல் என்று சொல்லலாம். ஆனால் அவர் அப்படியா பாடுகிறார்? இல்லை. சூரியனுடைய தோற்ற அழகையும், ஆகாய வெளியிலே பொன்னிறக் கதிர்கள் நீந்திச் செல்கின்ற லாவண்யத்தையும் பார்க்கின்றார். பார்த்ததும் அவருடைய மேதைமணம் கமழும் மனத்தில் ஏதோ ஒரு பாவனை உருவாகின்றது. அந்தப் பாவனையை, அவர் கவிஞரானபடியால், வார்த்தைகளின் மூலம் எத்தனை விதமாகவோ வெளியிடுகின்றார்.

"இரவி நின்றது காண்—விண்ணிலே
இன்ப ஒளித்திரளாய்!
பரவி எங்களுமே—கதிர்கள்
பாடித் திரிந்தனவே"

கதிர்கள் அவருடைய் கண்களுக்குப் பாடித் திரிகின்றன. இது அசலுக்கு நகலா அல்லது பாவனையின்

மொழிபெயர்ப்பா? பிளேட்டோவையே கேட்போம். இன்னும் சொல்கின்றார்.

"புல்லை நகையுறுத்தி, பூவை வியப்பாக்கி,
மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து,
விண்ணை வெளியாக்கி, விந்தை செயும் ஜோதி"

இதுவும் அசலுக்கு நகலா அல்லது பாவனையின் மொழி பெயர்ப்பா?

இன்னொரு பாடலையும் பார்ப்போம். காலை இளம் பருதியைக் கண்டதும் அவர் மனத்தில் ஏதோ ஓர் அனுபவம் உதயமாகிறது. அதை வெளியிடுகின்றார்.

"தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனுக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ."

இந்த உதாரணங்களில் எல்லாம் அசலுக்கு நகல் திரட்டும் முத்திரை காணப்படுகிறதோ என்றால் கிடையாது. ஈடுபாட்டோடு பார்த்த பார்வையின் மூலம் உருவாகின்ற பாவனை விளக்கங்களாகவே தென்படுகின்றன.

இன்னும் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். சூரிய உதயத்தைக் கம்பர் காண்கின்றார். அசலுக்கு நகல் எடுக்கின்றாரா என்றால், இல்லை. அவரும், மகிழ்ந்த மகிழ்ச்சியினால் மனத்துள் உருவாகின்ற பாவனையைத் தான், வெளியிடுகின்றார்.

சிவபெருமான் நடனமாடுகின்றான். அவன் நடனமாடும்பொழுது மறைகள் முழங்கும்; கின்னரரும் கிம்புருஷரும் இசை முழக்கம் செய்வர்; அந்தணரும் அருந்தவரும் துதி முழக்கம் செய்வர்; நந்திதேவர் முழவு கொட்டி ஆர்ப்பரிப்பர். இத்தனை கோலாகலங்களுக்

இடையில் சிவன் தாண்டவமாடுவான். அவன் ஆனந்த தாண்டவம் ஆடும்பொழுது அவனுடைய பொன்மயமான சடைகள் எட்டுத் திக்கையும் முட்டி அலம்பும். இந்தக் காட்சியை மனக்கண் முன் வைத்துக்கொண்டு மகான் கம்பர் சூரிய உதயத்திற்குப் பல்லாண்டு பாடுகின்றார்.

சூரியன் உதயமாகின்றான். "ஆஹா! ஒளி வருகிறது. உயிர் வளருகிறது;" என்ற எக்களிப்போடு எண்ணரிய வேதங்கள் பண்திகழ முழங்குகின்றன. இன்னரரும் கிம்புருஷரும் பொன்னிசை பொழிகின்றனர். உலகம் ஏத்துகின்றது. உயர்ந்தோரும் ஏத்துகின்றார். தேவர்களும் முனிவர்களும் திரண்டு நின்று தூதிக்கின்றார். கடல் திரண்டு முழவு கொட்டக் கதிரவனும் தோன்றுகின்றான்.

இதோ ஒரு தோற்றம்!

வான அரங்கம். மகத்தான ஜோதி. கதிரவனே கண்ணுதலான். ஆடுகின்றான் நடனம். அவிழ்கின்றன கதிர்கள்—தொடுகின்றன திசைகள்.

எதைப்போல்? சிவன் சடையைப்போல்.

"எண்ணரிய மறையிலெடும் கின்னரர்கள் இசைபாட,
உலகம்ஏத்த,
விண்ணவரும், முனிவர்களும், வேதியரும் கரங்குவிப்ப,
வேலிஎன்னும்
மண்ணுமணி முழுவதிர, வானரங்கில் நடம்புரிவாள்
இரவியான
கண்ணுதல் வானவன் கனகச் சடைவிரிந்தா லென
விரிந்த கதிர்களெல்லாம்."

[வாள் இரவி=ஒளி திகழும் சூரியன்]

இந்தப் பாடல் அசலுக்கு நகல் ஆகுமா? போகட்டும். ஒரு தாயார் தனது குழந்தையைப் பார்க்கின்றாள், தான் செய்த தவத்தை எண்ணுகின்றாள். கிடைத்த பலனையும் கண்ணெதிரே காண்கின்றாள். பாட்டுக் கேற்ற பலன் என்ற மகிழ்ச்சி பொங்குகின்றது. அத்தனை அனுபவமும் இதயக் கூட்டுக்குள்ளே படிந்து கிடக்கின்றது. இப்பொழுது இலக்ஷ்ய கொடுத்தாலும் ஈடாகாத புன்முறுவலைத் தனது குழந்தை சிந்தியதும் அள்ளி யெடுக்கின்றாள். அப்படி எடுக்கும்போது "ஒரு அடி எட்டு அங்குல உயரமுள்ள, 22 அங்குல சுற்றளவுள்ள, பதினைந்து பவுண்டு எடையுள்ள, என் தசைப் பிண்டமே" என்று தாயார் சொல்கின்றாள்?

"ஸ்ரீ ரங்கம்ஆடி, திருப்பாற் கடலாடி,
மாமாங்கம்ஆடி, மாசிக் கடலாடி'
தைப்பூசம் ஆடி, தவம்செய்து பெற்றகண்ணே"

—என்று

சொல்லியல்லவோ அள்ளி யெடுக்கின்றாள்!

ஊனக்கண்ணும், ஊனுடம்பினுள்ளே ஒண்டிக்கிடக்கும் மனமும், சாதாரண நிலையில் ஒரு பெண்ணைப் பார்க்கும்போதும் பாவிக்கும்போதும், அவள், கேவலம். மானிடஜாதியின் சின்னமாகத்தான் தோற்றம் அளிப்பாள். அதே கண்ணும் அதே மனமும் உணர்ச்சி வசப்பட்டுக் கிடக்கும்போது, பெண்ணும் மானிடஜாதிச் சின்னமாகத் தோன்றமாட்டாள்.

"ஞானத் திருவடிவாய், இன்ப மதுக்குடமாய்,
கான மதுகரமாய், கண்நிறைந்த பேரழகாய்,"

தோன்றி விடுவாள். அதெல்லாம் உணர்ச்சி செய்கிற வேலை. அதுவும் ஒரு ஸ்பரிசவேதி மணிதான். அதன்

சக்தியால் உயர்திணை அஃறிணையாகும். அஃறிணை உயர்திணையாகும். பருமை நுண்மையாகும். நுண்மை பருமையாகும்.

இனி இந்த இடத்தில் அசல் நகல் கட்சிபேசுகிறதே அபத்தம் என்றுதான் தோன்றும். உண்மையும் அப்படித்தான்.

பிளேட்டோ வேண்டுமானால் கவிஞனைத் தாக்கிக் கொண்டிருக்கட்டும். அவனுடைய கலாமேதையினால் நாம் பெறக்கூடிய இலாபங்கள் என்னென்ன என்பதை இனிமேல் கவனிப்போம்.

1. கருத்தளவில் இருக்கின்ற ஒன்றை உணர்ச்சி மயமாக மாற்றுகிறது கவிதை.

சிறு குழந்தைகளுக்கும் நமக்கும் உணர்ச்சி அளவில் ஒரு வித்தியாசம் உண்டு. குழந்தைகளுக்கு, இல்லாததையும் இருக்கின்றதாக எண்ணும், பாவனா சக்தி அதிகம். ஏனென்றால் லஜ்ஜை (Self-consciousness) அவர்களுக்கு அதிகம் இருக்காது. நமக்கோ பாவனாசக்தி மிகவும் குறைவு. வயதாக வயதாக அது தேய்ந்து விடுகிறது. லஜ்ஜை வளர்ந்து விடுகிறது. மரப்பாச்சியை எடுத்து வைத்துக்கொண்டு இதுதான் ராஜா, இதுதான் மந்திரி என்று விளையாடும் போது, ராஜா ராஜாதான்; மந்திரி மந்திரிதான்; மரப்பாச்சி என்ற உணர்ச்சி துளியும் கிடையாது. குழந்தைகளின் உள்ளத்திலிருக்கிற பாவனா முதிர்ச்சிக்கு நிகரான ஒரு மனோநிலையினைக் காணவேண்டுமென்றால், மேதை நிறைந்த கவிஞனிடம் ஓடவேண்டும். அல்லது பக்தி செறிந்த பக்தனிடம் ஓடவேண்டும். ஆயிரம் விஷயங்களில் மனதைச் செலுத்தி ஐந்நூறு விஷயங்களில்

தலையிட்டு வரும் மனிதர்களிடையே கர்ண முடியாது. பாவனை முதிர்ச்சி நிறைந்த கவிதா வாசகங்களோடு பழகப் பழக நமது மனமும் பாவனை கொள்ளப்பழகு கின்றது. உணர்ச்சி மதுவில் தோய்கின்றது.

நாம் ஒருவனை வைத்துக்கொண்டு இவன் தான் ராஜா, இவன் தான் மந்திரி, என்று பாவிக்க வேண்டு மானால், அவனுக்கு ராஜ அணிகளெல்லாம் அணிய வேண்டும். இப்படி அணி அணிந்து அழகு செய்கிற வேலையை அருள் நிரம்பிய ஞானியான கவிஞன் என்பவன் செய்து தருகிறான்.

ஒரு உண்மையை எடுத்துச் சொல்லுகிறதாக வைத்துக் கொள்வோம். மரத்துண்டை உருட்டின மாதிரி மொட்டு மொழுக்கென்று நம் முன்னே உருட்டி விட்டால், அதனிடத்தில் அத்தனை ஈடுபாடு ஏற்படாது. உணர்ச்சிமயமாக அதை மாற்றி விட்டால் விடவே மாட்டோம். ஏன்? மனமானது ஆர்வத்தோடு பாய்ந்து அதனைப் பற்றிக் கொள்ளும். சில உதாரணங்களைப் பார்ப்போம்.

தமிழ்நாட்டின் எல்லை. இது ஒரு வறண்ட உண்மை. வெறும் நில எல்லை எப்படி உணர்ச்சியை ஊட்ட முடியும்?

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும்நல் உலகம்"

"வடக்கே வேங்கடமலை. தெற்கே குமரி எல்லை, இவற்றின் நடுவே இருப்பது தமிழ் பேசும் நல்ல நாடு"— இதுதான் பொருள்—இதில் உணர்ச்சிக்கு இடம் இருக் கிறதா என்றால், இல்லை.

"குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்".

இந்த அடிகளும் தமிழ்நாட்டின் எல்லையைத்தான் குறிப்பிடுகின்றன. உணர்ச்சி இருக்கிறதா என்ருல் "தமிழ்க்கடலுள்" என்ற உருவகத் தொடரில் ஏதோ கொஞ்சம் அரும்புகிறது.

"நீலத்திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு"

இந்தப் பாடலும் தமிழ்நாட்டின் எல்லையைத்தான் குறிப்பிடுகின்றது. ஆனலும் வெறும் வறண்ட விஷயமாகத் தெரியவில்லை தமிழ்நாட்டின் எல்லை. உணர்ச்சி செறிந்திருக்கிறது. கட்வுளே! "பஃறுளியாற்றுப் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொண்டது போகட்டும். இனி இருக்கிற தமிழ்நாடாவது க்ஷேமமுற வேண்டும். அதற்கு நீ அருள் செய்" என்று குமரித் தெய்வம் தவங் கிடப்பதாகச் சொல்கின்ருர். இன்னும் சிங்களம் புட்பகம் ஜாவகமாகிய தீவுகளிலும், சீனம், மிசிரம், யவனரகம் ஆகிய தேசங்களிலும் சென்று, புலிக் கொடியும் மீன் கொடியும் சால்புறக் கண்ட புகழெல்லாம் மண்டிக் கிடக்கிறது என்று சொல்லுகின்ருர். எவ்வளவோ உணர்ச்சியைக் கொட்டுகிருர். இன்று, பாரதியார் அமிர்தாஞ்சனச் செலவுக்கு இடங்கொடாமல் பாடும் ஒரு மட்டமான கவி, என்று சொல்லுகின்ற பெர்திகை மலை முனிவர்கள் உள்பட, எல்லோர் நாவிலும் இந்தப் பாடல் தவழ்ந்து வருகின்றதே, எதனல்? உணர்ச்சி வடிவமாக இருக்கின்ற காரணத்தால் அல்

லவர்? இன்னும் உணர்ச்சி மயமாக வருகின்ற ஒரு தேசாபிமானியின் உள்ளக் கிடக்கையைப் பார்ப்போம்.

ஹெப்ரிடீஸ் என்ற இட்த்தைச் சார்ந்த ஒருவன் நாடு கட்த்தப்பட்டு ஓர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறான். மனது துடிக்கிறது பிறந்த பொன்னுட்டைப் பார்க்கவேண்டுமென்று. உணர்ச்சி மயமாகத் தனது உள்ளக்கிடக்கையை வெளியிடுகிறான்.

"Mountains divide us
And the vast sea;
But our blood is strong, heart is highland;
We behold the Hebredes."

(நெடு நாளைக்கு முன் படித்தது. ஞாபகத்திலிருந்து எழுதுவதால் ஏதேனும் பிழைகள் இருக்கலாம். மன்னிக்கவும்.)

"மலை தடுத்தாலென்—மறி
கடல் தடுத்தாலென்?
உலையப் போவதில்லை—உணர்ச்சி
ஓங்கி நின்றிடுமே-
நெஞ்சக் குன்றிலே—அமர்ந்து
நீண்ட *ஹெப்ரீசைக்
கஞ்ச மலர்க்கண்ணால்—கண்டு
களிப்புக் கொண்டிடுவேன்.

(ஆசிரியன் மொழிபெயர்ப்பு)

வெறும் உணர்ச்சி மயம். நமது மனம் தேனே உண்ட வண்டுபோல் மயங்குகின்றது.

---

* இலக்ஷ்மணபுரியை லக்னவ் என்று வெள்ளைக்காரர்கள் அழைத்தால் ஹெப்ரிடீசை ஹெப்ரீஸ் என்று அழைக்கும் உரிமை நமக்கு இல்லையா?

எவ்வுயிருக்கும் தீங்கு செய்தல் தீதாகும். அதனால் தெய்வ கோபமே சம்பவிக்கும், என்று எத்தனையோ நீதி நூல்கள் எடுத்தியம்புகின்றன. அருமையான நீதிதான். போற்றக்கூடிய அந்தஸ்தும் உண்டு. ஆனாலும் சொல்லுகின்ற முறையானது மனதைத் தைக்கின்றதா என்றால் இல்லை. அதையும் சொல்ல வேண்டிய வடிவில் சொன்னால் தைத்துவிடும். அந்தக் காரியத்தை இனிதாக நிறை வேற்றித் தருகின்றது கவிதை.

*1. "கூவி வருங்கிளியை—ஒரு
கூண்டிலடைத்து வைத்தால்,
தேவர் உலகமெல்லாம்—அது சினத்
தீயை எழுப்பிடுமே.
2. மன்னிய சோலையிலே—ஒரு குயில்
வாடி வதங்குமெனில்
இன்னரர் கிம்புருஷர்—தளர்ந்து தம்
கீதம் இழுப்பரையோ"

என்று அற்புதமான உணர்ச்சிச் சித்திரமாக ஆக்கித் தருகின்றார்கள் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்.

கடவுள் எங்கும் இருக்கின்றார். அவர் இல்லாத பொருளில்லை என்று எத்தனையோ பேர் சொல்லக்

---

* "A Robin Read breast in a cage
Puts all Heaven in a rage;
A dog starved at his master's gate
Predicts the ruin of a State"

Blake.

கேட்டிருக்கின்றோம். பெரிய உண்மை. ஆனலும் கருத்து வடிவிலே பாமரர் முதல் பண்டிதர் வரையும் ஒரே பாணியில் அதை உபயோகித்து வருவதனலே எளிமையாய்த் தோன்றுகிறது. எளிமையானதாக இருந்தாலும் உணர்ச்சி அனுபவமாக அதனை மாற்றும் போது அது உள்ளத்தை நன்முக வசிகரிக்கின்றது.

"தாய்க்குக் கன்றுக்குட்டியைத் தெரிகின்றது. கன்றுக்குட்டிக்கும் தனது தாயைத் தெரிகின்றது. இது உலக இயற்கை. ஆனல் இனித்தான் வருகின்றது ஒரு மாயை. கடவுள் உலகத்தின் தாய். அவருக்கு அவருடைய குழந்தைகளைக் காணமுடிகிறது. ஆனல் குழந்தைகளால் அவரைக் காணமுடியவில்லை. இது என்ன மாயை" என்று கேட்கும் நீதியில், கம்பர் நமக்கு ஒரு பாடலைத் தமது சொந்த அனுபவமாக உருவாக்கித் தருகின்றர்.

"தாய்தன்னை அறியாத கன்றில்லை, தன்கன்றை
ஆயும் அறியும்; உலகின்தாய் ஆகி ஐய,
நீ அறிதி எப்பொருளும், அவை உன்னை நிலை அறியா;
மாயையிது என்கொல்! வாராதே வரவல்லாய்"

இப்படியாகக் கருத்து வடிவில் இருக்கின்ற உண்மைகளை, வேண்டும் உண்மைகளோ வேண்டா உண்மைகளோ அக்கறையில்லை, உணர்ச்சிமயமாக ஆக்கித்தரும் சக்தி கவிதைக்கு உண்டு. உணர்ச்சி வடிவமாக இருக்கும் காரணத்தாலே நமக்கு அதிகப்படியான ஈடுபாடு ஏற்படுகின்றது. இந்த இலாபத்தை வேண்டா மென்று சொல்லலாமா?

2. இன்னும் கவிதையினல் கிடைக்கின்ற வரிசைகளை ஆராய்வோம்.

நிஜ வாழ்க்கையில் நமக்கு ஒரு அனுபவம் சித்தியாகிறது. அதை வெளியிடலாமா என்றால் உலக நடையானது குறுக்கே நிற்கிறது. சொல்ல விரும்பியும், சொல்லக் கூடிய ஒன்றாக இருந்தும், சொல்ல முடியாததாகப் போய்விடுகின்றது. உணர்ச்சி—அனுபவ—சம்பிரதாயத்திற்கு இது விரோதமானதுதான். ஆனாலும் உலக நடைக்காக வேண்டி அந்த உரிமையைத் தியாகம் செய்கின்றோம். கவிதையானது இந்த நஷ்டத்தை ஈடு செய்கின்றது. ஒரு உத்தியோகஸ்தன். மாலை ஐந்து மணிக்கு வீடு சென்று, புதுமணம் முடித்த தலைவியோடு உல்லாசமாக உலவச் செல்ல வேண்டுமென்ற ஆசையோடு, கடிகாரம் ஐந்துமணி காட்டுவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். மணியும் ஐந்தாகிவிட்டது. 'டிரைவர்' என்று கூப்பிடுகிறான். டிரைவரைக் காணவில்லை. சில நிமிஷம் பொறுத்திருக்கிறான். கிட்டதட்ட அரைமணி நேரம் ஆகிறது. இன்னும் வரவில்லை. ஒரு மட்டிலும் வருகின்றான். உத்தியோகஸ்தன் அவன் மீது சீறி விழுவான் என்பதைச் சொல்லவா வேண்டும்? எத்தனை சீறி விழுந்தாலும், "என் காதலியோடு உலவச் சென்று களிக்கவேண்டியதிருக்கிறது. எப்படியடா இந்நேரம் வரை தாமதிக்கலாம்" என்று சொல்லும் வாய்ப்பு இருந்தாலும், சொல்லுவானா? மாட்டவே மாட்டான். அப்படி இப்படி என்று சொல்லித் திட்டுவானே தவிர மனத்திலுள்ளதைச் சொல்லவே மாட்டான்.

கவிதை உலகத்தில் இம்மாதிரியான சம்பிரதாயம் கிடையாது. தாராளமாகச் சொல்லலாம்.

பல்லவமன்னனாகிய நந்திவர்மனுடைய சேனை வீரன் ஒருவன் தனது அனுபவத்தை வெளியிடுகின்றான். கொஞ்சமும் லஜ்ஜை இல்லாமல் வெளியிடுகின்றான்.

அவன் வெளியிடுகின்றான் என்று சொல்லுவதைவிட அவனுடைய இதயம் பேசுகின்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் என்பது நந்திவர்மனைக் குறிக்கும் சிறப்புத்தொடர். தெள்ளாற்று மல்லியிட்டத்தே போர்க்களம். அங்கிருந்து கார் [மேகம்] கிளம்புகின்றது. தேரும் கிளம்புகின்றது. வீரன் பார்க்கிறான். "தேர் போகுமுன் கார் போய்விட்டால், காரைப் பார்த்த தலைவி கலங்க ஆரம்பித்துவிடுவாள். மழைக் காலம் வந்தும் இன்னும் மணவாளன் வரவில்லையே; தேருக்கு என்ன ஆபத்தோ, தேரை ஓட்டும் பாகனுக்கு என்ன ஆபத்தோ என்று ஏங்கிக் கண்கலங்குவாள்; கமலக் கைகளை நெரிப்பாள்; ஆலிலை வயிற்றைப் பிசைவாள்; ஆகவே தேரை விரைவாக ஓட்டவேண்டும்" என்ற குறிப்புத்தோன்ற அவன் புலம்புவது அழகிய பாடலாக உருவாகின்றது.

பைரவி ராகம்

"திருத்தேர் புகழ்நந்தி, தேசபண்டாரி, தெள்ளாறை வெற்பில்
மருத்தேர் குழலிக்குக் கார்முந்துமாகில், மருட ரத்னப்
பரித்தேரும் பாரும் அங்கு என்பட்டவோ என்று, பங்கயக்கை
நெரித்தே, வயிற்றில் வைத்தே, நிற்பளே, வஞ்சி, நெஞ்சுலர்ந்தே."

[தேசபண்டாரி–நந்திவர்மன்] [வெற்பு–மல்லி]

3. இன்னும், காவியத்திலாகட்டும் நாடகத்தில் ஆகட்டும்;வருகின்றபாத்திரங்களின் மனத்துள்ளேஉதிக்கும், உணர்ச்சியெல்லாம் மக்கள் வாழ்க்கைக்குப் புறம்பான உணர்ச்சியாக இருக்குமா என்றால், இல்லை. ஒத்தே இருக்கும். ஆனாலும் வெளியிடும் முறையில் வித்தியாசத்தைக் காணலாம். நம்மாலெல்லாம் ஏதோ

அரைகுறையான நொண்டி பாஷையில்தான் வெளியிட முடியும். ஆனால் கவிஞர்களோ அற்புதமான பாஷையில் அற்புதமான வடிவத்தில் வெளியிடுவார்கள். பாஷையில் உள்ள மோகம் பாஷையைப் பேசுகின்ற பாத்திரங்களினிடமும் படர்ந்து விடும். சில உதாரணங்களைப் பார்ப்போம்.

நந்திவர்மனிடத்தில் காதல் ஏமாற்றம் பெற்ற ஒரு பெண்ணின் உணர்ச்சி வெளியாகின்றது. பெண் உருகுவது போன்று நாமும் உருகி, முடிவில் மகிழ்ச்சி கொள்ளும்படியான பாஷையில் கவிஞன் எழுதித் தருகின்றான். அப்பாடல்களைப் பார்ப்போம்.

பெண் ஏங்குகின்றாள். ஏக்கத்தைத் தூண்டிய தலைவனும் எப்பேர்ப்பட்டவன்?

முறைமன்னர் குடைகொண்டு முற்றம் நிறைத்தவன்.
சினக்கரியும் பாய்மாவும் தெள்ளாற்றில் சிந்தியவன்.
[யானை] [குதிரை]

அத்தனை தானே சிறப்பு?

வடவரை தொட்டுத் தென்பொதிஅளவும் நிலமுடன் அரசு.
[செலுத்திய நீரன்

இன்னும்,

புலவரையைப் புறங்கண்டவன். புகழ்வரையின் முடி
[அறிவு எல்லை] [மலை]
[நின்றவன்.
குமரிக்கொண்கன் - கங்கை மணாளன் - தமிழின்மீது. சுவை
[யாக்காதலன்.

இன்னும் விரிகின்றது அவனுடைய பிரதாபம். அவனுடைய் கண் சிவந்தால் பகை மன்னர் மண் சிவக்

கும். புருவம் துடித்தால் பகைமன்னர் * இடம் துடிக்கும். அவனுடைய முரசதிர்ந்தால் பகைவருடைய மனம் அதிரும். இத்தனை ஆற்றல் படைத்தவனிடம் யாருக்குத்தான் காதல் செல்லாது? "மங்கையர் கண்ணிலிருந்து நீர் பொழிவதுபோல் எங்கும் மழை பொழிகின்றது. மயில் ஆடுகின்றது. மன்மதன் சிலை வளைகின்றது. கொன்றைகளிலெல்லாம் பூ. கொங்கைகளிலும் பூ. முல்லை மலருகின்றது. முருகவிழும் தாமரை விரிகின்றது. கார், கார் என்று கட்டியங் கூறுகிறது. மேகமும் வெட்கும்படி, மின்னும் மணியும் விரிந்த செம்பொன்னும் அள்ளி வழங்கி அங்கை சிவந்த அண்ணல், அருங்கொடை வள்ளல், அருளாபரணன் இன்னும் வரவில்லையே. ஊருக்கெல்லாம் அன்பு செய்கின்றான். அருளைப் பொழிகின்றான். ஆனால் என்னை மட்டிலும் கருதுகின்றனில்லை. அவன் அருளைக் கூடவழியில்லை. உயிரெல்லாம் அங்கே. உடல் மட்டிலும் இங்கே" என்று எண்ணி மயங்குகின்றாள். இன்னமும் விட்டபாடில்லை.

"அன்னை ஏன் மெலிந்து விட்டாய் என்று கேட்கின்றாள். தோழியும் ஏன் மெலிந்து விட்டாய் என்று கேட்கின்றாள். நான் என்ன செய்வேன்! இதோ கார் வந்து விட்டதே. இன்னும் காதலர் ஏறிய தேர் வரவில்லையே. நான் கார் என்று படைத்தா சொல்கின்றேன்? மயங்கியா புலம்புகின்றேன்? என்னுடைய கவலைதான் இயற்கைக்குப் பெரிதாகப் போய்விட்டதோ? இதோ புன்னையும் பிச்சியும் பொற்பவள வாய் திறந்து பூவைச் சொரிகின்றனவே. என் எதிரே இருக்கும் வயலிடங்களில் குருகினங்கள் கூடி மகிழ்ந்து எத்தனை குதூகலமாக விருந்துண்கின்றன. அவைகளுக்குத்

* இடது பக்கம்.

துணை செய்யும் கார் என்க்கு மட்டிலும் ஏன் இந்த இடர் செய்யவேண்டும்? காதலன் என்னை மறந்ததினால் அல்லவா! இளமையாய் இருப்பது பாவமா? இரவெல்லாம் என் தலையைப் பிளக்கின்றதே நிலவு" என்று சொல்லியும் ஏங்குகின்றாள்.

இத்தனை தூரமும் நொண்டிக் குதிரையில் பவனி வந்த பெண்ணின் பாவம் இதோ ராஜகளையோடு மிளிரும் குதிரைமீது எத்தனை ஆனந்தமாக பவனி வருகிறது என்பதைப் பார்ப்போம்.

தன்ன - தன	தன்ன - தன	தன்ன - தன	தான
மங்கை-யர்கண்	புனல்-பொழிய	மழை-பொழியும்	காலம்

(1) "மங்கையர்கண் புனல் பொழிய மழை பொழியும் காலம்,
[1]மாரவேள் [2]சிலை [3]குனிக்க மயில் குனிக்கும் காலம்,
கொங்கைகளும் கொன்றைகளும் பூச்சொரியும் காலம்,
[4]கோகநகம் [5]நகைமுல்லை [6]மூகை நகைக்கும் காலம்,
செங்கை முகில் அனையகொடை அம்பொன் பெய் ஏகத்
தியாகினனும் நந்திஅருள் சேராத காலம்;
அங்குயிரும் இங்குடலும் ஆனமழைக் காலம்
அவர் ஒருவர் நாம் ஒருவர் ஆனகொடுங்காலம்.

(2) "அன்னையரும் தோழியரும் அடர்ந்து [7]பொருங்காலம்,
ஆனிபோய் ஆடிவரை ஆவணியின் காலம்,
புன்னைகளும் பிச்சிகளும் தங்களின் மகிழ்ந்தே
பொற்பவள வாய்திறந்து பூச்சொரியும் காலம்,
செந்நெல் வயல் [8]குருகினம் சூழ் கச்சிவளநாடன்
தியாகினனும் நந்திதடம் தோள்சேராக்காலம்;
என்னை அவர் அறமறந்து போனாரே தோழி,
இளந்தலை கண்டே நிலவு பிளந்தெறியும் காலம்"

(1) மன்மதன் (2) வில் (3) வளைத்தல் (4) தாமரை (5) வெண்மை 6) அரும்பு (7) கண்டித்தல் (8) கொக்கு.

இன்னொரு அனுபவம். அதுவும் இதே தலைவனிடம் இதே தலைவிக்குள்ள அனுபவந்தான்.

"மழையோ எங்கும் பெய்கின்றது. பூமியெல்லாம் குளிர்ந்துவிட்டது. ஆனல் எனது உள்ளம் குளிரும்படி அருள் மழை பொழியாது இன்னும் அமர்க்களத்தில் அவருக்கு என்னதான் ஜோலி? ஏ, வண்டுகளே, ஏ, தும்பிகளே, நீங்களெல்லோரும் கார் காலம் தந்த புண்ணியத்தால் தேனே உண்டு, எத்தனே குதூகலமாகக் கூடி மகிழ்கின்றீர்கள்? உங்களுக்குத் துணே செய்த மழைக் காலம் எனக்கும் துணே செய்யக் கூடாதா? நானும் நந்தியுடன் கூடி இன்பத்தேன் பருகக் கூடாதா? சிவனே மறவாத சீலம் நிறைந்தவன் என் நாயகன். ஐயமகள் உறவு நீங்காத சிர்த்தியன். 'அவனி மழை பெய்யும் குளிர் காலம் வந்ததும் அருகில் அமர்ந்து அன்பு செய் வருவேன்' என்று சொன்ன வார்த்தையை மறந்துவிட்டான். ஆனல் சொன்ன காலமோ வந்துவிட்டது. என்ன செய்வேன்! கவலே கறியைத் தின்கிறதே. கணவர் உறவு, கணவர் உறவு என்று கணமெல்லாம் நினேத்தேனே! கணவர் உறவு கதையாய் முடிந்ததே" என்று ஏங்குகிருள்.

"சிவனே முழுதும் மறவாத சிந்தையான்
செயமுன் உறவு தவிராத நந்தியூர்(க்)
குவளே மலரில் மதுவாரும் வண்டுகாள்,
குமிழி சுழியில் விளையாடும் தும்பியே,
அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே!
அவரும் அவதி சொன நாளும் வந்ததே!
கவலேபெரிது பழிகாரர் வந்திலர்
கணவர் உறவு கதையாய்முடிந்ததே."

ஒருநாள் நந்திவர்மன் வீதி வழியே பவனி வருகின்றான். அவனை எத்தனையோ பெண்கள் கண்டு காதல் மோகத்திலில் கருத்தழிகின்றார்கள். அவர்களுள் ஒரு பெண்ணின் தனிப்பட்ட அனுபவம் அற்புதமான சொல்-சித்திரமாகக் காணப்படுகிறது.

காதல் வெறியில் மயங்கியவளாகத் தரையில் சாய்ந்து விடுகின்றாள். எல்லாம் எப்படி அவனுடைய காதலைப் பெறுவது, அவனுடைய அகன்ற மார்பைத் தழுவுவது என்ற ஏக்கந்தான். மயக்கத்தைத் தீர்க்க என்னவெல்லாமோ பரிகாரங்கள் கையாளப் படுகின்றன. தோழி ஒருத்தி பொதிகை மணம் கமழும் சந்தனக் குழம்பைப் பூசிவிட்டாள். காதல் நெருப்பை அவிப்பது காதலன் ஆகமா அல்லது சந்தனக் குழம்பா? வேகின்ற தீக்கு மேல் காற்று வீசின மாதிரிதான். காதல் தீ இன்னும் வீறிட்டு எழுகின்றதே யன்றிக் குறைந்தபாடில்லை. வாசனை, சீதம், நிலவு, தென்றல் இவைகளெல்லாம் மன நிறையை அழிக்கும் சதிகாரச் சின்னங்கள். இதோ அப்பெண்மணி "சந்தனக் குழம்பில்லை. இல்லவே இல்லை. செந்தழலின் சாறு. சாறுதான்" என்று புலம்புகிறதைக் கேட்போம்.

(சங்காபரணம்)

"செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென்(று) ஆரோ தடவினர்...பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மீது."

[சீதம்—குளிர்ச்சி. ஆகம்—மார்பு]

இதுகாறும் பெண்ணின் மன நிலையை விஸ்தரிக்கும் பாடல்களைப் பார்த்தோம். ஆணின் இதய வெளியீட்டையும் ஒரு பாடலின் மூலம் பார்ப்போம்.

கார்காலம் பிறந்துவிட்டது. மேகங்கள் விண்ணி ூடும் எங்கும் மிதந்து செல்லத் தலைப்பட்டு விட்டன. தனது தேரில் கால் வைத்தவ்னக மேலே பார்க் கின்ருன். மேகங்கள் ஓடும் காட்சி கண்ணில் படு கின்றது. உடனே இதயம் துடிக்க ஆரம்பித்து விட்டது. மேகங்கள் ஓடுவது போன்றே தனது தேரும் ஓடினலும், மனத்தினும் விசையர்கச் செல்லாத காரணத்தால், ஓடியும் ஓடாததாகவே காணப்படுகின் றது.

மேகங்களைக் கண்டதும் தலைவி கலங்குவாளே என்ற எக்கத்தினல், தான் ஊர் போம்வரை இந்த மேகங்கள் அங்கே சென்றுவிடக்கூடாது என்று உள்ளுற எண்ணு கின்ருன். அவைகள் முன்னே சென்றுவிட்டாலும், நந்திச்சீரர்மன் வாழும் தலைநகரிலுள்ள தலைவியைச் சந்தித்ததும், தேரில் ஊர்ந்து வருவது உயிரில்லை, வெறும் உடம்புதான் என்பதாகத் தெரிவித்துவிடவேண் டும் என்று வேண்டிக் கொள்கின்ருன். அவனுக்குத் தலைவியினிடத்தில் அவ்வளவு ஈடுபாடு.

(சங்காபரணம்)

"ஓடுகின்ற மேகங்காள் ஓடாத தேரில்வெறுங்
கூடு வருகுதென்று கூறுங்கோ - நாடியே
நந்திச்சீ ராமனுடை நன்னகரில் நன்னுதலைச்
சந்திச்சீர் ஆமாகில் தான்,

[சீராமன் - நந்தியாகிய ஸ்ரீராமன் - சந்திச்சீர்- சந்தித் தீர் - நன்னுதல் - தலைவி.]

என்ன! இந்த விதமாகவா மேகத்தைப் பார்த் தும் வண்டுகளைப் பார்த்தும் மனித ஜாதியான் பேசுகிருன் என்று ஸ்ரீமான் பகுத்தறிவாளன் கவலைப் படலாம். கவிதை உலகமானது நிஜ உலகத்தை

அசலாகக் கொண்டு உருவான நகல் உலகம் என்றாலும் அது வேறு, இது வேறு; அதற்குரிய சட்டங்கள், திட்டங்கள், ஐதீகங்கள் எல்லாம் வேறு. இதற்கு உரியனவும் வேறு. அதைப் பார்க்கின்ற கண் வேறு. இதைப் பார்க்கின்ற கண்ணும் வேறு.

கவிதை உலகத்தை நம்புவதற்கு முதலாவதாக வேண்டப்படுவது, அவநம்பிக்கையைப் புறத் தொதுக்கும் ஆசாரம். ஆங்கிலத்தில் "Willing suspension of disbelief" என்பர். அல்லாமலும் என்னது, ஏது என்ற ஆராய்ச்சி யெல்லாம் நிஜ உலகத்திற்கே; எப்படி என்பது தான் கவிதை உலகத்திற்கு. அதாவது எதைச் சொன்னாலும் சரி, அது உண்மையோ, கற்பனையோ, நடக்குமோ, நடக்காதோ, அதைப்பற்றியெல்லாம் அக்கரை கொள்ளக் கூடாது. சொல்லப்பட்டிருக்கிறது எப்படிச் சொல்லப்பட் டிருக்கிறது என்பதுதான் கட்சி. (The what is indifferent to poetry. It is the How that matters much). நிஜ உலகத்தில் கல்லும் புல்லும் பேசுமா? பேசமாட்டா? ஆனால் கவிதை உலகத்தில் கல்லும் கதை சொல்லும், புல்லும் புராணம் விரிக்கும். (Even the meanest flower that blows can give thoughts that do often lie too deep for tears) புல்லிய பூவும் கண்ணீர் உகச்செய்யும் எல்லையில் பொருளாய் விரியும். இம்மட்டோடு இங்கே நிறுத்திக்கொள்வோம். ஏனென்றால் பின்னரும் இதைப்பற்றி ஆராய வேண்டியதிருக்கிறது.

4. பிளேட்டோவை இம்மட்டோடு நிறுத்திவிடப் போவதில்லை. மேலும் தொடர்ந்து அவருடைய கட்சிக்குரிய எதிர்ப்பை ஆராய்வோம். கவிதை யென்பது அசலுக்கு நகல் திரட்டும் செல் வித்தைதானா அல்லது வேறு என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்வோம்.

நிஜ உலகத்தில் காதலோ, வீரமோ, கோபமோ எதுவும் நமது அனுபவ எல்லைக்குப் புறம்பானதில்லை. ஆனால் நம்மிடையே அவற்றின் இலக்கிய வடிவைக் காணமுடியுமா என்றால், கஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், நம்முடைய இச்சை, வெறுப்பு, பழக்கவழக்கம், குடிமுறை, குலமுறை ஆகியவை இடை மறித்தும் இடை புகுந்தும் வீரிய வடிவு கொள்ள விடாது தடைசெய்யும். காதலியை நாலுபேர் காண முத்தமிட்டுவிட்டாலே ஆசார விரோதமென்று உலகம் பரிகசிக்கும். அப்படியிருக்க அவள் நின்ற இடத்தை அணுகி, அதனை, ஒருவன் முத்தமிடுவானெனில், அவனை உலகம் சும்மா விட்டுவிடுமா? பித்தன் என்ற பட்டத்தைக் கொடுத்து அவனை ஒதுக்கிவிடும். வீரம் காட்டுவதை உலகம் ஒப்புக்கொள்ளும். ஆனால், கடவுளே எதிர்த்து வந்தாலும் அவரையும் கொன்று குவித்து 'என் பெருமையை நிலை நாட்டுவேன்' என்று ஒருவன் சொன்னால் உலகம் என்ன செய்யும்? அவனுக்கும் மேலே குறிப்பிட்ட பட்டத்தையே வழங்கிவிடும்.

ஆனால் காவியத்திலும் நாடகத்திலும் இலக்கிய வடிவான காதலோ வீரமோ வர்ணிக்கப்பட்டுவிட்டால் அதிசயிக்கிறோம். அப்படிக் காதலையும் வீரத்தையும் கர்ட்டுகின்றவர்களை மதிக்கிறோம். போதாக்குறைக்கு நிஜ உலக வாழ்க்கையிலும் இப்படி ஏன் இருக்கக் கூடாது என்றுகூட எண்ணத் துணிகின்றோம்.

சில உதாரணங்களைப் பார்த்துவிட்டு ஏன் என்ற கர்ரணத்தை ஆராய்வோம்.

ஆண்டார்களுடைய கர்தலை எடுத்துக் கொள்வோம். அவளுடைய கண்ணன்கர்தலைக் காட்டிலும் இலக்கிய

வடிவான காதலே, நாம், மானிட ஜன்மம் மாறி வேறு ஒரு ஜன்மம் உருவாகும் வரை காணவே முடியாது. அத்தனை அப்பழுக்கற்ற காதல்.

நாயகன் நாயகி பாவத்தில் மனத்தைச் செலுத்திப் பாடுவதென்பது அபூர்வமான ஒரு காரியம். காலஞ் சென்ற பெரியார் ஸ்ரீ. வ. வெ. சு. ஐயர் அவர்களுடைய கருத்தை இங்கே பார்ப்போம்.

"இந்த பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பக்கத் தின்மீது நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம். ஒரு வரம்பு இருக்கிறது; அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால், அசந்தர்ப்பமாகிவிடும். ஸ்ரீபாகவதத்தி லுங்கூட கோபிகா உபாக்யானங்களில் சுக பகவான் இவ் வரம்பை அங்கங்கே கடந்து விட்டிருக்கிறார் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்" என்று கூறுகின்றார். ஆனால் ஆண்டாளுடைய பாசுரங்களைப் பற்றி என்ன முடிவு செய்கின்றார்?

"கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்;
கடல் ஞாலம் ஆவேனும் யானே என்னும்"

என்று தொடங்கும் திருவாய் மொழிகளையும்,

"கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?

என்று தொடங்கும் ஆண்டாளுடைய பாசுரங்களையும் போலச் செயிரின்றி இப் பாவத்தைப் பாடுவது அநேக மாய் அசாத்தியம்" என்பதுதான் அவருடைய முடிந்த எண்ணம்.

இனி ஆண்டாள் தந்த காதற் கனிகளில் ஒரு சிலவற்றை உண்டு மகிழ்வோம்.

கண்ணனிடத்தில் ஒரே ஈடுபாடு. காணும் பொருளில் எல்லாம் அவளுடைய கண் கண்ணனைத்தான் காணும். கேட்கும் ஒலியிலெல்லாம் அவனுடைய கீதமே இசைப்பதாகப்படும். தீண்டும் பொருள்களிலெல்லாம் அவன் திருமேனியைத் தீண்டும் சுகமேதென்படும். அத்தகைய ஈடுபாடு. அவனுடைய குழலழகு, மாம்பழ வாயழகு, கண்ணழகு, இன்னும் கொப்பூழில் எழுகின்ற பூ அழகு எல்லாம் அவளுடைய உள்ளத்தை உருக்கி உணர்வழியச் செய்கின்றன. ஆற்றமாட்டாது புலம்புகின்றாள். அயர்கின்றாள். அவளுடைய வாட்டத்தைத் தணிப்பதற்கு அவளுடைய தோழியர் இதைச் செய்யலாமா அதைச் செய்யலாமா என்றெல்லாம் பேசுகின்றார்கள். அத்தனையும் ஆண்டாள் காதில் விழுகின்றது. ஏதோ புண்ணில் திராவகத்தை ஊற்றின மாதிரி இருக்கிறதே ஒழிய வாட்டத்தைத் தீர்க்கக் கூடியதாக இல்லை. ஆகவே நிந்திக்கின்றாள். அப்படியெல்லாம் பேசவேண்டாமென்று தடுக்கின்றாள். பின்னர் என்ன செய்யவேண்டுமாம்? காதல்—நிந்தனை கலந்த பாணியில் அவனுடைய பீதாம்பரத்தைக் கொண்டு வீசிஎல் போதும் என்கிறாள். எத்தனை பரிசுத்தமான காதல் வெளியீடு! துளியாவது காமக்கறை தென்படுகிறதா? நிஜ உலக அனுபவம் இப்படி இருக்க முடியாதே! மெய்யுறு கூட்டந்தானே முடிவாக முடிந்த காதல் நிலை. ஆண்டாளுடைய இலக்கிய வடிவான காதல் வெளியீட்டைப் பார்ப்போம்.

"கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சிப் பழகிக் கிடப்பேனைப்
புண்ணில் புளி பெய்தாற்போல் புறம் நின்று அழுந்தேகாதீர்;
பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடை கொண்டென்னை வாட்டந் தெளிய வீசீரே."

இப்படி ஒன்றை மட்டிலும் பார்த்துவிட்டால் போதாது. இன்னும் இரண்டொன்றைப் பார்வையிடுவது இலாபகரமாயிருக்கும்.

நமக்குத்தான் கல் வெறும் கல். புல்லும் வெறும் புல். ஆனால் பாவனை முதிர்ந்தவர்களுக்கோ கல்லும் அவர்களுடைய பாவனையின் கொள்கலம். புல்லும் அவர்களுடைய பாவனையின் கொள்கலம். அப்படித் தோன்றுவது பாவனை முதிர்ச்சியின் இயல்பு. அந்த இயல்பைக் கொண்டவர்களெல்லாம், மனித ஜாதியினர் என்றாலும், தனி இனத்தாரே. அவர்களே கவிஞர்கள். அவர்களே காதலர்கள். சொல்லப்போனால் அவர்கள் பித்தர்களும் ஆவார்கள். பாவனை முதிர்ச்சியானது உலகத்தார் பேசும் பாஷையில் பைத்தியம் என்றுதானே வழங்கப்படும்

கருங்குயில் ஒன்று ஆண்டாள் முன் காட்சி அளிக்கின்றது. அதன் கருமையானது கண்ணனுடைய கருமை நிறத்தையும், அவனுடைய உருவ அழகையும், அவனையும் ஞாபகப்படுத்துகிறது. காதல் வெறியில் பிரலாபிக்கின்றாள். அதனையே தூது சொல்லி அனுப்புகிறாள். ஆசையெல்லாம் கண்ணனுடைய கோல உருவத்தைக் கண்டுவிட வேண்டும் என்பதே. கண்டு மறந்து தாகப் போய்விட்டது. ஆகவே இப்போது காண இதயம் துடிக்கின்றது. சண்பகப் பூவின் வாசனை பரிமளிக்கின்றது. அது ஒன்றே போதும் காதலைத் தூண்ட. அத்தோடு அதனைக் கோதித் தேனுண்ட களிப்பினால் குயிலும் இசை பாடுகின்றது. வாசனை ஒன்றே போதும் என்றிருக்க, வாசனையும் இசையும் சேர்ந்தால் காதல்—தீயை எழுப்ப மேல் காற்று வேறு வேண்டுமா? இவைகள் போதா என்று குயிலும் கண்ணனுடைய

மேனி அழகைக் காட்டி நிற்கின்றது. குயிலினிடமே கண்ணனுடைய மேனி முழுவதையும் காண முயல்கின்றாளோ என்று எண்ணவும் இடமேற்படுகின்றது. "வெண்ணிறச் சங்கை இடது கையில் அணைத்துக் கொண்டு, ஊதி ஊதி உணர்வை உருக்குகின்றானே, அவன் எனக்குத் தன்னுடைய உருவத்தைக் காட்டாதே ஒளித்துக் களிக்கின்றான். மேலும் தினம் தினம் என்னை அறியாதே என் உள்ளத்துள் புகுந்து, நைந்து நைந்து ஆவிசோரும் என்பால் உயிரைப் பெய்து பெய்து கூத்தாட்டுச் செய்கின்றான்; அவனை, அந்த வேங்கடமலையானைக்காண என் ஆவி துடிக்கின்றது. குயிலே, அவனை என்னிடம் வரக் கூவாயா" என்று கேட்கின்றாள்.

"வெள்ளை விளிசங்கு இடங்கையில் கொண்ட
விமலன் எனக்கு உருக் காட்டான்;
உள்ளம் புகுந்(து) என்னை நைவித்து நாளும்
உயிர் பெய்து கூத்தாட்டுக் காணும்;
கள்ளவிழ் சண்பகப் பூமலர் கோதிக்
களித்(து) இசைபாடும் குயிலே,
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது
வேங்கடவன் வரக் கூவாய்"

என்று அவளுடைய காதல் உள்ளம் எத்தனையோ பண்பாட்டோடு குயிலினிடம் பேசுகின்றது.

இன்னும் அவள் கண்ணன் ஊதுகின்ற சங்கினிடம் தனது மனப்பான்மையைக் காட்டுவது நிகரற்ற பண்புடையதாகவே காணப்படுகிறது.

சங்கு, தனிப்பட்ட முறையில், எத்தனையோ பெண்களுக்குரிய ஒரு உரிமையை இடைவிடாது அனுபவித்துக்கொண்டு வருகிறது. அதைக் கண்டு ஆண்டாளுக்

குப் பொறுமை கிளம்புகின்றது. நியாயந்தானே? "பதினாயிரக்கணக்கான தேவிமார்களும் பொதுவாக உண்பதற்குரியது கண்ணனுடைய வாய் அமுதம். அத்தனை பேரையும் அலட்சியம் செய்துவிட்டு, அவர்களுடைய உரிமைகளையெல்லாம் நீயே அபகரித்துக்கொண்டு, கண்ணனுடைய கனிவாயில் புகுந்து அமிர்தத்தை அனுபவித்தால், அவர்களெல்லோரும் எப்படிப் பொறுத்துக்கொள்வர்? உன்னோடு கோபித்துக்கொள்ளமாட்டார" என்று சொல்லும்போது, கோபித்துக் கொள்ளும் தேவிமாரோடு தன்னையும் சேர்த்துக்கொள்ளத்தான் செய்கிறாள். ஆனாலும் மெத்த நாகரிகமாகத் தன்னைப் படர்க்கைப் படுத்திச் சொல்கின்ற அருமை மிகவும் பாராட்டுதற்குரிய அருமையாகும்.

"பகிரும்மாயிரவர் தேவிமார் பார்த்து நிற்ப,
மதுவாயிற் கொண்டாற்போல் மாதவன்தன் வாய்அமுதம்
பொதுவாக உண்பதனைப்புக்குநீ உண்டக்கால்,
சிதையாரோ உன்னோடு செல்வப் பெருஞ்சங்கே"

இப்படி அற்புதமான பாஷையின்மூலம் இலக்கிய வடிவமான காதல் வெளியீடுகள் நமக்குக் கிடைக்கின்றன. இவைகளை வெறும் அச்சுக்குரிய நகல் என்று சொல்லமுடியுமா, அல்லது இவைகளை நமக்கு வேண்டாமென்று தள்ளத்தான் முடியுமா? படிக்கப் படிக்க மனமானது எத்தனையோ அளவில் பண்பாடு அடைகின்றது.

இனி இலக்கிய வடிவான வீரத்தைப் பார்ப்போம். முதலாவதாக இரணியனுடைய வீரத்தை எடுத்துக் கொள்வோம். கதையை அதிகம் சொல்லவேண்டாம். பிரகலாதன் திருமாலின் பிரதாபத்தை ஏத்த ஏத்த, இரணியனுக்குச் சூடு பிறக்கின்றது. அசுரத்தனமான

கோபம் பீறிட்டுக்கொண்டு அண்டசரசரங்களையே விழுங்கி விடுவதுபோல் வெளியாகிறது. "திருமகளை வணங்கவேண்டும். ஆம், அவளைத்தான் வணங்கவேண்டும். கேளடா. நீயும் பார்க்கும்படி, உன் கண் முன்னாலேயே அவனுடைய தோளையும் காலையும் பிய்த்தெறிவேன். உன்னையும் துண்டு துண்டாக்குவேன். பின்னர் வணங்குதலும் செய்வேன். எதை வணங்குவேன்? என்னுடைய வீரத்தின் சின்னமான வாளை வணங்குவேன். பெண்கள் ஊடும்பொழுதுகூட வணங்கி அறியேனடா. என்னையா வணங்கு என்கிறாய்" என்று பொருள் படும்படியான அக்கினிப் பிழம்பு ஒன்று பாட்டு வடிவில் வெளிவருகின்றது.

> "கேள் இது நீயுங்காணக் கிளர்ந்த கோளரியின் கேழில்
> தாளொடு தோளும் நீக்கி நின்னையும் துணித்துப் பின்என்
> வாளினைத் தொழுவதல்லால் வணங்குதல் மகளிர் ஊடல்
> நாளினும் உளதோ என்ன அண்டங்கள் நடுங்க நக்கான்"
> (கோளரி-சிங்கம்]

இப்படி வெளியாகிறது இராணியனுடைய வீரம்; ஆதிமூலத்தையே அள்ளிவிழுங்க முனைகின்றது.

இனி இராவணனுடைய வீரத்தைப் பார்ப்போம். நாராயண அஸ்திரமும் பலிக்காமை கண்ட இந்திரசித்தன், உண்மை உணர்ந்தவனாக, இராவணனிடம் ஓடியே வருகின்றான்.

> "குலம்செய்த பாவத்தாலே கொடும் பழி தேடிக் கொண்டேம்
> சலம் செய்யின் உலகம் மூன்றும் ஒருவனே தவிர்ப்பன்"

"நமக்கோ பெரும்பழிவந்து சேர்ந்துவிட்டது. போரினால் வெல்லலாம் என்பது வெறுங்கனவு. இலக்குவன்

ஒருவனே போதும் மூன்று உலகங்களையும் அழிக்க'' என்று தனது தந்தையிடம் கூறுகின்றான்.

வில்லாதி வில்லர்க்கெல்லாம் மேலான இந்திரசித்து இப்படிக் கூறவேண்டுமானால் யாருடைய மனமும் கலங்கத்தான் செய்யும். ஆனால் இராவணன் கலங்கவே இல்லை. அவனுடைய வீரம் ஒட்டிக்கு இரட்டியாகக் கனன்று எழுகிறதே யொழிய, கொஞ்சமும் குறைந்த பாடில்லை. அள்ளி வீசுகின்றான் வீரவசனங்களை. ''எத்தனையோ வீரர்கள் போரில் இறந்துவிட்டார்கள். இன்னும் எத்தனையோ பேர் இறக்க இருக்கின்றார்கள். போதாக் குறைக்கு நீ ஒருவன் இருக்கின்றாய் போர் செய்ய. உங்களெல்லோரையும் நம்பியா நான் இந்தப் போரில் தலையிட்டிருக்கிறேன்? இல்லையடா இல்லை. என்னையே, என் பலத்தையே, என் வீரத்தையே நம்பி நான் இறங்கியிருக்கின்றேன். போர் என்றால் வெற்றியும் உண்டு, தோல்வியும் உண்டு. நான் வெல்கின்றேன் அல்லது சாகின்றேன். ஆனால் வேதம் உள்ள காலம் வரை, இராமன் பெயர் நிலைபெறும் அல்லவா? சாதல் என்பது எனக்கு மட்டிலுந்தானா? அது இயற்கை நியதி. இன்று இருப்பவன் நாளை இறப்பான். ஆனால் புகழுக்கு அழிவு உண்டோ? புகழைப் பூணநிற்கும் என் முன் என்ன வார்த்தை கூறிவிட்டாய்! பேதமை உரைத்து விட்டாயடா! உலகம் அழிந்தாலும் என் புகழ் அழியக் கூடாது. தேவர்களாகிய பதர்கள் அதைக் காண வேண்டும் என்று எண்ணும் என்னிடமா இந்த வார்த்தை? நீர்க்குமிழி போன்ற இந்த உடம்பைத் தொலைப்பனேயொழிய சீதையை விடுவதென்பது முடியாத காரியம். இதோ எண்ணிப்பார். தோள்கள் இருபது என்பதை மறந்து விடாதே.''

1. "முன்னையோர் இறந்தாரெல்லாம் இப்பகை முடிப்பரென்றும்
பின்னையோர் நின்றுரெல்லாம் வென்றனர் பெயர்வரென்றும்
உன்னினீ அவரைவென்று தருதினன்(று) உணர்ந்தும் அன்றால்;
என்னையே நோக்கி யான்இந் நெடும்பகை தேடிக்கொண்டேன்'"

2. "வென்றிலென் என்றபோதும் வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளென் அன்றே மற்றவ்(இ)ராமன் பேர் நிற்குமாயின்,
[1]பொன்றுதல் ஒருகாலத்தும் தவிருமோ பொதுமைத்தன்றே?
இன்றுளர் நாளைமாள்வர் புகழுக்கும் [2]இறுதிஉண்டோ?"

3. "பேதமை உரைத்தாய் மைந்த, உலகெலாம் பெயரப் [3]பேராக்
காதைஎன் புகழினோடு நிலைபெற அமரர்க்காண
மீதெழும் [4]மொக்குளன்ன யாக்கையை விடுவதல்லால்
சீதையை விடுவதுண்டோ இருபது கிண்தோள்உண்டால்."

இவைகளே அவன் வழங்கிய வீர வசனங்கள்.

இவ்வாறு காதலென்றாலும் சரி, வீரம் என்றாலும் சரி, மண்ணெல்லையில் உள்ளவர்கள், ஆ! என்று வியக்கும்படி இலக்கிய வடிவிற்கு ஏற்றிச் செல்லும் பாத்திரங்களே நாடகத்திலும் காவியத்திலும் பார்க்கின்றோம். அவர்களுக்கு நிகரானவர்களே நிஜ உலகில் காணவேமுடியாது. அப்படிக் காணமுடியாது போயினும், எக்காரணத்தால் அவர்களே மதிக்கின்றோம்? இக்கேள்வி முன்னரே எழுப்பப்பட்டுள்ளது. மீண்டும் அதை ஞாபகப்படுத்திக் கொண்டு அதற்கு விடை கூறுவோம்.

5. பிளேட்டோவின் சிஷ்யப்பிள்ளையான அரிஸ்டாட்டில் இக்கேள்விக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தந்திருக்கின்றனர். நிஜ உலகில் ஒரு ஆண்டாளுக்கோ, ஒரு இராவணனுக்கோ, ஒரு இராமனுக்கோ அல்லது ஒரு சீதைக்கோ நிகரான பாத்திரங்களைக்

(1) சாதல் (2) முடிவு (3) அழியாத சரிதை (4) குமிழி.

கர்ணமுடியாதிருந்தும், அப்படியான சிருஷ்டிகளின்மீது நமக்கு ஏன் ஈடுபாடு ஏற்படுகிறதென்றால், இயற்கையின் எல்லையையும் மிஞ்சும் குண வீரியங்களை நம்முடைய மனம் நாடுகிற காரணத்தினாலேயே. அந்த நாட்டத்தை இலக்கியம் திருப்தி செய்கிறது. இதுவே அவர் கூறும் சமாதானம். உண்மையும் அதுதான். எது ஒன்று எப்படி இருக்கிறதோ, அதைவிட, அது எப்படி இருக்க வேண்டும் என்ற நிலையைச் சிந்திப்பதில் மனதுக்கு அதிகப்படியான திருப்தி உண்டு.

"காசினிகர்ப்புறத்தில் பேசும் ஒலியைக்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்"

என்று முழங்கும் கவிஞனின் முழக்கம் அவ்வாறான மன இயல்பைக் குறிக்கும் சின்னமேயாகும். மனித முன்னேற்றத்திற்கு இந்த இயல்பு செய்கின்ற சேவை அளவிடமுடியாதது. நிலாவைப் பார்க்கின்றோம். விண்மீன்களைப் பார்க்கின்றோம். வீசுகாற்றையும் நுகர்கின்றோம். அவற்றினிடையே ஒரு புது அனுபவத்தைப் பெறும்படி கவிஞன் நம்மைத் தூண்டுகிறான். தூண்டுகிறான் என்பதற்கு, நம் மனத்தே அரும்பியும் அரும்பாமலும் இருக்கின்ற இயல்பைத் தட்டி எழுப்புகிறான் என்பதுதான் பொருள்.

1. "தென்னையின்கீற்று சலசல என்றிடச்
செய்துவருங் காற்றே
உன்னைக் குதிரைகொண் டேறித் திரியும்ஓர்
உள்ளம் படைத்து விட்டேன்"

2. "நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத் தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்."

3. "சிதக் கதிர்மதி மீதினிலே சென்று
தேனுண் ணுவாய் மனமே"

இப்படியெல்லாம் அனுபவிக்க ஆசை கொள்வது மனித இயற்கை. சந்திர மண்டலத்தில் மேய்ச்சலிடம் வேண்டுமென்று ஒரு அமெரிக்கன் மனுச் செய்திருக்கிறானே, அவன் பித்தனில்லை. கனவு காண்பதும் மனித இயற்கை, கனவை நனவாக்குவதும் மனித இயற்கை. கவிஞன் அதிகப்படியான அளவு கற்பனை வீரியமும் பாவனை முதிர்ச்சியும் வாய்க்கப் பெற்றவன். எத்தனையோ கனவுகளை எழுப்பி எழுப்பி மக்கள் இனத்திற்கு ஏக்கத்தையும் ஊக்கத்தையும் ஊட்டுகின்றான்.

"வெள்ளிப் பனிவரையின் மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்.
பள்ளித் தல மனைத்தும் கோயில் செய்குவோம்—எங்கள்
பாரத தேசமென்றே தோள் கொட்டுவோம்."

என்று முழங்கி மக்கள் உள்ளத்தைச் சுண்டி விடுகிறவன் கவிஞன்.

இலக்கிய வடிவமான நாடு எப்படி இருக்கவேண்டும் என்பது குறித்து அவன் கனவு காண்கின்றான். அந்தக் கனவை மக்கள் உலகத்திற்குக் கொடுத்தருளுகின்றான். அதனால்தானே "மக்கள் ஆக்கா மனு வேந்தர்கள்" என்று கவிஞர்களைப் பாராட்டுகின்றான் ஒரு கவிஞன். (Poets are the unacknowledged legislators of the world)

இலக்கிய வடிவான நாடு எப்படி யிருக்க வேண்டும்? பசியும் பிணியும் பகையும் அற்று விளங்கவேண்டும். கம்பன் கண்ட *'கோசலம் என்னும் கனவு' எத்தகையதாக விளங்குகின்றது?

---

* இத்தொடரின் ஆசிரியர் ஸ்ரீமான் A. ஸ்ரீநிவாசராகவன், M.A., ஆங்கிலப் பேராசிரியர், ம. தி. தா. இந்து கலாசாலை, திருநெல்வேலி. இதை வழங்கும் உரிமையை அன்புடன் அளித்தற்கு அன்னாருக்கு நன்றி.

கோசல நாட்டில் கொடையே கிடையாது. ஏன்? வறுமை இல்லை. அங்கு உடல் உரத்தைக் காட்டும் அவசியமே கிடையாது. ஏதனால்? பகைவரே இல்லாத தனால். அந்நாட்டில் உண்மைக்கு என்று ஒருவிதமான தனி மதிப்பும் கிடையாது. ஏதனால் அப்படி? யார்தானும் பொய் சொல்பவர்கள் இருந்தால் அல்லவா? அங்கு ஞானத்திற்குத் தனி மதிப்பு இல்லை. ஏன்? எல்லோரும் கல்வி பெற்றவர்கள். ஆகவே வறுமையும், பகையும், பொய்யும், வெண்மையும் அற்றதான நாடே உண்மைநாடு என்பது கம்பருடைய சித்தாந்தம். அப்படி ஒரு நாடு இருக்கக்கூடாதா? அப்படி இருந்தால் பாவமா?

"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை பொய் உரை இலாமையால்
ஒண்மை இல்லை பல் கேள்வி ஓங்கலால்"

ஆனால் இன்று சுயநலக் கூட்டத்தாரின் சூழ்ச்சியால் உலகநிலை எவ்வாறு இருந்து வருகிறது?

"செம்மையெலாம் பாழாகிக்
கொடுமையே அறமாகித்" திரிந்து வருகிறது.

"உழுது விதைத்தறுப்பாருக்கு உணவில்லை." ஆனால் என்ன உண்டு? 'பிணிகள் உண்டு.'

'பொய்யைத் தொழுது அடிமை செய்வார்க்குச் செல்வம் உண்டு?' ஆனால் உண்மை சொல்வோர்க்கு?

"எழுதரிய பெருங் கொடுமைச் சிறையுண்டு தூக்குண்டு இறப்பும் உண்டு."

இப்படியாக அறம் தொலைந்து மறம் கும்மாளமிடும் நிலையைப் பார்க்கின்றோம். இந்நிலையில் கிடந்து உழலும்

மக்களுடைய உள்ளமெல்லாம் உட்கிச், சோம்பி, உணர் விழந்து, கதி மறந்துதான் போகும். அதனைத் தட்டி எழுப்பித் தலைநிமிர்ந்து நிற்கச் செய்பவனும் கவி ஞன்தான்.

"இனி ஒருவிதிசெய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்.
தனிஒருவனுக் குணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்."

என்று ஒரு பக்கம் முழங்குகின்றான். இன்னொரு பக்கம்,

"உழுவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித் திருப்போரை
நிந்தனை செய்வோம்;
விழலுக்கு நீர் பாய்ச்சி
மாயமாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம்
ஓயமாட்டோம்."

என்று கர்ஜனை செய்கிறான்.

இவ்வாறெல்லாம் முழங்கி முழங்கி, "தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நிற்கும்" மக்கள் இனத்தாரைத் தட்டி எழுப்புகின்றான். எத்தனை புனிதமான சேவை இது! அசலுக்கு நகலர் திரட்டுகின்றான்?

கீட்ஸ் என்ற ஆங்கில மகாகவி கவிஞனுடைய கனவுகளை எண்ணிக்கொண்டே வருகின்றான். தனது பாடலைக் கேட்டதும் தேசாபிமானி என்ன செய்வான், ஞானி என்ன செய்வான், காதலர்கள் என்ன செய்

வார்கள், தாய் என்ன செய்வாள் என்பனவற்றை எல்லாம் தெளிவாக எடுத்தெழுதுகின்றான். அத்தனையும் உண்மை. உதாரணமாக ஒன்றைமட்டிலும் பார்ப்போம்.

(தன்ன-தன்ன-தன்னதன | தன்ன-தன்ன-தன்னதன)

'வீரன் ஒருவன் யான் கூறும் வெறியார் வசனம் தலைக்கொண்டு
சூரத்தனமாய் வாளேந்திச் சொந்த நாட்டின் நலம்பேணித்
தீரச் செயல்கள் கோடி வகை திறனுய்ப் புரிந்து தேசத்தைப்
பாரில் யாரும் புகழும் ஓர் பரிசைக் கூட்டி வையாளே'

(ஆசிரியன் மொழிபெயர்ப்பு)

"The patriot shall hear my stern alarm and unsheathe his sword."

இத்தனை தூரம் சொல்லி வந்த அத்தனையும் ஒரு பக்கம் இருக்கட்டும். கவிஞன் வெறும் கனவு காண்கிற பேர்வழி என்பதான பட்டத்தைக் கொடுத்து அவனை ஒதுக்கி விடுகிறதாகவே முடிவு செய்வோம். ஆனாலும் ஒரு அருமைக்காக வேண்டியாவது நாம் அவனைப் பாராட்டத்தான் வேண்டும். அல்லாது போனால் பெரிய பாவம். செய் நன்றி மறந்த சண்டாளத்தனம் ஆகும்.

அந்த அருமை என்ன என்பதைப் பார்ப்போம்.

6. நாம் எல்லோரும் நமது பாஷையை, உலக வழக்கு என்ற ஒரு நியதியைத் தழுவி, கிட்டத்தட்ட ஒரே பாணியிலேயே உபயோகித்து வருகின்றோம். வட்டேவங்கடம் தொட்டுத் தென்குமரிவரை அப்படியே உபயோகித்து வருகிறதனாலே நம்மை அறியாமலே நமது மனத்துள்ளே ஒருவிதமான சலிப்பு உணர்ச்சி ஏற்படுகின்றது. அதை மாற்றும் மருந்தாக ஒரு திருப்பணியைச் செய்து தருகின்றான் கவிஞன். ஒரு சாதாரணமான உதாரணத்

தைப் பார்த்துவிட்டு, அப்பாலே கவிஞன் செய்கின்ற திருப்பணியை மதிப்பிடுவோம்.

தெருவிலே வருகின்றது ஒரு எருமை மாடு. வட வேங்கடம் முதல் தென்குமரி வரை அதைப் பார்க்கின்றவர்கள் எல்லோரும் அதை 'எருமைமாடு, எருமை மாடு' என்றுதான் அழைக்கின்றார்கள். யாரேனும் அதைப் பார்த்து 'எமன் ஏறும் பரி' என்ற தொடரை ஞாபகப்படுத்தினால், கேட்பதற்குக் கொஞ்சம் சுவை யாகத்தான் இருக்கிறது. இன்னும் கற்பனை நிறைந்த ஒருவர் அதைப் பார்த்து (Break-Inspector) *'ப்ரேக்-இன்ஸ்பெக்டர்' என்று சொல்லும்போது கேட்பதற்கு மிகவும் ருசிகரமாக இருக்கின்றது. ஏனென்றால் கற்பனை முலாம் பூசிய தொடராக இருப்பதனால்.

கவிஞன் என்ற வள்ளல் இப்படியான கற்பனை முலாம் பூசிய மொழிகளையும் தொடர்களையும் கோடிக் கணக்கில் நமக்கு வழங்கி உதவுகின்றான். தித்திக்கும் தேனை ஆக்கித் தருகின்றான் பாஷையை. இந்த ஒரு புண்ணியத்திற்காகவாவது அந்த வள்ளலைப் பாராட்டக்கூடாதா?

பெண் அழகை எடுத்துக்கொள்வோம். அதைத்தான் எப்படியெல்லாம் வர்ணிக்கின்றார்கள் கவிஞர்கள்!

சுந்தரர் பரவையாரைப் பார்த்ததும் அவருடைய கண்களுக்கு அப் பெண்மணி எப்படியெல்லாமோ தோற்றமளிக்கின்றாள். "கற்பக மரக்கொப்பு ஒன்று

---

* இந்தத் தொடரை எனக்கு அளித்தவர், எனது அருமை கண்பர் ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் M.A., அவர்கள்.

மண்ணுலகில் வந்து நடை பழகுகிறதா? காமனுடைய தவப் பயனே பெண் வடிவு தாங்கி வந்துவிட்டதா? புண்ணியத்தின் புண்ணியமே பூவுலகு நாடி வந்துற்றதா? அன்றிக் குவளையும் பவளமும் வில்லும் மதியும் மேகமும் மருவிய பூங்கொடிதானா? அற்புதமா, சிவனருளா என்று எண்ணி மயங்குவதாக வர்ணிக்கின்றார் சேக்கிழார் நாயனார்.

> "கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்தன் பெருவாழ்வோ!
> பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ! புயல்சுமந்து
> விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ!
> அற்புதமோ! சிவனருளோ! யாதோஎன் றதிசயித்தார்"

எத்தனை மதுரமாக இருக்கின்றது ஒவ்வொரு தொடரும்! கம்பர் ஜானகியை வர்ணிக்கிறாரே, எப்படியெல்லாம் வர்ணிக்கின்றார்! அமிர்தத்தைக் குழம்பாக வைத்துக் கொண்டு சீதையின் உருவத்தை மன்மதன் தீட்டுகின்றான். ஆனால் முடியவில்லை. திகைக்கின்றான்.

> "ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து அவயவம்
> [அமைக்கும் தன்மை
> யாதெனத் திகைப்பதல்லால் மதனற்கும்
> [எழுதவொண்ணாச் சீதை"

என்கிறார் ஓரிடத்தில். இன்னும் சூர்ப்பணகை மூலம் அவளுடைய அழகை அற்புதமான பாஷை கொண்டு தீட்டுகிறார். சீதையினுடைய முடித்த கூந்தல் எப்படியிருக்கும், விடித்த கூந்தல் எப்படியிருக்கும், அடி எப்படி, விரல் எப்படி, சொல் எப்படி, முகம் எப்படி, இன்னும் அவளுடைய நுதல் எப்படி, விழி எப்படி, பல் எப்படி, இதழ் எப்படி என்றெல்லாம் தெரிய வேண்டுமானால் கம்பரிடம்தான் கேட்கவேண்டும்.

(ஆனந்த பைரவி)

"மஞ்சொக்கும் அளகஞ்சி, மழையொக்கும் வடித்த கூந்தல்,
பஞ்சொக்கும் அடிகள், செய்ய பவளத்தின் விரல்கள் ஐய!
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக்கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்."

[மஞ்சு — மேகம். அளகஞ்சி — முடித்த கூந்தல்.
செய்ய — சிவந்த. கஞ்சம் — தாமரை.]

"வில்லொக்கும் நுதல் என்றாலும் வேலொக்கும் விழியென்றாலும்
பல்லொக்கும் முத்தென்றாலும் பவளத்தை இதழ் என்றாலும்
சொல்லுக்கும் பொருள் ஒவ்வாதால்; சொல்லலாம் உவமை
உண்டோ?"

என்று சூர்ப்பணகை திகைப்பதுபோல் நர்மும் திகைக்கும்படி அத்தனை மதுரமான தெர்டர்களால் வர்ணிக்கின்றார். இன்னும் இராமனுடைய தலைமுடியை எப்படி வர்ணிக்கிறார்!

'நீண்டு, சுருண்டு, நெய்த்து, இருண்டு,நெரிந்து, செறிந்து, நெடுநீலம் பூண்டு, புரிந்து, சரிந்து, கடைகுழன்று, பூவும் நறும் புகையும் வேண்டும் அல்லவெனத் தெய்வவெறியே கமழும் நறுங்குஞ்சி'

இன்னும் பாண்டிய மன்னன், ஒருவனிடம் காதல் முறையீடு செய்யும் முறையில் நமக்கு ஒரு பர்டல் கிடைத்துள்ளது. அதனிடத்து மிளிரும் வர்ணனை அழகு அலாதியான கர்ந்தியோடு மிளிர்கின்றது.

பாண்டியன்மீது பெண் கர்தல் கொள்கின்றாள். காதலனும் சாமான்யமான காதலன் இல்லை. கங்கை முதல் குமரிவரை பட்ர்ந்திருக்கிறது அவனுடைய ஆட்சியின் எல்லை. வெறும் பரப்பாகிய ஒரு சிறப்பு மட்டிலும்தான் உண்டர் என்றால் இல்லை, வேறு ஒன்றும் உண்டு. காதலியின் இனத்தைச் சார்ந்த ஒரு சில

பெண்களுக்கு அது அழுதளிக்கும். இன்னும் ஒரு சில ருக்குத் தீயை உமிழும். அத்தகையது. அதைப் பின் னணியாக வைத்துக்கொண்டு காதலியின்தோழி காதல னிடம் முறையிடுகின்றாள்.

"கங்கைக் கணவனே, காவிரி கொழுநனே, கன்னி யின் (குமரி) நாயகமே, எங்கள் தலைவியின் ஏக்கத்திற்கு உருகுகின்றயில்லை. உங்கள் குல முதல்வனுகிய சந்திரன் செய்யும் குறும்புக்கு அளவே கிடையாது. இரவெல் லாம் வேதனை. சந்திரனோடு நின்றுவிடுகிறதா தொல்லை? தென்றலும் கூடிக்கொண்டு காதல் தீயைக் கனன் றெழச் செய்கிறதே. என்ன செய்வது? அதன் வருகை ஆனந்தமாயிருக்கிறது. ஆனால் அதன் பயனை ஆற்ற முடியாததாக இருக்கின்றது. வரும்போதுதான் எத் தனை ஒய்யாரமாக வருகின்றது! அசைந்து அசைந்து வருகின்றது. மங்கள்ம் நிறைந்த மங்கையரைப் போன் றும் மன்னவர் கன்னியரைப் போன்றும் இங்கிதமாக நடந்து வருகின்றது. இன்னும் சூல் கொண்ட தோகை யர்போல், அதிலும் ஆண்மகவைக் கருவுற்ற அரிவையர் போல் அடிமேல் அடிவைத்து அசைந்து வருகின்றது. அவ்வளவுதானு? இன்னும் வாழ்வு கனிந்தவர்போல், மாதம் நிறைந்தவர்போல் மெல்ல நடந்து வந்து தொல்லை செய்கிறது. எங்கள் தலைவியால் ஆற்ற முடியவில்லை. உனக்கோ இராஜ்ய பாரமே பெரிதாகத் தோன்றுகிறது. எங்களுடைய ஏக்கந்தான் உனக்குப் பெரிதோ? காதலுக்கு வேண்டிய சூழ் நிலைகளை வைத் துக்கொண்டு இப்படி அசட்டை செய்வது பொருந் தாது" என்று பொருள் கொள்ளும் முறையில் கவிதை உருவாகின்றது.

(ஸ்ரீராகத்தில் பாடவும்)

"தென்றல் அசைந்துவரும் செந்தமிழ் நாடுடையாய்,
மங்கல மங்கையராய், மன்னவர் கன்னியராய்,
மைந்தர் வயிற்றினராய், வாழ்வினராய், அதிலே
[1]திங்கள் நிறைந்துவரும் [2]சேயிழையார் நடைபோல்
தென்றல் அசைந்துவரும் செந்தமிழ் நாடுடையாய்:
கங்கையின் இன் கணவ, காவிரியின் கொழுந, கன்னிதன்
நாயகமே,
எங்கள் இளங்கொடிதான் உங்கள் இளம்பிறையால்
எத்தனைகோடி [3]இரா இப்படி வாடுவதே."

இப்படியாக அழகு கனிந்த பதங்கள், நவரத்ன காந்தியோடு மின்னும் பதக் கூட்டுகள், நெஞ்சவீட்டிலே என்றும் இருத்திக் கொள்ளும்படியான ஆசையைத் தூண்டும் சொற்கோவைகள் ஆகிய இவைகளைத் தர வல்ல கற்பகம் கவிஞன்தான். அவனை நாடு கடத்த வேண்டும் என்றால் பொருந்துமா? அவன் படைத்துத் தருகின்ற கவிதையில் ஈடுபடுவது அறிவு மாட்சிக்கு அடாத காரியம் என்றால் எப்படி ஏற்றுக்கொள்ளப் படுமோ தெரியவில்லை.

7. இன்னும் சந்த இன்பம் இருக்கின்றதே, அது, மயங்கார்த உள்ளத்தையும் மயங்க வைத்துவிடும். நின்றும், நீண்டும், நிமிர்ந்தும், ஆழ்ந்தும், அகன்றும், குறுகியும், குழைந்தும் பாவ நீர்மைக்கு ஏற்றபடி பதங்கள் கதி தழுவிப் போவதை அனுபவிக்கும் பொழுது நம்மை அறியாதே ஆனந்தம் பிறக்கிறது. சில உதாரணங்களைப் பார்ப்போம்.

---

1. மாதம், 2. பெண்கள், 3. இரவு.

அதிகாயனுக்கும் இலக்குவனுக்கும் போர் நிகழ்கின்றது. சாமான்யமான போரில்லை. அசுரத்தனமான போர். அதிகாயன் இலக்குவன் மீது அம்புகளைப் பொழிகின்றான். அவைகள் அனைத்தும் வானை, மண்ணை, வளர்மலையை, இறந்தவர் ஊனை, நின்றவர் உயிரை, கடலின் மீனையெல்லாம் துளைத்துக்கொண்டு செல்கின்றன. அந் நிகழ்ச்சியை வர்ணிக்கும் செய்யுள் இதோ காணப்படுகிறது.

'வானெலாம் பகழி, வான வரம்பெலாம் பகழி, மண்ணின்
தானெலாம் பகழி, குன்றின் தலையெலாம் பகழி, சாய்ந்தார்
ஊனெலாம் பகழி, நின்றார் உயிரெலாம் பகழி, வேலை
மீனெலாம் பகழியாக வித்திலன் வெகுளி மிக்கான்'

[தான்–இடம் பகழி–அம்பு வேலை–கடல்]

இன்னும் ஒரு சிறு உதாரணம்.

சோழ மன்னன் கலிங்க நாட்டின் மீது படையெடுத்துச் செல்கின்றான். சோழ வீரர்கள் வடவர்களாகிய கலிங்க வீரர்களை நிலை குலையத் தாக்குகின்றார்கள். மனம் அதிரவும் குடல் பதறவும், விட்ட காடிருக்க விடாத காட்டை நாடி ஓடுகின்றார்கள் கலிங்க வீரர்கள். கலிங்க மக்களும் அப்படியே. இதை வர்ணிக்கும் போது, பதங்கள் மந்த கதியில் நடந்தால், கவிதை சுவைக்காது. அல்லோல கல்லோலமான நிலையைக் கவிதை தெரிவிக்க வேண்டும். வேறும் விருத்தாந்தத்தில் இல்லை ரஸம், அதனைக் கையாளும் முறையில்தான் ரஸமெல்லாம். இதனை உணரவேண்டி ஓர் உதாரணத்தைப் பார்த்து விட்டு அப்பாலே கலிங்க நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம்.

சீதையினிடம் விடை பெற்றுவந்த அனுமான் இலங்கையில் நெருப்பை வைக்கிறான். எங்கும் பற்றி எரியும்

பொழுது "ஐயோ, அசோக வனத்திலும் இந்தத் தீ பற்றிவிடுமே, சீதை எப்படி இருக்கிறாளோ என்று ஏங்குகின்றான். மீண்டும் அவளைப் பார்க்க மனம் துடிக்கின்றது. ஆனால் பெண்ணினிடம் மறுபடியும் மறுபடியும் போவது நன்றாக இருக்காதே என்ற எண்ணம் தடை செய்கிறது. இது சமயம் வானத்திலே சுஞ்சரித்துச் செல்லும் சாரணன் ஒருவன் அசோக வனத்தை நெருப்பு ஒன்றுமே செய்யவில்லை என்று அனுமனிடம் கூறுகின்றான். அதுவும் அரக்கர் மாயமோ என்ற அவநம்பிக்கை பிறக்கிறது அனுமன் மனத்தில். ஆனாலும் போகவேண்டும். இப்படிப் பரபரப்பான நிலை அனுமனுடைய நிலை.

சீதையினுடைய நிலையும் அப்படியே. "ஒருவாறாகத் தூதுவன் வந்துவிட்டான். அவனால் ஏதேனும் நன்மை கிடைக்குமென்று எண்ணினேன். அது சித்தியாவதற்குள் அவன் மீது நெருப்பு வைத்துவிட்டார்களே! ஏ அக்கினி பகவானே, நான் உண்மையான கற்புடையவள் என்று மதித்தால் அவனைத் தீண்டாதே" என்ற பிரார்த்தனையோடு இருக்கின்றாள். கவலையினால் அவள் உடலெல்லாம் வேகின்றது. இப்போது அனுமனைக் கண்டுவிட்டால் வெம்மை தணிந்து விடும். நல்லவேளையாக அனுமனும் வருகின்றான். அவனைப் பார்த்தாளோ இல்லையோ, மேனியே குளிர்ந்து விட்டது. 'என்ன வார்த்தை சொல்ல வந்தாய்' என்று கேட்கின்றாள். 'ஒன்றுமில்லை, வந்தனம்' என்று சொல்லிவிட்டு மாருதி திரும்பிவிடுகிறான். இருவர் உள்ளத்திலும் இருக்கின்ற ஆத்திர நிலையைப் பாடல் தெளிவாகத் தெ கின்றது.

தானன—னனன—னனா—

பார்த்தனள் ஜானகி [1]பாரா
வேர்த்தெரி மேனி குளிர்ந்தாள்;
[2]வார்த்தையென்? [3]"வந்தனே" என்னப்
போர்த்தொழில் மாருதி போனன்.

எத்தனையோ வார்த்தைகளைக் கொண்டு தெரிவிக்கும் நிலையை எவ்வளவோ அருமையாகத் தெரிவித்து விடுகிறது சந்தம். இப்படி அமைய வேண்டும்.

கலிங்கப்போர் நிகழ்ச்சியைக் குறிக்கும் பாடல்களில் இந்த நிலை காணப்படுகிறதா என்பதை இனி நாம் பார்ப்போம். கலிங்க மக்கள் கதிகலங்கி ஓடும் நிலையை இரண்டு கவிஞர்கள் விஸ்தரிக்கின்றார்கள். ஒருவருடையது பின் வருவது.

"ஒருவர் ஒருவர்மேல் வீழ்ந்து வடவர்
அருவர் அருவரென அஞ்சி—வெருவந்து
தீதீதீ என்றயர்வார் சென்று படைவீரர்
போர்க்கலிங்கம் மீதெழுந்த போது"

(அருவர்—தமிழர்) (வெருவந்து—பயந்து)

இந்தப் பாடலின் நடையை இனி வரும் ஐயங் கொண்டார் பாடலின் நடையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போதுதான் சந்தத்தினுடைய அருமைப்பாடு விளங்கும்.

தகதிமி - தகதிமி | தகதிமி - தகதிமி

இடிகின்—றனமதில் | எரிகின்—றனபொழில்

(1) "இடிகின்றன மதில், எரிகின்றன பொழில்,
எழுகின்றன புகை, பொழில் எல்லாம்
மடிகின்றன குடி கெடுகின்றனம், இனி
வருகின்றன படை பகை என்றே."

[1. பார்த்து, 2. ஜானகியின் கேள்வி, 3. மாருதியின் பதில்.]

(2) "கங்கா நதிஒரு புறமாகப் படை
கடல்போல் வந்தது; கடல் வந்தால்,
எங்கே புகலிடம் எங்கே இனி அரண்
ஏதோ இதுஇது விதி என்றே"

இனிமேல் சந்தம் மாறுகிறது. ஏனென்றால் மக்கள் ஓட்ட மெடுக்கின்றார்கள்.

[துரிதகதியில் வாசிக்கவும்]

தகிட - தகிட	தகிட - தகிட்	தகிட - தகிட
ஒருவர் ஒருவரின்	ஓட முந்தினர்	உடல் நிழலினை
		தகிட் - தகிட
		ஓட அஞ்சினர்

"ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடல் நிழலினை ஓட அஞ்சினர்
அருவர் அருவர் என நடுங்கினர்
அபயம் அபயம் எனை இறைஞ்சியே"

ஜயங்கொண்டார் கையாளும் சந்தம் பாவநீர்மைக்குப் பொருத்தமான சந்தம். இப்படியான சந்தங்களில் ஈடுபடும்போது மனம் அடைகிற ஆனந்தமே தனி. பொருள் தெரியவேண்டும் என்ற அவசியங்கூட இல்லை. * இசையில் அசுணமா லயித்துக் கிடப்பதுபோன்று செவி படைத்த நாமும் லயித்துக் கிடக்கலாம்.

இப்படியான சந்த லர்வண்யங்களை யெல்லாம் புகுத்து நாம் பேசும் மொழியை நமக்கு இன்பக் கேணி

* "I could fancy that a man might as easily die a victim to the seduction of vowels as a victim to drink or drugs" Garrod.

யாக மாற்றித் தருகின்ற கவிஞனே, நாடு கடத்தவேண்டியது அவசியந்தானு? பிளேட்டோவையே கேட்போம்.

8. இனி அடுத்துக் கவனிக்க வேண்டியதும் பிளேட்டோவின் நிந்தனேதான். வாழ்க்கையில் சோகமோ, துக்கமோ நிகழும்பொழுது, பெரிய மனிதர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள், பெரும்பாலும் மனத்துக்குள்ளேயே துக்கத்தையும் சோகத்தையும் அடக்கிக்கொள்கின்றார்களேயன்றி, ஆ, ஓ என்று அலறுவது கிடையாது. அப்படி அடக்கிக்கொள்வதையே நாம் பெருங் குணம் என்று மதிக்கின்றோம். ஆனல் காவியத்திலும் நாடகத்திலும் காணப்படும் பெரிய பாத்திரங்கள் அழுவதைப் பார்க்கிறோம். இது விபரீதந்தானே? இப்படிச் செய்வதெல்லாம் ஸ்ரீமான் பொதுஜனத்தின் அனுதாபத்தைப் பெறுவதற்குத்தானே என்பது பிளேடோவின் வாதம். இதையும் பரிசிலனே செய்யவேண்டும்.

பெரிய பாத்திரங்களே அழவைப்பது விபரீதமான காரியந்தான். அவ்வாறு அழவைப்பதும் ஸ்ரீமான் பொதுஜனத்தின் அனுதாபத்தைப் பெறுவதற்குத்தான். ஆனலும் ஒன்றை நாம் கவனிக்கவேண்டும். சோகம் ஒரு ரஸம். அந்த ரஸத்திற்கு என்ன ஸ்தானம் உண்டோ அதைக் கொடுக்கவேண்டும். அல்லாமலும் சாந்தி அல்லது சமநிலே (அதாவது துன்பத்தில் கலங்காமை இன்பத்தில் மகிழாமை) என்ற ரஸமானது நாடக நீர்மைக்கு ஒவ்வாதது. ஏன்? விகாரம் இன்மையால் "All Stoicism is undramatical" என்கிறார் ஆசிரியர் லெஸ்ஸிங். எத்தனே அளவில் சோகம் வெளியாகிறதோ அத்தனே அளவில் நமது அனுதாபமும் பெருகுகின்

றது. சாந்தி நிலையும் நம்முடைய மதிப்பைப் பெறத் தான் செய்கின்றது. இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆனலும் ஒரு நஷ்டம் இருக்கின்றது. மதிப்பு என்பது ஒருவித சலனம் அற்ற மனேநிலை. அப்படியான சலன மற்ற மனேநிலையினல் என்ன நஷ்டம் ஏற்படுகிறதென் ருல், நம் மனத்திலே பலவிதமான அனுதாப நிலைகள் தோன்றவும் அந்த நிலைகளின் மூலம் நாம் பல உண்மை களைக் கற்பனை செய்துகொள்ளவும் இடமில்லாமல் போகிறது.

"It is true if we see (one) bear his misery with a great soul, this grandeur of soul excites our admiration; but admiration is only a cold emotion, and its inactive astonishment excludes every warmer passion as well as every distinct idea." —Lessing.

இராமனைக் காட்டுக்கு அனுப்பிய தசரதன் புலம்புகின் ருன். இந்திரசித்தைப் பறிகொடுத்த இராவணன் புலம்புகின்ருன். இலக்குவன் மடிந்ததுபோல் கிடக்கும் நிலையைக் கண்டு இராமனும் புலம்புகின்ருன். இவர்கள் மூவரும் புலம்பவில்லை, ஏதோ ஒரு துளிக் கண்ணீர் மட் டிலும் அவர்களுடைய கண்களில் அரும்பிற்று என்ப தாக வைத்துக்கொள்வோம். அப்படி இருக்கும் நிலை யில் நமது மனத்தில் எழுகின்ற அனுதாபத்திற்கும், புலம்புவதைக் கேட்பதனல் எழுகின்ற அனுதாபத்திற் கும் எத்தனையோ வித்தியாசம் உண்டு. புலம்புவதைக் கேட்கும்போது மனித இயல்பின் வெளியீட்டை உணர் கின்ருேம். நாமும் அப்படியான நஷ்டங்களை நேரில் அனுபவித்த நிலையை ஞாபகப்படுத்திக் கொண்டு, அப் படிப்பட்ட நஷ்டங்களினல் கிடைக்கின்ற படிப்பினை

களைத் திரட்டிக்கொள்கின்றோம். அதனால் நம்முடைய மனம் தெளிவை அடைகிறதே யொழியக் கெட்டுவிட வில்லை. அல்லாமலும் புலம்புவது போன்ற செயல்களினால், புலம்புகின்ற பாத்திரம், புலம்பும் நிலையைத் தூண்டிய பாத்திரத்தினிடம், எத்தகைய ஈடுபாடு கொண்டிருந்தது என்பதெல்லாம் தெரிகின்றது. அதை அறிய அறிய நெஞ்சு உடைகின்றது.

"I see the world before me topsy-turvy. You who ought to have succeeded me have preceded me"

என்று மகனைப் பறிகொடுத்த எட்மண்ட் பர்க் (Edmund Burke) அழும்பொழுது நமது இதயம் உடையவில்லையா?

"எனக்கு நீ செய்யத்தக்க கடனெல்லாம் ஏங்கிஏங்கி
உனக்கு யான் செய்வதானேன் என்னின் யார் உலகத்
துள்ளார்"

என்று இராவணன் அழும்பொழுது நாம் இரங்கத்தானே செய்கின்றோம்?

"தாயோ நீயே, தந்தையும் நீயே, தவம் நீயே;
சேயோ நீயே, தம்பியும் நீயே, திரு நீயே;
போயோ நின்றாய் என்னை யிகழ்ந்தாய் புகழ்பாராய்;
நீயோ யாரை நின்னினும் நெஞ்சம் வலியேனே"

என்று இராமன் அழும்பொழுது யாருக்குத்தான் இதயம் விண்டுபோகாது? இவர்களுடைய புலப்பத்தின் மூலம் இவர்களுடைய மன நிலையும் உள்ளக்கிடக்கையும் எத்தனை தெளிவாக நமக்குத் தெரிகின்றன.

இராவணனுகட்டும், இராமனுகட்டும், செயலளவில் அமானுஷ்யமான செயல்களைச் செய்தாலும் உணர்ச்சி அளவில் மக்களைப்போன்றுதான் காணப்படுகிறார்கள். மக்களைப்போலவே காணப்பட்டாலும் அவர்களுடைய கர்ம வீரமானது மலையையும் துளங்கும்படி செய்ய வல்லதாக அல்லவா காணப்படுகிறது! ஒரு இம்மியும் விட்டுக்கொடுக்கிறார்களில்லை. ஆகவே அவர்களுடைய பெருமைக்கு எந்தவிதமான பங்கமும் கிடையாது. அல்லாமலும் கலையினுடைய முடிந்த முடிபுதான் யாது? கவிதை ஒரு கலை. எப்படி அறிவின் இலக்கியம் உண்மையை நாடுவதாகிறதோ அம்மாதிரி கலையின் இலக்கியம் இன்பத்தைத் தருவதாகும். சோகத்தை விஸ்தரிப்பதனுல் நமக்கு என்ன இன்பம் கிடைக்கப்போகிறது என்று கேட்கலாம். அரிச்சந்திர மயானகாண்ட நாடகத்தை அற்புதமாக நடிக்கப் பார்த்த நாம், வீடு திரும்பும்போது, அழுதுகொண்டு வருகிறோமா அல்லது கொடுத்த காசு தரும் என்ற ஆனந்த உணர்ச்சியோடு வருகிறோமா? ஆனந்த உணர்ச்சியோடுதான் வருகின்றோம். அம்மாதிரியான அனுபவந்தான் காவியத்திலும். முடிவில் அடைவது இன்பமே. இப்படி இன்பத்தைக் கூட்டிவைக்கவேண்டுமென்றுல் கொஞ்சம் விஸ்தாரமான முறையில் ரஸங்கள் பரிமாறப்பட்டவேண்டியதுதான்.

9. இம்மட்டோடு நிறுத்திவிட்டு பிளேட்டோவின் இறுதித் தாக்குதலை ஆராய்வோம்.

'கோபம், காமம் போன்ற சுவைகளை மிகையாகத் தீட்டி விஸ்தரிப்பதை அனுபவிக்கும்போது, நமது மனத்திலும் அப்பண்புகள் மிகுதியான அளவில் நுழைந்து மன அமைதியைக் கெடுத்துவிடும் என்கிறார்.

அப்படித்தானே, அல்லது எப்படி என்பதைக் கவனிக்க வேண்டும்.

மருத்துவத்தில் ஒரு முறை உண்டு. விஷத்தை விஷத்தாலேயே போக்கும்முறை. தமிழில் ஒரு பழ மொழி உண்டு. முள்ளை முள்ளாலேயே வாங்கவேண்டும் என்பதுதான் அது. அம்மாதிரியே மேலே குறித்த சுவைகளையும் அவைகளுக்கு இரையானவர்கள் முடிவில் படும் பாட்டையும் விஸ்தரித்துவிட்டால், 'இங்கிலே தானே முடிவில் நமக்கும் சித்திக்கும்' என்ற உணர்வு தோன்றிவிடும். பிளேட்டோவின் சிஷ்யப்பிள்ளையான அரிஸ்டாட்டில் இந்த முறையில்தான் சமாதானம் சொல்கின்றார். இதுதான் பொருத்தமாகவும் தோன்று கிறது. சித்தசுத்தி என்று இதனை அழைக்கலாம். Katharsis (கதார்ஸிஸ்) என்றே அரிஸ்டாட்டில் அழைக் கிறார்.

இவ்வாறுக நாம் பிளேட்டோவின் கண்டனத்திற்கு மறுப்புக் கூறலாம். இனி இரசஞானசம்பந்தமான ஒரு சில பொதுப்படை உண்மைகளையும் பார்த்துவிடுவோம்.

10. நிஜ உலகை ஊனக்கண்ணோடு பார்ப்பதற்கும் கலைக் கண்ணோடு பார்ப்பதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு.

தெருவிலே நாம் நடந்துபோவதாக வைத்துக் கொள்வோம். இருபுறமும் எத்தனையோ மரங்கள் உண்டு, வீடுகள் உண்டு; எத்தனையோ பேர் போவார் கள், வருவார்கள். ஒவ்வொரு வீட்டையும் மரத்தையும் எண்ணிக்கொண்டு போகிறோமா என்றால், இல்லை. வருகிறவர் போகிறவர் ஒவ்வொருவரையும், இவர் யார் இவர் யார் என்று உற்றுநோக்கித்தான் செல்வோமா

என்றால் அதுவும் இல்லை. ஏதோ கண்ணில் பட்டவை களையும் கண்ணெதிரே தோன்றியவர்களையும் நாம் பார்ப் போம். சரி, இனி ஒரு கண்ணாடியை வைத்துக்கொண்டு வீதியிலே காணும் காட்சிகளைப் பார்க்கிறதென்றிருக்கு மானால், கிட்டத்தட்ட கண்ணாடியில் விழுகின்ற ஒவ்வொரு காட்சியையும் பார்த்தே தீருவோம். இந்தக் கண்ணாடி மூலம் பார்ப்பதுபோன்றுதான் கலைக்கண்கொண்டு பார்ப்பதும். கண்ணாடிச் சட்டம் எப்படி அதன் பரப் பையும் பார்வை எல்லையையும் மட்டுப்படுத்துகிறதோ அம்மாதிரித்தான் கலையும்.

இனி எது கலையாக மதிக்கப்படும் என்பதை ஆராய வேண்டும். ஒருவன் வீதி வழியே போவதாக வைத்துக் கொள்வோம். ஒரு பெரிய மாடு அவனை முட்டித்தள்ளு வதற்காகத் துரத்திக்கொண்டே வருகிறது. அடித்துப் புரண்டு விழுந்து ஆசாமி ஓடியே வருகிறான். வந்து வீட்டுக்குள் நுழைந்ததும், "என்னை ஒரு மாடு விரட்டிக் கொண்டே வந்தது. நான் தப்பிவிட்டேன்" என்று சொல்வது கலையாகுமா? இல்லை. "என்னை ஒரு மாடு விரட்டிக்கொண்டே வந்தது. நான் ஒரு மட்டிலும் தப்பித்துக்கொண்டேன். அது இப்பொழுது தென்னந் தோப்பில்தான் நிற்கிறது, வாருங்கள் அதை அடிப் போம்" என்று சொல்லுவதும் கலை ஆகுமா? ஆகாது. பின்னர் எதுதான் கலை? இந்த நிகழ்ச்சியானது கலையின் எல்லைக்குள் வரும் தகுதி உடையதுதானே, இன்னும் கலையின் எல்லைக்குள் எதுதான் வரவேண்டும், எது வரக்கூடாது என்றுள்ள வருணக் கட்டுப்பாடுகள் உண்டா என்றால், அப்படி ஒன்றும் கிடையாது? எந்தப் பொருளினையும் கலைக்கு உரிய பொருளாக்கிவிடலாம். கவிதைக்குரிய பொருளாக்கிவிடலாம். பிளேட்டோ

வேண்டுமானால் சொல்லிக்கொண்டிருக்கட்டும். கடவுளைப்பற்றிப் பாடினால் அவன் என்னுடைய இலக்கிய உலகத்திற்கு வரலாம், பெரியோரைப்பற்றிப் பாடினாலும் வரலாம், வேறுவிஷயங்களைப்பற்றிப் பாட்டுக் கட்டுகின்றவர்களெல்லோரும் எட்டிப் போகட்டும் என்று அவர் சொன்னால் போதுமா?

"வண்டி அற்புதப் பொருளாம்; வண்டி மாடும் அற்புதப்
[பொருளாம்;
வண்டி பூட்டுகின்ற கயிறும்-என்றன் மனத்துள் அற்புதப்
[பொருளாம்;
வண்டல் கிண்டி உழுவோன் கையில் வரிவில் ஏந்தி நிற்கும்
பண்டை விஜயன் போல இந்தப் பாரில் அற்புதப் பொருளாம்;
பறக்கும் குருவியோடு உள்ளம் பறந்து பறந்து திரியும்;
கறக்கும் பசுவைக் கண்டால் அதன் கன்றுபோலத் துள்ளும்;
ஈயும் எனக்குத் தோழன், ஊரும் எறும்பும் எனக்குத் தோழன்;
நாயும் எனக்குத் தோழன், கள்ள நரியும் எனக்குத் தோழன்;
கல்லின் கதைகளெல்லாம் இரு காது குளிரக் கேட்பேன்;
புல்லின்பேச்சை அறிவேன், அதைப் புராணமாக விரிப்பேன்;
அலகில் ஜோதியான ஈசன் அருளாலே அமையும்
உலகில் எந்தப் பொருளும் கவிதைக்குரிய பொருளாம் ஐய;
உள்ளத்துள்ளது கவிதை, இன்ப உரு எடுப்பது கவிதை,
தெள்ளத்தெளிந்த தமிழில் உண்மை தெரிந்துரைப்பது கவிதை"

என்று அற்புதமான பாஷையில் எதுவும் கவிதைக்குரிய பொருளாகும் என்பதை நிலைநாட்டுகின்றார்கள் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள். ஆகவே மாடு விரட்டிவந்த நிகழ்ச்சியிலும் கலையின் சாயத்தை ஏற்றிவிடலாம். எப்படி? மாடு விரட்டிவந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டவன் ஒருவன். அவனுக்கே எல்லாம் தெரியும். அவனைத் தவிர வேறு யாரும் கலந்து

கொள்ளவில்லை. கலந்துகொள்ளாதவர்களும், அவன் கலந்துகொண்டு அனுபவித்ததுபோல் தாங்களும் கலந்துகொண்டு அனுபவித்ததாகப் பாவிக்கும்படி, அத்தனை சொல்லாற்றலோடு அந்த நிகழ்ச்சியை விஸ்தரிப்பானுகில், அந்த விஸ்தரிப்பைக் கலையென்று சொல்லலாம்.

இனி இந்தக் கலையை மதிப்பிடும் முறை ஒன்றிருக்கிறது. அதை ஆராய்வோம்.

மேலே குறிப்பிட்ட மாட்டு நிகழ்ச்சியையே எடுத்துக் கொள்வோம். நேரடியாக அதனிடம் அகப்பட்டுக் கொண்டு தத்தளித்தது ஒரு அனுபவம்; அதனையே பத்து தினங்கள் கழித்து ஒருநாள் மாடியில் படுத்திருக்கும்போது தனது மனக்கண் முன்னே சித்திரித்துக் கொள்ளுகிறான். அதுவும் ஒருவகை அனுபவம். முன்னையது நேரடியான அனுபவம். அதை அனுபவிக்கும் பொழுது ஓட்டமெடுத்தான். பின்னையது கற்பனை அனுபவம். அதை அனுபவிக்கும்பொழுது அவன் ஓட வேண்டிய அவசியமில்லை. நிதானமாகப் படுத்துக் கொண்டே அந்த அனுபவத்தைப் பெறலாம்.

இப்பொழுது இந்த இரண்டு அனுபவங்களின் மூலம் நாம் ஒரு உண்மையைத் தெரிந்துகொள்கின்றோம். அது பின் வருமாறு. நேரடி அனுபவத்தை அளவிடும் முறை வேறு; கற்பனை அனுபவத்தை அளவிடும் முறை வேறு. இதுவே நாம் தெரிந்துகொள்ளும் உண்மை. நேரடி அனுபவத்தில் ஓட நேர்ந்தது. கற்பனை அனுபவத்தில் ஓடவேண்டிய கட்டமே யில்லை. கலையை அனுபவிக்கும்பொழுது நாம் பெறுகின்ற அனுபவமெல்லாம் மேலே சொன்ன கற்பனை அனுபவந்தான்.

இனி இக் கற்பனை அனுபவத்தின் இயல்பை ஓரளவு விரிவாகப் பார்ப்போம். அப்படிப் பார்க்கும் போதும் நேரடி அனுபவத்தை வைத்துக்கொண்டுதான் பார்க்கவேண்டும். மேலே கூறிய மாட்டு நிகழ்ச்சியையே எடுத்துக்கொள்வோம். நேரடி அனுபவத்தில் அது விரட்டிக்கொண்டு வந்ததும், அதன் எதிரே அகப்பட்ட மனிதன் உயிர் தப்பி ஓட நேர்ந்தது. எதனால் என்றால் பயத்தினால். அதனால் அவனுக்கு இலாபமா, நஷ்டமா என்பதை ஆராய்ந்தால், ஒரு வகையில் இலாபம், ஒரு வகையில் நஷ்டம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். உயிர் தப்பியது இலாபகரமான கார்யந்தான். ஆனால் நஷ்டம் எப்படி? இப்படி விரட்டி வருகின்ற மாடு முட்ட வரும்போது, எப்படித் துள்ளும், எப்படி முட்டிக் கீழே சாய்க்கும், கீழே சாய்க்கப்பட்டால் எப்படியெல்லாம் துடிதுடிக்க நேரிடும் என்பதை யெல்லாம் நேரடியாகப் பார்க்கமுடியாது போனது ஓரளவு நஷ்டம்தான். எதனால் அந்த நஷ்டம் என்றால், பயம் வந்து மனதைக் கெளவிய காரணத்தால். ஆகவே உயிரைக் காப்பாற்றுவதான செயலில் இறங்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இந்த அவசியந்தான் மேற்படி அனுபவ நஷ்டத்திற்குரிய காரணமாகும். இந்த அவசியத்தை ஆங்கிலத்தில் 'Responsive action' என்று சொல்வார்கள். நாம் வேண்டுமானால் 'கிரியா அவசியம்' என்று அதை மொழிபெயர்த்துக்கொள்ளலாம். இன்னும் வேண்டுமானால் 'கர்ம நெருக்கடி' என்றும் மொழிபெயர்த்துக் கொள்ளலாம்.

மேற்படி அனுபவ நஷ்டத்தை ஈடு செய்ய வழி உண்டா என்றால், உண்டு. சினிமாக்கலையானது இந்த நஷ்டத்தை ஈடு செய்கின்றது. அங்கே இம்மாதிரியான

ஒரு நிகழ்ச்சி காட்டப்படுவதாக வைத்துக்கொள்வோம். மாடு ஓடிவருவது, பையனை விரட்டுவது, துள்ளிப் பாய்ந்து முட்டுவது, பையன் துடிதுடிப்பது ஆகிய அத்தனை காட்சிகளையும் காணலாம். இருக்கிற இடத்தைவிட்டு எழுந்து ஓடும் அவசியம் ஏற்படுமா என்றால், ஏற்படாது. இருந்த இடத்தில் இருந்துகொண்டே எந்தக் காட்சியைக் கண்டு குடல் பதறி ஓட நேர்ந்ததோ, அதே காட்சியை, அற்றம்வரை அமர்ந்து சுகமாகப் பார்த்து அனுபவிக்கலாம். இதுதான் கலையின் மூலம் நமக்குக் கிடைக்கக்கூடிய இலாபம்.

ஆகவே கலை என்பது யாது என்பதை நம்மால் ஓரளவு தெரிந்து கொள்ள முடிகின்றது. கற்பனை அனுபவத்தின் வெளியீடு கலை. கற்பனை அனுபவத்தைத் தூண்டுவதும் கலை. அதற்கும் நேரடி அனுபவத்திற்கும் உள்ள வேற்றுமை யாதென்றால் நேரடி அனுபவம் செயலில் ஈடுபடுவதாகிய கிரியா அவசியத்தை உட்கொண்டது. கற்பனை அனுபவத்திற்கு அந்த அவசியம் தேவையில்லை.

இப்படியான கற்பனையனுபவம் அவசியந்தானா என்ற கேள்வி இனி எழுகின்றது. ஹிதோபதேசி இதை எப்படி மதிப்பிடுவான்? நன்னடத்தைக்கு இது துணை செய்யுமானால் இருக்கட்டும், அல்லாது போனால் வேண்டாம் என்றுதான் சொல்லுவான். இன்னும் சிலர். அவர்கள் யாரென்றால் ஜைனர்கள். அவர்கள் என்ன சொல்வார்கள்? சினிமாக் கலை படைத்துத் தருவதுபோன்ற கற்பனை அனுபவங்களெல்லாம் இறுதியில் சிருங்கார மயமான மனோ நிலையைத் தோற்றுவித்துவிடும்; ஆகவே கூடாது என்றே சொல்லிவிடுவார்கள்.

இப்படி ஆட்சேபிக்கின்ற கட்சிக்கு ஏதாவது சமாதானம் சொல்லுகிறது என்றிருக்குமானால் மதத்தையும் தர்க்கத்திற்கு இழுத்துக் கொள்ள வேண்டியதுதான். மதம், அப்படி இப்படி என்று ஆயிரம் தத்துவத்தைச் சொன்னாலும், அதன் முடிவு என்ன? அதுவும் கற்பனை தியான ஒன்றுதான். சிவனுக்குக் கற்பிக்கின்ற ரூபத்தின் இயல்பை எடுத்துக் கொள்வோம். பெருமாளுக்குக் கற்பிக்கின்ற ரூபத்தின் இயல்பையும் எடுத்துக் கொள்வோம். எல்லாம் கற்பனையாகப் படைத்துக் கொள்ளப் பட்ட ரூபங்கள். தலைமுறை தலைமுறையாக அவைகளை நம்புகின்றோம். துதிபாடுகின்றோம். நாளாக நாளாக அவைகள் உண்மை உருவைப் பெற்றுவிடுகின்றன. சுருங்கச்சொன்னால் விக்ரக ஆராதனை முற்றிலுமே கற்பனை ஆக்கம்.

"ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமிலார்க்கு
ஆயிரந் திருநாமம் பாடி" —திருவாசகம்.
"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" —அப்பர்.

என்ற அடிகளே தக்க சான்றுகளாகும். ஆனாலும் நாம் நம்பவில்லையா? நம்பி வழிபாடும் செய்ய வில்லையா?

'மதத்தையெல்லாம் இப்படித் தர்க்கத்திற்கு இழுக்கக் கூடாது; மதம் ஒழுக்கத்தோடு சம்பந்த முடையது; அதனால் கிடைக்கிற பலனே வேறு' என்று சிலர் வாதாடலாம். மதம் ஒழுக்கத்தோடு சம்பந்தம் உடையதென்றே வைத்துக்கொள்வோம். சற்று மதத்தின் சரித்தை அலசிப் பார்த்துவிட்டால், மதத்தின் பெயரால் நிகழ்ந்த அட்டூழியச் செயல்கள் அக்கட்சிக்கு விரோதமாக இருப்பதைக் காணலாம். சிலர் வேறுவிதமான

சமாதானம் சொல்லலாம். மனிதனிடத்தில் இயல்பாகவே மனிதசக்திக்கும் மிஞ்சின ஒரு சக்தி ஒன்று உண்டு என்பதாக எண்ணும் இயல்பு இருக்கின்றது. அந்த இயல்பைத் தழுவியதுதான் மதம் என்பதாகவும், அதைப் பண்படச் செய்வதனால் நன்மையே சித்திக்கும் என்பதாகவும் சொல்லலாம். அப்படியானால் கலைஞனும் அதே பாணியில் பதில் சொல்லிவிடுவான். நீ எப்படி மத சம்பந்தமான கற்பனை நல்லதென்றும் உண்மையென்றும் நம்புகிறாயோ, அதே மாதிரி நானும் கலையால் எழுகின்ற கற்பனையனுபவம் நன்மை தரக் கூடிய தென்றும் உண்மையானதென்றும் சொல்லி விடுவேன், என்பான். அப்படிச் சொல்லுகிறதாகவே வைத்துக் கொள்வோம். அப்படிச் சொல்ல என்ன நியாயம் இருக்கின்றது? நாம் ஏற்கெனவே மாட்டு நிகழ்ச்சி மூலம் ஒரு உண்மையை அறிந்தோம். அதைத்தான் இங்கே ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும். நேரடி அனுபவம் கிரியா அவசியத்தில் கொண்டு விடுவதனாலே அரைகுறையாகப் போய் விடுகின்றது. ரஸத்தின் முழு இயல்பையும் அனுபவிக்க முடிகிறதில்லை. ரஸம் வாய்த்தாலும் ரஸத்தை ரஸமாக அனுபவிக்கும் வாய்ப்பு வாய்ப்பதில்லை. ஆனால் கற்பனை அனுபவத்தில் அப்படிக்கிடையாது. ரஸத்தின் முழு இயல்பையும் அனுபவிக்கலாம். ஆகையினாலே கலை தருகின்ற கற்பனை அனுபவமும் வேண்டியதுதான் என்று வாதாடலாம்.

இன்னும் இதைத் தொடர்ந்து ஆராய்வோம். நிஜ வாழ்க்கையில் அவசியம் என்ற ஒன்று நம்மை ஆட்டி வைக்கின்றது. அந்த அவசியம் என்ற பண்பு நமது பார்வை, நமது செயல், நமது பாவனை ஆகிய ஒவ்வொன்றின் பரப்பையும் குறுக்கிவிடுகிறது. எது நமக்கு

இன்றியமையாததோ அதை மட்டிலும் பார்ப்போம். எனவே பார்வையின் எல்லை குறுகிவிடுகின்றது. ஆனால் பார்வைக்கென்றே ஒருபொருள் ஏற்பட்டுள்ளது என்றிருக்குமானால் அதை ஒருவன் பார்க்கும்பொழுது எப்படிப் பார்ப்பான்? வாழ்க்கையில் பார்க்கிற மாதிரி ஏனோதானோ என்று பார்ப்பான்? கிடையவே கிடையாது. கலைக்கண்ணோடுதான் பார்ப்பான். ஏன் இப்படி இருக்கின்றது, இப்படி இருப்பதனால் என்ன பயன் என்று ஆராயும்படியான முறையிலேயே பார்ப்பான். ஆகவே கலையானது பார்வையை விரிவடையச் செய்கின்றது.

ஆனால் ஒரு குறை இருக்கின்றது. அந்தக் குறையானது உணர்ச்சி சம்பந்தமாக உள்ளது. நேரடி அனுபவத்தில் ஏற்படுகிற சுயமான பய உணர்ச்சிக்கும், திரையில் காணும்போது ஏற்படுகிற பய உணர்ச்சிக்கும் வித்தியாசம் உண்டு. நேரடி அனுபவத்தில் உதிக்கும் உணர்ச்சி அழுத்தமான உணர்ச்சி. திரையில் உதிக்கும் உணர்ச்சி அத்தனை அழுத்தமானதாகாது. என்றாலும் தெளிவாக, நின்று, நிலைத்து, நிதானத்துடன் பார்ப்பதற்கு உரியதாக விளங்குகின்றது. உணர்ச்சியையும் அனுபவிக்கலாம், உணர்ச்சி வெளியீட்டையும் பார்க்கலாம்.

வேறொன்றையும் இங்கே கவனிக்க வேண்டியதிருக்கிறது. நேரடி அனுபவத்தில் கிரியைகளைச் செய்வதற்கு என்ன என்ன மனோநிலை தேவையோ அதைத்தான் வளர்க்க வேண்டியதிருக்கிறது. உதாரணமாக ஒன்றை எடுத்துக்கொள்வோம். போட்டி மனப்பான்மை என ஒன்றிருக்கிறது. நிஜ வாழ்க்கையில் அதை வளர்ப்பதற்கு யாரும் தடை சொல்லப் போவதில்லை. எல்லோ

ரும் பாராட்டத்தான் செய்வார்கள். ஆனால் சிலவித மான மனப்பான்மைகள் இருக்கின்றன. அவைகளுக்கு எத்தனையோ மதிப்புண்டு. அவைகளை வளர்ப்பதனால் அமரநிலை கூட அடையலாம்.

"நானெனும் ஆணவம் தள்ளலும்-இந்த
ஞாலத்தைத் தான்எனக் கொள்ளலும்"

என்னும் இந்த நிலை, உயர்ந்தநிலை.

'காக்கை குருவி எங்கள் ஜாதி-நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்'

இவ்வாறு பாவிக்கின்ற நிலை எத்தனை உயர்ந்தநிலை! இதை அனுஷ்டித்தால், அவனை ஏற இறங்கப் பார்த்து, இவன் நிதானபுத்தி உள்ளவன்தானா அல்லது பைத்தியக்காரனா என்று உலகம் சந்தேகிக்கும். கலை இம்மாதிரியான நிலையை யெல்லாம் வரவேற்கின்றது. ஒரு பசுவின் உயிரைக் காப்பாற்ற ஒருவன் தனது உயிரைத் தியாகம் செய்ய முற்பட்டால் 'அட பைத்தியமே' என்று உலகம் பட்டம் கட்டும். ஒரு ஆண்டியின் நலத்திற்காக ஒருவன் உண்ணாவிரதமிருந்தால் ஏளனத்திற்குரிய பாத்திரமாகக் கருதப்படுவான். 'இந்த ஆண்டிக்கு அன்னம் கொடுக்க மறுக்கிறதே சண்டாள உலகம். இது அழியாதா' என்றால், 'நீ அழிந்து தொலை, உலகம் என் அழியவேண்டும்? ஆண்டிக்கு அன்னம் கொடுக்க மறுத்தால் குற்றம் ஆகும் என்று இந்தியன் பீனல்கோடில் கண்டிருக்கவா செய்கிறது' என்று விண்ணை உலகம் கொக்கரிக்கும்.

'ஆவுக்காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க்கேனும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவரே தகை வான் உறை
தேவர்க்குந் தொழும் தேவர்களாகுவர்'
"தனி ஒருவனுக் குணவிலை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்றெல்லாம் கவிதைக்கலை முழங்கும். இப்படி முழங்குவதற்குரிய உரிமையெல்லாம் கலைக்கு உண்டு.

முடிவாகச் சொல்லப்போனால் கலையை நிதானிக்க வேண்டிய முறையே வேறு. நிஜ வாழ்க்கை என்ற அசலுக்கு உரிய நகல் இல்லை, கலை. ஆனால் நிஜவாழ்க்கையில் திளைக்க உதவும் உணர்ச்சிகளின் இலக்கிய வடிவே கலை.

The world as projected by the ethical or the aesthetic faculties has as good a right to claim reality as that which the natural sciences revealed to us.—W. R. Inge.

"அற உணர்வோ அழகுணர்வோ படைத்துத் தரும் உலகமானது, விஞ்ஞானக் கலை உணர்த்தி உதவும் உலகுக்கு நிகராகும் உரிமை உடையதே."

அழகின் மர்மம்

உலகத்தைப் பார்க்கின்றோம். சில பகுதி நமக்கு மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. சில பகுதி மகிழ்ச்சியை ஊட்டுகிறதில்லை. மகிழ்ச்சி ஊட்டாத பகுதியின் மூலம் ஏதேனும் உபகாரம் இருக்குமேயானால், உபகாரம் சித்திக்கும் வரை வைத்துக்கொண்டு, பின்னர் உதறி எறிந்துவிடுகிறோம். அநாதை போன்று அங்கும் இங்கும் கொஞ்ச நாளைக்கு அலையும். அப்பால் நமது அறிவு எல்லையைவிட்டு அகன்றுவிடும். ஆதியிலிருந்து அந்தம் வரை எது ஒன்று நிரந்தர இன்பத்தைத் தருகின்றதோ, அதையே நாம் நம்முடையதாகப் பாவித்துக்கொள்கின்றோம்.

சிந்தனை சக்தி, கற்பனை சக்தி, பகுத்தறிவு போன்ற பல மேம்பாடுகள நம்மிடம் இருந்தும், சோம்பேறித்தனத்தின் காரணமாகவும், தன்னலத்தின் காரணமாகவும், பார்வையையே குறுக்கிக்கொண்டு, குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே வாழ்க்கைச் சகடத்தை ஓட்டி ஓட்டி மாண்டு போகின்றோம். அவ்வாறு செய்வது தவறு. மனிதப் பிறவிக்கே அடாத ஒரு செயல். இன்னும் சொல்லப்போனால் அகௌரவமான செயலுங் கூட. எவ்வளவுக்கெவ்வளவு பார்வை எல்லையையும் பாவனை எல்லையையும் குறுக்குகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு ஆத்ம எல்லையையும் குறுக்கிக்கொள்ளவே செய்கின்றோம். அது கூடாது. உலகனைத்தும் நமது பிதுரார்ஜிதம். நமது உடைமை. நமது பிதுரார்ஜிதத்தை நாம் கவர்ந்துகொள்ளாதவரை, நம்மிடையே குடிகொண்

டிருக்கும் சக்திகளுக்கு எவ்விதமான பெருளும் கிடையவே கிடையாது.

ஒன்றைக் கண்டு மகிழ்தலும், ஒன்றைக் கண்டு வெறுத்தலுமாகிய இரண்டுபட்ட நேர்க்கோடு, பிதுரார்ஜிதமான உலகை நாம் பார்வையிட்டால், நாம் கவர்ந்து கொள்ளக்கூடிய இலாபம் சிறியதாகவே இருக்கும். பிதுரார்ஜிதத்தின் அளவைப் பெருக்கவேண்டுமானால், அதனுடைய எல்லையை விரிக்க வேண்டுமானால், அதற்கு வேண்டிய துணையைச் செய்யும் தகுதியுடையது நமது அழகுணர்ச்சிதான். அதன் துணை மட்டிலும் பரிபூரணமாக வாய்த்துவிட்டால் அணுவினுள்ளே அண்டத்தைக் காணலாம்; அகங்கையினுள்ளே அமருலகை அடக்கலாம்; பூவினுள்ளே பொன்னுலகைப் பார்க்கலாம்; நிமிஷ வரம்பிற்குள் நித்தியத்தை நோக்கலாம்.

"அகப்புறமும் புறப்புறமும்
அகம்புறமும் யாவும்
அகமாக, அகத்தகமாய்,
அகத்தகத்துக்ககமாய்,
புகப்புக ஓர் ஞான வெள்ளம்
பொங்கி வழிந் தோடும்;
புன்மையெலாம் நன்மை செயும்
போதகநியூடு;
ஜகத்தழகும்நும் அழகாய்
ஜகத்துயிரும்நும் உயிராய்
ஜகத்தலைவன் நீராவீர்"

(ச. து. சு. யோகியார்)

என்றெல்லாம் ஞானோபதேசம் செய்கின்றார் ஒரு கவிஞர். வாஸ்தவந்தான். அவ்வாறாக நமது பார்வையைத் திருத்தவேண்டும். நாமே விளக்கைப் பிடித்துக்

கொண்டு கிணற்றில் விழுந்தால் யார்தான் என்ன செய்யமுடியும்?

நாம் வாழும் உலகத்தை எடுத்துக்கொள்வோம். கல்லும் மண்ணும் கரடும் கடலும் படிந்த இடம் என்று சொன்னால் பொருந்துமா? நன்றாகப் பொருந்தும். அதை வேறு ஒன்றாகவும் நம்மால் மதிக்க முடியுமா? அதுவும் தாராளமாக முடியும். எல்லாம் பார்வையைப் பொறுத்தது. அத்துடன் பார்வைக்கு அடிப்படையான சௌந்தர்ய சிலத்தையும் பொறுத்தது. உலகமே ஒரு கவிதை. யாப்பு அழகு வாய்ந்த எழிற் கவிதை. வண்ணம் உண்டு. சந்தம் உண்டு. விரிவுண்டு. செறிவுண்டு. நிலை உண்டு. நீட்சி உண்டு. ரூபம் உண்டு. பேதம் உண்டு. மகா கவிதை. இறைவனுடைய மகிழ்ச்சியில் ஜனித்த இன்பக் கவிதை.

இவ்வாறெல்லாம் தாகூர் போன்ற மகான்கள் பாவிப்பர். இன்னும் ஒரு ஞானி இந்தப் பிரபஞ்சத்தையே உற்று நோக்குகின்றான். சர் ஜேம்ஸ் ஜீன்ஸ் போன்ற வியாகூல ஞானி இல்லை. எதனிடத்தும் இன்பத்தைக் காணுகின்ற ஆனந்த ஞானி. இந்தப் பிரபஞ்சத்தினுடைய தோற்றத்தையும் விரிவையும் அவனுடைய அழகுணர்ச்சி வேறுவிதமாகவே பாவிக்கத் தூண்டுகிறது. இதோ அவன் கூறுகின்றான்:

"ஆனந்தத்தாலே அனைத்துலகுந் தோன்றியதால்;
ஆனந்தத்தாலே அனைத்துலகும் அருளுவதால்;
ஆனந்தந்தேடி அனைத்துலகுஞ் சென்றிடுமால்;
ஆனந்தத்துள்ளே அனைத்துலகும் நின்றிடுமால்."

(மொழி பெயர்ப்பு)

[ஆல் வெறும் அசை. பொருள் இல்லை]
"காதலில் படைத்தான் காசினியெல்லாம்
காதலின் விளக்கமே காசினி விளக்கம்"

(ச. து. சு. யோகியார்)

இப்படியாக உருவாகின்றது பெரியார்களுடைய பார்வை. ஆகவே அழகைக் காண்பதெல்லாம் பார்வையைப் பொறுத்ததாகும்.

பூ ஒன்றை எடுத்துக்கொள்வோம். வகுத்தும், தொகுத்தும், பகுத்தும், பிரித்தும் ஆராய்கின்ற விஞ்ஞானியின் கண்ணுக்கு அது ஒருவிதமாகவே படும். ஆனால் ஒரு சௌந்தர்ய லோலனுக்கு வேறுவிதமாகவே படும். இவ் விஷயத்தை மகான் தாகூர் மிக அழகாக விளக்குகின்றார். பூ ஒன்று அபரிமிதமான அழகு, மென்மை, வசிகரம் ஆகிய பண்புகளோடு மிளிருவதை நாம் பார்க்கின்றோம்; எவ்விதத்தும் தள்ளமுடியாத கர்ம அவசியம் அதனுடைய வாழ்க்கையோடு பின்னிக் கிடப்பதையுங் காண்கின்றோம். அதனுடைய வர்ணமும் வடிவமும் அந்தக் கர்ம அவசியத்தை நிறைவேற்றுவதற்குரிய துணைச்சாதனங்களே. பூவானது பூங்கொடியில் மட்டிலும் நின்றுவிடமுடியாது. பூவாகி, பிஞ்சாகி, காய்காகி, கனியாகி, வித்தாகி, மீண்டும் முளையாகி இவ்வாறு இனவிருத்திக்குரிய காரியத்தைத் தப்பாது செய்து கொண்டே யிருக்கவேண்டும். அதனுடைய வர்ணமும் வாசமும் இக்கைங்கர்ய சித்திக்குத் துணைசெய்கின்றன. வண்டினுடைய உதவியால் கருவுற்றதும், தன்னுடைய இதழ்களே யெல்லாம் உதிர்த்து விடுகின்றது. இன்னும் வர்ச்சனையை ஒடுக்கக்கூடிய கடுமையான நெருக்கடிக்கும் உள்ளாகின்றது.

தன்னுடைய ஒய்யாரத்தையும் உல்லாசத்தையும் கொழித்துக் கொண்டிருக்க அதற்கு நேரம் கிடையாது. இயற்கையரங்கிய காரியாலயத்தில் எத்தனையோ இலாக்கர்க்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இலாக்காவிலிருந்தும் தாக்கீது வந்துகொண்டேயிருக்கும். ஆகவே

பூவானது தனது கர்மத்தைத் தட்டாது செய்து கொண்டே செல்லவேண்டும். எங்காவது, ஏதாவது தடை நேர்ந்துவிட்டால், இனவிருத்தி காரியம் தடைப் பட்டுவிடும். வர்ணத்தோடும் வாசனையோடும் பெரிய டம்பாச்சாரி வேஷத்தில் காணப்பட்டாலும், அந்தரங் கத்தில் வெயிலென்றும் மழை யென்றும் பாராது வேலை செய்யும் சேவகனே என்பது மிக நன்றாகத் தெரிகிறது.

இம்மட்டோடு நின்றுவிட்டதா பூவின் மதிப்பு? வெறும் கொத்தடிமைதானா? ஆண்டைக்குக் கணக்கு ஒப்புவிக்கும் அவசியந்தான் வாழ்க்கையா?

இல்லை இல்லை. வேறு பெருமையும் உண்டு.

அடிமையாகக் காட்சி அளித்த அதே பூ, மனித னுடைய இதயத்துக்குள் புகும்போது அதனுடைய அந்தஸ்தே மாறிவிடுகின்றது. ஆனந்தமும் அமைதியும் வழங்கும் அமுத சுரபியாகவே மாறிவிடுகின்றது. புறத்தே பார்த்தால் கொத்தடிமை. அகத்தே பார்த் தால் மதுக்கிண்ணம்.

விஞ்ஞானம் நம்மைப் பார்த்து எச்சரிக்கை செய் கின்றது. கொத்தடிமை நிலைதான் பூவின்நிலை; அமுத சுரபியென்றோ மதுக்கிண்ணமென்றோ கொள்வதெல்லாம் மனமயக்கான கற்பனை. இதுவே விஞ்ஞானம் தரும் எச்சரிக்கை.

ஆனால் நமது இதயம் அதைக்கேட்டு மயங்கி விடப் போவதில்லை. இயற்கைக் காரியாலயத்தில் அதனுடைய அந்தஸ்து வேறு. இதயக் கோயிலுக்குள் அதனுடைய அந்தஸ்து வேறு. அங்கு சேவைத்திறனே அதன் தகுதி. இங்கு அழகு நலனே அதன் தகுதி. அங்கு சேவக நிலை. இங்கு சுதந்திரநிலை. அங்கு அடிமை. இங்கு ஆண்டான்.

இவ்வாறான நிலையை நமது இதயம் நன்றாக உணர்ந்து விஞ்ஞானத்திற்கும் மறுப்புக் கூறுகின்றது.

ஆகவே மலருக்கு இருவிதமான கடமைகள் உண்டு. ஒன்று இயற்கைத் துறையில். மற்றொன்று மனிதனுடைய இதய வெளியில். இயற்கையில் அடிமைச் சேவகம். இதய வெளியில் அழகின் தூது. இன்னும் இந்த உண்மை நன்றாக விளங்கவேண்டுமென்றால், அசோகவனத்தில் சிறையிருந்த சீதையின் நிலையை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். சோகம் என்பது துளியும் தலைகாட்ட வழியின்றி, எங்கே பார்த்தாலும் மகிழ்ச்சியை ஊட்டும் இயற்கைக் காட்சிகளும் செயற்கை மாட்சிகளும் நிறைந்து கிடக்கின்றன. எல்லாம் இராவணனுடைய ஏற்பாடு. அத்தனையும் சீதையின் மனநிலையை மாற்றுவதற்கு. ஆனால் மனம் மாறுகின்றதா? இல்லை. எள்ளளவேனும் இன்பம் கிட்டுகின்றதா? அதுவும் இல்லை. ஆனால் அநுமனுடைய தூது மொழி அவளுக்கு இன்பத்தை ஊட்டுகின்றது. "இம்மையே மறுமை தானும் நல்கினை இசையோடு" என்று பாராட்டுகின்றாள். கணையாழியைக் கண்டதும் பேரானந்தம்.

"இறந்தனர் பிறந்தபயன் எய்தினர்கொல் என்கோ!
மறந்தனர் அறிந்துணர்வு வந்தனர்கொல்என்கோ!
துறந்த உயிர் வந்திடை தொடர்ந்ததுகொல்என்கோ!
நிறந்தெரிவ தென்னைகொல் இந் நன்னுதலி செய்கை"

என்று வியக்கும்படி ஆயிற்று அவளுடைய ஆனந்தம். ஜானகிக்கு வாய்த்த தூதுவன் போன்றே நமக்கும் ஒரு தூது வாய்த்திருக்கிறது. அதுதான் பூ. நம்முடைய நாதன் தரும் நற்செய்தியைத் தாங்கி வரும் தூது. லௌகீகத்தின் பக்கம் மனுக்கும் நம்மை முன்பின்

போகவிடாமல் மறிக்கின்றன; வசீகரிக்கின்றன. இன்னும் சிற்றின்பச் சின்னங்கள் பாசவலையை விரிக்கின்றன. சிறையிருந்த செல்வி போன்றே நாமும் கையற்று ஏங்குகின்றோம்.—வெள்ளத்தின் நடுவே வறட்சி. கூட்டத்தின் நடுவே தனிமை—இந்த நிலையில் தூது வருகின்றது. நாதன் விடுத்த நற்செய்தியை நமக்கு உரைக்கின்றது. "கலங்காதே. ஆனந்தன் அனுப்பிய தூது நான். தனிமைத் தீவில் கிடந்து தவிக்க வேண்டாம். பாலம் சமைத்துவிட்டான். இனி ஏறிச் செல்லலாம். உன்னை அணைத்துக் கொள்வான். அங்கமோடு அங்கமாக ஆக்கிக்கொள்வான். அவலம் வேண்டாம். உலக மாயை இனிமேல் உன்னை உறுத்தாது" என்றெல்லாம் சொல்லும்.

"நீதான் தூது என்று எவ்வாறு நம்புவது" என்று கேட்டால், "ஐயுறல், உள(து) அடையாளம்", "இதோ பார், ஆரியன் மெய்யுறத்தந்த கணையாழி" என்று எடுத்துக் காட்டும். எடுத்துக் காட்டும்பொழுது நாம் எதைக் காண்கின்றோம்? அழகைக் காண்கின்றோம். ஆனந்த மூர்த்தியின் அருள் முத்திரையைக் காண்கின்றோம். அவனுடைய காதலின் பரிமளிப்பை நுகர்கின்றோம். ஞானகியைப்போல் பேரானந்தத்தில் திளைக்கின்றோம்.

வர்ணமாகவும், வாசனையாகவும், தேன் குழிக்கு இட்டுச் செல்லும் பாதையாகவும் தும்பிக்குத் தோன்றும். ஆனால் அதே பூவானது நமக்கு எவ்வாறு தோன்றும்? எவ்விதமான அவசியத்திற்கும் உள்ளாகாத அழகுச் சின்னமாகவும் ஆனந்தக் கொள்கலமாகவும் தோன்றும். இன்னும் சொல்லப்போனால் வர்ண விசித்திரம் படிந்த காதற் கடிதமாகவும் தோன்றும்.

ஆகவே ஒன்று தெரிகின்றது. அதுவும் மிக நன்முகத் தெரிகின்றது. வெளி அளவிலே இயற்கைக்கு இடை விடாத வேலை இருந்துகொண்டேயிருப்பினும், நமது இதயத்தினுள்ளே ஓர் இரகசிய அறையைத் தேடி, ஒருவிதமான குறிப்பும் இல்லாது, வருவதும் போவதுமான புண்ணிய காரியத்தையும் செய்தே வருகின்றது. அது அவ்வாறு வந்துபோகும் புண்ணியம் நமக்குக் கிட்டிவிட்டால், அதனுடைய உலக்களத்தில் எழும் தீயெல்லாம் உல்லாசமான திருநாள் தீபங்களாகவே தோன்றும். அதனுடைய பட்டறையில் எழும் ஒலியெல்லாம் பண்ணமைந்த கீதங்களாகவே இசைக்கும். இன்னும் காரண காரியமாகிய கண்ணிகளைக் கொண்ட படைப்புத் *தொடரின் சல சலப்பெல்லாம் பண் நிறைந்த வீணை கானமாகவே மிளிரும்.

வெளிப் பார்வைக்கு இடை யீடற்ற வேலை நெருக்கடியில் சிக்குண்டு கிடப்பதாகக் காணப்பட்டாலும், உள்ளுற மௌனமும் சாந்தியுமே குடி கொண்டிருக்கின்றன. அந்த நிலைமையை நாம் இயற்கையினிடத்து நன்முகக் காணலாம்- வெளியே அடிமை நிலை புலப்படும். உள்ளுற அழகு நலன் புலப்படும். இவ்வாறன இயற்கையானது இறைவனுடைய எல்லையற்ற இன்பத்தின் வெளியீடாகும்.

மீண்டும் நாம் பழைய பல்லவியைப் பாடிக்கொள்ள வேண்டும்.

"ஆனந்தத்தாலே அனைத்துலகுந் தோன்றியதால்;
ஆனந்தத்தாலே அனைத்துலகும் அருளுவதால்;
ஆனந்தந்தேடி அனைத்துலகுஞ் சென்றிடுமால்;
ஆனந்தத்துள்ளே அனைத்துலகும் நின்றிடுமால்"

* சங்கிலி.

ஆனந்தத்தின் இலக்ஷியம் யாது? உள்ளத்தைக் கவர்ந் தெழுகின்ற பேரானந்தம் ஏதாவது ஓர் வடிவத்தில் வெளிவரவேண்டும். பாடகனுடைய ஆனந்தம் அற்புதமான பாடலாக வெளிவருகின்றது. கவிஞனுடைய ஆனந்தம் அற்புதமான கவிதை ரூபத்தில் வெளிவருகின்றது. அவ்வாறே இறைவனுடைய ஆனந்தமும் அற்புதமான பிரபஞ்சவடிவில் உருப்பெற்றுள்ளது.

இன்னும் இந்த ஆனந்தத்தினுடைய இயற்கையை உள் நுழைந்து பார்க்கவேண்டும்.

மனமானது எல்லையற்ற உணர்ச்சியின் வசப் பட்டு நிற்கும்பொழுது, பார்வையின் இயல்பே மாறிவிடும். உயர் தினையெல்லாம் அஃறிணையாகும். அஃறிணையெல் லாம் உயர்திணையாகும். பருமையெல்லாம் நுண்மை யாகும் நுண்மையெல்லாம் பருமையாகும். உவமைகளும் உருவகமும் உருண்டு புரண்டு ஓடிவரும். இருக் கிறதை இல்லாததாக்கும். இல்லாததை இருக்கி றதாக்கும். கல்லைக் கனியாக்கும். கடுவிஷத்தை அமு தாக்கும். கோடி குவித்திட்டுக் கோபுரத்தைப் பொன் பூசும். என்ன வெல்லாமோ செய்துவிடும். அவ்வாறு செய்வது உணர்ச்சி வசப்பட்ட மனத்தின் இயற்கை. இவ்வாறெல்லாம் பாவிக்கும்படியான இயல்பை மனத்திடையே புகுத்திய ஆண்டவனை,

'நெஞ்சம் நிலைக்குமட்டும் நெடிதுணர்வு உள்ள மட்டும்
அஞ்சவரும் எமனென்பான் ஆவி கவருமட்டும்'

பாராட்டிப் பாராட்டிப் பல்லாண்டு பாடவேண்டும்.

'பாரித்துப் பரந்திலகும் பாவின் சிறகாலே
சீரியவிண் உலகேறிச் சென்றுதினம் தொழவேண்டும்'

இன்னும் அந்த மனத்திடையே ஓர் அற்புதமான பண்பைப் புகுத்திருக்கின்றான். மனமானது இன்பவசப்படும்போது இரண்டுபடும் இயற்கையைப் பெறுகின்றது. பாடகன் பாடல் வெறியால் துரத்தப்பட்டுப் பாடும்போது, தன்னை இருகூறு படுத்துகிறான். பாடுகின்றவனும் தான். கேட்கின்றவனும் தான். பாடுகின்றவன் ஒரு கூறு. கேட்கின்றவன் ஒரு கூறு. எதிரே கேட்கின்றவர்கள் இருக்கிறார்களே என்றால், அவர்களெல்லோரும் தன்னுடைய ஒரு பகுதியின் விரிவே. காதலனும் அவ்வாறே தன்னை இருகூறு படுத்துகின்றான். காதல் மயமான தன்னுடைய ஒரு பகுதியையே, காதலிக்கப்படும் பொருளிடத்துக் காண்கின்றான். அது எப்படி என்று தோன்றும். எந்தப் பொருளைக் காதலிக்கின்றானோ அந்தப் பொருளினிடத்தில், தன்னுடைய ஆசை, தன்னுடைய ஆர்வம், தன்னுடைய இலக்கியவெறி, தன்னுடைய கற்பனை, இன்னும் தான் கண்ட கனவு அனுபவங்கள் ஆகிய எல்லாவற்றையும் பெய்கின்றான். அத்தனையையும் தாங்கி நிற்கும் அக்கொள்கலத்தினிடையே தன்னைக் காண அவாவுகின்றான். காணும் வரை துடிக்கின்றான்.

'மேவி கொதிக்குதடா—தலைசுற்றியே
வேதனை செய்குதடா ;
வானில் இடத்தையெல்லாம்—இந்த வெண்ணிலா
வந்து தழுவுதுபார் ;
மோனத்திருக்குதடா—இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே,
நானொருவன் மட்டிலும்—பிரிவென்பதோர்
நரகத்தழலுவதோ'

என்று கதறுகின்றான். "தாரணியில், வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெல்லாம் ஒருருவாய்ச் சமைந்த

உள்ளமுதே! என் ஆசை மதுவே! அள்ளு சுவையே" என்றெல்லாம் விளித்து ஏங்குகின்றான். கண்டுவிட்டாலோ ஒரே பேரானந்தம். இப்படி ஏன் காணவேண்டும் என்றால், அது காதலின் இயற்கை. இக் கருத்துக்கு ஆதரவு தரும்படியான அனுபவம் ஒன்றை ஆங்கிலக் கவிஞரான வோர்ட்ஸ்வொர்த் என்பவர் தருகின்றார்.

"Yes! Thou art fair, yet be not moved
To scorn the declaration
That sometimes I in Thee have loved
My fancy's own creation.
"Be pleased that Nature made Thee fit
To feed my heart's devotion,
By laws to which all forms submit,
In sky, earth, air and ocean."

இதன் பொருள் பின்வருமாறு

"உண்மை. நீ அழகாகவே இருக்கின்றாய். ஆனால், உன்னிடம் ஒன்று கேட்கின்றேன். எனது கற்பனையில் தோன்றிய அழகுநலனையே சிலவேளைகளில் உன்பால் கண்டு மகிழ்ந்தேன் என்று நான் சொன்னால், அதனை உதறி விடாதே. நான் உன்னிடம் கேட்பதெல்லாம் அதுதான்.

"மண்ணிலும், விண்ணிலும், மறிகடலிலும் தோன்றும் வடிவங்களை எந்தெந்த விதி தழுவி இயற்கையானது படைத்துள்ளதோ, அதே விதியைத் தழுவி உன்னையும் படைத்தபோதிலும், எனது உள்ளன்பிற்கு உகந்த வடிவிலேயே உன்னைப் படைத்துள்ளது. அதனை நான் எடுத்துச் சொல்லுங்கால் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்."

இனி இறைவனிடம் திரும்புவோம். அவன் ஆனந்த ரூபன். ஆனந்தத்தின் இயற்கை இருகூறு படுவது என்பதை நாம் பார்த்தோம். ஆகவே அவனும் இருகூறுபட்டு நிற்கின்றான். அவ்வாறு இருகூறுபட்ட பகுதிகளில் ஒரு பகுதியே நாம். நாம் பிரிந்திருக்கின்றோம். இந்தப் பிரிவினை நிலையான பிரிவினை அன்று. நிலையான பிரிவினைதான் என்றிருக்குமானால், துன்பமும் துயரமுமே நிலைத்துவிடும். முரண்பாடுகளெல்லாம் முரண்பாடுகளாகவே நிலைத்துவிடும். பாவ நிலையிலிருந்து புண்ணிய நிலைக்குச் செல்லமுடியாது. இன்னும் பாஷை தலையெடுக்காது; அறிவு தலையெடுக்காது; இதயம் இணையாது; ஒற்றுமை திகழாது.

நாம் பயந்துவிட வேண்டாம். ஏனென்றால் உண்மை அவ்வாறில்லை. பிரிவினை யாவும் நெகிழ்ந்த பிரிவினை. நிலையற்ற பிரிவினை. நாளும் நாளும் தனிப்பட்ட பண்புகளெல்லாம் மாறி மாறி இணைவதற்கே இடம் ஏற்படுகின்றது. ஒவ்வொன்றின் தனிமைப் பண்புகளை எடுத்துக் காட்டும் விஞ்ஞானமே வ்ரவர வேதாந்தமாக மாறும்போது, ஜடப் பொருள்களுக்குக் கற்பித்துள்ள எல்லை வரம்புகளெல்லாந் தளரும்போது, பிரிவினையே நிலைக்கும் என்று சாதித்தல் பொருந்தாது.

ஜீவாத்மாவானது இருகூறுபட்ட பரமாத்மாவின் ஒரு கூறு. பரமாத்மாவினிடம் காணப்படும் இருகூறும், பாடகனிடத்திலும் காதலனிடத்திலும் காணப்படும் இருகூறு போன்ற இனந்தான். ஜீவாத்மாவைச் சுற்றி நிற்கும் மாயைகளும் துன்பங்களும் தீமைகளும். நிலையான்வைகள் அல்ல. ஜீவாத்மாவால் அவைகளை எதிர்க்கமுடியும். வெல்லமுடியும். இன்னும் அவைகளையே புதிய சக்தியாகவும் அழகாகவும் மாற்றவும் முடி

யும். அத்தனை வலிமை ஜீவாத்மாவுக்கு உண்டு. ஓர் உதாரணத்தின் மூலம் ஜீவாத்மா ஐக்ய நிலை அடைவதைத் தெரிந்துகொள்வோம்.

பாடகன் ஒருவனுடைய பேரானந்தம் பாடல் வடிவில் வெளிவருகின்றது என்பதைப் பார்த்தோம். அப்பாடலை ஒருவன் கேட்கிறதாக வைத்துக்கொள்வோம். கேட்கின்ற பாடலின் மூலம் பாடகனுடைய ஆனந்த நிலையை உணர்ந்துகொள்வானேயானால், அவனால் பாடல்களோடு ஐக்கியம் அடைய முடியும். அம்மாதிரியே பரமாத்மாவினுடைய எல்லையற்ற பேரானந்தத்தின் வடிவமே இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படும் ஒவ்வொரு தோற்றமும்; 'எழுதுங்கால் கோல் காணாக் கண்ணேபோல்' தோற்றங்களின் ஸ்தூல வடிவை மறந்து அவற்றினுள்ளே தேங்கி நிற்கும் பேரானந்தத்தைக் கண்டுவிட்டால், இரண்டறக் கலக்கும் வாய்ப்பு மிக எளிதாக வாய்த்துவிடும்.

இந்த நிலையையே புத்தபகவான் 'பிரம்மவிஹாரம்' என்று அழைக்கின்றார். அதன் பொருள் யாதென்றால் சதாகாலமும் பிரம்மத்திலேயே தங்கி யிருக்கும் பேரானந்தம் என்பதாகும். அதனை அடைவதற்குரிய வழிவகைகளையும் நமக்கு உணர்த்துகின்றார். "எவன் ஒருவன் இந்த நிலையை அடைய விரும்புகின்றானே, அவன் யாரையும் வஞ்சித்தல் கூடாது. யாரையும் வெறுத்தல் கூடாது. இன்னும் கோபத்தால் துன்புறுத்தவும் கூடாது. தாய் தன்னுடைய குழந்தையை எவ்வாறு உயிரைக் கொடுத்தும் காப்பாற்றி அன்பு செய்கின்றாளோ அவ்வாறே எல்லா உயிர்களிடத்தும் எல்லையற்ற அன்பு செலுத்தவேண்டும். மேலும், கீழும், இன்னும் தன்னைச் சுற்றிலும், சகல திசைகளிலும் அவனு

டைய அன்பு வியாபிக்கவேண்டும். காட்டும் அன்பில் எவ்விதமான தட்டுத்தடங்கலும் இருக்கக்கூடாது. மேலும் கறையற்ற அன்பாகவும் இருக்கவேண்டும். நிற்கும் பொழுதும், இருக்கும் பொழுதும், நடக்கும் பொழுதும், படுத்துக் கிடக்கும்பொழுதும், இத்தகைய சர்வ நேச மனப்பான்மையிலேயே திளைத்திருக்கவேண்டும்.''

இதென்ன கெடுபிடியான சட்டம் என்று தோன்றும். அப்படி ஒன்றுமில்லை. சட்டவரம்புக்கு உட்பட்டுப் பழகிவிட்டால், இன்னும் நமது வாழ்க்கைதான் சட்டம் என்னும் நிலைக்கு மாறிவிட்டால், சட்டம் சட்டமாகத் தோன்றாது.

இதுகாறும் பார்த்து வந்ததன்மூலம் ஒரு உண்மையை நன்றாகத் தெரிந்து கொண்டோம். அது பின் வருமாறு.

ஆண்டவன் ஆனந்த சொரூபி. அண்ட சராசரங்கள் அனைத்தும் அவனுடைய ஆனந்தத்தின் ஸ்தூல வடிவங்கள். ஆனந்த சொரூபனாக இருக்கும் காரணத்தாலேயே அவன் இருகூறுபட்டு நிற்கின்றான். ஜீவாத்மா என்றும் பரமாத்மா என்றும் அந்த இருகூறுகளும் வழங்கப்படும். ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியப்படும் அந்தஸ்தைக் கொண்டது. காணும் வடிவங்களின் வெளித் தோற்றங்களை மறந்து, அவற்றின் அகத்தே தேங்கி நிற்கும் ஆனந்தத்தை அள்ளிப் பருக ஆரம்பித்துவிட்டால், பரமாத்மாவோடு ஐக்கியப்படும் உரிமையை ஜீவாத்மா பெற்றுவிடுகின்றது. இதுவே உயர்ந்தநிலை. இதனையே புத்தபகவான் 'பிரம்ம விஹாரம்' என்கின்றார். இதுவே நாம் தெரிந்து கொண்ட உண்மை. தாகூர் போன்ற மகான்கள்

உணர்த்துவதும் இதுதான். சரி, இருக்கட்டும். மேலே போவோம்.

அறிவு அளவிலே தெரிந்துவிட்டால் போதுமா? அனுபவ அளவில் கொண்டுவந்தால் அல்லவா அதனுலாகிய முழு சுகத்தையும் பெறமுடியும்? அதனைக் கொண்டுவருவது எப்படி?

மனிதனிடத்திலுள்ள மானிட மாட்சியை உதறி விட்டு, அவனை மிருகமாகவும் இயந்திரமாகவும் மதிக்கின்ற இந்தக் காலத்தில், எப்படி இயலும் என்ற கேள்வி மிகவும் பொருத்தமானதே.

• மானிட வடிவு தாங்கிவிட்டால் போதுமா? அன்றே பாடி வைத்திருக்கின்ருன் ஒரு ஞானி. வயிறெரிந்து பாடியதாகத் தெரிகின்றது. பெரிய விஞ்ஞானிபோன்று மானிடக் கூட்டத்தையே அலசி அலசி வகையுந் தொகையுமாக முடிவுகட்டிவிட்டான்.

"மனிதரிலும் பறவையுண்டு, விலங்குண்டு, கல்லுண்டு,
மரமும்உண்டு,
மனிதரிலும் நீர்வாழும் ஜாதியுண்டு, அநேககுல மனிதருண்டு,
மனிதரிலும்மனிதருண்டு, வானவரும்மனிதராய் வருவதுண்டு,
மனிதரிலே பிறப்பறுக்க வந்தவரும் அருமையென
வருத்தார்முன்னோர்."

இதுவே அவனுடைய மனத்தினில் பூத்த வாடா மலர்.

"செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் திரியுங்காலம்" இந்தக்காலம்.

கடவுள்மீது பாடும் பிள்ளைத் தமிழைக் காலகண்ட மீரங்கிமீது பாடுங்காலம். இந்தக் காலத்தில் ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியம் அடைய முடியும். அதற்கு

வழி இவ்வாறு என்று சொன்னால் பொருந்துமா என்று கேட்கலாம். இன்னும் கடவுள் உண்டு என்ற கொள்கைக்கு அங்கங்கே சில சடங்குகள் நடைபெற்று வருவதால் சொல்லலாம். பிரங்கிக்கு அடியில் நின்று கொண்டும் கடவுள் வழிபாடாகிய சடங்கை நடத்துவதை நாம் பார்க்கத்தானே செய்கின்றோம். ஆகையினாலே சொல்லலாம். அதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். இனி வழி யாது என்பதைப் பார்ப்போம்.

பஞ்ச பூதங்களின் பரிணமத்தால் ஆகிய இந்த உலகமானது பல்வேறான வேற்றுமையோடு காணப்பட்டாலும், ஞானிகள் எடுத்துக்காட்டும் உண்மையின் மூலமும், விஞ்ஞானம் எடுத்துக்காட்டும் உண்மையின் மூலமும், அத்தனை பேதங்களையும் ஊடுருவிச்செல்லும் ஒருமைப்பாடு ஒன்று உண்டு என்பது தெளிவாகின்றது. மற்றும் அத்தனை பேதங்களுக்கிடையிலும் ஒரு ரஞ்சகம் (Harmony) இருக்கின்றது என்பதும் தெளிவாகின்றது. அதனை உணர்ந்து அதன் வழியே இந்த உலகத்தைப் பார்ப்போமானால், அனைத்திடமும் பெருங்காதல் ஏற்பட்டுவிடும். இவ்வாறான நிலையை அடைவதற்குரிய பெருந்துணையைச் செய்யவல்லது அழகுணர்ச்சி ஒன்றுதான்.

II

அழகுணர்ச்சியை எவ்வாறு பெறமுடியும்? நம் நாட்டில் இன்றுவரை கதையாக ஒன்றை வழங்கி வருகின்றார்கள். கதையென்றாலும் அதன் மூலம் ஒரு அற்புதமான உண்மையானது வெளியாகின்றது. துரியோதனன் உலகமெல்லாம் சுற்றியும் பத்து உத்தமர்களைக் காணமுடியவில்லையாம். தருமர் உலகமெல்லாம்

சுற்றியும் கெட்டவர்கள் பதின்மரைக் காணமுடியவில்லை யாம். ஆகவே எல்லாம் பார்வையைப் பொறுத்தது என்பது தெளிவாகின்றது.

தன்னலம் என்னும் மதி நிலையை அகற்றி, மற்றும் கிழ்த்தரமான இந்திரிய நுகர்ச்சிக்கும் உட்படாது, பொருள்களைப் பார்க்கிறதென் றிருக்குமானால், எங்கும் படிந்து கிடக்கும் அழகை மனிதனால் காண முடியும். அப்படிக் காணும்போது, எது எது நமக்கு வேண்டாததாகக் காணப்பட்டதோ, அதெல்லாம் கண் டிப்பாக அழகற்ற ஒன்றுதான் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அதனிடத்தும் ஓர் உண்மை இருக்கின்றது. அந்த உண்மைதான் அதற்குரிய அழகு.

எங்கும் அழகு படிந்திருக்கின்றது. எங்கும் அழகு தான் என்று சொல்வதன்மூலம், அழகின்மைக்கு இடம் கிடைப்பார்தா, அழகின்மை என்ற ப்தமும் மிகைதானு என்று எண்ணத் தோன்றும். அப்படியில்லை. அழ கின்மை என்ற அம்சமும் இருக்கத்தான் செய்கின்றது. எங்கு இருக்கின்றது? கடவுள் படைப்பினிலா அல்லது நமது கருத்தினிலா என்றால், நமது கருத்தினில். நமது கருத்தினில் ஏன் இருக்கிறது என்றால் நமது ஞானக் குறைவால். நாம் எத்தனை காலம்வரை உண்மையைப் பரிபூரணமாக உணராது விடுக்கின்றோமோ அத்தனை காலம்வரை அந்தக் குறை நிலைபெறத்தான் செய்யும். இன்னும் நமக்கு நமது இச்சை வெறுப்புக்களை மதித்துச் சித்தாந்தம் செய்துகொள்ளும் சங்கற்பம் (Free-will) இருக்கின்றது. அந்தச் சங்கற்பமானது, நம்மை உண்மை வகுத்த பாதையினின்றும் பிறழ்ந்து போகவும் தூண்டும். அவ்வாறு பிறழ்ந்துபோகும்

போது, அழகு அழகின்மை, என்ற இரண்டுபட்ட நிலை மையைத்தான் நாம் காணமுடியும். நமது குறையை நிவர்த்திக்கவேண்டுமாயின் விஞ்ஞானத்தினிடம் செல்ல வேண்டும்; ஞானிகளிடம் செல்லவேண்டும்.

உண்மை இல்லாத இடமே இல்லை. எதனிடத்தும் உண்மை இருக்கின்றது. ஆகவே எப்பொருளும் ஆராய்ச்சிக்குரிய பொருளே என்பதை விஞ்ஞானம் எடுத்துக் காட்டுகின்றது. அழகு என்பது எங்கும் நிறைந்த வஸ்து. எனவே ஒவ்வொரு பொருளும் இன் பத்தை ஊட்டவல்லது என்று ஞானிகள் முழங்கு கின்றனர். உண்மையை உணர்தலும், உணர்ந்து அனுபவித்தலும் ஆகிய கடப்பாடு நம்முடையதே.

சிருஷ்டி மர்மத்தை உணர உணர, சிருஷ்டியைக் கட்டுப்படுத்தும் சட்டம் யாது என்பதை உணர்கின் றோம். எதிரெதிரான முரண்பாட்டு நிலையைக் கண்ட தும் நமக்குத் திகைப்பு ஏற்படுகிறது. அப்பாலே ஊன் றிப் பார்த்ததும், நமது திகைப்பு மறைந்து சாந்தி குடிகொள்கின்றது. அவ்வாறே நமது அழகுணர்ச்சி யும் ஆரம்பத்தில் இயற்கையினிடத்து, அழகு அழ கின்மை ஆகிய இரண்டுபட்ட நிலையினைக் காண்கின்றது. ஞானத் தெளிவு சித்திக்கச் சித்திக்க அனைத்தினிடமும் அழகு குடிகொண்டிருப்பதை உணர்கின்றது. இன்னும் அனைத்தையும் கவர்ந்து நிற்கும் ரஞ்சகத்தின் சீலத்தை யும் உணர்ந்துவிடுகிறது. ஆகவே இப்பொழுது நாம் ஒரு முடிவுக்கு வரலாம். அந்த முடிவு பின்வருமாறு:— சிருஷ்டி மர்மத்தை உணர்வதன்மூலம் பிரபஞ்ச தர் மத்தை அறிந்துகொள்கிறோம். அம்மாதிரியே அழகின் மர்மத்தை உணர்வதன்மூலம் அனைத்தையும் கவர்ந் துள்ள ரஞ்சகத்தின் இயல்பை அறிந்துகொள்ளலாம்.

அவ்வாறு ரஞ்சகத்தை உணர உணர, சிருஷ்டி இனங்களின் மூலம் எல்லையற்ற இன்பத்தைப் பெற முடிகின்றது.

"அலகில் ஜோதியான—ஈசன்
அருளிலே அமையும்
உலகில் எந்தப் பொருளும்—கவிதைக்
குரிய பொருளாம் ஐய"

என்று ஒரு கவிஞர் முழங்குகின்றார்.

"பயமெனும் பேய்தனை அடித்தோம்-பொய்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்
வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்
வேதவாழ்வினைக் கைப்பிடித்தோம்"

என்று முழங்குகின்றார் வேறொரு கவிஞர்.

மருதவளங்களைக் கண்ட கம்பருக்கு அவைகள் வெறும் மருதநிலப் பொருள்களாகவே தோன்றவில்லை. தாமரை இன்ன இனம், தண்குவளை இன்ன இனம், மயில் இன்ன இனம், குயில் இன்ன இனம் என்றெல்லாம் வகையும் தொகையுமிட்ட நாம ஜாபிதா தயாரிக்க அவருடைய மனம் முனையவில்லை. அற்புதமான இயற்கை நாடகம் ஒன்று நடைபெறுவதாகவே அவருக்குத் தோன்றுகிறது.

ஒரு நாடக அரங்கம். அங்கு நடனம் வேண்டும். நல்ல தீபம் வேண்டும். மிருதங்க முழக்கம் வேண்டும். வித்தகப் பாட்டு வேண்டும். இன்னும் காட்சித் திரை வேண்டும். காண்பார்தம் நிரைவேண்டும். அனைத்தும் இருக்கின்றன.

வயலும் வயல் சார்ந்த இடமும் ஆகிய மருத நிலமே நாடக அரங்கம். அரங்கத்தினுள்ளே மயில் நடன

மாடுகின்றது. மழை மேகம் முழவு கொட்டுகின்றது. தாமரை விளக்கு ஏந்துகின்றது. தண்புனல் திரை விரிக்கின்றது. வண்டினம் பாடுகின்றது. மணிக்குவளை பார்க்கின்றது.

இதோ இயற்கை நாடகம் நடைபெறுகின்றது.

'தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கந் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண் விழித்து நோக்க,
தெண்திரை எழினிகாட்ட, தேன்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ'

தண்டலை = சோலை
கொண்டல் = மேகம்.
திரை = நீர் அலை
எழினி = திரை

இயற்கையின் ஊடு கூடிப் பரிமளிக்கும் ரஞ்சக நிர்மையை உணர்ந்துவிட்டால், இவ்வாறான அழகையெல்லாம் கற்பனைக் கண்ணால் கண்டுகண்டு களிக்கலாம்.

III

வேறொரு உண்மையையும் நாம் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். "அழகு அனைத்தும் உண்மை. உண்மை அனைத்தும் அழகு" என்பது தான் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய உண்மை. அழகு அனைத்தும் உண்மை என்பதை உலகம் ஒப்புக்கொண்டாலும், உண்மை அனைத்தும் அழகு என்பதை உலகம் ஒப்புக் கொள்ளத் தயங்கும். நட்டுவக்காலி ஒரு உண்மை. தேவாங்கு ஒரு உண்மை. இதை உலகம் ஒப்புக் கொள்ளும். ஆனால் உண்மை என்ற காரணத்தால் அழகு என்று ஒப்புக்கொள்ளுமோ என்றால், சற்று யோசனை செய்யத்தான் ஆரம்பிக்கும். தயங்கினால்

உண்மையை உணர்வதெப்படி? பேரானந்தம் கொள்ளுவதும் எப்படி?

அன்புக் கண் கொண்டே அனைத்துலகையும் பார்க்கவேண்டும்.

'ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள், உலகின்பக் கேளி' என்று பாவிக்கவேண்டும். அன்பே உலகத் தோற்றத்தின் ஆதாரம். அன்பே உலக இயக்கத்தின் ஆதாரம். அன்பின் அகமே உலகத்தின் புகலிடம். தன்னலக்கறைபடியாத சர்வ பரிபூரண சுதந்திரத்தோடு விளங்குகின்ற இதயசீலத்தின் துணை கொண்டு பொருள்களின் உள் நுழைந்து பார்த்தால், தெய்வீகமான இன்பத்தை நுகரலாம். பிரம்ம விஹாரத்தில் திளைக்கலாம். மகான் பாரதியார் நமக்கு வழி காட்டுகிறார். ராஜ பாதை அமைத்துத்தருகின்றார். அதைப் பார்ப்போம்.

"இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான்
[இனிமை உடைத்து; காற்றும் இனிது.
தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.
ஞாயிறு நன்று; திங்களும் நன்று.
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.
ஆறுகள் இனியன.
உலோகமும், மரமும், செடியும், கொடியும்,
மலரும், காயும், கனியும் இனியன. பறவைகள்
[இனிய.
ஊர்வனவும் நல்லன.
விலங்குகளெல்லாம் இனியவை.
நீர் வாழ்வனவும் நல்லன.
மனிதர் மிகவும் இனியர்.

ஆண் நன்று. பெண் இனிது.
குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று.
உயிர் நன்று. சாதல் இனிது.
உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன.
உயிர் சுவையுடையது.
மனம் தேன். அறிவு தேன். உணர்வு அமுதம்.
உணர்வே அமுதம்.
உணர்வு தெய்வம்.
மனம் தெய்வம். சித்தம் தெய்வம். உயிர் தெய்வம்.

காடு, மலை, அருவி, ஆறு,
கடல், நிலம், நீர், காற்று,
தீ, வான்,
ஞாயிறு, திங்கள், வானத்துச்சுடர்கள்—எல்லாம் தெய்வங்கள்.
உலோகங்கள், மரங்கள், செடிகள்,
விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீந்துவன,
மனிதர்—இவை அமுதங்கள்.
இவ்வுலகம் ஒன்று.
ஆண், பெண், மனிதர், தேவர்,
பாம்பு, பறவை, காற்று, கடல்,
உயிர், இறப்பு, இவை அனைத்தும் ஒன்றே.
ஞாயிறு, வீட்டுச்சுவர், ஈ, மலையருவி,
குழல், கோமேதகம்- இவ்வனைத்தும் ஒன்றே.
இன்பம், துன்பம், பாட்டு,
வண்ணன், குருவி,
மின்னல், பருத்தி,
இஃதெல்லாம் ஒன்று.

மூடன், புலவன்,
இரும்பு, வெட்டுக்கிளி—இவை ஒரு பொருள்.
வேதம், கடல்மீன், புயற்காற்று, மல்லிகை மலர்
இவை ஒரு பொருளின் பல தோற்றம்.
உள்ளதெல்லாம் ஒரே பொருள்; ஒன்று.
இந்த ஒன்றின் பெயர் 'தான்.'
'தானே' தெய்வம்.
'தான்' அமுதம். இறவாதது.''

என்ன! பாரதியாருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்று கேட்கத் தோன்றும். ஏனென்றால் குழலும் கோமேதகமும் ஒன்று என்கிறார். உயிரும் இறப்பும் ஒன்று என்கிறார். மின்னலும் பருத்தியும் ஒன்று என்கிறார், மூடனும் புலவனும் ஒன்று, வண்ணானும் குருவியும் ஒன்று என்று இவ்வாறெல்லாம் சொல்கின்றார். சொன்னது குற்றந்தான். ஆனாலும் ஒரு கேள்வி. சொன்னது குற்றமென்றாலும் உணர்வதுங் குற்றந்தானே? உணர்வதைக் குற்றமென்று சொல்லக்கூடாது. ஆனால் பைத்தியம் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லையா? பைத்தியநிலையில் நின்று ஒன்றைச் செய்தால் அதைக் குற்றமாகப் பாவிக்கலாமா?

பாரதியாருக்கும் பைத்தியம்தான். ஆனால் அதன் பெயர் மட்டிலும் வேறு. ஞானப்பைத்தியம். தன் உணர்வு அற்ற (Self-consciousness) அதீத நிலைக்கு மனம் சென்றுவிட்டால், அத்தகைய மனோநிலையைப் பைத்தியம் என்று கொள்வதனால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. மாணிக்கவாசகர் ஒரு பித்தர். ஆண்டாள் ஒரு பித்தி. இன்னும் ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், பெரிய பெரிய ஜீவன் முக்தர்கள் எல்லோரும்

பித்தர்கள். இவர்கள் எல்லோருமே பித்தர்கள் என்றால் பாரதியார் மட்டிலும் உயர்வா? அவரும் பித்தர்தான். அவர்கள் பெற்ற அனுபவத்தை அவரும் பெற்றார். அவர்கள் சொன்னதையே அவரும் சொன்னார். ஆனால் ஒரு வித்தியாசம். கொஞ்சம் பச்சையாகச் சொல்லி விட்டார். பாட்டு வடிவில் எழுதத் தெரியாமல் இப்படிச் சொல்லிவிட்டார் என்று யாரும் நெஞ்சு துணிந்து சொல்லமுடியாது. ஒருவேளை உண்மை தெளிவாகத் தெரியவேண்டும் என்பதற்காக இவ்வாறு சொல்லி யிருக்கலாம்.

இவ்வாறு அனைத்தையும் இன்பமயமாகப் பாவிக்கும் உள்ளம் படைத்துவிட்டால் பரமபதத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. மனத்தை அவ்வாறு பாவிக்கும்படி பழக்க வேண்டும். அதுவும் ஒரு உபாஸனை தான்.

'காவித் துணிவேண்டாம்
கற்றைச் சடைவேண்டாம்;
பாவித்தல் போதும்
பரமநிலை எய்துதற்கு.'

இன்னும் இவ்வாறு அனைத்தையும் இன்பவடிவாகப் பாவித்துப் பாராட்டுவதற்கு மிகுந்த துணை செய்யும் ஓர் உண்மையைப் பார்ப்போம். அந்த உண்மையை நாம் இசைக் கலையின் மூலம் உணர்கின்றோம். இசைக் கலை ஒரு அற்புதமான கலை. எவ்விதமான வெளி நச்சும் அற்றது. பார்க்கின்ற ஒவ்வொரு தோற்றத்தினூடும் கடவுளே இசைவடிவாகத்தான் காட்சி அளிக்கின்றார் என்று எண்ணும்படி தூண்டவல்லது. இன்னும் பிரபஞ்சத்தையே பல்வேறான ஸ்வரபேதங்களோடு பொங்கிப் பெருக்கெடுத்துச் செல்லும் இசை

வடிவாகவே பாவிக்கலாம். கடவுளையே நர்த்த சொரூபி என்று தான் ஞானிகள் அழைக்க விரும்புகின்றனர். ஏன் என்பதற்கு மகான் தாகூர் அற்புதமான நியாயங் களை வழங்குகின்றார்.

கடவுளை ஓர் சைத்திகனுகக் கொள்ளக் கூடாதோ என்றால், சைத்திகனுக்குத் திரைச் சீலை வேண்டும். மற்றும் தூரியக்கோல், வர்ணப் பெட்டி ஆகிய சாமான்க ளெல்லாம் வேண்டும். தூரியக் கோலைக் கொண்டு ஒரு பூச்சுப் பூசின உடனே அவன் மனத்திலுள்ள கருத்து வெளிப்பட்டு விடுமா என்றால், இல்லை. முதல் பூச்சுக்கும் கருத்துக்கும் இடையே எவ்வளவோ தூரம் இருக் கின்றது. வேலை முடிந்து சைத்திகன் பிரிந்துவிட்டால் புருஷனைப் பறிகொடுத்த கைம்பெண் போன்று படம் தனித்து நிற்கும். சிருஷ்டி கர்த்தாவின் கை ஸ்பரிசம் இல்லாது போய்விடும்.

ஆனால் பாடகனுக்கோ அப்படி யில்லை. பாடலுக்கு வேண்டிய அனைத்தும் அவன் அகத்தேயே இருக் கின்றன. ஸ்வரங்க ளெல்லாம் அவனுடைய ஜீவனி லிருந்து உதயமாகின்றன. வெளியிலிருந்து திரட்டப் பட்ட சரக்குகள் அல்ல. அவனுடைய பாவம் பாவ வெளியீடு ஆகிய இரண்டும் சகோதர சகோதரியர் போன்றவை. பெரும்பாலும் இரட்டைக் குழந்தைகள் என்றுதான் சொல்லவேண்டும். இசையின் மூலம் இதயமே வெளியாகிவிடும். வர்ணமில்லை, தூரியக்கோல் தேய்ந்துவிட்டதே என்பது போன்ற வெளி நச்சு ஒன்றும் கிடையாது.

எல்லாக் கலைகளும் பூரணமான கலை அருமையைக் காட்டுவதற்கு ஓர் வடிவத்தைப் பெற்றுத் தான் ஆக

வேண்டும். இசையும் அப்படித்தான். ஆனாலுங்கூட ஒரு வித்தியாசம் உண்டு. இசையினுடைய அருமை என்னவென்றால், ஒவ்வொரு துணுக்கும் முழு வடிவத்தினுடைய அழகை எடுத்துக் காட்டிக்கொண்டேயிருக்கும். வார்த்தைகளைத் துணைக் கொண்டு பாவத்தை வெளியிடும் போது ஓரளவில் வார்த்தைகளும் அதற்குத் தடையாகத்தான் காணப்படுகின்றன. ஏனென்றால் பொருளைக் கவனிக்க வேண்டிய தொல்லை இருக்கின்றது. வார்த்தைகளே அதற்கு வேண்டாம். வார்த்தைகளாலும் உணர்த்த முடியாத அதீதப் பொருளை அது உணர்த்தும் பொழுது வார்த்தைகள் எதற்கு?

இன்னும் ஒரு அருமைப்பாடு என்ன வென்றால், பாடகனையும் பாட்டையும் தனித் தனியே பிரித்து விட முடியாது. பாடகன் பிரியும்போது பாட்டும் அவன் அகத்தேயே அடங்கிவிடும். பாடகனுடைய இன்பத் தோடும் ஜீவனோடும் நிரந்தரமான தொடர்புடையது இசை.

இத்தனை தூரம் இசையின் அருமையை உணர்ந்து வந்ததெல்லாம் பின் வரும் உண்மையைத் தெரிந்து கொள்வதற்கே.

இந்தப் பிரபஞ்சமே ஒரு கீதம். அதை இசைக்கின்றவன் இறைவன். க்ஷண நேரங் கூடத் தனது தலைவனை விட்டு அது பிரிகிறதும் கிடையாது, பிரிக்கவும் முடியாது. வெளி அம்சங்களைக் கொண்டு உருவாக்கிய கீதமா என்றால், அதுவும் இல்லை. ஆண்டவனுடைய எல்லையற்ற ஆனந்தமே பிரபஞ்ச கீதமாகப் பரிமளிக்கின்றது.

நாம் இந்த உண்மையை உணர வேண்டுமென்றால் நம்து அழகுணர்ச்சிதான் நமக்குத் துணை செய்ய

முடியும். நாம் விழித்திருக்கும்பொழுதும் தூங்கும் பொழுதும், நமது பாவனையே நாம் நாமே நமது பாவனை என்னும்படியான அத்வைத நிலையை எய்திவிட்டால், மற்றும் ஆண்டவன் இசைக்கும் பிரபஞ்ச கீதத்தின் இசை நீர்மைக்கு ஏற்ப, நமது இதயம் துடிக்கப் பழகி விட்டால், நமது இரத்தம் ஒழுகப் பழகிவிட்டால், நமது உடல் அணுக்கள் துள்ளப் பழகிவிட்டால், அதுவே பரமபதம், அதுவே பிரம்ம விஹாரம், அதுவே பேரின்பம் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்வோம்.

இதுகாறும் அழகுணர்ச்சியின் தத்துவ மாண்பை, அமரகவி பாரதியார், தாகூர், வோர்ட்ஸ்வொர்த் போன்ற பெரியார்களின் துணைகொண்டு, ஓரளவு விளங்கிக் கொண்டோம். இதுவரை பார்த்து வந்ததின் சாரம் பின் வருமாறு :—

உலகத்தை அழகுப் பகுதி என்றும் அழகில்லாப் பகுதி என்றும் பிரிவினை செய்து பார்க்கக்கூடாது. ஏனென்றால் கடவுள் அவ்வாறான பிரிவினை எதுவுமே செய்யவில்லை. பாடகனுடைய ஆனந்தம் பாட்டு வடிவில் வெளி வருவது போன்றும், கவிஞருடைய ஆனந்தம் கவிதை வடிவில் வெளி வருவது போன்றும், இறைவனுடைய எல்லையற்ற பேரானந்தமே இந்தப் பிரபஞ்ச வடிவில் வெளிவந்துள்ளது. அழகெல்லாம் உண்மை. உண்மையெல்லாம் அழகு. உண்மையை உணர்ந்து விட்டால் அழகைக் கண்டு ஆனந்திக்கலாம். பாடகனை விட்டு எவ்வாறு பாடலைப் பிரிக்க முடியாதோ அவ்வாறே இறைவனை விட்டு இந்தப் பிரபஞ்சத்தைப் பிரித்துப் பார்க்க முடியாது. இறைவன் ஓர் பாடகன். பிரபஞ்சமானது அவனால் பாடப்படும் கீதம். சதா காலமும் பாடிக்கொண்டே யிருக்கிறான். அந்த உண்

மையை உணர்ந்து அவன் இசைக்கின்ற கீத நீர்மைக் கேற்ப நமது வாழ்க்கைப் போக்கினை அமைத்துக் கொள்வோமானால், எல்லையற்ற பேரானந்தம் அடையலாம். அதற்கெல்லாம் உறு துணையாக நிற்பது அழகுணர்ச்சியே.

இதுவே நாம் இதுவரையிலும் ஆராய்ந்து பார்த்ததின் சாரம். இன்னும் நாம் அழகு சம்பந்தமான ஒரு சில உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டியதிருக்கிறது. அவைகளை முறையே பார்ப்போம்.

IV

ஏன் அழகுணர்ச்சியை வளர்க்கவேண்டும் என்பதை இதுவரை ஆராய்ந்தோம். நாம் வந்த முடிவுக்கு ஏற்ப நமது அழகுணர்ச்சியை வளர்க்கின்ற நிலையானது மிக உயர்ந்த நிலை. ஞானிகளின் நிலை. அதுவே உண்மை நிலை. ஆனால் வாழ்க்கைப் போரிலே இறங்கி, சில்லறைத் தேவைகளுக்குத் தெய்வ வடிவு கற்பித்துக்கொண்டு, நாள் முழுவதும் வியாகூலத்திலும், வஞ்சனை, சூது, வாது, பொருமையாகிய ஈன நிலைகளிலும் மனத்தைச் செலுத்திக்கொண்டு சஞ்சலப்படுகின்றவர்களுக்கு மேலே குறிப்பிட்ட நிலை எள்ளளவும் சுவைக்காது. அதற்காக விட்டுவிட முடியுமா? அது ஒரு பக்கம் இருக்கட்டும். அது அத்தனையும் அகத்தைப் பொறுத்தது. இனி நாம் பார்க்கவேண்டியது புறத்தைப் பொறுத்தது. பெரும்பாலும் அப்படியே.

சாதாரண மக்கள் அழகு என்ற பதத்தை எப்படியெல்லாம் உபயோகித்து வருகின்றார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

ஒரு மாட்டைப் பார்த்தால் 'அழகாக இருக்கிறது', ஒரு பாட்டைக் கேட்டால் 'அழகாக இருக்கிறது', ஒரு துணியைப் பார்த்தால் 'அழகாக இருக்கிறது', ஒரு வட்டியைப் பார்த்தால் 'அழகாக இருக்கிறது', ஒரு பெட்டியைப் பார்த்தால் 'அழகாக இருக்கிறது' என்று சொல்லி விடுகின்றார்கள். எதனால் அவ்வாறு சொல்லு கின்றார்கள்? இன்னும் இரண்டொரு உதாரணங்களைப் பார்த்து விட்டுப் பிறகு விடையைப் பார்ப்போம்.

மின்சார ஸ்தம்பங்களைப் பார்க்கின்றோம். நெட்டு நெட்டென்ற நேர்கோட்டு ஸ்தம்பங்களைப் பார்க்கும் போது, ஏதோ நகை யிழந்த மங்கை போன்று காணப் படுகின்றன. சில ஸ்தம்பங்களில் விளக்கைத் தாங்கு வதற்கு ஏற்றதான அரை வட்டக் கம்பிகள் இணைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்ததும் இந்த இனங்கள் அழகாகத்தான் தோன்றுகின்றன என்று எண்ணுகின்றோம். ஏன்? பன்னிரண்டு அடி உயரமும் இருபத்துநான்கு அடி நீளமும் கொண்ட ஒரு சுவரில் முக்கால் அடி நீளமும் அரை அடி அகலமும் கொண்ட ஒரு ஜன்னல் மட்டிலும் இருந்தால், இதென்ன, இத்தனை பெரிய சுவரில் பொந்து வைத்தமாதிரி இருக்கின்றதே இந்த ஜன்னல், என்று சொல்லுகின்றோம். ஏன்? தாழி வயிறும் கோழித்தலையும் கொண்ட மகோதரர்களைக் கண்டால் நமக்கு நகைப்பு ஏற்படுகின்றது. எதனால்? பெரிய சைக்கிளில் சிறிய பையனும் சிறியசைக்கிளில் பெரிய ஆளும் சவாரி செய்கிறதைப் பார்த்தால் நமக்குப் பிடிக்கிறதில்லை. ஏன் அப்படி? ஓங்கி வளர்ந்து பரிதித்துத்தோன்றும் மாமரத்தில் இரண்டொரு காய்கள் மட்டிலும் அங்கும் இங்குமாகத் தொங்கிக்கொண்டிருப்ப தைக் கண்டால் நமக்குப் பிடிக்கிறதில்லை. எக்கார ணத்தால்?

இவ்வாறுகப் பிடிக்கவில்லை, பிடிக்கவில்லை என்று சொல்லி அடுக்கிக்கொண்டே வந்த பொருள்களில் பிடிக்கும்படியான அம்சத்தைக் கண்டவுடன், இது நன்றாயிருக்கிறது, இது நன்றாயிருக்கிறது என்று பாராட்டுகின்றோம். என் அப்படி?

மின்சார ஸ்தம்பத்தில் அரை வட்டக்கம்பி இணைந்து அழகு செய்கின்றது. சுவரில் அதன் பரப்பளவுக்கு ஏற்றதான ஜன்னல் அமைந்து அழகு செய்கின்றது. தலைக்கேற்ற உடலும் உடலுக்கேற்ற தலையும் அமையுமானால் பார்க்க நன்றாயிருக்கிறது. பெரிய சைக்கிளில் பெரிய ஆளும் சிறிய சைக்கிளில் சிறிய பையனும் சவாரி செய்வதைப் பார்த்தால் பொருத்தமாயிருக்கிறது. மரத்துக்குத் தக்கபடி காய்கள் நிறைந்து கிடந்தால் பார்ப்பதற்கு மிக அழகாயிருக்கின்றது.

இதுகாறும் மின்சார ஸ்தம்ப முதல் மாமரம் வரைப் பார்த்துவந்த உதாரணங்களில் முன்னதான வரிசைகளைப் பாராட்டவில்லை. ஆனால் பின்னுள்ள வரிசைகளைப் பாராட்டினோம். எதனால்? சமநிலை (Balance) இருப்பதனால். ஸ்தம்பத்தினுடைய வசீகரமற்ற நெடுந்தன்மையை வளைவு சமப்படுத்துகின்றது. சுவரின் பரப்புக்கேற்ற ஜன்னலானது சமநிலை பெறவைத்துச் சுவரை அழகு செய்கின்றது. தலைக்கேற்ற உடலும் உடலுக்கேற்ற தலையும் அமைவதனால் சமநிலை கூடுகின்றது. அதனாலேதான் உடலின் தோற்றம் அழகு பெறுகின்றது. சைக்கிளின் அளவுக்குத் தக்க ஆள் சவாரி செய்வதனாலே சமநிலை தோன்றுகிறது. ஆகவே விகாரமில்லை. மாமரத்தின் பாரித்த தோற்றத்தைக் காய்நிரைகள் சமன்செய்கின்றன. ஆதலினாலே அழகு.

ஆகவே அழகினுக்கு அடிப்படையாக உள்ளது சமநிலை. நாம் வாழும் உலகமே அழகுமயம். எதனால் என்றால் சமநிலையினால். ஒளிக்கு இருளும், ஓட்டத்திற்குத் தேக்கமும், வன்மைக்கு மென்மையும், வெம்மைக்குத் தண்மையும், பருமைக்குச் சிறுமையும், நீட்சிக்குக் குறுக்கமும், ஏற்றத்திற்கு இறக்கமும் ஆகிய பண்புகள் தக்கபடி அமைந்து சமநிலை புலப்படுவதனாலேயே அழகு மிளிர்கின்றது.

V

இனிமேல் கலைத் தோற்றங்களிலும் அழகு புலப்படுகின்ற அருமையைப் பார்ப்போம்.

தத்துவ தரிசனத்தைப் பெற்ற மகான்களால் பாடப்பெற்ற பாடல் ஒன்றை, மேதாவிலாசமுள்ள பாடகன் ஒருவன் பாடுவதைக் கேட்கும் பொழுது, "ஆஹா என்ன அழகு! என்ன அருமை!" என்று பாராட்டுகின்றோம். அதன் மர்மம் யாது? நமது மனக் கண்ணின் முன்னர் ஓர் நூதன உலகமே காட்சியளிக்கின்றது. நிஜத்தறியாத அனுபவம், எதிர்பாராத கற்பனை, அபூர்வமான மனோசஞ்சாரம் நாகரிகமான ரஸானுபவம் எல்லாம் விளைகின்றன. வேற்றுமைகளுக்கிடையில் ஐக்கியமும், பேதங்களுக்கிடையில் ரஞ்சகமும், (Harmony) சமநிலையோடும் விகாரமின்றியும் தோன்றும்படி பாடப் படுவதனாலேயே, அத்தனை அருமைகளும் தோன்றுகின்றன.

பாடலினுடைய இசை வடிவத்தை நிறை செய்யும் அங்கங்களுள் ஏதேனும் ஒன்று, ஏனைய அங்கங்களோடு தக்க முறையில் பொருந்தாது, மிண்டோ குறுகியோ வெளிப்படுமாயின், சமநிலையே தட்டிப் போகும். அந்

நிலையில் பாடல் சுவைக்காது. சம நிலை தட்டாது காப்பதலேயே அழகு துலங்குகின்றது.

இன்னும் கவிதையை எடுத்துக் கொள்வோம். சில கவிதைகளைச் சொன்னால், 'ஆஹா! எத்தனை அழகு' என்று பாராட்டுகின்றோம். எதனால்? பாவத்திற்கும் பாவத்தைத் தாங்கிச் செல்லும் பதங்களுக்கும் இடையில் சம நிலை புலப்படுவதனாலே. புலப்படாவிட்டால் கவிதை சுவைக்காது. வெறும் வார்த்தைக் குப்பையாகவே தோன்றும். ஓர் உதாரணத்தின் மூலம் இதைத் தெரிந்து கொள்வோம்.

இரணியனுக்கும் பிரகலாதனுக்கும் வாக்குவாதம் நிகழ்கின்றது. 'எவன்டா உலகம் தந்தவன்' என்று எண்ணரிய ஆணவத்தோடும் மமதையோடும் இரணியன் கேட்கின்றான். அருமையான பதில் வழங்குகின்றான் பிரகலாதன். இங்கே கேட்கப்படும் கேள்வி வேதாந்த விசாரணை தழுவிய கேள்வியில்லை. தனக்கு நிகராக எந்தக் கடவுள்தான் இருக்கமுடியும் என்ற ஆணவத்தோடு கேட்கப்படும் கேள்வி. அதற்கு வழங்கும் பதிலும் ஆணித்தரமாய் இருக்க வேண்டும். வெட்டொன்று துண்டு இரண்டாக விழும்படி செய்ய வல்லதாக இருக்கவேண்டும். அதிகம் சொல்வானேன்? வெடிமருந்து போல்று இருக்கவேண்டும். எடை அளவில் இலேசென்றாலும் பயன் அளவில் தவிடு பொடி. அப்படியிருக்கவேண்டும்.

இப்பொழுது பிரகலாதன் கூறும் பதிலைப் பார்ப்போம். கடவுள் உண்மையை இதோ உணர்த்துகின்றான்.

"சாணினும் உளன், ஓர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன், மா மேருக் குன்றினும் உளன், இந்நின்ற தூணினும் உளன், நீ சொன்ன சொல்லினும் உளன்; இத்தன்மை காணுதி விரைவின் என்றான்; நன்னெனக் கனகன் நக்கான்."

(சதகூறு—நூறு பங்கு கோண்—அணுவின் பகுதி)

சாணினும் கடவுள் இருக்கின்றார், அணுவினைச் சத கூறிட்ட கோணினும் இருக்கின்றார், குன்றிலும் இருக் கின்றார், இன்னும் தூணிலும் இருக்கின்றார், அதற் கெல்லாம் மேலதாகக் 'கடவுள் எங்கே' என்று கேட்ட சொல்லிலும் இருக்கின்றார் என்று சொல்வதன் மூலம் கவிதை எவ்வாறு சிறக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். சாணும், அணுவின் கோணும், குன்றும், தூணுமாகிய இத்தனை பொருள்களிலும் பொதிந்து கிடக் கும் உண்மைக்கு அதிகமான அழுத்தம் கொடுக்கும் பொருட்டு அற்புதமாக வந்து விழுகின்றது 'நீ சொன்ன சொல்லினும் உளன்' என்னும் தொடர். 'இதென்ன, வெறும் அடுக்குத்தானே' என்று சலிப்பு ஏற்படும் சமயத் தில் சலிப்பினைத் தலை குப்புறத் தள்ளிவிட்டு, பாவத் தையும் பதங்களையும் சமநிலைப் படுத்துவதற்கும் துணை செய்கின்றது மேலே குறிப்பிட்ட தொடர். அவ்வாறு சமன் செய்வதனாலேயே அழகு பிறக்கின்றது. அல்லா மலும் கேட்ட கேள்வியின் நீர்மைக்கு ஏற்ப, சம நிலை தழுவிய பதிலாக இருப்பதனாலும் அழகு விளங்கு கின்றது. இன்னும் இரண்டொரு பாடல்களைப் பார்த் தால் இந்த உண்மை மிக நன்றாக விளங்கும். பாடல் களைப் பார்ப்பதற்கு முன் பூர்வாங்கமாக ஒரு சில விஷயங்களைத் தெரிந்துகொள்வோம்.

நம் நாட்டில் ஒருவிதமான நம்பிக்கை இருந்து வருகிறது. மத சம்பந்தமானது அது. மனிதன் மனித

நிலையிலிருந்து மிருக நிலைக்கு மாறுவதென்றால், அது அவனுடைய விதிப் பயன். அம்மாதிரியே மிருகமும் மனித நிலைக்கு மாறுவது. ஆகவே வினையே மனிதனை மிருகமாக்குகின்றது, மிருகத்தை மனிதனாக்குகின்றது. இன்னும் ஒன்று. எந்தப் பிறவி எடுத்தாலும், வினை நீங்கிவிடாது. செய்தாரைச் சென்றே சாரும். வினை எவ்வாறே அவ்வாறே கோசலத்தை அழகு செய்யும் சரயு நதியும்.

*குறிஞ்சி நிலத்திலிருந்து பாயும் நதியானது, முல்லைக்கு வந்து, பிறகு மருதத்திற்கு வந்து, இறுதியில் நெய்தல் நிலத்தின் வழியே பாய்ந்து கடலில் கலக்கின்றது. விஷய மெல்லாம் இவ்வளவுதான். இதைச் சொல்லும் முறையிலே அழகு மிளிர்கின்றது.

குறிஞ்சி நிலத்திலிருந்து முல்லை நிலம் நோக்கிப் படருகின்ற சரயு நதியானது குறிஞ்சி நிலப்பொருள்களை யெல்லாம் வாரிக் கொண்டுவந்து கொட்டுகின்றது. ஆகவே முல்லையே குறிஞ்சியாக மாறிவிடுகின்றது. இன்னும் முல்லையை விடுத்து மருத நிலத்திற்கு வரும் போது முல்லையிலுள்ள வளத்தை யெல்லாம் வாரி வந்து கொட்டுகின்றது. எனவே மருதமும் முல்லையாக மாறி விடுகின்றது. இறுதியில் நெய்தல் நிலத்தை நாடி ஓடும்போது, மருத வளத்தை யெல்லாம் சுருட்டிச் சென்று அங்கே விரிப்பதனாலே, மணற் பாங்கான நெய்தல் நிலமும் வளம் நிறைந்த மருதமாகத் திரிந்து விடுகின்றது. இவ்வாறு நிலத்தை யெல்லாம் விடாது சென்று பாய்ந்து, அந்த அந்த நிலத்திற்குரிய இயல்

---

*குறிஞ்சி—மலைப் பிரதேசம், முல்லை—காட்டு நிலம், மருதம்—வயல் சார்ந்த இடம், நெய்தல்—கடல் நிலம்.

பினையே மாற்றி வருவதால், சரயு நதியும் விலக்கு நிகரான ஒன்றுதான் என்பது கம்பர் துணிபு.

இன்னும் அந்த ஆற்றின் அழகை விட்டாரில்லை. மலையிடையே தோன்றி மறி கடலோடு கலக்கின்றது. அதுதானே அந்த நதியினுடைய தோற்றம், ஓடுக்கம் ஆகிய அங்கங்களில் பொதிந்து கிடக்கும் மர்மம்? இல்லை, இல்லை. இன்னமும் இருக்கின்றது. தாமிர வருணி நதியை எடுத்துக்கொள்வோம். பாபநாச வாசிகள் 'எங்கள் நதி' என்பர். திருநெல்வேலி வாசிகளும் 'எங்கள் நதி' என்றே உரிமை கொண்டாடுவர். தென் திருப்பேரைக்காரரும் 'எங்கள் நதி' என்றுதான் உரிமை கொண்டாடுவர். நதி ஒன்றே ஒன்றுதான். ஆனாலும் பல ஊர் வாசிகளாலும் தங்கள் நதி, தங்கள் நதி என்று தனி உரிமை காட்டிப் பாராட்டப்படுகின்றது.

கடவுளும் ஒருவர்தானே? ஆனாலுங்கூட, 'தன் தெய்வம் என் தெய்வம் என்(று) எதிர் வழக்கிட' நிற்கின்றார் அல்லவா? அந்த உண்மையை விளக்குவதற்கேற்ற உதாரணமாக விளங்குகின்றது சரயு நதியின் போக்கு.

மகான் கம்பருக்கு அந்நதியின்பாற் கொண்ட ஈடுபாடு இன்னும் தளர்ந்துவிடவில்லை. ஏனென்றால் சர்வ சாதாரணமான ஒரு இயற்கைத் தோற்றமாக அது காணப்படவில்லை. உயர்ந்த தத்துவத்தின் கொள்கலமாகவே அது காட்சி அளிக்கின்றது. ஆகவே அதன் தோற்றத்தை வைத்துக்கொண்டு பெரிய விரிவுரை ஒன்றே நிகழ்த்திவிடுகின்றார்.

மகரந்தத்தை உகுக்கும் மலர்ச் சோலைகள், மணம் செறிந்த சண்பகக் காடுகள், பூ நிறைந்த பொய்கைத்

தொகுதிகள், புதுமை நலன் படிந்த மணல் தடங்கள், மாதவிக் கொடி பணிந்த வேலிகள், மரகத வண்ணம் மிளிரும் கமுகஞ் சோலைகள், வயலிடங்கள் ஆகிய எங்கணும் புகுந்து புகுந்து வருகின்றது. உடம்பு என்னும் ஒன்றினுள்ளே உயிரின் ஸ்பரிசம் தீண்டப் பெறுத இடம் எவ்வாறு இல்லையோ, அவ்வாறு சரயு நதியின் ஸ்பரிசத்தை உணராத பெய்கையும் இல்லை, பொழிலிடமும் இல்லை.

இவ்வாறு சரயு நதியின் பெருமைக்குப் பல்லாண்டு கூறும் பல பாடல்களில், உதாரணத்திற்காக வேண்டி மூன்று பாடல்களைத் தேர்ந்தெடுத்துள்ளேன். அப் பாடல்களை இங்கே பார்ப்போம்.

(1)'முல்லையைக் குறிஞ்சியாக்கி, மருதத்தை முல்லையாக்கி,
புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரு மருதமாக்கி,
எல்லையில் பொருள்கள் எல்லாம் இடைதடுமாறும் நீரால்
செல்லுறு கதியில் செல்லும் வினையெனச் சென்றதன்றே.'

(பொருவரு—ஒப்பிடுதற்கு அரிய, நீரால்—தன்மையால்.)

(2)'கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈதென்னத்
தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி,
பல் பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் போல்
[பரந்ததன்றே.'

(கல்—மலை, நீத்தம்—நீர்)

(3)'தாதுகு சோலைதோறும், சண்பகக் காடுதோறும்,
போதவிழ் பொய்கை தோறும், புதுமணல் தடங்கள்தோறும்,
மாதவி வேலி, பூக வனந்தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்புதோறும் உயிரென உலாயதன்றே.'

(போது—மலர், பூகம்—கமுகு)

சமநிலை அழகின் அடிப்படை என்று பார்த்தோம். அது எவ்வாறு இங்கே பொருந்துகிறது என்பதைப் பார்ப்போம்.

மேலே தரப்பட்ட பாடல்களுள் ஒன்று நதியின் ஆற்றலைக் குறிக்கின்றது. அடுத்தது நதியின் விரிவைக் குறிக்கின்றது. மூன்றாவது நதியின் நிறைவைக் குறிக்கின்றது.

பொதுவாக உண்மைகளை உணர்த்த ஒரு சில முறைகள் கையாளப்படுகின்றன. அவைகளை ஓரளவு இனப்படுத்துவதென்றால், நேரடி முறை, எதிர்முக முறை, வினாவிடை முறை, உபமான முறை என்று இவ்வாறாக இனப்படுத்தலாம். மகான் கம்பர் இங்கே தழுவிக்கொண்ட முறை உபமான முறையே ஆகும். உபமான முறையைக் கையாளும்பொழுது, எடுத்துக் கொண்ட பொருளின் காம்பீரியத்திற்கு ஏற்ப உவமை அமையவேண்டும். இன்னும் உபமானத்தால் உபமேயம் சிறக்கவேண்டும். உபமேயத்தால் உபமானமும் சிறக்கவேண்டும். இரண்டையும் எதிரெதிராக வைக்கும் பொழுது அவற்றினிடையே எழுகின்ற சாமியநிலை நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டும். கம்பர் அந்த வேலையை மிக அற்புதமாகச் செய்து காட்டுகின்றார்.

ஒன்றனுடைய ஆற்றலை விளக்கும்போது, அதற்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய ஓர் உவமையைத் தேட வேண்டுமென்றால், வினையைத் தவிர வேறு எதனையும் தேடமுடியாது. ஏனென்றால் "ஊழிற் பெருவலி யாவுள" என்பது ஆன்றோர் வாக்கு. கடவுள் நினைத்தாலும் அதன் வலியை மாற்றமுடியாது என்பதாகக் கம்பரே சொல்கின்றார்.

'சூழ்வினை நான்முகத்(து) ஒருவன் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ'

—இதுதான் கம்பருடைய வாக்கும். ஆகவே அமிதமான ஆற்றலுக்கு உவமை சொல்லவேண்டுமானால் வினையைத்தான் சொல்லவேண்டும்.

இனி விரிவை விளக்க ஓர் உவமை வேண்டுமென்றால், கடவுளையே உவமையாகக் காட்டுவதை யன்றி வேறு எப்பொருளைக் காட்டமுடியும்? ஆகவேதான் கம்பர் கடவுளையே உவமைப் பொருளாக எடுத்துக் கொண்டார்.

இதுவரை ஆற்றல், விரிவு ஆகிய இரு பண்புகளுக்கும் உரிய உவமைகளின் சிறப்பு மதிப்பிடப் பட்டது. இனிமேல் பார்க்க வேண்டியது நிறைவிற்குரிய உவமையாகும். உடம்பினுள்ளே பரிபூரணமாக நிறைகின்ற வஸ்து உயிர் ஒன்றே. ஆகவேதான் நிறைவைக் குறிப்பதற்கு உயிர் உவமையாகக் கையாளப் பட்டிருக்கிறது.

சரயு நதியின் ஆற்றலுக்கு நிகர் **வினை.**
அதன் விரிவிற்கு நிகர் **கடவுள்.**
அதன் நிறைவிற்கு நிகர் **உயிர்.**

நதியின் ஆற்றலைச் சொல்வதன் மூலம் வினையின் ஆற்றல் வெளியாகின்றது. விரிவைச் சொல்வதன் மூலம் கடவுள் உண்மை வெளியாகின்றது. நிறைவைச் சொல்வதன் மூலம் உயிரின் தன்மை வெளியாகின்றது. இவ்வாறு உபமானத்தினால் உபமேயமும் உபமேயத்தினால் உபமானமும் சிறக்கும்படி இரண்டினையும் எதிரெதிராக வைத்து, இடையே சாமிய நிலை தோன்றும்படி செய்வதன் மூலம் அழகு பிறக்கின்றது.

கேவலம், நதியை உவமிக்க இவ்வாறு விஷயையும், கடவுளையும், உயிரையும் இழுக்கலாமா என்று தோன்றும்.

"There are, as it were, unexpected but satisfying revelations—and the lie becomes the truth"—K. R. S.

"எதிர்பாராத, ஆயினும் திருப்தி தரக்கூடிய உண்மைகள் காணப்படுகின்றன. எனவே பொய் மெய்யாகி விடுகின்றது. இல்லையா?" என்று ஸ்ரீமான் K. R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் கூறும் மொழிகளே அதற்குரிய சமாதானமாகும். பாடல்களில் உண்மையும் இருக்கின்றது. கற்பனையும் இருக்கின்றது. கற்பனைப் பகுதி ரம்மியமாக இருப்பதோடு பல உண்மைகளை உணர்ந்து கொள்வதற்குத் துணையாகவும் உதவுகின்றது. ஆதலினாலே ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் சொன்னது மிக நன்றாகப் பொருந்தும்.

இம்மட்டோடு நின்று விடவில்லை, கவிதையில் காணும் அழகெல்லாம். இன்னும் ஓசை, பொருள், வடிவம், சூழ்நிலை ஆகிய இவற்றிடையே சமநிலை சித்திப்பதன் மூலம் அழகு மிளிர்வதைக் காணலாம்.

நாகபாசப் படலத்திலிருந்து ஒரு சில உதாரணங்களைப் பார்ப்போம்.

நாகபாசப் படலத்தின் பிரதம நாயகன் இந்திரசித்தன். அவனுக்கும் அனுமனுக்கும் இகல் மூள்கின்றது. ஆலகாலவிஷம் போன்று கோபக்கனல் பெர்ங்கியெழ, கைக்கு எட்டிய குன்றைப் பறித்துக் கடுவிசையில் எறிகின்றான் அனுமன். பெற்றுப்பானா? தரிப்பானா? இந்திரசித்தனும் உடனே துள்ளி எழுகின்றான். "அடே, நில், நில் அங்கே. நான் வில் எடுக்

கர்தனல் அல்லவா உன் சூரத்தனத்தை இங்கே கொழிக்கின்ருய். வாடா எதிரே. உன்னுடைய மண்ணும் கல்லும் மரமுமா என் வலிமையைத் தொலைக்கும் ஆயுதங்கள்?'' என்று இவ்வாறு உடம்பிலுள்ள ஒவ்வொரு அணுவும் துடிக்கும்படி பேசுகின்ருன்.

அனுமன் எப்பொழுதும் நிதானத்தைக் கைவிடாதவன்.

இந்த இந்திரசித்தனில்லை, இவனைப் பெற்றெடுத்த இராவணனையும் வென்றுவிடலாம் என்ற நம்பிக்கையும் திமிரும் அவனுக்கு உண்டு. ஆங்கிலத்தில் அனுமனுடைய நெஞ்ச நிலையைச் சொல்வதென்ருல், "Comfortable consciousness of a confident superiority" என்ற தொடரில் என்ன பொருள் தொனிக்கின்றதோ அந்தப் பொருள் தழுவிய நிலை என்றுதான் சொல்லவேண்டும். வெகு நிதானமாகப் பேசுகின்ருன்.

"ஏனப்பா துள்ளுகின்ருய். தர்ப்பைப் புல்லும் கையுமான நபர்கள் இங்கே இல்லை. போர் செய்யும் வீரர்களே எங்கள் பக்கம் உண்டு. வில்லெடுத்துப் போர் செய்ய வேண்டுமா? அதற்கும் வீரர்கள் உண்டு. கல்லெடுத்து உன் கட்டையை அழிக்க வேண்டுமா? அதற்கும் நானே காத்திருக்கிறேன். எல்லாம் இன்று நாளை காணலாம்'' என்று ஆடாமல் அசையாமல் பதில் வழங்குகின்ருன்.

சூழ் நிலையோ பரபரப்பான சூழ் நிலை. போர் வெறியும் இரத்த வெறியும் படிந்த சூழ் நிலை. ஆளைக் கொல்லலாமா, அண்டத்தை விழுங்கலாமா என்று எண்ணும் அசுரத்தனமான கோபம் படிந்த சூழ் நிலை. அத்தகைய சூழ் நிலையின் இயல்பும் பாட்டிலே தெரி

கின்றது. அடுத்தபடியாக ஓசையைப் பார்ப்போம். ஒருவனே படபடத்தவன். அவனுடைய படபடப்பெல் லாம் அவனுடைய வார்த்தைகளின் மூலம் வெளியா கின்றது. மற்றொருவன் நிதான புருஷன். எளிதாக வெல்லலாம் என்ற நம்பிக்கைத் திமிர் நிறைந்தவன். அவனுடைய நிதானப் போக்கும் அவனுடைய வார்த் தைகளின் மூலமே வெளியாகின்றது.

இன்னும் கோபத்தின் நிலை, கோபத்தை எழுப்பிய சூழ் நிலையின் இயல்பு, கோபத்தையும் வீரத்தையும் தொனிக்கச் செய்யும் பத அழகு ஆகிய எல்லாம் நிரம்பி, வாசிக்கின்றவர்களுக்கு இன்பத்தை ஊட்டவல்ல வடிவ நல்னும் சிறப்பாக வாய்க்கப் பெற்றிருக்கிறது.

இவ்வாறுக எல்லா நலனும் படிந்த பாடல்கள் இதோ வருகின்றன. முதலாவதாக இந்திர சித்தன் பேசுகின்றான். பின்னர் அனுமன் பேசுகின்றான்.

[இசையுடன் பாடவேண்டாம். தயவு செய்து 6 அல்லது 7 முறை மெட்டை மட்டிலும் சொல்லிப் பார்க்கவும்]

தன்ன-னனன	தன்ன-னனன	தன்ன-னனன	தன்ன-ன

'நில்லடா, சிறிது நில்லடா, உனை, நினைத்து
வந்தனன், முனைக்கு நான்
வில்லெடாமை நினதாண்மை பேசி உயிரோடு
நின்று விளையாடினாய்;
கல்லடா, நெடுமரங்களோ, வரு கருத்தினேன்
வலி கடப்பவோ?
சொல்லடா, என இயம்பினன் இகலரக்கன்;
ஐயன் இவை சொல்லினன்'

[நினது+ஆண்மை]

'வில்லெடுக்க உரியார்கள் ஐய, சில வீரர்
இங்கும் உளர்; மெல்லியோய்,

கல்லெடுக்க உரியானும் நின்றனன், அதின்று
நாளையிடை காணலாம்;
எல்லெடுத்த படை இந்திராதியர் உனக்குடைந்
துயிர்கொ டேகுவார்,
புல்லெடுத் தவர்கள்[1] அல்லம் வேறுசில
போரெடுத் தெதிர் புகுந்துளேம்'

[அது+இன்று, உனக்கு+உடைந்து, உயிர்கொண்டு+ஏகுவார்.]

இந்த இரண்டு பாடல்களிலும் ஓசை, பொருள், வடிவம், சூழ் நிலை ஆகிய நான்கு பண்புகளுக்கும் இடையே, ஏற்றம் இறக்கம் எதுவும் இல்லாதபடி சம நிலை கூடுவ தனால், அழகு மிளிர்வதைக் காண்கின்றோம்.

இதுவரை ஒரு சில பாடல்களை எடுத்துக்கொண்டு, அவற்றிடையே மிளிரும் சாமிய நிலையினால் எவ்வாறு அழகு மிளிர்கின்றது என்பதைப் பார்த்து வந்தோம். இன்னும் காவியங்கள் நாடகங்கள் ஆகிய இவற்றின் அக அங்கங்களாக விளங்கும் பல்வேறு கட்டங்களுக்கும் உயிரும் உணர்வும் வர்ணமும் ஊட்டி அழகு செய்யும் மாட்சியையும் பார்க்கவேண்டும்.

உதாரணமாக இரண்டொன்றைப் பார்ப்போம். சீதையின் திருமணத்தை மூன்று மகாகவிகள் மூன்று விதமாகக் வர்ணித்துக் காட்டுகின்றனர். தனிப்பட்ட அளவில், சம்பவமே அழகான சம்பவம். இன்னும் நம் மூடைய பக்தியும் சேர்ந்து ஈடுபாடு மிக்க அழகுடையதாகக் காணும்படியே செய்கின்றது. அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். யாருடைய வர்ணனையில் விரிந்த கலை அழகு மிளிர்கின்றது என்பதை நிதானமான முறையில் நின்று பார்க்கவேண்டும்.

ஒருவர் இராமனுடைய அவதார விசேஷத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராய், கடவுளால் ஆகாதது

எதுதான் என்ற நம்பிக்கையோடு, வில்லை ஒடித்தலும் சீதையை மணத்தலும் ஆகிய சம்பவங்களை அமிதமான ஆடம்பர அலங்காரங்களைப் புகுத்தி, வர்ணித்துச் செல்கின்றார்.

மற்றொருவர் ஒரு சில அம்சங்களைப் புகுத்தி அந்த நிகழ்ச்சியை அழகு செய்கின்றார். விச்வாமித்திரரோடு மிதிலைக்குச் சென்ற இராமனும் இலக்ஷ்மணனும் பூங்கா வனத்திற்கு வருகின்றார்கள். சீதை அங்கே கௌரி பூஜைக்காக வேண்டிப் பூக்கொய்து கொண்டிருக் கின்றாள். இராமர் அவளைப் பார்த்ததும், அவளுடைய எல்லையற்ற சௌந்தர்ய சிலத்தில் ஈடுபட்டு, அவளைப் பார்க்கும்படி தம்பியையும் தூண்டுகின்றார். இருவரும் பெண்ணழகைப் பெரிதும் பாராட்டிக் கொள்கின்றனர். சீதையும் இராமரைப் பார்த்துவிடுகின்றாள். எல்லை யற்ற ஆணழகை அணைகட்டித் தேக்கியிருப்பதாகவே அவளுக்குத் தோன்றுகிறது. அன்று நடத்திய கௌரி பூஜையில், தான் கண்ட அந்த ஆண் மகனே வில்லை ஒடித்துத் தன்னை மணக்கும்படி அருள் செய்ய வேண்டு கின்றாள். இப்பொழுது வில்லை ஒடிக்கும் சம்பவம் நிகழ்கின்றது. எல்லோரும் இருக்கின்றார்கள். வில்லும் குறுக்கே கிடக்கின்றது. இனி நடக்கின்றன மூன்று சம்பவங்கள். ஒருபக்கம் சீதை புலம்பிக் கொண்டிருக் கின்றாள். "கௌரி தேவியே! பூங்காவனத்தில் கண்ட புண்ணிய வாளனே வில்லை ஒடித்து என்னை மணக்கும் படி அருள் செய்" என்பதுதான் அவளுடைய புலப்பம். இன்னொரு பக்கம் ஜனக மகாராஜனுடைய தேவி புலம்புகின்றாள்; இன்னும் சாயகனையே நினைத்திக்கின்றாள். எல்லாம் வில்லைக் குறித்த நினைவுதான். பெரிய அதி சயம் என்னவென்றால் ஜனகனும் கூடத்திரிய சூல நினை

யில் தலைப்பட்டுவிடுகின்றன். "க்ஷத்திரியகுல ஆடவர்களில் இந்த வில்லை ஒடிக்கும் திறனுடைய ஆண் மகன் கிடையாதா? என்ன க்ஷத்திரியகுலம் வாழுது" என்ற போக்கில் அவனுடைய நிந்தனை எழுகின்றது. உடனே இலட்சுமணன் கோபித்து எழுகின்றன். ஜனகனைக் கண்டித்துப் பேசி, "இந்த வில் கிடக்கட்டும். இன்னும் இதுபோன்று எத்தனை வில்லானாலும் ஒடிக்கும் ஆற்றல் உண்டு" என்று சொல்லி, அண்ணனிடம் வில்லை ஒடிப்பதற்கு அனுமதி கேட்க, அவனை இராமன் சாந்தப்படுத்துகின்றன். இந்த நிலையில் விச்வாமித்திரர் இராமனைக் கண் காட்டுகின்றார். இராமனும் எழுந்து சென்று வில்லை ஒடிக்கின்றன். இவ்வாறு செல்கின்றது இரண்டாவது கவிஞன் வர்ணனை.

இனி மூன்றாவது கவிஞன் வர்ணனையைப் பார்ப்போம். மிதிலையின் வீதி வழியே வருகின்ற இராமன் கன்னி மாடத்தில் இருக்கின்ற சீதையைப் பார்க்கின்றன். சீதையும் அவனைப் பார்க்கின்றாள். கண்ணோடு கண் கௌவுகின்றது. எனவே, 'இருவரும் மாறிப் புக்(கு) இதயம்' எய்துகின்றனர். காதல் பிறந்து விடுகின்றது. அவனை நினைந்து அவன் உருகுகின்றன். அவனை நினைந்து அவள் உருகுகின்றாள். அது ஒரு புறம்.

இனி வில்லை ஒடிக்கும் சம்பவத்தையும் அதைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளையும் பார்ப்போம்.

சபைக்கு வில்லைக் கொண்டுவருவதன் முன்னரே ஜனகனுடைய மனோநிலை எவ்வாறு என்று காட்டப்படுகின்றது. விச்வாமித்திரன் இராமனுடைய பிரதாபங்களை எடுத்து விவரிக்கின்றன். ஜனகனும் இராமனைக் கண் குளிரப் பார்க்கின்றன். 'நம்முடைய பெண்ணுக்கு

உகந்த மணவாளன் இதோ இருக்கின்றான். ஆனால் வில் ஒன்று கிடக்கின்றதே. எனது ஆசையை யெல்லாம் தோற்கடிக்கின்றதே. நான் நினைத்தவாறு செய்ய என்னை விடமாட்டேன் என்கின்றதே. ஜானகியும் நோன்பு செய்துகொண்டுதான் வருகின்றாள். இந்த இராமன் இதனை ஒடிப்பானையின் துன்பக் கடலிலிருந்து என்னைத் தூக்கிவிட்டவனுவான்' என்று சொல்கின்றான்.

"மாற்றம் யாதுரைப்பது; மாயவிற்கு நான்
தோற்றவா றெண மனந் துளங்குகின்றதால்;
நோற்றனள் நங்கையும்; நொய்தின் ஐயன்வில்
ஏற்றுமேல் இடர்க்கடல் ஏற்றும் என்றனன்."

[மாற்றம்-சொல், தோற்றவாறெண-தோற்றவிதத்தை எண்ண]

இப்பொழுது வில்லானது சபைக்குக் கொண்டு வரப்படுகின்றது. அதனுடைய தோற்றம், அதனைக் கொண்டுவருபவர்களின் தொகை, பார்ப்பவர் மனநிலை ஆகிய எல்லாவற்றையும் கவிஞர் விளக்குகின்றார். வில்லின் ஆற்றலை விவரிப்பதானது பின்னர் வெளியாகப்போகும் இராமனுடைய ஆற்றலுக்கு மிகுதியான ஏற்றம் கொடுப்பதற்காகத்தான் என்பதில்லை. ஜனகனுடைய மன நிலையைக் காட்டவேண்டும். அதற்கு மேலாக மண்டபத்தில் கூடியிருக்கின்றவர்களுடைய மனநிலையையும் காட்டவேண்டும். ஆகவே பார்த்தவர்களுடைய நெஞ்சம் துணுக்கெய்துமாறு அமைகின்றது வில்லின் வர்ணனை.

வில்லானது வீதி வழியே கொண்டு வரப்படுகிறது. பார்த்தவர்களெல்லோரும் பலவாறு பேச ஆரம்பித்து விட்டார்கள்.

"இது என்ன மேரு மலையா, வாசுகியா, ஆதிசேஷனு அல்லது வானத்தில் படிந்த இந்திர வில்தானு? மகா

விஷ்ணுவால்தான் இதை ஒடிக்க முடியுமே யொழிய வேறுயாரால் முடியும்? சரி சரி, வில்லை வளைத்து சீதை வாழத்தான! எல்லாம் விதி செய்த தீமை'' என்று இவ்வாறெல்லாம் பேசுகின்றார்கள்.

இதுகாறும் வில்லைக்கண்ட ஊரார் நிலை வர்ணிக்கப் பட்டது. இனி வில்லைக் கண்டதும் ஜனகனுடைய நிலை எவ்வாறிருந்தது என்பதைப் பார்க்கவேண்டும். 'வில்லை ஒடித்துப் பெண்ணை மணந்துசெல்லட்டும்' என்பதுபோன்ற பற்றற்ற நிலையில் இருந்தானு என்னில், இல்லை. மதயானைபோல் நிற்கின்ற இராமனைப் பார்க்கின்றான், ஆஹா இவனல்லவோ தக்க மணவாளன் என்ற எண்ணம் உதிக்கிறது. ஆனால் மகமேரு மாதிரிக் கிடந்து கண்ணை உறுத்துகிறது சிவதனுசு. என்ன செய்வான்? வேதனை படிந்த உள்ளத்தோடு சீதையையும் பார்க்கின்றான். முகத்தில் வேதனைத் தடம் விழுவது தெரிகின்றது. அத்தனை கூட்டத்திற்கு மத்தியில் அவனுடைய முகத்துக்கு நேரே கவிஞர் குறிப்பு ஒளியைத் திருப்புகின்றார்.

'போதகம் அனையவன் பொலிவு நோக்கி, அவ்
வேதனை தருகின்ற வில்லை நோக்கி, தன்
மாதினை நோக்குவான் மனத்தை நோக்கிய
கோதமன் காதலன் கூறல் மேயினன்.'

[போதகம்-யானை; இராமன். கோதமன் காதலன்—கௌதம ரிஷியின் புதல்வனாகிய சதானந்தன்]

ஜனகனுக்கு மனச்சாந்தி ஏற்படும் பொருட்டும், பார்க்கின்ற எல்லோருக்கும் விஷயம் தெளிவாகத் தெரியும்பொருட்டும், சதானந்தன் வில்லின் வரலாற்றை விளம்புகின்றான். வரலாற்றைக் கேட்டு முடிந்ததும் விச்வாமித்திரன் இராமனைப் பார்க்கின்றான். உடனே,

நெய்விட நிமிர்ந்தெழும் நெடுங்கனல் போன்று, இராமன் எழுகின்றான். வில்லை நாடி நடக்கின்றான்.

ஒரே பரபரப்பு. இராமனுடைய மேனி அழகைக் கண்டமாத்திரத்திலே அனேக மங்கையருடைய மன நிறை சிதறுகின்றது. இராமன் மீது காதல் ஒருபக்கம். சீதையின்மீது பரிவு ஒருபக்கம். ஜனகன்மீது கசப்பு ஒருபக்கம். இவனுடைய கையைப் பற்றுவிடில் இக வாழ்வு அற்றான் சீதை என்கின்றார் ஒருசாரார். இன்னும் எண்ணில் பல்பேர், கரங்கூப்பிக் கண்ணீர் சொரிய, தெய்வத்தையே வேண்டுகின்றனர். இவன் இந்த வில்லை ஒடிக்காவிடில் பெண் இனமே வாழ்ந்து புண்ணியமில்லை. சீதையும் நாமும் தீக்குளித்துவிடுவோம் என்று சங்கற் பமும் செய்கின்றனர். வேறு சிலர் ஜனகனையும் விச்வா மித்திரனையும் நிந்திக்கவே தொடங்கிவிட்டனர்.

(1)"வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து(இ)ப்
(சிவன்)
பிள்ளைமுன் இட்டது பேதமை" என்கின்றார்.
(2)"ஞானமுனிக்கொரு நாணிலை—
(விச்வாமித்திரன்)
கோன் இவனிற் கொடியாரிலை"

என்றெல்லாம் திட்டி நொறுக்குகின்றனர்.

இவ்வாறு ஊரார் புலம் நிந்தனை எழுகின்றது.

இந்த நிலையில் பொன் மலை போன்ற வில்லினை அணுகுகின்றான் இராமன். சீதையெனும் தேடரிய மாமணிக்குச் சூட்டும் செவ்வி நிறைந்த மாலையாகவே அதனை வாரி எடுக்கின்றான்.

(1)'[1]ஆடக மால்வரை அன்னது தன்னை
தேடரு மாமணிச் சீதையெனும் பொற்
[2]சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
[3]ஏ(டி)அவிழ் மாலை இதென்ன எடுத்தான்'

(1)பொன்மலை. (2)சீதை. (3)இதழ்.

(2)'எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்.'

(3)'பூமழை சொரிந்தார் விண்ணோர்; பொன்மழை
பொழிந்தமேகம்;
பாமலர் கடல்களெல்லாம் பன்மணி தூவி ஆர்த்த;
கோமுனிக் *கணங்களெல்லாம் கூறின ஆசி; கொற்ற
நாமவேல் ஜனகற்கின்று நல்வினை பயந்ததென்ன'

*கணங்கள்—கூட்டம்.

(4)'தயரதன் புதல்வன் என்பார்; தாமரைக்
கண்ணன் என்பார்;
புயல் இவன்மேனி என்பார்; பூவையும்
*பொருவும் என்பார்;
மயலிடைத்து உலகம் என்பார்; மானுடன்
அல்லன் என்பார்;
தயல்பொரு கடலுள் வைகும் கடவுளே
காணும் என்பார்.'

*பொருவும்—ஒக்கும்.

இங்கே இத்தனை மகிழ்ச்சி. ஆனால் இன்னும் அந்தப்புரத்தில் சீதையின் துயர் தணியவே இல்லை. விரக வெந்தியில் கிடந்து பொசுங்குகின்றாள்.

(1)'சஞ்சலம் கலந்தபோது தையலாரை உய்யவந்து
அஞ்சல் அஞ்சல் என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையே'

என்று ஒரு பக்கம் நிந்திக்கின்றாள்.

(2)'வாள் நிலாவின் நூல் உலாவும் மாலை மார்பு மீளவும்
காணலாகுமாகின் ஆவி காணலாகுமே கொலாம்'

என்று ஒரு பக்கம் நைகின்றாள்.

இங்கிலையில் சீதையின் உயிர்த்தோழியாகிய நீலமாலை ஓடோடி வந்து, 'பரிவரும் முனியொடு பதிவந்தெய்திய, இராமனே' ஒடித்தான் என்ற தேனினும் இனிய செய்தியை, அவள் காதிலே பாய்ச்சுகின்றாள். வீதிவழியே வந்தது தன் உள்ளங் கவர்ந்த கள்வன்தான் என்று தெளியும்வரை மகிழ்ச்சியில்லை. தெளிந்த பிறகே மகிழ்ச்சி. ஆனாலுங்கூட மீண்டும் ஒரு சங்கற்பம் செய்துகொள்கின்றாள்.

'சொல்லிய குறியின் இத் தோன்றலே அவன்,
அல்லனேல் இறப்பன் என்றகத்துள் உன்னினாள்'

'இவ்வளவுதூரம் நீலமாலை சொன்னதிலிருந்து அவனாகத்தான் இருக்கவேண்டும். சந்தேகமில்லை. ஆனாலும் ஒரு வேளை இல்லையென்றிருக்குமானால், இனி உயிர் வாழமாட்டேன்' என்பதே அவள் செய்துகொண்ட சங்கற்பம். அத்தனை காதல் இராமன்மீது.

இவ்வாறு முடிகின்றது மூன்றாவது கவிஞருடைய வர்ணனை. ஏனைய் இரண்டு வர்ணனைகளைக் காட்டிலும் இந்த வர்ணனையை வாசிக்கின்றவர்களுக்கு இன்பத்தை ஊட்டவல்ல வேலைப் பாடுகள் சற்று அதிகம் என்பது நன்றாகத் தெரிகின்றது. அல்லாமலும், சீதையினுடைய காதல், அவளுடைய ஏக்கம், இராமனுடைய் காதல், அவனுடைய ஏக்கம், இன்னும் ஜனகனுடைய கவலை, மற்றும் ஊராருடைய் ஏக்கம், பிரார்த்தனை, நிந்தனை ஆகிய எல்லா அம்சங்களுக்கும் உரித்தான ஸ்தானம் எது எதுவோ, எங்கெங்கோ, அதனையெல்லாம், அங்கங்கே, இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு கொடுத்து, சமநிலை தட்டாது வர்ணித்துச் செல்வதாலும் நமக்கு ஈடுபாடு அதிகம் ஏற்படுகின்றது.

இன்னும் காவியப் போக்கிலேயே சம நிலை சித்திப் பதன் மூலம் அழகு துலங்குவதைக் காணலாம்.

இராமாயண காவியத்தில் இராவண வதைக்கு அப்புறம் கதையெல்லாம் அத்தனை சாரமில்லைதான். ஏனென்றால் காவியத்தின் பிரதான அங்கங்களெல்லாம் இராவண வதையாகிய கதிக்கே நம்மை இட்டுச் சென்றன. வதையைக் கண்டதும் நமக்கு அடுத்து வரும் நிகழ்ச்சிகளில் சுவை தட்டத்தான் செய்யும். இராவணனே அசாதாரணமான ஆற்றல் கொண்டவன். வாரணம் பொருத மார்பன். வரையினை எடுத்த தோளன். தாரணி மௌலி பத்துடையோன். சங்கரன் கொடுத்த வாளோன். இன்னும் முக்கோடி வாழ்நாளைப் பெற்றவன். முயன்று பெற்ற பெருந்தவத்தன். எக் கோடியிலும் யாராலும் வெல்லப்படான் என்ற வரத்தைப் பெற்றவன். 'தேவர்க்கும், திசைக்கரிக்கும், சிவனுக்கும், அயனுக்கும், செங்கண் மாற்கும், யாவர்க்கும் மிகையானோன், இணையில்லாத் தனி வீரன்' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவன். அவனோடு போர் புரிகின்றான் இராமன். போரென்றால் சாமான்யமான போரா? இருவரும் புகழி எறிவதனாலே கடலெல்லாம் சகதி. சகதி யெல்லாம் தூசி. இன்னும் தூசியெல்லாந் திடர். அத்தனை ஒளியைப் பரப்புகின்றன. அத்தனை தீயை உமிழ்கின்றன. சூரிய சந்திரர்களும் எதற்கு என்றிகிவிடுகின்றது.

(1)'கருதிய கருதிய புரிவன, கனலும்
பருதியை மதியொடு பருகுவ பகழி.'

(2)'இருள் ஒரு திசை, ஒரு திசை வெயில் விரியும்,
சுருள் ஒரு திசை, ஒரு திசை மழை தொடரும்,

உருள் ஒரு திசை, ஒரு திசை உரும் முரலும்,
மருள் ஒரு திசை, ஒரு திசை சிலை வருடம்'

அப்படி நடக்கின்றது போர்.

"படிமத கரிபரி சிந்தின, பனிவரை இரதம் அவிந்தன.
விடு திசை செவிடுபிளந்தன, விரிகடல் அளறு(து) எழுந்தன,
அடுபுலி அவுணர்தம் மங்கையர் அலர் விழி
அருவி பொழிந்தன,
கடுமலி நெடிய வெனும் சிலை கண கண கண
கணைனுந்தொறும்"

இந்த விதமாக எல்லாம் போர் நடக்கின்றது. இராவணன் ஆசுரப்படை எறிந்தால் இராமன் அங்கிப் படை எறிவான். அவன் நூற்றுக்கோடி தொடுத்தால் இவன் பிறைமுகப்பகழி தொடுப்பான். அவன் மயன்படை விடுத்தால் இவன் கந்தர்ப்பங்கொண்டு தகைவான். அவன் மாயைப்படை விடுத்தால் இவன் ஞானப்படை தொடுப்பான். அவன் தண்டு கொண்டு எறிந்தால் இவன் புகர்முகங்கொண்டு தடுப்பான்.

இவ்வாறெல்லாம் போர் செய்வதை நாமும் கம்பருடன் சென்று கண்டு, அப்பாலே இராவணன் விழுவதையுங் கண்டபிறகு, அடுத்து வரும் நிகழ்ச்சிகளில் சலிப்புத் தட்டத்தான் செய்யும். அவற்றில் சலிப்பு ஏற்படாதபடி செய்யுங் கடப்பாடு கவிஞனுக்கு உரியது. மகா மேதாவியான கம்பர் செய்கின்றார். அதைக் காண்போம்.

இரண்டு நிகழ்ச்சிகளை எடுத்துக்கொள்வோம். ஒன்று ஜானகியைப் பற்றியது. அடுத்தது பரதனைப் பற்றியது.

இராவண வீழ்ச்சிக்குப் பிறகு அனுமனை அழைத்து, சிறையிலிருந்து தேவியைக் கூட்டிவரும்படி

இராமன் அனுப்புகிறான். ஓடோடிச் செல்கின்றான் அசோகவனத்தை நாடி. அங்கே 'தனிமையும் பெண்மையும் தவமுமாய்' காட்சி அளிக்கின்ற தேவியைக் கண்டதும்,

'ஏழை சோபனம் ஏந்திழை சோபனம்
வாழி சோபனம் மங்கல சோபனம்
ஆளியான அரக்கனை ஆரியச்
சூழியானை துகைத்தது சோபனம்'

என்று முழங்கி

ஆர்ப்பரிக்கின்றான்.

'மனையின் மாசு துடைத்த மனத்தினாள்' அத்தனை விருத்தாந்தங்களையும் கேட்டு ஆனந்தத்திலே மயக்கெய்திவிட்டாள். ஒன்றும் சொல்ல நாவெழவில்லை.

"பாக்கியம் பெரும் பித்தும் பயக்குமோ" என்று அவளே கேட்கின்றாள். அப்பால் அனுமனை அடுத்து வீடணனும் அவளை அழைக்க வருகின்றான். வான மகளிர் அனைவரும் வந்து அவளுடைய பெண்மை எழிலைத் திருத்துகின்றார்கள். சகல மங்களமும் நிறைந்தவளாக நாயகனை நாடி வருகின்றாள்.

"விழுதல், விம்முதல், மெய்யுற வெதும்புதல், வெருவல்,
எழுதல், ஏங்குதல், இரங்குதல், இராமனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல், துயருழந்(து) உயிர்த்தல்,
அழுதலன்றி மற்றயலொன்றும் செய்குவ(து)"

அறியாதவளாக ஆரியன் வரவு நாடியே அருந்தவம் ஆற்றிக்கொண்டிருந்த அன்னையை,

"சுருதி நாயகன் வரும் வரும் என்கின்ற துணிவால்
கருதி [1] மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற
கண்ணளாகக்"

கவன்று கொண்டிருந்த கற்பின் கொழுந்தை,

"துயில் எனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்து
வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா"

மெய்யளாக வேதனைத் தீயில் தோய்ந்து பொசுங்கிய மென் கொடியை,

"[2] தேவுதெண்கடல் அழுதுகொண்டு [3] அனங்கவேள் செய்த
ஓவியம் புகை உண்டதே ஒக்கின்ற"

உருவினளாக, நாயகன் வரவுகருதி நாளும் பொழுதும் நைந்து, உருகி, நலிவுற்று நோன்பு செய்த நாயகியை,

கடல் புகப் பெருக்கிய கண்ணீர் வெள்ளத்தால் ஆடை நனையவும், உடலையும் உள்ளத்தையும் உருக்கும்படி எழுந்த கவலை வெப்பத்தால் ஆடை புலரவும், இரவு பகல் அறியாது நாயகன் வரவுக்கே ஏங்கி ஏங்கி இடிந்த மனத்தோடு தவங்கிடந்த இலக்ஷியப் பெண்மையை,

இன்னும்,

(1)"[1] இற்பிறப்(பு) என்பதொன்றும் [2] இரும்
பொறைஎன்பதொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக்
கண்டேன்"

---

1. மாதிரம்-பெரியதிக்குகள். 2. தேவுதெண்கடல்-பாற்கடல், 3. அனங்க வேள்-மன்மதன்.

(1)இற்பிறப்பு-உயர்ந்தகுடிப் பிறப்பு, (2)இரும்பொறை-மிகுதியான பொறுமை.

என்பதாகவும், இராமனே,

(2)"உன் பெருந்தேவி என்னும் உரிமைக்கும்
உன்னைப்பெற்ற
[3]மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும்
மிதிலைமன்னன்
தன்பெருந் தனயை என்னுந் தகைமைக்கும்
தலைமை சான்றுள்
என்பெருந் தெய்வம்! ஐய, இன்னமும் கேட்டி".

(3)"உன்குலம் உன்னதாக்கி உயர் புகழ்க்கு
ஒருத்தி ஆய
தன்குலம் தன்னதாக்கி, தன்னை இத் தனிமை
[4]செய்தான்
வன்குலம் [5]கூற்றுக்கீந்து (அவ்) வானவர்
குலத்தை வாழ்வித்(து)
என்குலம் எனக்குத் தந்தாள்"

என்பதாகவும் அனுமனால் பாராட்டப் பெற்ற அருந்ததிக் கற்பினாளே, துளிகூடக் கருணை காட்டாது இராமன் நிந்திக்கின்றான்.

"என் முன் நிற்பது உன்னை நான் விரும்பி ஏற்றுக்கொள்வேன் என்ற நம்பிக்கையினாலா? ஒழுக்கக் கேடாக ஊனைத்தின்றிருப்பாய்; கள்ளைக் குடித்திருப்பாய்; இன்னமும் உயிரைப் போக்காமல் என்முன் நிற்க அல்லவா செய்கின்றாய்? பெண்மை, பெருமை, பிறப்பு இன்னும் கற்பெனும் திண்மை, ஒழுக்கம், தெளிவு, சீலம், உண்மை ஆகிய நலன்களெல்லாம் உன்னால் கெட்டொழிந்தன. வள்ளன்மையில்லா மன்னவன் புகழ் போல் மாய்ந்தொழிந்து மறைந்தன" என்று இவ்வாறு நிந்திக்கத் தொடங்குகின்றான்.

---

(3) மன்பெரு மருகி—தசரதனுடைய பெருமைவாய்ந்த மருமகள். (4) செய்தவன் இராவணன், (5) கூற்று—எமன்.

(1)"ஊன்திறம் உவந்தனை, ஒழுக்கம் பாழ்பட
மான்டிலே முறைதிறம்பு அரக்கன் மாநகர்
ஆண்டுறைந் தடங்கினை, அச்சந்தீர்ந்திவண்
மீண்டதென்? நினைவெனை? விரும்பும் என்பதோ?"

(2)"பெண்மையும், பெருமையும், பிறப்பும், கற்பெனுங்
கிண்மையும், ஒழுக்கமும், தெளிவும், சீர்மையும்,
உண்மையும் நீயெனும் ஒருத்தி தோன்றலால்,
வண்மையில் மன்னவன் புகழில் மாய்ந்ததால்"

என்று இவ்வாறு சொல்வதைக் கேட்கும்போது நமது இதயமே உடைந்து விடும் போலிருந்தால் ஜானகிக்குக் கேட்கவா வேண்டும்? கேட்டமாத்திரத்திலேயே,

'இற்றது போலும் யான் இருந்து பெற்றபே(று)' என்று மனம் இடிந்தவளாக,

(1)"மாருதி வந்தெனைக் கண்டு, வள்ளல்நீ
சாருதி ஈண்டெனச் சமையச் சொல்லினன்;
யாரினும் மேன்மையான் இசைத்ததில்லையோ
சோரும் என்னிலே; அவன் தூதும் அல்லனே?

(2)"பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்கு கைத்தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லிபோல் அனைத்தும் நோக்கினும்
மங்கையர் மனநிலை உணர வல்லரோ?"

என்று இவ்வாறு பதில் சொல்லிவிட்டு,

"சாதலில் சிறந்ததொன்றில்லை தக்கதே;
வேத நின்பணி (அது) விதியும் என்றனள்"

இவ்வாறு முடிகின்றது அவளுடைய பதில். அப்பாலே இலட்சுமணனை அழைத்து நெருப்புமூட்ட வேண்டுகின்றாள். விம்மி விம்மி அழுது கொண்டு இலட்சுமணன் நெருப்பு மூட்டுகின்றான். இராமன் அசையவே இல்லை. ஆனால் ஜானகி தீயை வலம் வரும்

பொழுது, வானம் ஓலமிட்டது உலகம் ஓலமிட்டது. உயிர்த்தொகுதிகள் எல்லாம் ஓலமிட்டன.

"இந்திரன் தேவியர் முதல ஏழையர்
(பெண்கள்)
அந்தரவானில் (நின்று) அயற்றுகின்றனர்
செந்தளிர்க் கைகளால் சேயரிப்பெருஞ்
சுந்தரக் கண்களீர எற்றித் துள்ளினர்"

சேயரி—சிவந்தவரி

இன்னும் நான்முகன் நடுங்கினன். ஆதிசேடன் தலை தாழ்ந்தான். சூரிய சந்திரர்கள் திசைமாறினர். கடல்க ளெல்லாம் ஏங்க ஆரம்பித்தன. அத்தனை தோற்றங் களும் அவளுடைய மாசற்ற தன்மைக்குரிய சாட்சி யங்கள். ஆனலும் இராமன் அசையவில்லை. என்ன மறக்கருணை!

"மனத்தினல் வாக்கினல் மருவுற்றேன் எனில்
சினத்தினல் சுடுதியால் தீச்செல்வா"

என்ற பிரார்த்தனையோடு, 'வனத்துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கிவிட்டு இறங்கி விடுகின்ருள். இதுவே அவளுடைய தவத்தின் பயன்.

அரிஸ்டாட்டில் கூறிய (Katharsis) 'கத்தார்ஸிஸ்' அதாவது, 'சித்தசுத்தி' என்பது இதன்மூலம் நமக்குக் கைவருகின்றது.

இந்த ஒரு நிகழ்ச்சியானது காவியப் போக்கைத் தளரவிடாது, சுவைப்படுத்தியும் சமப்படுத்தியும் கொண்டு செல்வதால் நாம் அழகைக் காண முடி கின்றது.

இன்னும் இம்மாதிரியே பரதனுடைய நிகழ்ச்சியும். விரிவு அஞ்சி விடுக்கின்றேன்.

VII

இனி நாம் பார்க்க வேண்டியது எதனால் கலை ஆக்கங்களில் நமக்கு அழகு புலப்படுகிறது என்ற விஷயமாகும். சமகலை ஒருபக்கம் இருக்கட்டும். அது ஒரு அம்சம். இப்பொழுது நாம் மூலத்தையே நாடிப் போகின்றோம்.

எதனால் நமக்கு அழகு புலப்படுகிறது என்ற கேள்விக்கு இலேசாக விடை கூறிவிடலாம். மனிதர்களால் இருக்கிற காரணத்தால். காலஞ்சென்ற சித்திரக் கலைஞராகிய இரவிவர்மாவின் வாழ்க்கையில் நிகழ்ந்ததாக ஒரு சம்பவம் வழங்கப்பட்டு வருகிறது. அது எத்தனை தூரம் உண்மையோ ஒன்றும் தெரியாது. ஆனாலும் சம்பவம் ருசிகரமாக இருப்பதனாலும் இந்த இடத்திற்கு வெகு பொருத்தமாக இருப்பதனாலும் அதனை இங்கே குறிப்பிடுகின்றேன்.

அந்நிய நாட்டிலிருந்து வந்த வேறொரு சித்திரக் கலைஞன் இரவிவர்மாவின் கலைமாட்சியில் ஈடுபட்டவனை அவரை ஒரு படம் வரைந்து தரும்படி கேட்டான். அவரும் அவனுடைய விருப்பத்தை மதித்து ஒரு படம் வரைந்து திரையிட்டு வைத்திருந்தார். பின்னர் இருவரும் காணவே திரை நீக்கப்பட்ட சற்று நேரத்திற்குள், அநேக பறவைகள் வந்து கொத்துவதும் ஏமாந்து செல்வதுமாக இருந்ததாம்.

நல்ல ஒரு சம்பவம். அதன்மூலம் நமக்கு ஒரு உண்மை வெளியாகின்றது. சற்று முன்னே பார்த்தோம், மனிதர்களால் இருக்கிற காரணத்தால் நமக்கு அழகு தென்படுகிறது என்று. அந்த உண்மையை நன்கு உணர்ந்துகொள்ள மேலே கூட்டிய சம்பவம் துணை

செய்கின்றது. எப்படி? மனிதனுக்கு உண்டான பகுத்தறிவு மாட்சியும் கற்பனைத் திறனும் மற்ற ஜந்துக்களுக்கு இல்லை. வெறும் தோற்றத்தைத் தோற்றமென்று மதிக்கும் பகுத்தறிவு அவைகளுக்குக் கிடையாது. நமக்குத்தான் அதிகம். உண்மைக்கு நிகரான ஒரு தோற்றம் எப்படி உருவாகிவிட்டது என்று புத்தி கொண்டு யோசனை செய்வதன் மூலம் வியப்பும், தோற்றம் பொருத்தமாக இருப்பதனால் திருப்தியும் நம் பால் ஏற்படுகின்றன. ஆகவேதான் நம்மிடம் அழகுணர்ச்சி உருவாகின்றது. வியப்பும் திருப்தியும் அழகுணர்ச்சியைத் தூண்டுகின்றன. இன்னும் பகுத்தறிவு கற்பனை ஆகிய அம்சங்களெல்லாம் அழகுணர்ச்சியை வளர்க்கின்றன. அறிவைக் கொடுத்த கடவுள் அழகுணர்ச்சியை மட்டிலும் மறுத்துவிட்டால் உலகமே நரகமாகிவிடும். திருப்தி, மனச்சாந்தி போன்றவை மனித அனுபவத்தின் எல்லைக்குள்ளே தலை காட்டவே மாட்டா. அப்படியானால் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதைச் சொல்லவே வேண்டாம்.

வியப்பு திருப்தி ஆகிய இரண்டினையும் ஊட்டுவதனால் மட்டிலும் நமக்கு ஈடுபாடு ஏற்பட்டுவிடவில்லை. இன்னும் பல காரணங்களும் உண்டு. அவற்றுள் ஒன்றைப் பற்றி 'அசலும் நகலும்' என்ற தலைப்பிலுள்ள வியாசத்தின் இறுதிப் பகுதியில் விரிவாகப் பார்த்துவிட்டோம். விஷயத் தொடர்ச்சிக்காக வேண்டி அதன் சாரத்தை மட்டிலும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

*கச்சேரிவேலை பார்த்துவிட்டு மிக்க அலுப்போடு ஒருவன் வீடுவந்து சேர்கின்றான். மனைவி அவனுடைய

*இதுவிஷயம் ஏதோ ஒரு பத்திரிகையில் வெளியானதாக எனது நண்பர் (A.I.R.) 'சோமு' சொன்னார்.

சிரமத்தை நீக்கும் பணியை மறந்து, அதுவேண்டும் இதுவேண்டும் என்று சொல்லி நிர்ப்பந்தப்படுத்துகிறாள். போதாக்குறைக்கு அன்றைய தபாலில் வந்த வருத்தகரமான செய்தியையும் குறிப்பிட்டு அவன் மனம் வேதனை அடையும்படி இரண்டொரு வார்த்தைகளையும் சொல்கின்றாள். பிள்ளைகள் வந்து சில பண்டங்களை வாங்கித் தரும்படி சட்டையைப் பிடித்து இழுக்கின்றன. 'என்ன அநியாயம், குடும்பத் தொல்லை பொறுக்க முடியவில்லையே. சற்றுநேரம் ரேடியோவைத் திருப்பி வைத்து ஏதாவது சங்கீதத்தைக் கேட்போம்' என்று எண்ணியவனாக ரேடியோவைத் திருப்புகின்றான், அங்கும் 'குடும்பத் தொல்லை' என்ற நாடகமே நடிக்கப்படுகிறது. ரசமாகக் கேட்கின்றான். நிஜ வாழ்க்கையிலுள்ள குடும்பத் தொல்லையில் கசப்பைக் கொண்டவன் நடிப்பாக வெளிவரும் குடும்பத் தொல்லையில் ஈடுபடுகின்றான். எதனால் ஈடுபடுகின்றான் என்றால், அதில் கலந்துகொள்ளவேண்டிய கர்ம நெருக்கடியில்லை. அல்லாமலும் கசப்பின் காரணமாக வீட்டிலுள்ள தொல்லையைப் பார்க்க மறுத்து, அதன் பயனைத் தெரிந்து கொள்ளாது விடுத்த நஷ்டத்தை, நடிப்பினைக் கவனிப்பதன் மூலம் ஈடு செய்துகொள்ளலாம். அதற்குரிய வாய்ப்பு அந்த நடிப்பினுள்ளே புதைந்து கிடக்கின்றது. ஆகவே கலையில் காணும் அழகின் மர்மம் யாதென்றால், கலை அழகு கர்ம நெருக்கடி அற்றது. வீட்டு வாழ்க்கையின் ஒரு அங்கமாக அரிச்சந்திர மயானகாண்டம் நடப்பதென்றால் தாங்காது. ஆனால் மேடை நடிப்பாக வெளிப்படுவதென்றால் தாங்கும். இன்னும் இன்பமாகவும் இருக்கும். எதனால் என்றால் கர்ம நெருக்கடி இல்லாததினால்; ஏதோ ஓரிடத்தில்

ஷேக்ஸ்பியர் எழுதிய ஓதெல்லோ நாடகம் நடைபெற்ற தாம். ஓதெல்லோ தனது மனைவியைக் கொலை செய்யும் கட்டம் வந்தபோது "அடேய் கருத்தப் பிசாசே, உன் மனைவி அபலை என்பது உனக்குத் தெரியாதாடா, பாவி" என்று ஒரு பெண் கத்தினாளாம். அப்படி யாரே னும் புலம்பினால் நிஜ வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் உண்டான பேதம் தெரியாமல் புலம்பியதாகவே கொள்ளவேண்டும்.

நிஜவாழ்க்கையில் ஒரு தசரதனுடைய மரணம் சகிக்க முடியாத காட்சியாகப் போய்விடும். ஆனால் காவியத்தினுள் மரணமும் இன்ப அனுபவமாகவே தோன்றும்.

இப்பொழுது தசரத மன்னனுடைய மரணவேதனை யைப் பார்ப்போம்.

"மன்னனே வனம் ஏகு என்று சொல்லு முன்னம் நீயே போ என்று சொல்லிவிட்டாயா, பாவி" என்று வசிஷ்டன் கைகேசியை நிந்திக்கின்றான். அந்த வார்த்தை மரண நிலையிலிருக்கும் தசரதனுடைய காது களில் பாய்கின்றது. கோப வெந்தீப் பொங்க மனை வியைத் திட்டுகின்றான். கல்லும் உருகும்படி வருகின் றது ஒவ்வொரு வார்த்தையும். ஒரே தொடராக அடுக் கிப் பார்க்கும்போதுதான் அவனுடைய இதயத் துடிப் பும் மரண வேதனையும் நன்றாகத் தெரியும். கைகேசியைத் திட்டுகின்றான். அத்தோடு தனது பிள்ளைப் பாசத்தை யும் தெரிவிக்கின்றான். இன்னும் பிள்ளைப் பாசத்தின் காரணமாகவும், ஒருவேளை இராமன் மனம் திரும்ப மாட்டானா என்ற நம்பிக்கையின் காரணமாகவும் போகத் துடித்துக் கொண்டிருக்கும் உயிரை இறுகப் பிடித்துக் கொண்டு துடிக்கின்றான். மரணநிலை ஓரளவு சகித்துக்

கொள்ளக்கூடிய காட்சி. ஆனால் மரண அவஸ்தை சகிக்க முடியாத ஒன்று. நிஜ வாழ்க்கையில் என்ருல், ஒன்று, கண்ணை மூடிக்கொள்வோம், அல்லது எங் காவது போய் மறைந்துகொள்வோம். சில சமயங்களில் இந்த அவஸ்தையைத் தாங்குவதற்குப் பதிலாக நாமே இறந்துவிட்டாலும் நல்லது என்றுகூட எண்ணிவிடு வோம். ஆனல் இப்பொழுது நாம் காணப்போகும் மரண அவஸ்தை காவியத்திலுள்ள மரண அவஸ்தை. காண்பதற்கென்றே உரியது. காண்பதற்கே உரியது என்றிருக்கும்போது, கர்ம நெருக்கடியற்ற மனே நிலே யோடு, ரஸானுபவத்தைப் பெறுவதிலேயே நமது ஈடுபாடு செல்லும். அவ்வாறு ஈடுபாடு நிகழும்போது எத்தனே கலே அழகோடு விஷயம் வெளியாக்கப்படு கிறது என்பதையும் கவனிப்போம். அப்படிக் கவனிப் பதன் மூலம் நமது அழகுணர்ச்சியும் திருத்தமடைகின் றது. அதோடு ரசமற்றதும் கலேப்பிரதேசத்தில் அடி எடுத்து வைக்கும்போது ரசமுள்ளதாக மாறிவிடும் என்ற உண்மையும் நமக்குத் தெளிவாகிவிடுகின்றது.

தசரதனுடைய மரண அவஸ்தையை இனிப் பார்ப் போம். வசிஷ்டனுடைய நிந்தனேமொழி செவியில் பட்ட தும் கைகேசியை மனங் கொதித்துத் திட்டுகின்ருன். மற்றும் அதைத் தொடர்ந்து இராமனிடம் கொண்ட காதலேயும் விரிக்கின்ருன். அத்தனேயும் அடுக்காகப் பார்த்தால்தான் சுவை தெரியும்.

(1) "பாவி நீயே வெங்கான் படர்வாய் என்(று) என் உயிரை
ஏவினையோ, அவனும் ஏகினனே என்ருன்."

(2) "பண்டே எரிமுன் உன்னேப் பாவி, தேவியாகக்
கொண்டேன் அல்லேன் வேறோர் கூற்றந் (தமன்)
தேடிக்கொண்டேன்."

(3) "பழிக்கு நாணுய், மாணுப்பாவி, இனியென் பல; உன்
கழுத்தின் நாண் உன்மகற்குக் காப்பின் நாணும்
என்றான்."

(4) "கொன்னேன் இன்றே, இவள், என் தாரம் அல்லள்
துறந்தேன்;
மன்னே ஆவான் வரும்அப் பரதன் தனையும் மகன்
என்(று)
உன்னேன் முனிவா இவனும் ஆகான் உரிமைக்
கென்றான்."

இனி இராமனைக் குறித்து ஏங்குகின்றான்.

(1) "துணைவா துணைவா என்றான் தோன்றல் தோன்றல்
என்றான்"

(2) "உடைமா மகுடம் புனையென்றுரையா உடனே
கொடியேன்
சுடைமா மகுடம் புனையத் தந்தேன் அந்தோ என்றான்"

(3) "என்னின் முன்னம் வனம்நீ அடைதற்கு
எளியேன் அல்லேன்
உன்னின் முன்னம் புகுவேன் உயர் வானகம்
யான் என்றான்',

(4) "தகுதற் கொத்த ஜனகன் தையல் கையைப்பற்றி
புகுதக் கண்ட கண்ணுல் போகக்காணேன் என்றான்"

(5) "பொற்றேர் அரசே, தமியேன் புகழே, உயிரே,
உன்னைப்
பெற்றேன் அருமை அறிவேன் பிழையேன்
பிழையேன் என்றான்"

(6) "கள்ளக் கைகேசிக்கே உதவிப்புகழ் கைக்கொண்ட
வள்ளல் தனம் என்உயிரை மாய்க்கும் மாய்க்கும்
என்றான்"

இவ்வாறு நெஞ்சபிளக்கும் மொழிகளில் தசரத னுடைய மரண அவஸ்தையை வர்ணிக்கின்றார்.

இனி அவனுடைய இறுதி நிலை வர்ணிக்கப்படுகின்றது.

"நந்தாவிளக்கனைய நாயகன், நானிலத்தோர் தந்தை, தனி
அறத்தின்தாய், தயாநிலை, புயவலர்தம் புரவலன்
பொய்ப் பகை, மெய்க்கு அணி புகழின் வாழ்வு"

என்றெல்லாம் புகழப் பெற்ற தசரதன் இதோ பிள்ளைப் பாசத்தால் தேனடைந்த சோலைத்திருநாடு கைவிட்டு வானடையப் போகின்றான்.

தேரிலே கொண்டு மூவரையும் கானகம் விடுத்த சுமந்திரன் வெறுந்தேரை உருட்டிக் கொண்டு வருகின்றான். தசரதன் மயங்கிக் கிடக்கின்றான். அருகே மகரிஷி வசிஷ்டன் நிற்கின்றான். தேரைக்கண்ட மக்கள் "இதோ இரதம்வந்து விட்டது, வந்துவிட்டது" என்று பெருமுழக்கம் செய்தார்கள். உடனே

(1) "வரதன் வந்துற்றனென்ன மன்னனும்
மயக்கந் தீர்ந்தான்
விரதமாதவனைக் கண்டான் வீரன் வந்தன்றே
என்றான்"

(2) "இல்லைஎன்(று)உரைக்கலாற்றான், ஏங்கினன்
மூனிவன் நின்றான்;
நல்லவன் முகமே நம்பி *நடந்திலன் என்னும் மாற்றம்
சொல்லலும் அரசன் சோர்ந்தான் துயருறு
மூனிவன் நானிவ்
அல்லல் காண் கில்லேன் என்ன ஆங்கு நின்(று)
அகலப்போனான்."

போகின்ற உயிரை இன்னும் பிள்ளைப் பாசம் பிடித்து நிறுத்துகின்றது. சுமந்திரனைப் பார்த்து "இராமன் எட்டப் போய்விட்டானா அல்லது கிட்டத்தான் போ

* திரும்பவில்லை.

கின்றனை'' என்று கேட்கின்றன். எட்டப்போய் விட்டான் என்று சுமந்திரன் சொல்கின்றன்.

> ''நாயகன் பின்னுந் தன்தேர்ப் பாகனேநோக்கி, நம்பி
> சேயனே அனியனே என்றுரைத்தலும், அனையான், செய்ய
> வேய்உயர் கானந் தானுந் தம்பியும் மிதிலைப் பொன்னும்
> போயினன் என்றன், என்றபோழ்தத்தே ஆவி போனன்''

இவ்வாறு சித்திரிக்கப்படும் சோகச் சித்திரத்தின் பயனாக நமது இதயத்திலும் சோகம் பிறக்கின்றது. அத்தோடு ஆனந்தமும் உதிக்கின்றது. நன்றாக நடிக்கப்படும் அரிச்சந்திர மயானகாண்ட நாடகத்தைக் கொட்டகையினுள் உட்கார்ந்து பார்க்கும்போது அழுவோம். ஆனாலும் வெளியே வரும்பொழுது மகிழ்வோம். ஏனென்றால் கலை ஆக்கமானது நமக்கு இறுதியில் இன்பத்தையே தருகின்றது. இந்த இன்பத்தைத் தூண்டுவதும் கலை அழகுதான். ஆகவேதான் நாம் கலைகளில் ஈடுபடுகின்றோம்.

அல்லாமலும் கலை அழகில் ஈடுபடுவது எதனால் என்றால், என்றும் அது அழகுடையதாக இருந்து கொண்டே யிருப்பதனால். காவியமானாலும் சரி, ஓவியமானாலும் சரி, கானமானாலும் சரி, கவினிய சிற்பமானாலும் சரி, படிக்கும்போதெல்லாம், பார்க்கும்போதெல்லாம், இன்பம், இன்பம், இன்பமே இன்பம்.

நமது சுயநலமான இச்சை வெறுப்புக்கள், இன்னும் விளங்காத் தன்மையினால் கற்பித்துக்கொண்ட சித்தாந்தங்கள் ஆகிய இவற்றின் சாயத்தை மனத்தில் ஏற்றிக்கொண்டு பார்ப்பதன் மூலம் உண்மை அழகைக் கண்டுவிட முடியாது. அழகு உண்மைதான் என்பதை ஒப்புக்கொண்டாலும் அழகினைக் காண்பதென்பது ஒரு

தவம், ஒரு உபாசனை. அவரவர்கள் தனித்து முயன்று உருவாக்கிக் கொள்ளக்கூடிய பண்பு. எல்லோருக்கும் எல்லாவற்றிலும் ஒரு படித்தான ஈடுபாடு ஏற்பட்டு விடும் என்று சொல்வதற்கில்லை. ஸ்ரீமான் ஜினராஜதாஸர் தாஜ்மகாலைப் பார்க்கின்றார்.

காலையில் ஒருஜோதி, கடும்பகலில் ஒருஜோதி,
மாலையில் ஒருஜோதி, வானிலவில் ஒருஜோதி.

எத்தனைவிதத் தோற்ற விசித்திரங்கள்! இன்னும் வனப்பும் விரிவும் வாசல் அமைப்பும் பொருந்தியிருக்கிற நீர்மையைப் பார்த்தால், கானரூபம் பெற்ற கனக மாளிகையாகவே தோன்றுகின்றது என்கிறார். மகர்ன் கதேயும் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றைப் பார்த்துவிட்டு 'Frozen Music' என்றே கூறுகின்றார். மேலே குறிப்பிட்ட தாஜ்மகாலை ஸ்ரீமான் ஆல்டஸ் ஹக்ஸ்லி பார்த்துவிட்டு இதில் என்ன விசித்திரம் இருக்கிறது என்று தள்ளிவிட்டார். ஆகவே அழகு நாட்டம் என்பது அவரவர்களுடைய மனப் பக்குவத்தைப் பொறுத்தது. என்றாலும் அதை வளர்ப்பது நமது கடமை. ஒரு கதை சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

பாரசீகத்தை ஆண்டுவந்த ஒரு மன்னனுடைய மனைவி இறந்துவிட்டாள். இறந்தவளுடை விருப்பத்தை மதித்து ஒரு கல்லறை கட்டினான். அப்பாலே அதை அழகுபடுத்தும் நோக்கத்தோடு கனத்த மாளிகை ஒன்றை எழுப்ப நினைத்து, வேலையைத் தொடங்கிவிட்டான். நாளும் நாளும் மாளிகைக்கு அழகு நலனே ஏற்றிக்கொண்டே சென்றான். ஒருவாறுகக் கட்டிடம் முடிந்தது. கல்லறையை அழகுபடுத்த எழுந்த கட்டிடம் கல்லறையின் காரணமாகாவே அழகுகுன்றுவதை

உணர்ந்தான். உடனே கல்லறையையே பெயர்த்து எடுத்துவிட்டான். அழகுக்காக வேண்டி அவன் செய்த தியாகம் அது. இவ்வாறே நாமும் தியாகம் செய்து அழகுணர்ச்சியை வளர்க்கவேண்டும்.

மகான் அரவிந்தர் நமக்கு வழிகாட்டுகின்றார். ஆரோக்கியமான இச்சை வெறுப்புக்களின் சாயம் கலவாது, திரிகரணங்களிலுமே பற்றற்ற தன்மை படிய வேண்டும். அவ்வாறு படியுமாயின் தப்புத் தவறுன, அல்லாமலும், நாலுவிதமான கலை மேவிய ரஸநீர்மைகளெல்லாம் உதிர்ந்து மறைந்துவிடும். அந்நிலையில் உயிரியக்கத்தோடு பின்னிக்கிடக்கின்ற பேரானந்தத்தைச் சுவைக்க முடியும் கலையும் கவிதையும் இவ்விதமான ஆனந்தத்தை அனுபவிக்க எவ்வளவோ துணை செய்கின்றன. சோகம், பயம், கசப்பு, வெறுப்பு ஆகிய ரஸங்களிலெல்லாம் நம்மால் ஈடுபட முடிகின்றது. எதனால் என்றால், பற்றின்மை, கர்ம நெருக்கடி இன்மை ஆகிய இவற்றால். இன்னும் கலையானது அழகின் மூலம் நம்மைப் பரிசுத்தம் அடையச் செய்கின்றது என்றும் அவர் கூறுகின்றார். அது முற்றிலும் உண்மைதான். கலை ஈடுபாட்டின் காரணமாக உணர்வு ஓங்குகின்றது. உள்ளம் விரிகின்றது. எதையும் ஏற்றிட்டுப் பார்க்கும் தெம்பு சித்திக்கின்றது. பக்குவம் வாய்க்கின்றது. அதிகம் சொல்வானேன்? பண்பாடே உருவாகின்றது. இத்தனை இலாபங்களுக்கும் மூல காரணம் கலை அழகுதான். நிஜவாழ்க்கையானது இத்தனை இலாபங்களையும் குப்புறத்தள்ளி, கர்ம நெருக்கடிப் படுகுழியில் நம்மை வீழ்த்தி 'ஏன் பிறந்தோம், ஏன் பிறந்தோம்' என்று நம்மை ஏங்கவைக்கலாம். ஆனால் ஒன்றை நாம் கவனிக்கவேண்டும்.

கலையில் காணப்படும் அழகு சுவைப்பதற்கென்றே சிருஷ்டிக்கப்பட்ட அழகு. ஆக்க அழகு. அதனிடத்து ஈடுபடுவதன் மூலம் அதனை ஆக்கியவனிடமும் ஈடுபாடு பரவும். நாளும் நாளும் ஈடுபாடு அழுத்தம்பெற்று வந்தால், அவனுடைய இதயத்திற்குள்ளேயே புகுந்து விடலாம்.

அவன் வாழ்க்கையை எவ்வாறு கண்டானோ அவ்வாறு நாமும் காணலாம். அவன் படைத்துவிட்ட கண்ணோடு நமது வாழ்க்கையைப் பார்க்கலாம். அவன் தந்த தத்துவப் படைக் கலங்கொண்டு நமது வாழ்க்கைப் போரில் இறங்கலாம். ஏமாற்றம் அடையும் நேரும் போதெல்லாம் அவன் படைத்துத் தந்த திருஷ்டியே நம்மைத் தலையெடுக்கத் தூண்டும்.

"அறம்துணை யாவதல்லால் அருநரகு அமையநல்கும்
மறம்துணையாக மாயப் பழியொடும் வாழமாட்டேன்"
"மறந்து நன் புகழலால் வாழ்வுவேண்டலன்"

என்று எண்ணும்படியான உள்ளத் தெம்பே ஏற்படும்.

"போதுக்கும் பாட்டு பொழுதெல்லாம் சங்கீதம்
யாதுக்கும்-அஞ்சோம் அவனியெலாம் எம்உடைமை
சூதுக்கும் வஞ்சனைக்கும் சூழ்ச்சிக்கும் மார்ந்தர்செயும்
வாதுக்கும் மாமருந்து யாங்கள் செயும் வண்கவிதை"

என்னும் மந்திரத்தின் மர்மத்தை அவன் நமக்கு உணர்த்துகின்றான். அவன் உணர்த்தும் மந்திரத்தின் தெம்பு கொண்டு,

"பழங்காலம் நிகழ்காலம் படைக்கும்; நிகழ்காலம்
வருங்காலம் வருக்கும்; வளமையெலாம் கொணர்ந்திடுவோம்,
காலத்தால் கடந்த காட்சிகளைப் போற்றி செய்து,
காலம் கழித்த கசடெல்லாம் விட்டுவிட்டோம்,

இறவாமல் இன்றுமுள இன்பங்கள் போற்றிடுவோம்
இறவாத புகழுடைய இன்பங்கள் படைப்போமே''

என்று நாமே நமக்குச் சாந்தி தேடிக்கொள்ளலாம்.

இதுகாறும் கவிதை கலை ஆகிய இவற்றில் காணப்படும் அழகின் மர்மங்களையும், அந்த அழகில் ஈடுபடுவதன்மூலம் நமக்குள்ள இலாபம் என்ன என்பதையும் ஓரளவு பார்த்தோம்.

இறுதியாக அழகுபற்றிய ஒருசில பொதுப்படையான உண்மைகளைத் தெரிந்துகொண்டு முடிவுசெய்துகொள்வோம்.

அழகை நாம் எதற்காக விரும்புகின்றோம்? ஆனந்தம் அடையத்தான். வேறு எதற்கும் இல்லை. கண்ட இன்பம் கோடி என்றால் காணுத இன்பம் கோடானுகோடி, கண்டது இன்பமென்றால் காணுதது மிகப் பேரின்பம் என்றெல்லாம் எண்ணும்படியான பண்பு மனத்துக்குள் எப்படியோ ஏறிவிட்டது.

''உதய வெள்ளத்து உச்சியில் நீந்தவும்,
வண்ண மேகமாய் வானில் பாயவும்,
வானம் பாடியாய்க் கானம் பாடவும்,
தளைகள் நீங்கித் தாவிப் பறக்கவும்,
மீனின விளக்காய் மினுக்கிச் சிரிக்கவும்,
வான்விற் பாலத்து வான்கடல் தாண்டவும்''

இந்த மனதுக்குள் ஆசை எழுகின்றது. நொடிக்கு நூறு கனவுகள், நொடிக்கு நூறு தோல்விகள் ஆகிய அனுபவத்தில் புதையுண்டு நைகின்றது. சாந்தி வேண்டுமெனில், அழகுணர்ச்சியை வளர்க்கவேண்டும். அழகு என்பது புறத்திலிருந்து வரும் பொருளன்று. ஏனென்றால்,

'கரும்பும் வேம்பாகும்; வேம்பும் கரும்பாகும்;
திரும்பும் நிலைமாறித் துடியான அழகுதரும்.'

ஆகவே அழகு என்பது அகத்தே உருவாகும் பாவனை. அதனை வளர்ப்பது ஒரு தவம். ஓர் உபாஸனை. அது எங்கும் நிறைந்த பரவஸ்து. அதனைக் காணப் பழக வேண்டும், உணர முயலவேண்டும். நாடிச்சென்றால் ஓடிவரும். கோடிய உள்ளங்கொண்டால் ஓடி ஒளிந்து கொள்ளும். தேடி வருவார்க்கெல்லாம் தெவிட்டாத இன்பம் நல்கும். பக்தியை ஊட்டும். தியாகத்தை வளர்க்கும். கொடுக்கத் தூண்டும். கொள்ள மறுக்கும். தோற்றத்தில் இல்லை அழகு. ஆனால் தோற்றத்தைத் தூண்டி நிற்கும் பாவத்தில். கண்ணில் இல்லை அழகு. ஆனால் கண்ணைத் தூண்டி நிற்கும் கருத்தில்.

(1) "மதுவை வேண்டினாய், மகிழ்ச்சி வேண்டினாய்;
மதுவீ, மதுவின் மகிழ்ச்சி நீ—அறியாய்
கையகக் காசைக் கடன்எனக் கொண்டாய்."

(2) "காதலில் படைத்தான் காசினி எல்லாம்,
காதலின் விளக்கமே காசினி விளக்கம்."

(3) "காதலே உயிராம், காசினி உடலம்,
உயிரிலா உடலால் உறுபயன் யாதோ?"

(4) "காதலே மதுவாம், காசினி கிண்ணி;
காசினிக் கிண்ணியில் காதலைப் பருகுவோம்."

(சு. து. சு. யோகி.)

துன்பம்

துன்பம் என்பது பெரும்பாலும் யாருக்கும் பிடிக்காத ஒரு அனுபவம். அதனிடத்துக் காதல் நிகழுமேயானால், அதனைத் தத்துவக் காதல் என்று கொள்ள வேண்டுமே தவிர, வேறு விதமாகக் கொள்ளமுடியாது. என்னுடைய நண்பர் ஒருவரை ஒரு நாள் தேள் கொட்டிவிட்டது. நீதி மன்றத்திலுள்ள நூல் நிலையத்தில் வைத்து நிகழ்ந்தது மேலே குறிப்பிட்ட சம்பவம். உடனே விட்டுக்குத் திரும்பிவிட்டார். நேரம் ஆக ஆக அவரால் பொறுத்துக்கொள்ள முடியாத அளவில் வலியானது அதிகரித்துக்கொண்டே வந்தது. நண்பருடைய மனைவியார் உடனே மந்திரவாதியைத் தேடி ஆள் அனுப்பி விட்டார்கள். வந்த மந்திரவாதியும் பெரிய ஆள் இல்லை. கல்லூரியில் படிக்கும் ஒரு மாணவன். நண்பருக்கு அவனுடைய திறமையிலும், மந்திரத்திலும் விஷம் இறக்க முடியும் என்பதிலும் அத்தனை நம்பிக்கை இடையாது. வேண்டா வெறுப்போடு அவனுடைய மந்திர சக்தியைக் காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்தார். "எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்" என்ற மாதிரி, ஏதோ கொஞ்சம் வேப்பங் குழையை எடுத்து ஒரு சில நிமிஷங்கள் அடித்தான். வலி நின்றுவிட்டது. நண்பருக்கு ஒரே ஆச்சர்யம். அத்தோடு வருத்தமும் கூட. தேளின் விஷம் உடம்பில் ஏறினால், அது என்ன விதத்திலெல்லாம் ஒருவனைத் துன்புறுத்தும், துன்பத்தைத் தாங்கமுடியாது உடம்பு என்னவிதமான பாடெல்லாம் படும், விஷ தத்துவங்

தான் என்ன, தாங்கமுடியாத துன்பம் வருத்தும்போது அதை எதிர்க்கும் அளவிலும் சகிக்கும் அளவிலும் மனமும் மதியும் எவ்வாறெல்லாம் தொழில் செய்யும் என்ற அனுபவத்தை இழந்துவிடும்படி செய்துவிட்டானே இந்த மந்திரவாதி என்ற கவலை அவருக்குப் பெரிதாகப் போய்விட்டது.

இவ்வாறு துன்பத்தின் மர்மத்தை உணர்ந்து அதனை அனுபவிக்கும்படியான ஈடுபாடு சாமான்யமாக யாருக்கும் ஏற்படாது. அப்படி ஏற்பட்டால் அதனை ஆரம்பத்தில் சொன்னதுபோன்று தத்துவக் காதல் என்றுதான் சொல்லவேண்டும்.

துன்பத்தை யாரும் விரும்புவதில்லை என்றாலும் தத்துவ உலகில் அதற்கு ஒரு ஸ்தானம் உண்டு; அந்த ஸ்தானத்தை மதித்தாவது அதன் மர்மம் யாது என்பதை ஆராய்ந்தால், துன்பத்தைப் பார்க்கும்போதோ அனுபவிக்கும்போதோ ஒருவிதமான மனச்சாந்தி ஏற்படலாம்.

இக் கட்டுரையானது அந்த நோக்கத்தை மதித்தே எழுதப்படுகிறது. முடிவாக முடிந்த நிலை இதுதான் என்று இந்தக் கட்டுரை மூலம் காட்டப்படுமோ என்றால், இல்லை. ஏனென்றால் முடியாது. விஷயம் அத்தனை மூண்டு முடிச்சுகளோடு கூடிய ஒரு சிக்கலான விஷயம். தர்க்க ரீதியாக இப்படியானால் இப்படி, அப்படியானால் அப்படி என்று ஏதாவது தெளிவான சமாதானத்தைக் காட்டவும் முடியாது. ஆனால் ஒன்று. நம்முடைய வாழ்க்கையிலே துன்பமானது பயின்று வருகிறது. ஆகவே வாழ்க்கையில் பயின்று வருகின்ற ஒன்றை வாழ்க்கையின் துணைகொண்டே உணர்ந்து

கொள்ள ஏதாவது வழியுண்டா என்றுதான் பார்க்க வேண்டும்.

உலகம் தோன்றிய நாள் முதல் நாளது தேதிவரை எத்தனையோ மதத்தினர் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து வந்திருக்கின்றனர். அவர்களுடைய கொள்கை களையும் சமாதானங்களையும், நாம் குறிப்பிட்ட கதிக்கு இட்டுச் செல்லும் பாதைகளாகவும் தடங்களாகவும் மதிக்கவேண்டுமே தவிர, இது விபூதிப் பூச்சிட்ட கொள்கை, இது திருமண் அணிந்த கொள்கை, இது சிலுவை அணிந்த கொள்கை என்று கொள்ளவோ, தள்ளவோ, நிந்திக்கவோ செய்யாது, கொள்கையைக் கொள்கையளவில் பாராட்டிக்கொள்வது நல்லது. விருப்பு வெறுப்பு அற்ற முறையில் பார்ப்போம்.

இன்னும் ஒரே ஒரு எச்சரிக்கை. இக் கட்டுரையானது கடவுள் உண்டு என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே எழுதப்படுகிறது. என்ன சமாதானம் சொன்னாலும், அது, அந்த நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டே சொல்லப்படுகிறது. இனிமேல் விஷயத்திற்குள்ளே புகுவோம்.

அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்தவர் கடவுள். ஆகவே **கடவுள்** இருக்கின்றார். அவரால் படைக்கப் பெற்ற **உலகம்** இருக்கின்றது. அந்த உலகத்திலே, சரியோ தப்போ, வேண்டுமோ வேண்டாமோ, நியாயமோ அநியாயமோ, எதுவோ ஏனோ, நம்மால் சொல்லமுடியாதபடி துன்பம் என்ற ஒரு அனுபவமும் கலந்து வருகின்றது. அதனுடைய மர்மந்தான் என்ன?

இயற்கையைப் பார்ப்போம். எத்து எதிரான துவிதநிலை காணப்படுகிறது. அந்த நிலைக்கு, அதாவது

இரு நிலைக்கு, எத்தனையோ பெயர்கள் வழங்கப்படுகின்றன. நன்மை தீமை; அறம் மறம்; அறிவு அறியாமை; ஒளி இருள்; வெப்பம் தட்பம்; விருப்பு வெறுப்பு; சுகம் பிணி; பிறப்பு இறப்பு; இப்படியாகப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. ஒரு பக்கம் வாழ்வில் இன்பத்தை ஊட்டுகின்ற எத்தனையோ அம்சங்களைப் பார்க்கின்றோம். உதாரணமாக, நன்மை, அறம், அறிவு, காதல், தியாகம், சுகம், இன்னும் எத்தனையோ எண்ணரிய இயற்கை இன்பங்கள் ஆகிய இவைகளாகும். ஒரு பக்கம் தீமை, கொடுமை, வெறுப்பு, தன்னலம், கொலை, பசி, பிணி, பகை, தொத்துநோய், பூகம்பம் ஆகிய இவைகளைக் காண்கின்றோம். நம்மைச் சுற்றியுள்ள இயற்கையானது ஒரு கையால் இன்பத்தைப் பொழிகின்றது, மற்றொரு கையால் துன்பத்தையும் பொழிகின்றது. இரண்டினையும் நாம் அனுபவித்து வருகின்றோம். இன்பத்தில் மகிழ்கின்றோம், துன்பத்தில் நலிகின்றோம். இன்பத்திலே கொண்ட சுகத்தாலும், துன்பத்திலே கொண்ட கசப்பாலும் இன்பத்தையே என்றும் நாடுகின்றோம். இன்பம் ஓர் அணு என்றால் இடர் அதற்கோர் மாமலையாக இருப்பதைப் பார்க்கின்றோம். ஆகவே ஏன் இப்படி என்ற விசாரணை எழுகின்றது. எத்தனையோ பேர் ஆராய்ச்சி செய்து எத்தனை எத்தனையோ முடிவுகளைத் தந்திருக்கின்றனர். படிப்படியாக அவைகளை ஆராய்வோம்.

சிலர் கீழ் வரும் உண்மையைக் கூறுகின்றார்கள். கடவுளே எல்லாமும். இன்பத்தைப் படைத்தவனும் கடவுள், துன்பத்தைப் படைத்தவனும் கடவுள்.

1. "இன்பம் நீ துன்பம் நீ
அறமும் நீ மறமும் நீ" (நந்திக் கலம்பகம்)

2. "ஒன்றுகி மூலத்து, உருவம் பலவாகி,
உணர்வும் உயிரும் பிறிதாகி, ஊழி
சென்(று) ஆசறுங் காலத்து அந்நிலையதாகி,
திறத்துலகந்தானுகி, செஞ்சவே நின்ற
நன்ருய ஞானத் தனிக்கொழுந்தே, நங்கள்
நவை தீர்க்கும் நாயகமே, நல்வினையே நோக்கி
நின்ருரைக் காத்தி, அயல் பேரைக் காய்தி,
நிலையில்லாத் தீவினையும் நீ தந்ததன்றே" (கம்பர்)

(திறத்துலகம்—பலவகையான அண்டங்கள், நவை—குற்றம், காய்தல்—கோபித்தல்)

இப் பாடல்களில் காணும் அடிகள் கடவுளையே பொறுப்புக்கட்டுகின்றன. இப்படியாகத் துன்பத்தின் தோற்றத்திற்கு ஆண்டவனையே பொறுப்புக்கட்டும் கொள்கையைத் தழுவி எழுந்துள்ள ஒரு சில நியாயங்களைப் பார்ப்போம். பிரபஞ்ச அமைப்பிற்குள்ளேதான் துன்பத்திற்கு ஸ்தானம் இருக்கின்றதா அல்லது வெளியே இருக்கின்றதா என்ருல் உள்ளேதான் இருக்கின்றது. ஒரு உவமையின் மூலம் அதை விளங்கிக் கொள்ளலாம். குழந்தை ஒரு குற்றத்தைச் செய்தால், மரத்தில் ஏறி ஒரு குச்சியை ஒடித்துக்கொண்டு வந்து, தகப்பன் அடிக்கிருன். குழந்தைக்கு வேதனை ஏற்படுகின்றது. குழந்தை அனுபவிக்கின்ற துன்பம் தந்தையால் புகுத்தப்படுகின்றது. ஆகவே அதனை வெளியிலிருந்து வந்ததாகக் கொள்ளலாம். ஒரு வேளை அதே தந்தை குழந்தைகளுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்க வேறு முறையைக் கையாளுவதாக வைத்துக்கொள்வோம். அது எப்படி? வீட்டிலே பொருள்களை ஒரு முறையில் அமைத்து வைத்திருக்கின்ருன். இடங்க மடங்கலாக்கக் கையாண்டால் அவைகளே குழந்தைக்குப் பாடங் கற்

பித்துவிடும். அப்படியான முறையில் அமைத்துவிட்டால் குழந்தை அனுபவிக்கின்ற துன்பம் வெளியிருந்து வந்ததாகக் கொள்ளப்படுமா என்றால் இல்லை. அப்படியான முறையிலேதான் ஆண்டவனும் இந்தப் பிரபஞ்சத்தை அமைத்துத் தந்திருக்கின்றான். பொருள்களுக்குச் சில குணங்களையும் கற்பித்து, அவைகளின் இயக்கத்திற்குரிய சட்டங்களையும் வகுத்து விட்டிருக்கின்றான். மயிரிழை பிசகினாலும் போதும், அதற்குரிய பலனை அனுபவித்துக்கொள்ள வேண்டியதுதான். காமி கர்மத்திலேயே திளைக்கின்றான். கடைசியில் அதன் பயனை துன்பத்தை அனுபவிக்கின்றான். பேராசைக்காரன் அதன்பாலே திளைக்கின்றான். இறுதியில் அதனால் வரும் பயனை அனுபவிக்கின்றான். ஆகவே கர்மத்துக்குள்ளேயே கர்ம பலன் பொதிந்து கிடக்கின்றது. அப்படியாக இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்திருக்கின்றான். தீவினையைக் கடவுள் புகுத்தவில்லை. ஆனால் தீவினையும் நிகழ்வதற்குரிய முறையில் இந்த உலகைப் படைத்திருக்கின்றான்.

ஏன் இப்படிப் படைக்கவேண்டும் என்பதே கேள்வி. பலர் பலவிதமான சமாதானங்களைக் கூறுகின்றனர். அவற்றின் போக்கை ஓரளவு பார்ப்போம்.

துளிகூடத் துன்பத்திற்கு இடமில்லாமல் சர்வமும் இன்பமயமாகவே விளங்கும்படி ஏன் படைக்கக்கூடாது என்று கேட்கலாம். இன்பமே எங்கும் நிலவுமானால், அதனை நாம் இன்பம் என்று எவ்வாறு அழைக்க முடியும்? துன்பம் இருந்தால் அல்லவா இன்பம் என்ற ஒன்றனுக்கு இடம் உண்டு? மேலும் இன்பமே நிலவிவிட்டால், ஒரே சுரத்திலே பயின்று வருகின்ற இசை

எப்படி வெறுப்பை ஊட்டுமோ, அப்படியே இன்பத்தினிடமும் வெறுப்பு ஏற்பட்டு, முடிவில் இன்பத்தையே துன்பமாகக் கொள்ளும்படி ஆகிவிடும். பகவத்கீதையும் இக் கருத்தை வற்புறுத்துகின்றது. அல்லாமலும் உலகம் பரிபூரணம் அடைவதற்காக வேண்டியே ஆண்டவன் இவ்வாறு படைத்திருக்கின்றான் என்றும், வாழ்க்கையானது வெற்றிகரமாகச் செல்லவேண்டுமானால் அதற்கு ஒரு வழிதான் உண்டு, அதுவே கடவுள் வகுத்த வழி, அந்த வழியை உணர்ந்து கொள்ளுதற் பொருட்டே ஆண்டவன் இவ்வாறு படைத்திருக்கிறான் என்றும் சிலர் வாதிக்கின்றனர். அல்லாமலும் துன்பத்திற்கே இடமில்லை என்றிருக்குமானால், மக்களுக்குக் கடவுள் வழி யாது என்பதையே உணர முடியாது, அவ்வாறு உணர முடியாதுபோனால், கடவுளுடைய இலக்கியமே சித்தியாகாது என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

இன்னும் சிலர் விதி என்ற கொள்கையை வைத்துக் கொண்டு, ஒருவன் நன்மையை அனுபவித்தால் அதுவும் விதி, தீமையை அனுபவித்தால் அதுவும் விதியே என்று சாதிக்கின்றார்கள். இந்த இடத்தில் விதி என்பதை நாம் 'தலை யெழுத்து' என்ற பொருளில் வழங்கிக் கொள்ளவேண்டும். விதி என்ற கொள்கையின் உட்கருத்து யாது என்பதைப் பார்ப்போம்.

நாம் செய்கின்றவைகள், அனுபவிக்கின்றவைகள் ஆகிய எவற்றிற்கும் நாமில்லை பொறுப்பாளி, எல்லாம் விதியே. அதாவது, மனிதன் செய்கின்ற காரியங்களுக்கு, அவைகள் நன்மையான காரியங்களானாலும் சரி, தின்மையான காரியங்களானாலும் சரி, அவைகள் எல்லாமும் விதித்த விதியின்படியே நடைபெறுகின்றன

என்பதாகும். மனிதன் கருவடிவில் இருக்கும் பொழுதே, இன்ன காரியங்களை யெல்லாம் செய்வான், இன்ன பலன்களை யெல்லாம் அனுபவிப்பான் என்று கடவுள் விதித்து விடுகின்றாராம். இந்தக் கட்டுரையை நான் எழுதுகிறதும் விதி. இதை நீங்கள் வாசிப்பதும் விதி. எல்லாம் நாம் கருநிலையில் இருக்கும் பொழுதே தீர்மானம் ஆக்கப்பட்டுவிட்டது. நாம் அங்கும் இங்கும் ஒரு அணு அளவு கூட விலக முடியாது. இவ்வாறு இதைப் பொருள் கொள்ளலாம். இக்கொள்கையை எத்தனையோ பேர் எதிர்க்கின்றார்கள். இராமன் கிருஷ்ணனுடைய மோதிரத்தைத் திருடுகிறதாக வைத்துக் கொள்வோம். இராமன் திருடுகிறான் என்றால் அது அவனுடைய விதி. கிருஷ்ணன் பறிகொடுக்கின்றான் என்றால் அதுவும் அவனுடைய விதிதான். அப்படியானால் இராமன் கிருஷ்ணனிடம் அடிபடவும் நியாயமில்லை. கிருஷ்ணன் இராமனை அடிக்கவும் நியாயமில்லை. ஏன்? எல்லாம் விதித்த விதியின்படியே நடைபெறுகின்றது. வேறு என்ன? இது கொஞ்சம் வேடிக்கையாகத்தான் இருக்கின்றது. என்றாலும் இதை இன்னும் கொஞ்சம் ஆராய்ந்தால் இதன் மூலம் வேறு சில உண்மைகளையும் தெரிந்து கொள்ளலாம். மனிதனுக்கு, இது நல்லது இது கெட்டது என்று உணரக்கூடிய பகுத்தறிவு இருக்கின்றது. மேலும் இது நல்லது, ஆகவே, இதைச் செய்யவேண்டும், இது தீயது, ஆகவே இதைச் செய்யக்கூடாது என்றெல்லாம் தீர்மானிக்கக் கூடிய சங்கற்பமும் (free-will) இருக்கிறது. விதி, விதி என்று சொல்லிப்போனால், பகுத்தறிவு எதற்கு? சங்கற்பமும் எதற்கு? விதிக்கின்ற கடவுள் மனிதனிடம் இவை இரண்டினையும் ஏன் படைக்கவேண்டும்? மூரண்படு

கின்றதே. அல்லாமலும் வேண்டுமென்றே மனிதனைத் துன்பவலைக்குள் வீழ்த்த வேண்டுமென்று சதிசெய்ததாக அல்லவா தோன்றுகிறது? ஆகவே பலர் இக்கட்சியை மறுக்கின்றார்கள். வியாதி வாய்ப்பட்ட குழந்தை ஒன்று இறந்து போவதாக வைத்துக் கொள்வோம். கண்ணை மூடிக்கொண்டு ஆண்டவன் விதித்த விதி என்று சொல்லிவிட்டார்மா? பெரும்பாலோர் அப்படியே சொல்லி வருகின்றார்கள். அப்படியானால் வேண்டுமென்றே தம்முடைய இன்பத்திற்காகவும், தம்முடைய சக்தி பெரிதென்று காட்டுவதற்காகவும் கடவுள் கொன்றுவிட்டார் என்று கொள்ளுவதா? அவருக்கென்ன, ஆதி ரோமானிய பிரபுக்கள் சிளாடியேட்டர் கட்சிகளிலே வெறி கொண்டு திரிந்தமாதிரி, அப்படியான இரத்த வெறி உண்டா? கொஞ்சம் யோசனை செய்து பார்ப்போம்.

குழந்தையினுடைய வியாதிக்குக் காரணம் குழந்தையின் தேகநிலை, சீதோஷ்ண ஸ்திதி, இன்னும் இவைகளுக்கெல்லாம் மேலாக, பெற்றோர்களுடைய அஜாக்கிரதை. இன்னும் குழந்தை இறந்ததற்கும் காரணங்கள் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். வியாதிக்குத் தக்க சிகித்சை செய்யாது விட்டிருக்கலாம். அல்லது தருணங்கெட்ட தருணத்தில் சிகித்சையைத் தொடங்கியிருக்கலாம். அல்லது சிகித்சையே செய்யாதும் விட்டிருக்கலாம். ஒருவேளை பார்வைக் குறைவும் பத்தியக் குறைவும் காரணமாயிருக்கலாம். இவைகளை ஒன்றும் ஆராய்யாமல், எல்லாம் விதி, கடவுளின் வேலை, என்று சொல்லப்போனால், அது பொருந்துமா என்று சில ஆராய்ச்சியாளர் கேட்கின்றனர். இப்படியாக விதி என்ற கட்சி ஆட்சேபிக்கப்படுகின்றது.

சிலர் இன்ப துன்பமாகிய நிலைகுறித்து வேறு சமாதானம் சொல்கின்றனர். துன்பத்திற்கு அவர்கள் கூறும் சமாதானம் பின்வருமாறு. துன்பம் என்பது கிடையவே கிடையாது. அதெல்லாம் "உன்னுடைய மனக்குறையால் உருவாவது. மனக்குறையால் உருவாகின்ற பாவனை" என்று சொல்கின்றார்கள். 'Darkness in you' என்பதே அவர்களுடைய சித்தாந்தத்தின் அடிப்படை. அப்படித்தானே? ஞான சூன்யத்தால் உருவாகின்ற பாவனைதானே? அவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் பார்ப்போம். அதன்பின்னர் எதிர்க்கட்சியைக் கவனிப்போம். அவர்கள் பின்வரும் நியாயத்தைக் கூறுகின்றார்கள். கடவுள் எங்கும் இருக்கின்றார். அவர் இல்லாத இடமே கிடையாது.

> "சாணினும் உளன், ஓர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட
> கோணினும் உளன், மாமேருக்குன்றினும் உளன், இந்நின்ற
> தூணினும் உளன், நீசொன்ன சொல்லினும் உளன்"
>
> (கம்பர்.)

என்ற அடிகளிலே பொதிந்து கிடக்கும் உண்மையை வைத்துக்கொண்டு, அவன் இன்பமயமானவன், எங்கும் எதனுள்ளும் அவனே நிறைந்திருக்கின்றான், ஆகையினாலே எங்கும் இன்பமே யொழிய துன்பம் கிடையாது என்று வாதிக்கின்றனர்.

இதையும் பலர் மறுக்கின்றார்கள். அவர்கள் கூறும் நியாயங்களைப் பார்ப்போம். மன இயல்பை எடுத்துக் கொள்ளவேண்டும். இது நல்லது, இது தீயது என்று உணர்ந்து, நல்லதைத் தழுவவும் தீயதை அகற்றவும் மனது துணிகின்றது. அல்லாமலும் நல்லதைக் காப்பாற்ற என்னவெல்லாமோ தியாகத்தைச் செய்ய முன்

வருகின்றது. விரதமெல்லாம் மேற்கொள்ளுகின்றது. கோடி கொடுத்தாலும் அதை விட்டுக்கொடுக்கிறதில்லை. தீயது என்று கண்டதை ஏற்றுக்கொள்ளுகிறதும் இல்லை. இப்படியெல்லாம் செய்துவருகின்ற மனது பொய்யா? மேலும் எத்தனையோ விபத்துக்கள் நேரிடுகின்றன. நஷ்டங்கள் ஏற்படுகின்றன. திடுக்கிடும் அதிர்ச்சிகள் சம்பவிக்கின்றன. அவைகளையெல்லாம் கண்டு மனம் நடுங்குகின்றது. அப்படி நடுங்கும்படி நிகழும் மன அனுபவம் பொய்யா? சரி, போகட்டும். பொய்யென்றே வைத்துக்கொள்வோம். இப்படிக் கண் முன்னுலே நடக்கின்ற அனுபவங்களைத் துன்ப அனுபவங்கள் என்று கொள்வது ஞான சூன்யத்திலுலே தான், உண்மையில் அவைகள் துன்ப அனுபவங்களே இல்லை, அவைகள் இன்ப அனுபவங்களே, ஞானக் குறைவினுல்தான் அவைகள் துன்ப அனுபவங்களாகத் தோற்றமளிக்கின்றன என்று வாதாடினுல், இன்னும் ஒரு கேள்வி எழுகின்றது. அது யாது? உண்மையிலேயே இன்ப அனுபவங்களை, அறியாக் குறையால், மனமானது துன்ப அனுபவங்களாகப் பாவிக்கின்றது என்றிருக்குமானுல், அந்த மனமானது உண்மைக்கு விரோதமாக உணரும் இயல்புடையது என்றே பொருள் படும். அப்படியானுல் அந்த மனமும் பொய்தான். அதுவும் ஒரு துன்பமே. இப்படியாக இக்கட்சி எதிர்க்கப்படுகின்றது.

இன்னும் சிலர், துன்பத்தை முன்னிட்டு, தென்காசி வழக்காக ஒரு நியாயத்தைக் கூறுகின்றார்கள். துன்பத்தை நாம் பின் அணியாகக் (Back ground) கொள்ள வேண்டுமாம். அதென்ன அப்படி என்று கேட்கலாம். எது ஒரு பொருளும் துடியாகத் தோன்றவேண்டும்

என்றால், அது எந்த ஸ்தானத்தில் அமைந்திருக்கிறதோ, அந்த ஸ்தானமானது, மாறுபாடான தோற்றம் உடையதாக இருக்கவேண்டும். அப்படியானால் காணப்படும் பொருளானது மிகவும் துடியாய்க் காணப்படும். அதேபோன்று நன்மையானது துடியாகத் தெரியவேண்டுமானால், தீமை அதனுடைய பின்னணியாகத் (Back ground) திகழவேண்டும். அப்படித் திகழ்வதன்மூலம் அது நன்மையினுடைய ஏற்றத்தை எடுத்துக்காட்டத் துணை செய்கிறது. அதுவே தீமையின் மர்மம். அதை அவ்வாறே பாவிக்கவேண்டும். தென்காசி வழக்காகக் கூறும் நியாயம் இதுதான். இந்தக் கொள்கையும் எத்தனையோ பேரால் எதிர்க்கப்படுகிறது.

நோய் வருகிறது. விபத்துக்கள் நிகழ்கின்றன. இவைகளையெல்லாம் மேலேகூறிய உண்மையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், தீமைகளாகவோ துன்பங்களாகவோ கருத முடியாது. நன்மையினுடைய ஏற்றத்தை எடுத்துக்காட்டும் புனித கைங்கரியத்திற்கு அவைகள் உதவுகின்றன என்றே கொள்ளவேண்டும். அப்படிக் கொள்ளலாமா? மேலும் அப்படிக் கொள்ள முடிகிறதா? மற்றும் துன்பமாக உள்ளதை, தீமையாக உள்ளதை, அப்படியெல்லாம் இல்லை என்று கொள்ளுவது அறிவு நீர்மைக்குப் பொருந்துமா? அப்படியாக நம்புவது மட்டைத்தன மல்லவா? சில கெடுதலான காரியங்கள் இருக்கின்றன. மனிதன் செத்தாலும் சாவான் அவைகளைச் செய்யவேமாட்டான். அதே மனிதன் ஏதேனும் நல்லது என்று உணர்ந்ததைச் செய்யத் தவறிவிட்டால், ஐயோ பாவம், அவன் தன்னைத்தானே நிந்தித்துக்கொள்ளுவதைப் பார்த்தால், ஏதோ பிராணனையே விட்டுவிடுவான் போன்று தோன்

றும். இதிலிருந்து நாம் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்கின்றோம். மனிதன் எதையோ ஒன்றை நல்லது என்று எண்ணிச் செய்ய முயலுகின்றான். ஏதோ ஒன்றைத் தீயது என்று எண்ணி அகற்றவும் முயல்கின்றான். தீயதை அகற்ற முயலும்போது, தீயதைத் தீயது என்று உணர்ந்தே அவ்வாறு செய்ய முயல்கின்றான். அப்படிச் செய்யலாமா? அப்படிச் செய்தால் மேலே கூறிவந்த நியாயத்திற்கு அதாவது பின்னணி என்னும் நியாயத்திற்கு, விரோதமாக அல்லவா போய்விடும்? தீயதைத் தீயது என்று கொள்ளும்படிக்கு மனிதனுக்கு என்ன அத்தனை அடமா? நன்மையின் அழகை எடுத்துக்காட்டும் பின்னணியாக அல்லவா அது அமைந்திருக்கிறது? அப்படியாக இருப்பதை அகற்ற முயல்வது பொருந்துமா? மேலும் நன்மையின் அழகை எடுத்துக் காட்டுவதற்கே அமைந்துள்ளது என்று கொள்ளப்போனால், கடவுளே அந்த நோக்கத்தோடு தான் படைத்திருக்கிறார் என்றும் பொருள்படும். அல்லாமலும் நன்மையின் அழகை எடுத்துக்காட்டுவதற்கே அது உரியது என்றிருக்குமானால், அதனையும் ஒரு நல்ல காரியமாகத்தான் நாம் பாவிக்கவேண்டும். அதனை நாம் அகற்ற முயன்றோமானால், கடவுளின் சித்தத்திற்கு விரோதமாகப் போன குற்றம் நம்மைச் சாரும். மேலும் எத்தனை அளவுக்கு விலக்க முயல்கின்றோமோ, அத்தனை அளவுக்கு, நன்மையின் ஏற்றமும் அழகும் குறைந்துவிடும். போதாக்குறைக்கு, துன்பம் வரும் பொழுதெல்லாம், வேதனை வரும்போதெல்லாம் இன்பத்தையோ சுகத்தையோ நாடுவதும் குற்றமாகப் போய்விடும். இவ்வாறு பின்னணி என்று கொள்ளும் விவாதம் மறுக்கப்படுகிறது.

வேறு சிலர் ஒரு நியாயத்தைக் கூறுகின்றார்கள். அவர்கள் நன்மைக்கு ஒரு ஸ்தானமும் தீமைக்கு ஒரு ஸ்தானமும் தனித்தனியே கற்பித்து விடுகின்றனர். போதாக் குறைக்கு நன்மையை ஆக்குவதும் ஒரு கர்த்தா, தீமையை ஆக்குவதும் ஒரு கர்த்தா என்று இரண்டு கர்த்தாக்களையும் கற்பித்துவிடுகின்றனர்.

புராதன பாரசீகர்களுடைய வேதமாகிய ஜெந்த வெஸ்தா (Zendavesta)வில் இவ்வாறே கூறப்படுகின்றது. நன்மையைப் படைத்த கர்த்தாவின் பெயர் அகுரமஜ்தா (Ahura Mazda). தீமையைப் படைத்த கர்த்தாவின் பெயர் அஹ்ரிமன் (Ahriman). பிரபஞ்சத்தின் ஒரு பகுதி, அதாவது சர்வமும் நன்மை மயமான பகுதி, அகுர மஜ்தாவால் படைக்கப்பட்டது. சர்வமும் தீமை யாகிய மற்றைப் பகுதி அஹ்ரிமனால் படைக்கப்பட்டது. ஆதியில் இந்த இரண்டு தேவதைகளும் நட்புக்கொண் டிருந்தன. ஆனால் பின்னீடு விரோதம் ஏற்பட்டு அஹ்ரிமன் என்ற தேவதை பிரிந்துவிட்டதாகவும் அகுர மஜ்தாவிற்கு விரோதமாகக் கிளம்பி, ஆக்கியதை யெல் லாம் அழிக்க முற்பட்டதாகவும் அந்த வேதம் கூறு கின்றது. அகுரமஜ்தா எத்தனையோ முறை அஹ்ரி மனைத் தண்டித்தும், தீமை செய்வதை நிறுத்தவே இல்லை. இன்னும் நிறுத்தப்போவதும் இல்லை. தீர்ப்பு நாள் வரும்வரை போர் நடந்துகொண்டுதான் இருக்கு மாம். தீர்ப்புநாள் அன்று நன்மை வெல்லும், தீமை அழியும். அப்பாலே சர்வமும் நன்மை மயமான ஒரு புது உலகம் அகுரமஜ்தாவால் ஆக்கப்படும் என்று அந்த வேதம் கூறுகின்றது.

இந்தக் கொள்கையும் மறுக்கப்படுகின்றது. கட வுளே தலைவர் என்றிருக்கும்போது வேறு ஏது சக்தி?

வேறும் ஒன்று உண்டு என்றால், அது கடவுளுடைய ஒப்புயர்வு அற்ற தலைமைப் பதவிக்கே பொருந்தாத தாகப் போய்விடும். வேறும் ஒரு கடவுள் உண்டென்று பேர்சொல்லப்படும். அப்படிக் கொள்ளப்பட்டால் கடவுளுடைய முழு-முதல் கொள்கை அடிபட்டுப் போய் விடுகிறது. மகா பெரிய ஞானிகள் எல்லோரும் தீவினையிலிருந்து தப்புவதற்கு இறைவனையே நாடுகின்றார்கள். இறைவனுக்கே சகல வல்லமையும் வகுத்து, அந்த வல்லமையின் மூலம், தங்கள் துயரினைக் கழிக்க வழி தேடுகின்றார்கள். ஆகவே 'இரு-முதல்' கட்சி ஏற்றுக் கொள்ளப்படாதது என்பது சிலருடைய சித்தாந்தம்.

"அடராமா, இந்த விசாரணையெல்லாம் எதற்கு? கடவுளை நம்புவானேன்? கடவுளை நம்பிக்கொண்டு இன்ப துன்பங்களை ஏன் மதிக்கவேண்டும்? இதெல்லாம் எதற்கு? வெந்த சாதத்தை உண்டு விதி வந்தால் சாகவேண்டும். அது போதுமானது. இம்மாதிரியான தத்துவ விசாரணையினால் என்ன இலாபத்தைக் கண்டு விட்டோம்? துன்பம் இருக்கிறதென்றால் இருக்கத் தான் செய்யும். அதற்கு என்ன செய்கிறது? இமயமலை இருக்கிறது. வங்காளக் குடாக்கடல் இருக்கிறது. ஏன் இருக்கின்றன என்று கேட்கமுடியுமா? மரணம் இருக்கிறது. ஏன் இருக்கிறது என்று கேட்க முடியுமா?" —அம்மாதிரியே துன்பமும்.

இந்தக் கட்சியும் மறுக்கப்படுகிறது. உருப்படியான தத்துவங்களுக்கே எதிர்ப்பு இருக்குமானால், இந்தக் கட்சிக்கும் எதிர்ப்பு இல்லாமலா போய்விடும். விசாரணை செய்வது அறிவின் இயற்கை. அந்த இயற்கையையே அவமதிப்பதாகக் காணப்படுகிறது. இந்த ஒரு குறை

யோடு நின்று விடவில்லை. இன்னும் வருகிறது. மனித னுடைய மனமானது உயிரற்ற ஜட உலகத்தில் தோன்ற வில்லை. அப்படித் தோன்றியிருக்குமானால் தீமையைப் பற்றி முறையிட எவ்வித நியாயமும் கிடையாது. ஏனென்றால் இந்தப் பிரபஞ்சத்தை இயக்கக்கூடிய பேரறிவு எதுவும் இல்லையென்று ஆகிவிடும். ஏதோ ஒரு பேரறிவு இருக்கின்றது, அந்த அறிவே இந்தப் பிரபஞ்சத்தையெல்லாம் தோற்றுவித்து முறையாக இயங்கும்படி செய்கிறது என்று நம்புவதனாலேதான், நன்மை தீமைகளைப்பற்றிய விசாரணை எழுகின்றது. அல்லாமல் போனால் எழுவதற்கு ஏது நியாயம்? மேலும் நன்மை தீமை என்று பாகுபாடு செய்கின்ற மனஇயல் பைக் கொண்ட மனிதனுக்கு, அவன் வாழுகின்ற உலகு உயிரும் உணர்ச்சியும் அற்ற வெறும் ஜட உலகாக இருக்குமானால், நன்மையை நாடுவதற்கும் என்ன நியாய மிருக்கின்றது என்ற கேள்வியும் எழலாம்.

ஆனால் உண்மை எப்படி இருக்கிறது? மனித னுடைய அறிவானது, எத்தனையோ மர்மங்கள் நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தை உண்டாக்கி ஆட்டி வரும் பேரறிவோடு, ஐக்கியப்பட வேண்டும் என்ற ஆவல் கொண்டதாக இருந்து வருகின்றது. அந்த ஆவலும் நியாயமற்றது என்று ஆகிவிடும். இந்த ஆவலை நியாயமற்றது என்று நாம் முடிவு கட்டிவிட்டால், நன்மையை நாடி உபாஸனை செய்கின்ற, இன்னும் எத்தனை எத்தனையோ பெரிய தியாகங்களைச் செய்கின்ற, இதுகாறும் செய்து பலனடைந்த, ஞானிகள், பெரி யார்கள் ஆகிய எல்லோரும் பைத்தியக்காரர்கள் என் றாகிவிடும். அவர்களை அப்படி அழைத்துவிடலாமா? அவர்கள் எல்லோரும் உண்மையின் தரிசனத்தைக்

கண்ட உத்தமர்கள் அல்லவா? ஏதோ தங்களுக்கு வாய்த்த அறிவைக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக உண்மையை அறிகின்றார்கள். மேலும் மேலும் அறிந்ததை இன்னும் விரிவாக அறிய வேண்டுமென்று, காடு மலை சென்று, கடுந்தவம் புரிந்து, அரும்பாடுபட்டு உழைக்கின்றார்கள். அவ்வாறு உழைத்து உழைத்துத் தங்களுடைய ஞானத்தைப் பெருக்குவதோடு, உலக மக்களுடைய ஞானத்தையும் விரிவடையச் செய்ய வேண்டுமென்று எத்தனையோ வழிகளில் பாடுபடுகின்றார்கள். அவர்களுடைய அனுபவத்தையும்; அனுபவத்தால் கண்ட மாபெரும் உண்மைகளையும் பொய்யென்று தள்ளிவிடலாமா? தள்ளிவிடத்தான் முடியுமா? ஏதோ ஓர் உண்மையைப் பற்றிக்கொண்டு, அதை அடைவதற்கு எத்தனை எத்தனையோ அளவில் முயன்று, கைவராத நிலையில், கையற்று ஏங்கி, அந்த உண்மையினிடமே முறையிட்டு, அதனை உணர்ந்து கொள்வதற்காக என்னென்ன துன்பத்தை அடைந்து வருகின்றார்களோ அத்துன்பத்தையே துணையாக நாடிக் கொண்டு, அந்த உண்மையைக் காண எத்தனை எத்தனை அளவில், எத்தனை எத்தனை ஞானிகள் என்ன என்ன பாடெல்லாம் பட்டிருக்கின்றார்கள்.

(1) "விண்ணுடர்காணு விமலா, பரஞ்சோதி,
அண்ணு வாவா என்(று) அரற்றும் நாள் எந்நாளோ.

(2) புலர்ந்தேன், முகம் சருகாய்ப் போனேன், நிற்காண
அலந்தேன் என்றேங்கி அழுங்கும் நாள் எந்நாளோ.

(3) கடலின் மடை கண்டது போல் கண்ணீரும் ஆருக
உடல் வெதும்பி மூர்ச்சித்து உருகும் நாள் எந்நாளோ.

(4) மூச்சற்று சிந்தை முயற்சியற்று மூதறிவாய்ப்
பேச்சற்றோர் பெற்ற ஒன்றைப் பெற்றிடும் நாள்
எந்நாளோ.

என்று ஏங்குகிறார் தாயுமானவர்.

இன்னும் மாணிக்கவாசகர் உண்மையை நாடி நாடி, அலந்து அலந்து, அல்லும் பகலும் உழன்று உழன்று, கடைசியில், தான் பொய், தனது நெஞ்சு பொய், அன்புப் பொய், எல்லாமும் பொய்யென்று தெளிந்து, கசிந்து கசிந்து உருகி, கண்ணீர் பொழிய அழுதால்தான் உண்மையை உணரலாம் என்பதாகத் தெளிந்து, 'அழுதாலாவது உன் அருளைப்பெறமுடியுமா' என்று கேட்கின்றார்.

"யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்;
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே?
தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, தித்திக்கும்
மானே, அருளாய் உனை வந்துறும் ஆறே."

இன்னும் கடவுள் உண்மையை நாடி இறந்தவர்கள், வழிதவறிப் போய் விட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி, "உள்ளே இருக்கிறான் கடவுள் என்பதை அறியாமல், இப்படித் தேடி அலைந்து சாகின்றார்களே, அவர்களுந்தான் எத்தனைபேர்" என்ற ஏக்கத்தை வெளியிடுகின்றார் ஒரு ஞானி.

"ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களுங் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே"

இதுவே அந்த ஞானியின் முறையீடு. இந்த முறையீட்டின் மூலம் எத்தனைபேர் அந்த உண்மையைக் காணுது உழலுகின்றனர், அதற்காக வேண்டி உயிரையும் கொடுக்கின்றனர் என்பதையெல்லாம் நாம் தெரிந்து கொள்கின்றோம். அவர்கள் கஷ்டப்பட்டுத்தான் செய்கின்றார்கள். ஆனாலும் கஷ்டத்தையாவது விலையாகக் கொடுத்து உண்மையை அறிந்துவிட முடியாதா என்

பதுதான் அவர்களுடைய ஆசையெல்லாம். அவர்களுடைய கஷ்டத்தை அவமதிக்க முடியுமா? அவர்களுடைய இதயசில்த்தை அவமதிக்க முடியுமா? அறிவு இருக்கும்வரை இம்மாதிரியான முயற்சி இருந்துதானே தீரும்? சும்மா கண்ணை மூடிக்கொண்டு வெந்த சாதத்தை உண்டு "விதி வந்தால் சாகு" என்ற வேதாந்தத்தை நம்பு என்றால் எப்படி முடியும்? ஆகவே அதுவும் முடியாது.

இதுகாறும் தீமையின் இருப்பை உட்கொண்டு, அதற்கு ஏதேதோ சமாதானம் வழங்குகின்ற முறையைப் பார்த்தோம். இன்னும் சிலர் துன்ப நிலையை வேறு கண்ணோடு காண்கின்றார்கள். தீமை ஒரு நிலையான உண்மை. அழிவும் மரணமும் தொல்லையுமே இந்தப் பிரபஞ்சத்தின் முடிவாக முடிந்த நிலை. நன்மை என்பதே கிடையாது. துன்பமும் தொல்லையும் வாழ்க்கையோடு மருவிய அம்சங்கள். இன்பமும் சுகமும் வெறும் இடைச் செருகல்கள். வாழ்க்கை—அவசியம் துன்பத்தோடுதான் பின்னிக் கிடக்கின்றது. நாம் கொள்ளுகின்ற ஒவ்வொரு ஆசையும் துளி நேரத்தில், அதாவது நினைத்தமாத்திரத்தில் சித்தி பெறுவது என்றிருக்குமானால், நம்முடைய கால அவகாசத்தையே எப்படிக் கழிப்பது என்ற பிரசினை எழுந்துவிடும். வாழ்க்கையையே எப்படிக் கொண்டு செல்வது என்று திணறும்படி ஆகிவிடும். வாழ்க்கைப்போர் என்ற ஒன்றே அற்றுப்போய், செயலற்று ஜீவனும் அற்று, ஒன்றுமில்லாமல் போய்விடும். காற்றின் அழுத்தத்தை அகற்றிவிட்டால், எப்படி உடலானது துண்டு துண்டாகப் போய்விடுமோ அவ்வாறு துன்பம், தொல்லை ஆகிய இவைகளை அகற்றிவிட்டால், வாழ்க்கையே சிதறிவிடும்.

ஆனாலும் துன்பம் தொல்லையைத் தருகிறதே. அதற்கு என்ன பரிகாரம்? மரணந்தான் பரிகாரம். தற்கொலை மிக உகந்த பரிகாரம். இப்படியாகப் போகின்றது அவர்களுடைய சித்தாந்தம்.

இம்மட்டோடு முடிந்துவிடவில்லை. இன்னும் சிலர் சிலவிதமான சமாதானங்களைக் கூறுகின்றார்கள். அவற்றையும் பார்ப்போம். விஷயம் மிகவும் சிக்கலாக இருப்பதனாலே, இலகுவாக ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது. அவர்கள் கூறும் சமாதானம் பின்வருமாறு:

இயற்கையென்பது நன்மை தீமையாகிய இருவிதப் பாகுபாட்டோடு காணப்படுகிறது என்பதை மறந்துவிடவேண்டும். இயற்கையின் லீலை ஒரு லீலையே. அதன் வெளியீடு ஒரு மகாசக்தியின் வெளியீடே. இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றமெல்லாம் அந்த மகாசக்தியின் பரிணமிப்பே. விஞ்ஞான ஆராய்ச்சியெல்லாம் தற்போது, இயற்கையினிடத்துள்ள ஒருமைப்பாட்டு உண்மையையே, வற்புறுத்துகின்றது. திடீரென்று இந்த உலகம் படைக்கப்பட்டது என்ற எண்ணம் மலையேறிவிட்டது. பலகோடி வருஷங்களாகப் பரிணமித்து வந்ததன் பயனே இன்றைய உலகம் என்பது நாட்டப்பட்டுவிட்டது. உலகத்தோடன்றி, உலகத்தினின்றும் பிரிந்து நின்று, கொத்தன் வீடு கட்டுவது போன்று இந்த உலகமும் ஒருவனால் படைக்கப்பட்டது என்ற கொள்கையெல்லாம் மறுக்கப்படுகிறது.

நன்மை தீமை என்பன இனமான வார்த்தைகள். சுருக்கமாகச் சொல்வதென்றால் இனப்பதங்கள் (Relative terms) என்று சொல்லலாம். ஒன்றை ஒதுக்கி ஒன்று நிலைக்கமுடியாது. நாம் நன்மையென்று வழங்

கும் ஒன்று தீமையோடு மருவித்தான் கிடக்கின்றது. நன்மை தீமை என்பன எல்லாம் இனத்தைப் பொறுத்து அன்று, அளவைப் பொறுத்தே. ஒளியும் இருளும் போன்று. ஒன்றுக்கொன்று இணைந்த பதங்களே அவைகள். அவைகளைத் துண்டிப்பதன்மூலம் அவைகளின் பொருளையும் ஸ்தானத்தையும் தொலைப்பதோடு அவைகளையே தொலைப்பதாகவும் பொருள் படும்.

ஒரே பொருள் ஒருகிலையில் நல்லதாகத் தோன்றும். வேறொரு நிலையில் தீயதாகத் தோன்றும். தீயை எடுத்துக்கொள்வோம். இருட்டில் வழி காட்டுகின்றது. குளிரைப் போக்கடிக்கின்றது. உணவு சமைக்க உதவுகின்றது. இவ்வாறெல்லாம் உதவி செய்வதனால் அதனை நன்மை என்கிறோம். அதே தீ நம்முடைய வீட்டை எரித்துவிட்டால், அல்லது நமக்கு வேண்டியவரைப் பொசுக்கிவிட்டால், அதனைத் தீயது என்று அழைக்கின்றோம். பூமியின் ஆகர்ஷண சக்தியை எடுத்துக் கொள்வோம். நமது உடம்பிலுள்ள அணுக்களை, நமது உடையிலுள்ள அணுக்களை, நாம் கட்டியிருக்கும் கனக மாளிகையினுடைய அணுக்களை இழுத்து வைத்துக் கொள்ளும்பொழுது அதை வாழ்த்துகின்றோம். ஆனால் அதே சக்தி, ஒருவன் மரத்திலிருந்து விழுவானேயானால், அவனைக் கீழே இழுத்து மரிக்கும்படி செய்துவிடுகின்றது. அப்பொழுது அதனைக் கண்டிக்கின்றோம். மின்சார சக்தியும் இப்படித்தான். இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம். இவைகளிலிருந்து ஒரு உண்மை நமக்கு விளங்குகின்றது. இயற்கையினுடைய சக்திகளில் நன்மை இனம் என்றும் தீமை இனம் என்றும் இல்லை, இனமெல்லாம் அவற்றின் வெளியீட்டில்தான் என்பது

தெரிவாகின்றது. காட்டாற்றில் வெள்ளம் பேர்வது போன்று இயற்கையின் சக்திகள் பெருக்கெடுத்துச் செல்கின்றன. ஒரு கரையில் நின்று பார்த்தால் அத்தனையும் நன்மையாகத் தெரிகின்றன. மற்றொரு கரையில் நின்று பார்த்தால் "ஐயோ கொடுமையே" என்று கதறும்படி காட்சியளிக்கின்றன.

நன்மை தீமை என்பன நமது மனத்துள்ளே இருப்பன. மனத்துள்ளே உருவாகும் பாவனைகளுள் எது நம்முடைய இஷ்டத்தை நிறைவேற்றுகின்றதோ அதை நன்மை என்று அழைப்போம். நமக்குத் தொல்லையையோ அல்லது நாம் வேண்டாத ஒன்றையோ தருவதை நாம் தீமையென்று அழைத்துவிடுவோம். இயற்கை நிகழ்ச்சிகளிடையே புதைந்து கிடக்கும் ஒருமைப்பாட்டின் இலக்ஷணம் இன்னது என்பதை உணராது, ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தனித்தனியே எடுத்து ஆராயப் புகுந்தால் நாம் உண்மையைக் காண முடியாது. எது ஒன்றையும் ஊன்றிப் பார்க்கவேண்டும். பார்த்தால். ஓரளவு உண்மை விளங்கத்தான் செய்யும். சில உதாரணங்களைப் பார்ப்போம்.

மரணத்தை எடுத்துக்கொள்வோம். உலகம் தோன்றிய நாள்முதல் நாளது தெய்திவரை மரித்துள்ள மக்களின் தொகையை எண்ணிப்பார்க்க முற்பட்டால், உலகம் வேறு ஒன்றுமில்லை, வெறும் சவக்குழிதான் என்று தோன்றும். இறப்பை ஆராய்வதுபோன்று பிறப்பையும் ஆராயவேண்டும்.

நாம் வாழும் இந்த மண்ணுலகை எடுத்துக்கொள்வோம். சிலருடைய கொள்கை, இந்தப் பிரபஞ்சமே பொருளற்ற முறையில் படைக்கப்பட்டிருக்கிறது, என்ப

தாகும். சூரியமண்டலத்தின் ஸ்தானத்தை மட்டிலும் கடவுள் சிறிதளவு மாற்றியிருப்பாரேயானால், பூமியின் வளமும், சிதோஷ்ண ஸ்திதியும் எவ்வளவோ அளவில் திருத்தமடைந்திருக்கும். பூமியானது சூரியனைச் சுற்றி வரும் அதேகாலத்தில் சந்திரனும் பூமியைச் சுற்றி வரும்படி அமைக்கப்பட்டிருந்தால், சதா கால்மும் பௌர்ணமியாகவே இருக்கும். அதனால் எவ்வளவோ நன்மை கிடைக்கும். இவ்வாறெல்லாம் வாதம் கிளம்புகின்றது. இவைகளுக்கு ஏதேனும் சமாதானம் உண்டா என்று பார்ப்போம். நவீன விஞ்ஞானிகள் சரியான சமாதானத்தை வழங்குகின்றார்கள். சந்திர மண்டலத்தின் ஸ்தானம் மாற்றப்பட்டிருக்குமானால், சூரிய மண்டலத்தின் முழுக்கட்டுக்கோப்பும் சிதைந்தேபோயிருக்கும். இன்னும் பூமி சூரியனைச் சுற்றிவரும்போது சந்திரனும் பூமியைச் சுற்றி வருகிறதென்றிருக்குமானால், இப்போது நமக்குக் கிடைக்கும் சந்திர ஒளியில் பதினேழில் ஒரு பங்கையே நாம் பெறவேண்டியதாக இருக்கும். அல்லாமலும் சந்திரன் எப்போதும் மறையும்படியான ஆபத்துக்கு உள்ளாகவேண்டியதாகவே இருக்கும். அதனால் அலைகள் ஏற்படாமலும் போகும். இவ்வாறு நவீன விஞ்ஞானிகள் சமாதானம் வழங்குகின்றார்கள்.

இன்னும் பூகம்பத்தை எடுத்துக் கொள்வோம். 'பாவி கடவுளுக்கு விழியில்லையா? கருணையில்லையா?' என்று எத்தனையோ பேர் திட்டுகின்றார்கள். நன்றாகத் திட்டட்டும். உண்மை என்னது என்பதை ஆராய்வோம். '24-6-35 லண்டன் டைம்ஸ்' என்ற பத்திரிகையில் வெளிவந்துள்ள விருத்தாந்தத்தையும் விளக்கத்தையும் பார்ப்போம். மேற்படி டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்துள்ள விஷயம், சில வருஷங்களுக்கு முன்

குவெட்டாவில் நிகழ்ந்த பூகம்ப அதிர்ச்சியைக் குறிப்பதாகும்.

பெரும்பாலும் சேதம் ஏற்பட்டதன் காரணம் மோசமான கட்டிட வேலையினால்தான். குவெட்டா பூகம்ப அதிர்ச்சிக்கு உள்ளான வட்டாரத்தில் இருக்கிறது என்பதை உணர்ந்தும் ஆபத்தற்ற கட்டுமான முறையைக் கையாளாது அசட்டை செய்தது வருந்தத்தக்கதே. ஜப்பான், கலிஃபோர்னியா, நியூஜீலந்து முதலிய பிரதேசங்களில், எங்கெங்கே அதிர்ச்சிகள் அடிக்கடி ஏற்படுமோ அங்கெல்லாம், அதிர்ச்சி எதிர்ப்புக் கட்டிடங்களைக் கட்டியிருக்கின்றார்கள். ஆனால் குவெட்டாவிலோ, அதன் இயற்கையை உணர்ந்திருந்தும், எவ்விதமான பாதுகாப்பு முறையும் கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இம்மட்டோடு நிறுத்திக்கொள்வோம். ஆகவே சேதத்தின் காரணம் தெரிந்துவிட்டது. பூகம்பந்தான் தீமை தரக்கூடியது என்று தெரியுமே. அதை ஏன் கடவுள் படைக்கவேண்டும்? கருணைமூர்த்தியாகிய கடவுளுக்கு அது தெரியாதா என்று கேட்கலாம்.

பேராசிரியர் ஜட் (J. W. Judd) என்பவர் ஏதோ சமாதானம் கூறுகின்றார். அதைப் பார்த்தால் கொஞ்சம் சாந்தி ஏற்படத்தான் செய்கின்றது. பூகம்ப அதிர்ச்சிகளைப் பார்வையிட்டதும் அதனுடைய கொடுமையும் நாசகாரத் தன்மையுமே நமது மனக்கண் முன் நிற்கும். கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும். நாம் கொண்டதெல்லாம் கற்பிதமான மிகை என்றே தோன்றும். பூமியின் நலங்கருதி பூமிக்குள்ளே அநேக சக்திகள் வேலை செய்கின்றன. அந்த சக்திகளின் செயல் தடைப்படுமானால் அல்லது மறைந்து விடுமேயானால், உயிரினங்கள் வாழக்கூடிய தகுதியற்றதாகப்போய்விடும்

நாம் வாழும் உலகம். புறத்திலுள்ள சக்தியையும் அகத்திலுள்ள சக்தியையும் சமப்படுத்துவதன்மூலம், சராசரங்களினுடைய ஜீவிதத்திற்குரிய வசதி தட்டாது காப்பாற்றப்பட்டு வருகின்றது. ஆகவே ஏதாவது அதிர்ச்சிகள் நிகழுமேயானால், இயங்குகின்ற ஒரு இயந்திரத்திடையே பழுது ஏற்படுவதுபோல் நிகழும் பழுதென்று கொள்ளவேண்டுமே யொழிய, கடவுளுடைய குரூரத்தன்மையைக் காட்டும் நிகழ்ச்சி என்றுகொள்ளக் கூடாது. பின்னரும் இதைப்பற்றிச் சொல்லவேண்டிய திருப்பதால் இம்மட்டோடு ஆசிரியர் ஜட் சொன்னதை மட்டிலும் குறிப்பிட்டுவிட்டு நிறுத்திக்கொள்கின்றேன்.

சற்று மிருக உலகத்தையும் எட்டிப் பார்ப்போம். ஒன்றை ஒன்று அடித்துக் கொல்வதைப் பார்த்தால், ஏன் இந்த சண்டாளத்தனம், கடவுளுக்கு ஏன் இந்தக் கொடிய லீலை என்றெல்லாம் தோன்றும். அதன் மர்மத்தை ஆராய்ந்தால் ஒருவேளை சாந்தி பிறக்கலாம். ஆராய்ச்சியாளர் சொல்வதைக் கவனிப்போம். வெளிப்படையாக நாம் கொடுமையைக் கண்டாலும், கூர்ந்து கவனிக்கும்போது, இயற்கையினடத்து நன்மையை நாடிச்செல்லும் சங்கற்பமே மிளிருவதைக் காணலாம். பறவைகளும் மிருகங்களும் அடைந்துள்ள அறிவு நிலையை ஆராய்ந்தால் கூட்டுறவு நிலைக்குத்தான் அதிக இடம் இருக்கின்றது. விரோதத்திற் குரியதெல்லாம் அற்ப சொற்பந்தான். ஆடுமாடுகளை அடித்துத் தின்கின்ற இனமும், புழு பூச்சிகளை அடித்துத் தின்னுகின்ற இனமும் நம்மை யோசனை செய்யத் தூண்டும். மனிதன் ஆடுகளையும் கோழிகளையும் அடித்துத் தின்பது போன்றுதான் அவைகளும் தின்கின்றன. மனிதன் செய்கின்றது தப்பில்லை என்றல் அவைகள் செய்கின்ற

தும் தப்பில்லைதான். இது ஒரு சமாதானம. மற்றொரு சமாதானத்தையும் பார்ப்போம். அவைகளினிடையே கொடுமைத்தன்மை காணப்படுகின்றது. ஒன்றை ஒன்று தாக்கும்போது தாக்கப்பட்டது வேதனைப்படத்தானே செய்யும். நம்மைப்போன்றுதானே அவைகளும் வேதனையை அனுபவிக்கும். கருணையுள்ள கடவுள் அப்படியான வேதனைக்கு ஏன் இடம் கொடுக்கவேண்டும் என்று கேட்கலாம். வேதனை உண்டு. ஆனால் நாம் அனுபவிக்கின்ற அளவு அவைகள் அனுபவிக்கின்றனவா, மேலும் நாம் அனுபவிக்கின்ற அளவில் அவைகளாலும் அனுபவிக்க முடியுமா என்பதையும் பார்க்கவேண்டும். உண்மையில் நாம் அனுபவிக்கிற அளவு அவைகள் அனுபவிக்கிறதில்லை. ஏனென்றால் நம் அளவுக்கு அவற்றின் அறிவுநிலை வளரவே இல்லை. அறிவுநிலை வளராத காரணத்தால் துன்பத்தை நாம் அனுபவிக்கிற அளவில் அவற்றால் அனுபவிக்க முடியாது. டாக்டர் ஒருவர், உடம்பில் ஏதாவது ஒரு அங்கத்தை அறுத்து சிகித்சை செய்கிறதாயிருந்தால் பொதுவாக மயக்க மருந்தைக் கொடுப்பது இயற்கை. ஆனால் குழந்தைகளுக்கு ஏதேனும் மயக்க மருந்தைக் கொடுக்கின்றார் என்றால் இல்லை. எதனால் ? நம்மால் வலியைத் தாங்கிக் கொள்ள முடியாது. ஏனென்றால் நமது அறிவு வளர்ந்திருக்கிறது. நமது நரம்பு அமைப்பு வேதனையை நன்றாக உணருவதற்குத் துணை செய்யும் அளவில் அமைக்கப்பட்டிருக்கிறது. குழந்தைக்கு இன்னும் வளரவில்லை. ஆகவே தான் மயக்க மருந்தை ஊட்டுகின்றார்இல்லை. கால்யும் கையையும் உதைத்துக்கொண்டு கத்தும் அம்மட்டோடு சரி. மனிதனுக்கோ பயம், அதிர்ச்சி முதலியன எல்லாம் ஏற்பட்டு, உள்ள வேதனையையும்

பெரிதாகப் படைத்துக் கொள்வான். ஆகையினாலே தான் அவனுக்கு வேதனை உணர்ச்சி அதிகமாகப் போய்விடுகின்றது.

இன்னொரு அம்சத்தையும் இதனிடத்துக் காண வேண்டியதாக இருக்கின்றது. பூனை கோழியை விரட்டு கிறது. புலி மானை விரட்டுகிறது. இப்படியெல்லாம் விரட்டுவானேன், துன்பப்படுத்துவானேன், அது அது அதன் போக்கிலே போகக்கூடாதா, ஏன் இந்தத் தொல்லை யெல்லாம் என்று கேட்கவும் தூண்டும். அதற்கும் சாஸ்திர ரீதியான சமாதானம் இல்லாமல் போகவில்லை. கோழியும் மானும் சதாகாலமும் உயிரைக் 'கையிலே பிடித்துக் கொண்டு தான்' வாழ்கின்றன என்பதில்லை. கொல்லுகிற பிராணிக்கு எத்தனை உத் சாகம் இருக்கின்றதோ கொல்லும் தொழிலில், அம் மாதிரியே ஓடுகின்ற பிராணிக்கும் ஓட்டத்தில் அத்தனை மகிழ்ச்சி இருக்கின்றது. வேட்டையாடுவதும் வேட்டை யாடப்படுவதுமாகிய இரண்டு செயல்களும் பரிணமத் துறையில் எத்தனை உபயோகமாக இருக்கின்றன என் பதைச் சொல்லவே வேண்டாம். அழகைத் திருத்தவும், துரித ஓட்டத்திற்கு ஏற்றபடி அங்கங்களைப் பயிற்று விக்கவும், அறிவை வளர்க்கவும் அவைகள் துணை செய்கின்றன.

இவ்வாறு ஆராய்ந்துகொண்டே போகலாம். தனித் தனியே எடுத்துப் பார்க்கும்போது பயங்கரமாகவும், கசப்பாகவுமே தோன்றும்—உள்ளே நுழைந்து பார்க் கும்பொழுதுதான் நுட்பம் தெரியும். அப்பொழுது தான் சமாதானமும் கிடைக்கும்.

இனி ஆதியில் குறிப்பிட்ட கொள்கையைத் தொடர்ந்து மேலும் ஆராய்வோம். நன்மை தீமை

என்பன நமது மனத்துள்ளே உருவாகும் பாவனைகள். நமது இஷ்டத்தை நிறைவேற்றுவதை நாம் நன்மை என்கிறோம். நமது இஷ்டத்தை நிறைவேற்றுதலை நாம் தீமை என்கிறோம். ஆனால் ஒரு எச்சரிக்கை. எதையும் முழுமையிலிருந்து பிய்த்துத் தனியே பார்த்தால் போதாது. பார்க்கிறதை நன்றாக ஆராய வேண்டும். நன்மை தீமை என்பன பெரும்பாலும் மனத்துள்ளே உருவாகும் பாவனைகளே. ஒரு சில உதாரணங்களின்மூலம் அவைகளின் உட்பொருளை உணர்ந்து கொள்வோம்.

நமது நாட்டில் பஞ்சத்தைத் தருகிற இயற்கை யான்று அமெரிக்க நாட்டில் அமிதமான விளைவைத் தருகிறது. இங்கே நாம் நிந்திக்கின்றோம். அங்கே அவர்கள் வாழ்த்துகின்றார்கள். ஒருவன் இன்னொரு வனைக் கொலை செய்கிறான். நல்ல நோக்கத்தோடே செய்தாலும், கொலை செய்த செயலைக் குற்றமாகவே பாவித்து அவன் தண்டிக்கப்படுகிறான். ஆனால் யுத்த களத்தில் ஆயிரம் பேரைக்கொன்றுவிட்டு ஒருவன் வருகிறான். அவனுக்கு வரிசைகள் வழங்கப்படுகின்றன. இது என்ன விபரீதம்? விபரீதம் ஒன்றுமில்லை. எல்லாம் அறிவுத் தடுமாற்றந்தான்.

மரணத்தை மட்டிலும் கண்டு பயந்தோம். அப்பாலே ஜனனத்தைக் கண்டு சாந்தி பெற்றோம். கோள் நிலைகளைப்பற்றிக் கசப்புக் கொண்டோம். அப்பாலே உண்மை தெரிந்து சாந்தி அடைந்தோம். பூகம்பத்தைக் கண்டு அதிர்ச்சியுற்றோம். அப்பாலே அதன் உண்மையை உணர்ந்து தெளிவடைந்தோம். தடுமாற்றத்தின் காரணமெல்லாம் அறியாமைதான். பௌதிக

உலகத்தைப் பற்றிய அறிவுத் தடுமாற்றத்திற்கு எந்த அறியாமை காரணமாயிற்றோ அதே அறியாமைதான் ஒழுக்க உலகத்தைப்பற்றிய அறிவுத் தடுமாற்றத்திற்கும் காரணம். மண்ணுலகத்திலுள்ள சந்நியாசி ஒருவன் ஒருவனுடைய மனைவியை இச்சித்தான் என்று சொன்னால் "அப்படியா விஷயம்? அந்த படவ்வாவைச் சுடவேண்டும்" என்கிறோம். கடவுளே சந்நியாசி வேஷம் தாங்கிக் கொண்டு அவ்வாறு செய்தார் என்றால், 'ஆம், பக்தனைச் சோதிக்கத்தான் அவ்வாறு செய்தார்' என்று பாராட்டுகின்றோம். செயல் ஒரே செயல்தான். ஒரு நிலையிலிருந்து பார்க்கும்பொழுது வேண்டாத செயலாகத் தோன்றுகிறது. வேறு நிலையிலிருந்து பார்க்கும்போது வேண்டிய செயலாகத் தோன்றுகிறது. இன்னும் பார்ப்போம். பலதார மணம் செய்வதை ஒரு மதம் தாக்குகின்றது. ஒரு மதம் தாங்குகின்றது. எது நல்லது? எது கெட்டது? இப்படியாகப் போய்க்கொண்டேயிருக்கும். பெரும்பாலும் நாம் நிதானிப்பதெல்லாம் நம்முடைய இச்சை வெறுப்பாகிய அளவு கோல் கொண்டுதான்.

II

இதுவரை துன்பத்தைப்பற்றி வழங்கும் பலதரமான கொள்கைகளை ஆராய்ந்தோம். இனி விஞ்ஞான நீதியாகவும் வாழ்வு இயலைக் கொண்டும் அதன் மர்மத்தை உணர முயற்சிசெய்வோம்.

துன்பத்தை நாம் பெரும்படையாகப் பிரிப்பதால், இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று இயற்கைத் துன்பம், மற்றொன்று செயற்கைத் துன்பம்.

இயற்கைத் துன்பங்களாவன: பூகம்பம், சூறாவளி, பெருவெள்ளம், மின்னல் போன்று, மனிதனல் அல்

லாமல், இயற்கையின் பயனை விளையக்கூடிய துன்பங்கள். செயற்கைத் துன்பங்களாவன: மனிதனால் நிகழக்கூடிய துன்பங்கள். இவைகளைப்பற்றி ஆராயும் பொழுது ஒரு எச்சரிக்கை அவசியமாகிறது. அதாவது துன்பத்திற்கும் பாவத்திற்கும், துரதிர்ஷ்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் கண்டிப்பான தொடர்பு உண்டா என்பதை ஆராய்வதுதான். உலகம் தொடர்பு உண்டு என்று பொதுவாகச் சொல்லும். ஆனால் உள்நுழைந்து ஆராயவேண்டும். அப்படி ஆராய்ந்து பார்த்தால், தொடர்பு உண்டு என்பதை, அப்படியே கண்ணை மூடிக் கொண்டு சொல்லிவிடமுடியாது என்பது தெரியவரும். எத்தனையோ புண்ணிய சீலர்கள் இருக்கின்றார்கள். பாவத்தையே செய்யாதவர்கள். துளிகூட மனத்தாலும் நினைக்கமாட்டார்கள். அவர்கள் துன்பப்படுகின்றார்கள். கிருஸ்து பெருமான் யாருக்கு என்ன பாவத்தைச் செய்தார்? அப்பர் சுவாமிகள் யாருக்கு என்ன பாவத்தைச் செய்தார்? சாக்ரட்டீஸ் என்ன பாவத்தைச் செய்துவிட்டார்? ஆனால் அவர்கள் எல்லோரும் எத்தனை அளவில் துன்பத்தை அனுபவித்திருக்கின்றார்கள்! ஒருவர் சிலுவையிலிட்டுக் கொல்லப்பட்டார். ஒருவர் நீற்றறையில் வைத்துத் தகிக்கப்பட்டார். இன்னொருவர் விஷங்கொடுத்துக் கொல்லப்பட்டார். ஏன் இந்த அவஸ்தை?

ஸ்ரீமான் வெதர் ஹெட் (Leslie D. Weather Head) என்னும் அறிஞர் இது விஷயமாக ஒரு சமாதானம் கூறுகின்றார். அறிஞர் ஆராய்ச்சிக்கு நான் அறிந்த வாறு சமர்ப்பிக்கின்றேன்.

மக்களுடைய ஜீவிதமானது குடும்ப நிலையில் நின்று நடைபெறக்கூடிய ஒன்றாக ஏற்பட்டுள்ளது. அதுவே

ஆண்டவனுடைய சித்தம் என்றும் தோன்றுகிறது. குடும்பநிலை என்று ஏற்படாது, தனிநிலை; அதாவது அவனவன் பாடு அவனுக்கே என்ற நிலை ஏற்படுமானால், இன்னும் அந்த நிலையே கடவுளுக்கும் உகந்த நிலை என்று ஆகிவிட்டால், அடுத்தவர்களுடைய துர்நடத்தையாலோ, அறியாமையினாலோ, குற்றத்தினாலோ யாதொரு பயனும் நமக்கு வந்திருக்காது. அத்தோடு பிறருடைய ஞானம், விவேகம், பெருந்தன்மையாகிய இவற்றால் ஆன நன்மையும் நமக்குக் கிடைத்திருக்காது. அவனவன் பாடு அவனுக்கு என்றாகிவிட்டால், யாரும் யாருக்காக வேண்டியும் யார் காரணமாகவும் கஷ்டப் படவேண்டிய தேவையே கிடையாது.

இன்னும் இதை விரிவாகப் பார்ப்போம். இதோ நான் எழுதுகிறேன். எழுதுகிற பேனாவை தயாள் பாக்கிலுள்ள ஒரு சகோதரன் எனக்குச் செய்து தருகின்றான். எழுதுகின்ற காகிதத்தை மைசூரிலுள்ள ஒரு சகோதரன் செய்து தருகின்றான். எழுதுகின்ற மையை அமெரிக்காவிலுள்ள ஒரு சகோதரன் தயாரித்து அனுப்புகின்றான்.மக்கள் இனமே ஒரு குடும்பம் என்றமையினாலே இத்தனை சுகங்களையும் அனுபவிக்க முடிகிறது. தனக்குத்தான் என்றாகிவிட்டால், பேனாவையும் நான் தான் செய்துகொள்ளவேண்டும். காகிதத்தையும் நான் தான் செய்துகொள்ளவேண்டும். மையும் அப்படித்தான். சரி, நோய்வருகிறது. ஒரு சகோதரன் மருந்து செய்து தருகிறான். ஒருவன் மருத்துவ சகாயத்திற்கு வேண்டிய கருவிகளைச் செய்து தருகின்றான். இன்னொருவன் மருத்துவக் கலையையே கற்று எனக்கு உதவி செய்ய வருகிறான். அப்படி இல்லை என்று ஆகிவிட்டால் சீரழிய வேண்டியதுதான். ஆகவே குடும்ப நிலையினாலே

எத்தனையோ சுகங்களை அனுபவிக்கின்றோம். சுகங்களை அனுபவிக்கும் நாம், குடும்பத்தாரால் வெளிக்காட்டப் படும் அறியாமை அவர்களுடைய குற்றம் குறை ஆகிய இவற்றால் வரும் பயன் ஆகிய அனுபவங்களை மறுக்கத் துணியலாமா? கடவுளிடம் முறையிட நியாயம் உண்டா? குடும்ப வாழ்க்கையிலுள்ள இன்பம் மட்டிலும் எனக்கு, துன்பங்களெல்லாம் எனக்கு வேண்டாம் என்றால் கடவுளாலும் அது முடியாதே. கடவுள் சர்வ வல்லமை உள்ளவர்தான். ஆனாலும் வல்லமையின் தத்துவம் யாது? எந்த விதத்திலும் முடியாததை முடியும்படி செய்விப்பதா என்றால் இல்லை. அத்திமரத்திலே கொத் தவரைக்காய் காய்க்கச் செய்வதா? குடும்பத்திற்குள்ளே நுழைவதென்றால், குடும்பத்திலுள்ள சொக்கத்தை மட்டிலும் எடுத்துக்கொள்வதென்பது பொருந்தாது. கட்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். குடும்ப நிலையே கடவுளுக்கு உகந்தது. அதனையே அவர் விரும்புகின்றார். அவருடைய படைப்பின் மர்மமும் அதுதான். ஆனாலும் அதில் ஒரு ஆபத்தும் உண்டு. மனிதன் தன்னுடைய தன்னலத்தால் அவருடைய படைப்பின் மர்மத்தையே உருப்படவிடாதபடி செய்ய லாம். அப்படிச் செய்வதன் மூலம் நமது சகோதர ஜீவன்களுக்கே கணக்கற்ற தீமையும் கஷ்டமும் விளை யும்படி நடந்துகொள்ளவும் செய்யலாம். கடவுள் குறுக் கிடுவாரா என்றால், கிடையாது. அவருடைய சங்கற்பம் புறக்கணிக்கப்படும் போதெல்லாம் அவர் தலையிடுவ தில்லை. ஆனால் கஷ்டப்படுகிறவர்களோடு அவரும் கஷ்டப்படத்தான் செய்கிறார். 'கொல்' என்று சொல் பவரும் அவர்தான், கொல்லப்பட்டு நிற்பவரும் அவர் தான். "கொல்லென்று சொற்றி கொலையுண்டு நிற்றி"

என்கின்றார் கம்பர். இறகுதிர்ப் பறக்கின்ற குருவியி னுள்ளும் அவர் இருக்கின்றார். இறகு ஒடிந்து விழும் பறவையோடும் அவர் விழுகின்றார்.

மனிதன் அவருடைய சங்கற்பத்தைத் தோல்வி யுறச் செய்தாலும் தம்முடையது நிறைவேறவேண்டும் என்ற ஆவல் பெரிதும் உடையவர். அவருடைய சங்கற்பம் நிறைவேறிவிட்டால் பூவுலகே பொன் னுலகாகிவிடும். துன்பமும் இருக்காது, தொல்லையும் வாராது. குடும்ப நிலையில் ஒருவருக்கொருவர் துணை யாக இருப்பதையே அவர் விரும்புகின்றார். ஒருவன் கஷ்டப்படுகிறான். அடுத்தவன் அவனுக்கு உதவி செய்யமுடியும். செய்தால் அவன் கஷ்டம் தீரும். ஆனாலும் 'எனக்கென்ன ஆத்திரம்' என்று சும்மா இருந்துவிடலாம். அவ்வாறு இருந்தால் கடவுளுடைய குறிக்கோளே பாழாகிறது. அத்தோடு கஷ்டப்படுகின் றவன் இன்னமும் கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருப் பான். அவனோடு போகிறதா தொல்லை? அவனுக் குள்ளே இருந்துவரும் கடவுளும் அவனோடு கஷ்டப் படவே செய்வார். ஒருவனுக்கு வியாதி வருகிறது. மருந்து சாப்பிடுகின்றான் இல்லை. 'கடவுள் இருக்கிறார். எனக்குத் துணை செய்ய' என்று சும்மா இருந்துவிடு கிறான் என்று வைத்துக்கொள்வோம். கடவுளால் துணை செய்யமுடியும். ஆனாலும் அவர் என்ன செய்கிறார். குடும்பமாக வாழச் செய்து ஒருவருக்கொருவர் உதவி யாக இருக்கும்படியே அவர் விரும்புகின்றார். நோயாளி யோடு தாமும் நோய்த்துன்பத்தை ஏற்றுக்கொள்ளவே செய்கின்றார்.

இப்படியெல்லாம் ஏன் எதிர்பார்க்க வேண்டும், ஏன் தாமும் கஷ்டப்படவேண்டும்? முறைதவறுதலும்

துன்பமே அற்றதும், வட துருவம் முதல் தென் துருவம் வரை சம சீதோஷ்ண ஸ்திதியைக் கொண்டதுமான ஒரு உலகத்தைப் படைத்துவிட்டால், என் இதெல்லாம் என்று சொல்லத் தோன்றும். சிலர் அவ்வாறே சொல்லவும் செய்கின்றார்கள். அப்படியானால் இப் பொழுதுள்ள பிரபஞ்சத்தையே வேறு நிலையில் மாற்றி அமைத்தால்தான் முடியும். நம்முடைய முயற்சியெல் லாம், இப்பொழுது எப்படியிருக்கிறதோ, அப்படி யிருக்கும் நிலையை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்வதாகும். காட்டுகின்ற முடிவெல்லாம் இருக்கின்ற நிலையைத் தழுவி உணர்ந்த முடிவுகளே. தண்ணீரை எடுத்துக் கொள்வோம். தாகத்தையும் தவிர்க்கிறது. ஆனா ஆழ்த்திக் கொன்றும் விடுகிறது. தாகத்தைத் தவிர்க்கக்கூடிய சக்தி ஒன்றையே அதற் குக் கொடுக்கவேண்டும். ஆழ்த்தும் சக்தி அதன்பால் இருக்கவேகூடாது என்று இட்டுக் கட்டிச் சொன்னால், அதில் என்ன நியாயம் இருக்கிறதோ அந்த நியாயந் தான், இருக்கிறது நமது இஷ்டப்படியே உலகம் அமையவேண்டும் என்பதிலும். ஏதோ ஒருவிதமான முறையில் பிரபஞ்ச தர்மமானது நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. இடையிடையே துன்பங்கள் தோன்று வதை, தள்ளமுடியா இடைத்தோன்றல்கள் என்று கொண்டால்தான் மனச்சாந்திக்கு வழியுண்டு. மேலும் நாம் வாழும் உலகம் இன்னும் பரிபூரண நிலையை அடைந்துவிடவில்லை. ஆனால் அதனை நாடியே இயங்கிக் கொண்டிருக்கிறது. கடவுளும் அந்த இயக்கத்திற்குத் துணை செய்துகொண்டே வருகின்றார். குடும்ப நிலைக்கு வருவதையே பரிபூரணத்தின் இலக்கியமாகக் கொண்டு மக்களை எக்காலமும் தூண்டிக்கொண் டிருக்கின்றார்.

அந்த நிலை எய்திவிட்டால் சர்ந்தியும் சமாதானமும் நிலவிவிடும்.

யுத்தக் கப்பல்களையும் பீரங்கிகளையும் செய்வது குடும்ப நிலைக்கு உலைவைக்கும் செயல்களாகும். அவைகளுக்குச் செலவிடும் பணத்தை மக்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் துறைகளில் செலவிட்டால், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினமாக வாழவேண்டும் என்றுள்ள ஈச்வர சங்கற்பம் எத்தனை இனிதாக நிறைவேறும்! சற்று யோசனை செய்து பார்த்தால் உண்மை தெரியும். இன்னும் நாம் ஈச்வர சங்கற்பத்தினின்றும் எவ்வளவோ தூரம் விலகித்தான் நிற்கிறோம். சர்வ வல்லமையுள்ள கடவுள் நொடிப் பொழுதில் இந்தக் குறையை மாற்றிவிடக் கூடாதா என்று எண்ணலாம். அவரால் மாற்ற முடியாது என்பதில்லை. ஆனால் அவர் தலையிடமாட்டார். அவருடைய சங்கற்பம் புறக்கணிக்கப்படும் போதெல்லாம் அவர் தலையிடுவதே கிடையாது. கஷ்டப்படுகிற ஜீவன்களோடு அவரும் கஷ்டப்படவே செய்கின்றார். அன்றியும் நம்மால் எதைச் சாதிக்கமுடியுமோ, அதை, நாம் சாதிப்பதையே எதிர்பார்க்கின்றாரே யொழிய, தாம் குறுக்கிடுவதில்லை.

இவ்வளவையும் சொல்லிவிட்டு, இன்னும் அபலைகள் படும் துன்பத்தைப்பற்றி, வேறு சில சமாதானங்களும் சொல்கின்றார்.

அபலைகளுக்கும் துன்பம் நேரிடாதபடி இருக்க வேண்டுமானால், மக்களுடைய வாழ்க்கை அமைப்பே வேறுவிதமாக மாற்றப்படவேண்டும். இன்னும் அபலைகள் துயரைப் போக்குவதற்கு அவரும் என்னென்ன செய்யவேண்டுமோ அதைச் செய்துகொண்டுதானிருக்

கின்றார். ஆனால் எந்த முறையில் செய்கின்றார்? பெருவாரியான நன்மைகளைப் பெருவாரியான மக்களுக்குக் கூட்டிவைக்கும் முறைகள் என்னென்னவோ, - அம் முறைகளைத் தழுவியே செய்துவருகிறார்.

கஷ்டத்தை அவர் உண்டாக்காவிட்டாலும், கஷ்டத்தின் மூலம் அநேக நன்மைகள் சித்திக்கும்படி அவர் துணை செய்கின்றார். வேதனையைப் பார்ப்பதன் மூலம், இந்த வேதனையை எப்படித் தவிர்க்கலாம் என்று ஆராய்வதனால் அறிவு வளருகின்றது. கருணை வளருகின்றது. பொறுமை வளருகின்றது. ஆகவே குடும்ப ஒற்றுமைக்கு வேண்டிய எத்தனையோ பெருங்குணங்கள் வளருகின்றன. என்னென்ன குற்றங்களினாலும் குறைகளினாலும் இந்தத் துன்பம் வந்தது என்று உணருவதன் மூலம், இனி வராமல் தடுப்பதற்குரிய மன எழுச்சியும் ஏற்படுகிறது. அல்லாமலும் தகுதியற்ற பாத்திரம் பொருத்தமற்ற முறையில் கஷ்டப்படுவதைப் பார்க்கும்போது, தைரியமும், தியாகபுத்தியும், வீரமும் உள்ளத்தினுள்ளே பொங்கியெழும். அறிவு நிலையில் நின்று பார்த்தால் இதுவே சமாதானம். ஆனால் பக்தி நிலையில் நின்று பார்த்தால் என்ன சமாதானம் கிடைக்கின்றது? அபலைகள் துன்புறும்போது ஆண்டவனும் துன்புறவே செய்கின்றார். நம்மைத் தன்னகங்கொண்டுள்ள இந்தப் பிரபஞ்சத்தையும், அதனை இயக்கி வருகின்ற பிரபஞ்ச தர்மத்தையும் உணர்ந்தாலன்றி நம்மால் வேறு எவ்விதமான சமாதானமும் கூற முடியாது என்று சொல்லி ஆசிரியர் வெதர்ஹெட் முடித்துவிடுகின்றார்.

இதுகாறும் பார்த்துவந்த நியாயங்களின் சாரம் பின்வருமாறு: மனிதக் கூட்டமாகிய குடும்பத்திடையே

வாழவேண்டிய திருக்கிறது. ஆகவே குடும்பத்திலுள்ள இன்பத்தில் எத்தனை பங்கு உண்டோ அத்தனை பங்கு உண்டு குடும்பத்திலுள்ள துன்பத்திலும். அதனாலும் அபலைகள் கஷ்டப்பட நேரிடுகிறது. மற்றும் குடும்பத்தாரிடையே காணப்படும் அறியாமை, தன்னலம், குற்றம் குறைகளாலான குணதோஷங்கள் ஆகிய இவற்றாலும் துன்பம் வரும். கடவுளே இவற்றைச் செய்கிறார் என்பதில்லை. ஆனால் கடவுளால் ஆக்கப்பட்ட பிரபஞ்சத்தில், பிரபஞ்ச அமைப்பின் பயனாக இவைகள் தோன்ற இடமிருக்கின்றது. இவைகள் நிகழாவண்ணம் தடுக்க வேண்டுமென்றால் பிரபஞ்ச அமைப்பையே மாற்றவேண்டும். குடும்ப நிலையில் வாழத் தூண்டுவதே கடவுளின் சங்கற்பம். அப்படி வாழும் முயற்சியில் குடும்பத்தின் காரணமாகவே அபலைகளுக்குத் துன்பம் வந்தால் அபலைகள் மட்டிலுந்தான் வேதனைப்படுகின்றார்கள் என்பதில்லை, ஆண்டவனும் வேதனையை அனுபவிக்கத்தான் செய்கின்றார். குறுக்கிட்டுத் தடுக்கக் கூடாதோ என்றால், தம்முடைய சங்கற்பம் தவிர்க்கப்படும்போது ஆண்டவன் குறுக்கிடுவதே கிடையாது. இவ்வாறான துன்பத்தினால் என்ன இலாபமென்றால், குடும்ப நலனைப் பாதுகாக்கக்கூடிய பண்புகளெல்லாம் வளர்ந்து ஈச்வர சங்கற்பமே நிறைவேற ஏதுவாகின்றது. இவ்வளவு சொல்லியும் மனச்சாந்தி ஏற்பட்வில்லையென்றால், இந்தப் பிரபஞ்சத்தையும், பிரபஞ்சத்தை இயக்கிவரும் பிரகிருதி தர்மத்தையும் முற்றமுழுக்க உணர்ந்துகொண்டால்தான் சாந்தி ஏற்படும். அது விஷயம் அத்தனை எளிதில் அறிந்துவிடக் கூடியது அன்று. இதுவே அபலைகளின் காரணமாக ஸ்ரீமான் வெதர்ஹெட் கூறிய சமாதானத்தின் சாரம்.

இதுகாறும் இயற்கைத் துன்பம் செயற்கைத் துன்பம் ஆகிய இவற்றின் மர்மங்களை உணருமுன், பூர்வாங்கமாக, அபலைகளின் துன்பத்திற்குரிய காரணம் எதுவாக இருக்கமுடியும் என்பதை ஆராய்ந்தோம். ஏன் ஆராய்ந்தோமென்றால் இயற்கைத் துன்பத்திற்கு விஞ்ஞான ரீதியாக சமாதானம் கூறிவிடலாம். செயற்கைத் துன்பத்திற்கு மக்கள் துர்நடத்தையையும் அறியாமையையும் கொண்டு காரணம் கூறிவிடலாம். ஆனால் ஒரு பாவமும் அறியாத அபலைகளின் துன்பத்திற்குக் காரணங்கூறுவது கஷ்டமான காரியம். அல்லாமலும் அது ஒரு மூட்டுக்கட்டை விவகாரம். அதைத் தீர்த்து விட்டால் மேலே குறிப்பிட்ட இரண்டினையும் ஆராய்ந்து விடலாம். அதனாலேதான் அது முதலாவதாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

III

இயற்கைத் துன்பம்

அது யாது என்பதை ஆதியிலேயே பார்த்து விட்டோம். இனி அதனுடைய மர்மத்தைப் பார்ப்போம்.

இந்த உலகமானது காடு மலைகளோடும், ஆறு குளங்களோடும், அத்தி முதல் எறும்பு வரை ஆன உயிரினங்களோடும், திடீரென்று தோற்றுவிக்கப்பட வில்லை. அதைப் பரிபூரணமாக நம்பிக்கொள்ள வேண்டும். சிறிது சிறிதாக எத்தனையோ கோடி வருஷங்களாக மாறி மாறி இந்த நிலைக்கு வந்திருக்கின்றது. சாஸ்திர ரீதியாகச் சொல்லப்போனால் இந்த உலகமானது பரிணம விதிக்குக் கட்டுப்பட்டது. அதாவது உள்ள நிலையிலிருந்து சிறந்து சிறந்து வரும் நியதிக்குக் கட்டுப்பட்டது என்பது பொருளாகும்.

விஞ்ஞான சாஸ்திரிகள் இந்த உலகத்தின் ஆரம்ப நிலையைப்பற்றி என்ன கூறுகின்றார்கள்? அக்னிப் பிழம்பாகச் சுழன்றுகொண்டிருக்கும் சூரியன் ஒரு காலத்தில் வெடிக்க ஆரம்பித்தது. அப்படி வெடிக்கும் பொழுது சிறிய துண்டுகளில் ஒன்றே இந்த உலகம். அக்னிமயமாக இருந்த துண்டானது நாளடைவில் குளிர்ச்சி அடைய ஆரம்பித்தது. குளிர்ச்சி அடையவே நெகிழ்ந்திருந்தது இறுக ஆரம்பித்தது. இன்று மண்ணும் பாறையுமான ரூபத்தில் கட்டியாக இருப்பதன் காரணம் இறுக ஆரம்பித்ததனாலேதான். உஷ்ணமெல்லாம் ஆவியாக மாறி, மழையாகப் பொழிந்து, இன்று நாம் காணும் கடலாக பூமியைச் சுற்றிப் படிந்து விட்டது. ஆகவே நீரும் நிலமும் என்ற அம்சங்கள் தோன்றிவிட்டன. பிறகு உயிரினங்களின் தோற்றம் ஆரம்பமாயிற்று.

நீரிலே முதல் முதல் தோன்றிற்று. அப்பாலே நிலத்திற்குப் படர்ந்தது. நீரிலும் நிலத்திலுமாக வாழ்ந்தது. பின்னர் நீரிலே சில தங்கின, சில நிலத்திலே தங்கின. இவ்வாறுக உள்ள நிலையிலிருந்து உயிரினங்கள் சிறந்துகொண்டே சென்றன. அதாவது பரிணமித்தன. இப்போது பரிணமம் மனித நிலைக்கு வந்திருக்கிறது. இன்னும் என்ன நிலைக்குப் போகுமோ தெரியாது. இந்த இடத்தில் இடைப்பிறவரலாக ஒன்றைச் சொல்ல வேண்டியதிருக்கிறது.

உலகத்திலுள்ள தீமைநிலை கண்டு மனிதன் தானே கவலைப்படுகின்றான். அதற்காக வேண்டி என்னவெல்லாமோ தத்துவங்களை அளந்துகொட்டி நொண்டிச் சமாதானங்களைக் கூறுகின்றான். பரிணம நிலையில் ஆகக்கடைசியில் வந்தவன் மனிதன். அவன் தோன்

றினவுடனேதான் துன்பம் வந்துவிட்டதோ? அவன் தோன்றுவதற்கு முன்னரும் இந்த உலகம் இருந்திருக்கத்தானே செய்கின்றது. அந்தக் காலத்திலும் உயிரினங்கள் வாழ்ந்திருக்கத்தானே செய்கின்றன. அவைகளும் ஒன்றையொன்று கொன்று தின்றதாகவே தெரிகிறது. ஆகவே துன்பம் என்பது மனிதன் தோன்றுவதற்கு முன்னரும் இந்த உலகத்தில் உண்டு. அதற்கு என்ன சமாதானம் கூறுவது என்று சில ஆராய்ச்சியாளர்கள் கேட்கின்றார்கள்.

கடவுளுடைய படைப்பினுள்ளே, கடவுள்தான் துன்பத்தைப் புகுத்தாரோ, அல்லது படைப்பின் அமைப்பினால் உண்டான ஒன்றோ, எதுவோ, எப்படியோ தெரியவில்லை. துன்பம் என்ற ஒரு அம்சத்தை நாம் காண்கின்றோம். அது எப்பொழுது இருந்தால்தான் என்ன? அதனுடைய மர்மம் என்ன என்பதைத்தானே ஆராயவேண்டும்.

மீண்டும் பரிணம நிலையைத் தொட்டுப் பார்ப்போம். இன்று மனித அளவில் வந்து நிற்கும் பரிணம நிலை நாளை எந்த நிலைக்குச் செல்லுமோ நம்மால் சொல்ல முடியாது. நிலத்திலும், நீரிலும், வான்வெளியிலும் வேக ஊர்திகளிலேயே இயங்கி வருகின்ற கார்ணத்தால், எதிர்காலத்தில் தோன்றும் மனிதன், ஊர்திகளை நடத்திச் செல்வதற்கும், அவைகளால் வரும் விபத்துக்களைத் தாங்கிக்கொள்வதற்கும் தகுதியான உறுப்புக்களோடே தோன்றலாம். உடம்பும் வளைந்திருக்கும். கைகளும் நேர்கோடு போன்றில்லாமல் வளைந்து சுங்கான்னைத் திருப்பும் லாயக்குள்ளனவாகவே காணப்படலாம். விஞ்ஞான முதிர்ச்சியினாலே தாய் வயிற்றிலிருந்து பிறக்க வேண்டும் என்ற நியதியில்லாமல், சோதனைக் குழாய்களிலே, ரஸ்யன ரீதியாக்குழந்தைகளைத் தோற்று

வித்துவிடலாம். பிறக்கும் குழந்தைகளில், கூலி இனம், ஆராய்ச்சி இனம், சுக்வாசி இனம், இன்னும் இம்மாதிரி யான பல்வேறு இனங்களை மின்சாரசக்தி மூலம் உரு வாக்கிவிடலாம். இப்படியெல்லாம் எதிர்காலம் மாற்றம் அடையலாம். யார் கண்டார்கள்? இன்னும் பேராசிரியர் சர். ஜேம்ஸ் ஜீன்ஸ் (Sir. James Jeans, author of 'The Mysterious Universe') என்பவரிடம் போய்க்கேட்டால் மூளையே கொதித்துப் போகும்படி பதில் சொல்லி விடுவார். வானசாஸ்திரக் கண்ணோடு இந்தப் பிரபஞ் சத்தைப் பார்த்து, நாம் நினைக்கிற முடிவைத் தெரி விக்காது, நாம் மதி கலங்கிக் கண்ணீர் விடும்படியான முடிவைத் தெரிவிக்கின்றார். இந்தப் பிரபஞ்சம் மனித ஜீவியத்தைப்பற்றி அக்கறைகொண்டதாகக் காணப் படவே இல்லை. மனிதனுடைய இலக்கியம், உணர்ச்சி, சிருஷ்டி, கலை, காதல், மதம் ஆகிய இவைகளெல்லாம் இப்பிரபஞ்சத்தின் இலக்கியத்திற்குப் புறம்பான காரி யங்கள். இன்னும் சொல்லப்போனால் உயிர் இயக்கத் திற்கு விரோதமாக இருப்பதாகவே காணப்படுகிறது. உயிர் வாழ்க்கைக்கு உகந்ததாகக் காணப்படும் நமது உலகமானது, எல்லையற்ற பெருவெளியின் நூறு கோடியே கோடிப் பகுதியில் ஒரு பகுதி. ஆகவே ஒரு திவலை. ஒரு சிறிய மணல் துகள். நமது வாழ்க்கைக்கு உகந்த சீதோஷ்ணத்தின் கதியும் அப்படிக்கு அப்படித்தான். சூரியனை நாளும் நாளும் தனது உஷ்ணத்தில் குறைபாடு எய்திக்கொண் டிருக்கிறது. ஒருநாள் ஒன்றுமில்லாமல் போய்விடும். நாம் வாழும் பூமியும் உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய உஷ்ணத்தை நாடி, நாளும் நாளும் சூரியனை அணுக வேண்டியதைவிட்டு, எல்லைப் பெருவெளிக்குள்ளேயே

நகர்ந்துகொண் டிருக்கின்றது. ஏதாவது கோள்நிலை மாற்றம் ஏற்பட்டாலொழிய பூமி இவ்வாறு சென்று கொண்டே யிருக்கும். முடிவில் எவ்விதமான உயிர்த் தோற்றத்திற்கும் தகுதியற்றதாகப் போய்விடும். மேலும் நமது சூரியனுக்கு வாய்த்த தலைவிதிதான் இதர சூரியன்களுக்கும். மனித ஜீவியம் என்பது இந்த உலகத்திற்குள்ளே எப்படியோ தவறுதலாக வந்து விட்டது. உலகமாகிய இந்த மணலை எத்தனை அளவு தான் இறுக்கமாகக் கட்டிக்கொண்டு நின்றாலும், இறுதியில் எல்லாம் தொலைந்துபோகும். இதுவே அவர் கூறுவது.

"அட பாவி ஆண்டவனே, இப்படியான உலகத்திலா எங்களைப் படைக்கவேண்டும்! இது என்ன சதியாக இருக்கிறது! உன்னை அன்பின் வடிவம் என்றும் கருணையின் கொள்கலம் என்றும் பித்தர்கள் அழைக்கின்றார்களே" என்று சொல்லத் தோன்றும். ஆனால் அவனுடைய சிருஷ்டி மர்மம் யார்தான்?

மேலே கூறியதெல்லாம் இருக்கட்டும். ஒன்றை மட்டிலும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வோம். உலகம் பரிணம விதிக்குக் கட்டுப்பட்டு இயங்குகின்றது என்ற ஒன்றைமட்டிலும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மேலே செல்வோம். அப்படியான ஒரு உலகை ஆண்டவன் நமக்குப் படைத்துத் தந்திருக்கின்றான். ஞானிகளுடைய பாஷையை உபயோகித்துச் சொல்லுகிறதானால், ஐவகையாதிய பூதங்களை வகுத்து, அதிலுள்ள சராசர பேதமான யாவையும் வகுத்து, அவைகளையெல்லாம், இன்னதற்காகத்தான் இருக்கவேண்டும் என்று நம்மால் திட்டவட்டமாகச் சொல்லமுடியாத ஒருகதிக்கு, நடத்திச் செல்லுகின்றான்.

"சாட்டிநிற்கும் அண்டமெல்லாம் சாட்டையில்லாப்
பம்பரம்போல்
ஆட்டிவைத்து" அருள்லீலை புரிகின்றான்.

வேண்டுமானால் ஒன்றைமட்டிலும் ஓரளவு துணிந்து கூறலாம். உலகம் பரிபூரணம் அடைவதற்காகவே இவ்வாறு செய்கின்றான் என்று சொல்லாம். மற்றும் அப்படித்தான் சொல்லவும் தோன்றுகிறது. அந்தப் பரிபூரணத்வத்தின் தன்மையை, இப்படித்தான் இருக்கும் இப்படி இருக்கமுடியாது, என்று நம்மால் அறுதியிட்டுச் சொல்லவே முடியாது. அவனுடைய நோக்கத்தின் முழுநீர்மையையும் நாம் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? தெய்வமணமும் தென்னர் தமிழ் மணமும் திகழ்த்தோங்கும் பொதிகை மலையை வர்ணிக்கும் குமரகுருபரர்,

"சிங்கமும் வெங்கரடியுடன் விளையாடும் ஒருபால்;
சினப்புலியும் மடப்பிணையும் கிளைத்திடும் அங்கொருபால்;
வெங்கரடி மரையினெடும் விளையாடும் ஒருபால்;
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்."

என்று இவ்வாறுகத் தோன்றும் முரண்பாடற்ற ஓர் நிலையைக் கனவு காண்கின்றார். ஒரு வேளை இப்படி முரண்பாடற்ற நிலைதான், ஆண்டவனுடைய படைப்பின் இறுதிப்பயனை, பரிபூரணத்வமாக இருக்குமோ அல்லது வேறு எதுவாக இருக்குமோ தெரியாது.

பரிணம விதிக்குக் கட்டுப்பட்டே இயங்கிவருகிறது என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. உள்ள நிலையிலிருந்து சிறந்து சிறந்து, நாளும் நாளும் ஆண்டவன் குறித்த கதியை நாடிச் சென்றுகொண்டே யிருக்கின்றது. அம்மட்டோடு நிறுத்திக்கொள்வோம்.

இனி பரிணும விதிக்குக் கட்டுப்பட்டு இயங்கும் இயல்பை ஆராய்வோம். பரிணும விதிக்குக் கட்டுப் பட்டு இயங்கும் உலகத்தின் முடிவு இன்பமா அல்லது நன்மையா என்றால் நன்மைதான். நன்மை நிலவ வேண்டுமானால் ஒழுக்கம் நிலவவேண்டும். இன்று தண்ணீராகத் தோன்றும் ஒன்று நாளை தாராக்கோழி யாக மாறிவிடக்கூடாது. இன்று பலாமரமாக இருக்கும் ஒன்று நாளை பச்சைப்பாம்பாக மாறிவிடக்கூடாது. எது எது எந்த நிலையில் நின்று இயங்குகிறதோ, அது அது அந்த நிலையில் நின்று, அதற்கென்று விதிக்கப் பட்ட விதியை மீறாது இயங்கிக்கொண்டே யிருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒழுக்கம் நிலவ வழியுண்டு. இன்னும் ஒழுக்கத்தைத் தூண்டுவதற்குரிய வேறு சாத னங்களும் இருக்கின்றன. சங்கடம், தடங்கல், முயற்சி ஆகிய இவை ஒழுக்கத்தைத் தூண்டுகின்றன. இயங்கு கின்ற எந்த உயிரும் மேலே கூறிய சங்கடம், தடங்கல், முயற்சி ஆகிய இவற்றினால் பாதிக்கப்படாமல் இயங்கு தல் என்பது முடியாத காரியம். இவைகளின் இயல்பைத் தழுவி ஒழுக ஒழுக் நன்மை சித்திக்கும். ஒழுகத் தவறி விட்டால் அழிவே ஏற்படும். ஒரு சில உதாரணங்களைப் பார்ப்போம்.

ஓட்டைச்சிவிங்கியை எடுத்துக் கொள்வோம். நெட்டைக் கழுத்துள்ளவைகளும் கட்டைக் கழுத்துள்ள வைகளுமாகப் பிரிந்து பிரிந்து, கடைசியில் கட்டைக் கழுத்துள்ள இனங்கள் அழிந்தே போய்விட்டன. ஏன்? கழுத்தால் எட்ட முடிந்த அளவு இலைகளைத் தின்று தின்று வளர்ந்தவைகள், ஒருமட்டிலும் தாழ்வான நிலையி லுள்ள இலைகளையெல்லாம் தின்று முடித்துவிட்டன. இனிமேல் இலை வேண்டுமென்றால் கழுத்தை நீட்டினால்

தான் முடியும். ஆகவே கழுத்தை நீட்டப் பழகின வைகள் பிழைத்தன. கட்டைக் கழுத்துள்ள இனங்கள் அழிந்தன. டோடோ என்ற பட்சி வர்க்கத்தை எடுத்துக் கொள்வோம். இரை தேடச் சென்ற இடத்தில், தரையைத் தொட்டுக் கொண்டே பழங்கள் கிடந்தன. ஆகவே தரையிலிருந்து எட்டும் பழங்களை யெல்லாம் தின்று தின்று உடல் கொழுக்கவே, எதிரி களிடமிருந்து வேகமாகப் பறந்து சென்று தப்பிக்கும் சுபாவம் குறைய ஆரம்பித்தது. உடல் தடிக்கவும் பறக்கும் சக்தி குறையவும், வேட்டை யாடுகின்ற வர்களுக்கு அந்த இனங்களை வேட்டையாடுவது மிக சுலபமாகப் போயிற்று. அடித்து அடித்துத் தின்று விட்டார்கள். ஆகவே அந்த இனம் மறைந்து விட்டது. அவைகள் ஏன் அழிந்தன என்றால், அவைகளுக்குரிய ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காது போயின. சங்கடம், தடங்கல், முயற்சி ஆகிய இவைகளின் மர்மத்தை அனுசரித்து ஒழுகவும் கற்றுக் கொள்ளவில்லை. கற்றுக்கொண்டு ஒழுகிவந்த உயிரினங்கள் தப்பித்துக் கொண்டன.

இந்த இடத்தில் ஒரு கேள்வி கேட்கலாம். தட்டுத் தடங்கல் எதுவும் இல்லாது ஏன் இருக்கக்கூடாது என் பதே அந்தக் கேள்வி. ஒருவேளை அது பரிணம விதியின் அவசியமாக இருக்கலாம். அதெல்லாம் சிருஷ்டி மர்மத்தைச் சார்ந்த இரகசியங்கள். நம்மால் எளிதில் உணர்ந்து கொள்ள முடியாது. வேண்டுமானால் ஏன் இருக்கக்கூடாது என்பதை விட ஏன் இப்படி இருக் கிறது என்பதற்கு ஒரு சமாதானம் கூறலாம்.

பரிணம விதியைத் தழுவி உலகம் இயங்குகின்றது என்பதைப் பார்த்தோம். அது ஒரு நியதியை வகுப்

படையாகக் கொண்டே ஒழுகி வருகிறது என்பதையும் பார்த்தோம். இப்படி ஒழுகுகின்ற உலகத்திலே இயற்கை விபத்துக்கள் நிகழுகின்றன. அவைகளுக்கு என்ன சமாதானம் சொல்லலாம்?

பரிணம விதிக்குக் கட்டுப்பட்டு இயங்கும் உலகம் ஒரு சில விதிகளைத் தழுவித்தான் இயங்கும். அப்படி இயங்கும்போது, அவசியம் நேரிடும் பொழு தெல்லாம், தன்னைச் சரிக்கட்டிக் கொண்டே இயங்க வேண்டியதாக இருக்கின்றது. அவ்வாறு சரிக்கட்டிக் கொள்ளும் போது, ஏதோ ஒரு பூகம்பம் நிகழும். மற்றும் படியான ஒரு இயற்கை நிகழ்ச்சி நிகழும். "அட தெய்வமே இப்படியெல்லாம் செய்யலாமா" என்று நொந்து கொள்வதனால் பயனில்லை. பரிணம விதி தழுவி இயங்கும் அவசியத்தால் இப்படி ஏற்பட்டுவிட்டது என்று உணர்ந்து கொள்ள வேண்டும். பரிணம விதி ஒன்றை யும் தழுவ விடாது இன்று உள்ளபடியே ஒரு நாள் திடீ ரென்று கடவுள் படைத்து விட்டார் இந்த உலகத்தை என்று கொண்டால், அப்போது கடவுளைக் கண்டிக்க நியாயம் உண்டு. திரிகாலமும் உணர்ந்த கடவுள் ஏன் இப்படிச் செய்யவேண்டும் என்று கேட்கலாம். ஆனால் உண்மை வேறுக இருக்கும்போது கண்டனத்திற்கு வழி இல்லை.

அல்லாமலும் முரண்பாடாக இருக்கின்ற இயற்கை யினால் மனிதனுக்குக் கிடைத்திருக்கின்ற இலாபம் என்ன? உலகத்தில் துன்பம் என்ற அவசியம் இல்லாது போய்விட்டால், வீரமே, தீரமே, ஞானியோ தோன்று வதற்கு இடமே கிடையாது. மண்ணில் உதித்தாலும் விண்ணரசை ஆளலாம் என்ற மதி உதயமாகாது. ஒவ்வொரு வாழ்க்கை நாடகத்திலும் துன்ப அங்கம்

தொக்கியே நிற்கிறது. அதுமட்டிலும் இல்லை என்றிருக்குமானால் சரித்திர மெல்லாம் நிகழ்ச்சிக் குப்பை, கலையெல்லாம் அசலுக்கு நகல், கவிதை யெல்லாம் சுருதி யிழந்த சொத்தைக் குழல். வேதனையே சக்திகளைத் திரட்டும் தளகர்த்தன். மதி நலத்தைக் கூட்டிவைக்கும் மாமருந்து. சில உதாரணங்களைப் பார்ப்போம்.

இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் கொள்வோம். இப்போழுது கப்பல் நாகரிகத்தில் சிறந்து விளங்கும் தேசங்களுள் ஒன்றுகத் திகழ்கின்றது. அந்நாட்டைச் சுற்றி வளைந்து கிடக்கும் கடலானது, ஏதோ கரண்டைக் கால் அளவு; ஆழமுடையதாக இருந்திருக்குமானால், தோணி கண்டு பிடிக்கவோ கப்பல் கண்டு பிடிக்கவோ எவ்வித அவசியமும் ஏற்பட்டிருக்காது. கடக்கமுடியாத பெருங்கடலாக அமைந்ததன் பயனாக, அந்நாட்டு மக்கள் தோணிகளைக் கண்டுபிடித்தார்கள். அதனால் வருகிற ஆபத்துகளுக்கெல்லாம் எத்தனையோ மக்களை இரை கொடுத்தனர். அப்பாலே படிப்படியாக பெரிய படகுகளையும் கப்பல்களையும் எவ்வளவோ தியாகம் செய்து கண்டு பிடித்துவிட்டார்கள். மிதக்கும் நகரங்களாக இன்று எத்தனையோ கப்பல்கள் எழு கடலையுஞ் சுற்றிப் பவனிவருகின்றன. அக் கப்பல்களிலே முழங்கும் வாத்தியமுழக்க மெல்லாம்

"ஜய பேரிகை கொட்டடா, கொட்டடா—ஜய பேரிகை கொட்டடா.
பயமெனும் பேய்தனை ஒழித்தோம்—பொய்மைப்
பாம்பைப் பிளந்துபிரைக் குடித்தோம்
வியனுல (கு) அனைத்தையும் அமுதென நுகரும்
வேதவாழ் வினைக்கைப் பிடித்தோம்"

என்ற பாடலின் பொருளை முழக்கும் முழக்கந்தானே.

"முரண்பாடான இயற்கையும் அதனை எதிர்க்கவல்ல மனிதத்திறனும் நாகரிகஉற்பத்திக்கு எவ்வளவோ துணை செய்துள்ளன. மனித சக்தியினால் சாதிக்கவல்ல மாபெருங் காரியங்களுக் கெல்லாம் வழியும் வகையுமாய் நின்று உதவுவதும் அதுவே" என்கிறார் ஒரு பாதிரி.

"A challenging environment and man's gallant response thereto have played the decisive role in the birth of civilization- It is often the occasion and the raw material of the greatest achievements of the human spirit."

இன்னும் இது பற்றி ஆங்கில மகாகவியான ஷேக்ஸ்பியர் என்ன கூறுகின்றார் என்பதைப் பார்ப்போம்.

"தீன்ப மெனத்தோன்றும் தோற்றத்தின் உள்ளெல்லாம்
இன்பத்தின் சாயைகள் இருப்பதனைக் கண்டிடலாம்"

"There is some Soul of goodness in things evil
would men observingly distil it out"

ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

பல ஆண்டுகளுக்கு முன் ஐப்பானில் பெரிய பூகம்பம் நிகழ்ந்தது. அதன் பயனாக எவ்வளவோ சேதம் ஏற்பட்டது. அதனால் வந்த இலாப மென்ன? உலகமே ஐப்பானிடத்தில் எல்லையற்ற அன்புகாட்ட முன் வந்து எவ்வளவெல்லாமோ பொருளுதவி செய்தது! எத்தனை ஆண்டுகளாக முயன்றாலும் சாதிக்கமுடியாத ஒரு கலப்பற்ற சர்வதேச உறவை, நொடிப்பொழுதில் சம்பாதிக்க வழிகிட்டிவிட்டது. உள்நாட்டிலே இருந்த விரோத மனப்பான்மையெல்லாம் மாறி, நாட்டு நலனே பிரதான காரியமாகவும் ஆகிவிட்டது. இது ஒரு பெரிய இலாபந்தான். இந்த இலாபத்தைக் கருதும்போது,

ஜப்பானுக்கு நேர்ந்த விபத்தின் கொடுமையை நாம் மறந்துவிடுகின்றோம்.

இப்படியாக வேண்டுமானால் தீமையின் தோற்றத்திற்கு, விஞ்ஞான அறிவைக் கொண்டும் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டும், ஏதோ சமாதானம் சொல்லலாம். எந்தவிதமான இயற்கை விபத்து நேரிட்டாலும் பரிணம விதியின் மர்மத்தை உணர்ந்து பொறுத்துக் கொள்ளவேண்டும். அல்லாமலும் அவ்வாறு நிகழ்வதற்கு மனிதன் எத்தனை அளவில் காரணமாக இருந்தான் என்பதை ஆராய்ந்து பார்க்க இடமிருந்தால், அதனையும் ஆராய்ந்துவிட வேண்டும்.

மேலும் இயற்கை விபத்தால் வேதனை நிகழ்ந்தால், அது ஏதோ ஓர் குறிப்பிட்ட இடத்திற்குத்தான் என்பதில்லை. பிரபஞ்சம் முழுவதுமே அந்த வேதனையை அனுபவிக்கின்றது. ஆண்டவன் அனுபவிக்கின்றார். ஓர் உயிர் படும் வேதனை பிரபஞ்சம் அனைத்தாலும் அனுபவிக்கப் படுகிறது என்பதை விளக்க ஒரு சில பாடல்களைப் பார்ப்போம்.

(1) "கூவிப் பறக்குமொரு — கிளியினைக்
கூட்டில் அடைத்துவைத்தால்
தேவர் உலகமெல்லாம் — அதுசினத்
தீயை எழுப்பிடுமே.

(2) மன்னிய சோலையிலே — ஒரு குயில்
வாடி வருந்துமெனில்
கின்னரர் கிம்புருடர் — தளர்ந்துதம்
கீதம் இழப்பாரையோ" —(தே. வி)

"A Robin redbreast in a cage
Puts all Heaven in a rage
A dog starved at his master's gate
Predicts the ruin of a state." —William Blake

இப்படியாகும் பெரியார்களுடைய கருத்து.

இனி மனிதர்களால் செய்யப்படும் செயற்கைத் துன்பங்களை ஆராய்வோம்.

பெரும்பாலான இன்னல்களுக்கு மக்கள்தாம் காரணம் என்றால், அது மிகையே இல்லை. காலராகிருமியை மனிதன் படைக்காவிட்டாலும் அதன் உற்பத்திக்கு வேண்டிய காரியத்தைச் செய்கின்றான். இன்னும் அநேகர் வாழ்க்கைத்தத்துவம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ளாமலே வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள். அப்படி வாழ்கின்றவர்களைப் பார்த்த ஒரு ஜர்மன் தத்துவ ஞானி மனங்கொதித்துத் திட்டுகின்றார். "பொதுஜனம், பொதுஜனம். என்ன பொதுஜனம் வாழுகிறது? எத்தனை மந்தமதிகள் கூடிய கூட்டம் இந்தப் பொதுஜன மென்ற கூட்டம். இவர்கள் செய்கிற செயல்களுக்குப் பரிகாரமாக ஒவ்வொரு நாளும் ஒரு தேரையை விழுங்கினாலும் காணாது. அநியாயம்" என்று அத்தனை வெறுப்போடு திட்டுகின்றார். அவருடைய மனம் அவ்வாறு பொங்கி எழுகின்றது.

இனி நாம் பொதுப்படையான சில அனுபவங்களைப் பார்ப்போம். இலையுந் தளிருமாக மின்னொளி செய்து விருந்து தரும் சோலைக்குள்ளே இருவர் செல்கின்றனர். மரங்களின் ஊடேகூடி சுடர்ப்பரிதியின் ஒளிக்கதிர்கள் விளையாடி வருவதை, மக்களிடையே அபூர்வமானவன் என்று கருதப்படும், கவிஞன் பார்த்து, உள்ளத்தையே பறிகொடுத்து நிற்கின்றான். உருகுகின்றான். பாவம் கனியப் பல்லாண்டும் பாடுகின்றான்.

(1) "தேமலர்க் கொரு அழுதன்ன ஜோதி,
சேர்ந்து புள்ளினம் வாழ்த்திடும் ஜோதி,
காமமுற்று நிலத் தொடு நீரும்
காற்றும் நன்கு தழுவி நகைத்தே
தாம் மயங்கி கல்லின்புறும் ஜோதி."

(2) "நீர்ச்சுனைக் கணம் மின்னும் நிலக,
நெடிய குன்றம் நகைத் தொழில் கொள்ள,
கார்ச் சடைக் கருமேகங்க ளெல்லாம்
கனகம் ஒத்துச் சுடர்கொண் டுலாவ"

என்று பாடுகின்றது அவனுடைய உள்ளம்.

(3) "காதல் கொண்டனை போலும் மண்மீதே
கண் பிறழ்வின்றி நோக்கு கின்றுயே!
மாது பூமியும் நின் மிசைக் காதல்
மண்டினுள் இதில் ஐய மொன்றில்லை"

என்று பாவிக்கின்றது அவனுடைய இதயம்.

(4) "பரிதியே, பொருள் யாவிற்கும் முதலே,
பானுவே, பொன்செய் பேரொளித் திரளே,
கருதிநின்னை வணங்கிட வந்தேன்;
கதிர்கொள் வாண்முகம் காட்டுதி சற்றே."

(5) "காதம் ஆயிரம் ஓர்கணத் துள்ளே
கடுகியோடும் கதிரினம் பாடி
ஆதவா நினை வாழ்த்திட வந்தேன்
அணிகொள் வாண்முகம் காட்டுதி சற்றே."

என்றெல்லாம் பிரார்த்தனை செய்கின்றான்.

(6) "கீழ்த்திசையில் ஞாயிறுதான் கேடில்
சுடர்விடுத்தான்,
பார்த்த வெளியெல்லாம் பகலொளியாய்
மின்னிற்றே!
தென்னை மரத்தின் இலையிடையே
தென்றல்போய்
மன்னப் பருந்தினுக்கு மாலையிட்டுச்
சென்றதுவே!
தென்னை மரக்கிளைமேல் சிந்தனையோ டோர்
காகம்
வன்னமுற வீற்றிருந்து வானை
முத்தம் இட்டதுவே!

இவ்வாறெல்லாம், பாவனை முதிர்ச்சியால், அளப்பரிய இன்பத்தினை அள்ளிப் பருகுகின்றான்.

பக்கத்திலே வருகின்றான் அடுத்தவன். துப்பாக்கியும் கையுமாக வந்து, சுடர்ப்பரிதியையா பார்க்கின்றான்? குருவி எங்கே, கொக்கு எங்கே என்று தேடுகின்றான்.

மன்னப் பருந்தினுக்கு மாலையிடும் காட்சி தெரிகிறதா? வன்னமுற வீற்றிருந்து வானை முத்தமிடும் காட்சி கண்ணில் படுகிறதா? மின்னுகின்ற தென்கடலில் விழியெறியும் மர்மம் தெரிகிறதா?

எத்தனை வித்தியாசம்! எத்தனை முரண்பாடு! கோயிலுக்குள் ஐந்துபேர் போகின்றார்கள். "ஆஹா, அலங்காரம் எத்தனை அருமை!" என்கின்றான் ஒருவன். "ஆலய அமைப்பைத்தான் என்ன சொல்ல!" என்கிறான் அடுத்தவன். "மேளந்தான் எத்தனை இனிமை" என்கிறான் மற்றொருவன். "இன்று ஐன்மமே புனிதமுற்றது" என்று நெஞ்சு நிறைந்து பேசுகின்றான் வேறொருவன். "அடடா, நைவேத்யமா தேவாமிர்தம்" என்கிறான் இன்னொருவன். இப்படித்தான் வாழ்க்கையிலும். பார்வை வேற்றுமையாலும் பாவனை வேற்றுமையாலும் எத்தனை எத்தனையோ விபரீதங்கள் புகுந்துவிடுகின்றன. உண்மையையே மறைத்துவிடுகின்றன.

(1) "காயமே வெறும் பொய்யடா
காற்றடைத்த பையடா"

என்கிறான் ஒருவன்.

(2) "இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளமிய வான்பெருஞ் செல்வமும் நில்லா"

என்று புலம்புகிறான் ஒருவன்.

"பொய்மாயப் பெருஞ்சுழியில்
படவேண்டாம், படவேண்டாம்"

என்று பரிவோடு எச்சரிக்கை செய்கின்றான் ஒருவன்.

"சோலையிலே மரங்களெல்லாம்
தோன்றுவதோர் விதையிலென்றால்
சோலை பொய்யாமோ,
சொல்லொடுஞ் சேர்ப்பாரோ"

"காண்பதுவே உறுதிகண்டோம்
காண்பதலால் உறுதியில்லை
காண்பது சக்தியாம்—இந்தக்
காட்சி நித்தியமாம்"

என்று முழங்குகின்றன இன்னொருவன்.

இவ்வாறு ஒவ்வொருவர் பேர்க்கும் ஒவ்வொரு விதமாக இருக்கின்றது.

மனிதனுடைய துன்பங்களில் பெரும்பாலானவைகளுக்கு மனிதனே காரணம். உதாரணமாக ஒன்றைப் பார்ப்போம். சென்ற மகாயுத்தத்தில் மெசப்பொட்டேமியா துருக்கியர் வசமாயிற்று. அவ்வூரிலுள்ள பழமரங்களுக்கெல்லாம் துருக்கியர் வரி விதித்தனர். வரிக்குப் பேர்திய பலனைத் தராத மரங்களையெல்லாம், விரோத மனப்பான்மை காரணமாக, மெசப்பொட்டோமியர்கள் வெட்டி வீழ்த்தினர்கள். ஏறக்குறைய அநேக மரங்கள் வீழ்த்தப்பட்டுவிட்டன. ஆகவே ஊருக்குள்ளே பச்சை பசுமை யெல்லாம் மறைந்துவிட்டது. பின்னர் என்ன நடக்கும்? சூரிய உஷ்ணக் கொடுமையால் அநேகர் இறந்தனர். இதை நாம் என்ன சொல்வது? கடவுள் செயல் என்று சொல்லுவதா? மனிதன் செயல் என்று சொல்லுவதா? மனிதன் செயலால் வந்த மடமைதான். வேறுஎன்ன? தாவரவர்க்கங்களிடையும் மிருக வர்க்கங்களிடையும் தலையெடுக்கும் கோளாறுகளுக்கெல்லாம் பெரும்பாலும் மனிதன்தான் காரணம் என்பது அறிஞர் ரேலாங்கெஸ்ட்டர் (Raylankester) என்பவருடைய கருத்து. இவ்வாறு மனிதனே பெரும்பாலும் காரணஸ்தனாக இருக்கின்றன.

இந்தமாதிரி மனிதனிடம் இருக்கின்ற குறையைப் பார்த்து, அதற்குப் பரிகாரமாக, ஓர் உபாயத்தை நமக்கு உணர்த்துகின்றார் ஸ்ரீமான் ஹக்ஸ்லி.

ஏதாவது ஒரு சக்தி, அது கடவுளாக இருந்தாலுஞ்சரி அல்லது வேறு எதுவாக இருந்தாலுஞ்சரி, அந்த சக்தியானது நன்மை செய்யக்கூடிய குணத்தைக் கொடுக்குமேயானால், இருகையும் ஏந்தி வாங்கிக் கொள்ளலாம் என்கிறார். இது ஒப்புக்கொள்ள முடியாத ஒன்று. ஏனென்றால் மனிதனுடைய சுதந்திரத்திற்கும் அறிவுப் பெருமைக்கும் அகௌரவத்தைத் தருகின்றது. இதை மறுத்து இன்னொருவர் வேறு ஒன்றைச் சொல்லுகின்றார். கடவுள் வந்து தமது வலது கையில் பரிபூரண உண்மையையும் இடது கையில் உண்மையை நாடும் அறிவுத் திறனையும் வைத்துக்கொண்டு, எதுவேண்டும் என்று கேட்டால், கண்டிப்பாக, "சுவாமி, வலது கையிலுள்ள பரிபூரண உண்மை எனக்கு வேண்டாம். ஏனென்றால் அது உமக்கே உரியது. எனக்கு உண்மையை நாடும் குணத்தை மட்டிலும் கொடுத்தால் போதுமானது என்று கூறுவேன்" என்கிறார். அவர் சொல்வதையே நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனென்றால் நாமாக முட்டி மோதி அறிவதிலேதான் சுகமிருக்கின்றது. அல்லாமலும் நினைத்ததெல்லாம் நினைத்த நேரத்தில் சித்தியாகி விட்டால், எவ்வளவோ நேரம் மிஞ்சிவிடும். அதை என்ன செய்வதென்ற திகைப்பும் ஏற்பட்டு விடும்.

நாமாக முட்டி மோதி அறிவதனாலே இலாபம் உண்டு என்று சொன்னோம். எப்படி என்பதைப் பார்ப்போம்.

போரின் பயனாக நாம் தியாகம் செய்யப் பழகுகின்றோம். எங்கே அடிமைத்தனம் தாண்டவமாடுகிறதோ அங்கேதான் சகோதரத்வம் தோன்றவும் வழி ஏற்படுகின்றது. எங்கே விபசாரம் தலைவிரித்து ஆடுகிறதோ அங்கேதான் பெண்ணின் பெருமையை உணரும் சந்தர்ப்பமும் உருவாகின்றது. இன்னல்களின்

பயனுகவே மனிதன் மனிதனுகின்றன். இன்னும் அமரனுகவும் வழி ஏற்படுகின்றது. ஒழுக்கம் பிறக்கின்றது. மதி ஓங்குகின்றது. இன்னும் எத்தனை எத்தனையோ பண்புகளெல்லாம் பிறக்கின்றன. ஒருவேளை துன்பம் என்பதே இல்லாது போய்விடுமானுல், இந்தப் பண்புகளெல்லாம் பிறவாதே போனுலும் போய்விடும்.

இப்படியாக வேண்டுமானுல், இயற்கைத் துன்பம் செயற்கைத் துன்பமாகிய நியதிகளுக்கு ஒருவிதமான சமாதானத்தைக் கூறலாம். எல்லாம் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு கூறமுடியுமேயொழிய தர்க்கரீதியாக வரையறுத்துக் கூறுவது கடினம். சுருங்கச் சொன்னுல் அறிவுநிலையில் நின்று கூற முடியாது. வாழ்வியலை வைத்துக்கொண்டே ஏதேனும் கூறலாம்.

IV

இனிமேல் தீமையினுடைய பிணிப்பைவிட்டு நீங்குவதற்கு ஏதாவது வழி உண்டா என்பதைப் பார்ப்போம்.

ஞானியிடம் சென்று ஒரு வழி சொல்லும் என்றுல்,

(1) "உள்ளும் புறமுமாய்
உள்ள தெலாந் தானுகும்
வெள்ளம் ஒன்றுண்டாம்(அ)தனைத்
தெய்வ மென்பார் வேதியரே.

(2) எல்லாம் தானுக
இருந்திடினும் இஃதறிய
வல்லார் சிலரென்பர்
வாய்மையெலாங் கண்டவரே.

(3) இப்பொருளைக் கண்டார்
இடருக்கோர் எல்லைகண்டார்
எப்பொருளுந்தாம் பெற்றிங்(கு)
இன்பநிலை எய்துவரே

(4) வெள்ளமடா தம்பி,
விரும்பியபோ தெய்திஞின(து)
உள்ளமிசைத் தான்அமுத
ஊற்றுப்பொழியுமடா'' —(பாரதி.)

என்று இவ்வாறு சொல்லிவிடுவார்.

ஒரு தத்துவஞானி (ஜர்மனியர்) பின்வருமாறு கூறுகின்றார் :

உலகத்திலுள்ள வேதனைகளிலெல்லாம் தலை சிறந்த வேதனை பிரசவவேதனைதான். பிரசவ வேதனையின் பயனைக் கிடைப்பது குழந்தை. அதுபோன்று நாம் அனுபவிக்கின்ற ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் வேதனையிலிருந்தும் நமக்குக் கிடைப்பது ஒரு உண்மை, ஒரு அனுபவம், என்கிறார். அது நல்லதாகவும் இருக்கலாம், தீயதாகவும் இருக்கலாம். எப்படியானலும் அறிவு விருத்திக்கு வழி உண்டு. மனித ஞானமே இவ்வாறான அனுபவத்தினால்தான் பெருகியிருக்கின்றது.

இரண்டொரு உதாரணங்களைப் பார்ப்போம்: சென்ற* மகா யுத்தகாலத்தில், ஒருமுறை, வெடி மருந்துக்கு வேண்டிய மூலப்பொருள் ஒன்று தட்டுப்போய் விட்டது. அப்போது இருந்த பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜ் என்ன செய்வது என்று திணறிவிட்டார். உடனடியாகத்தானே பிரிட்டனிலுள்ள விஞ்ஞானிகளை அழைத்து, இன்னும் ஏழு தினங்களுக்குள் இந்த நெருக்கடியைப் போக்க ஏதாவது வழிகாண வேண்டுமென்று வற்புறுத்தினர். ஏழு தினங்களுக்குள் மரப்பொடியிலிருந்தும் உருளைக்கிழங்கிலிருந்தும் அந்த மருந்தைத் தயாரிக்கும் உபாயமானது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. நெருக்கடியால் கிடைத்த இலாபம் இது.

* 1914—1918.

இன்னும் ஒரு உதாரணம். ஒரு பையன் ஒருவன், மழை மேகம் திரண்டு எங்கும் இடிமுழக்கமாக இருக்கும் நேரத்தில், ஒரு மைதானத்தின் வழியாக நடந்து வந்தான். ஒரு பாவமும் அறியாத அவன் இடியால் தாக்குண்டு இறந்துவிட்டான். பையன் இறந்து விட்டான். வருந்தக் கூடிய செயல்தான். ஆனாலும் தனது உயிரைத் தியாகம் செய்து மக்கள் அறிவுக்கு ஒரு உண்மையை உணர்த்தி விட்டான். இடி இடிக்கும் காலத்தில் வெட்டவெளியான மைதானங்களில் நடந்து செல்வது ஆபத்தாகும் என்பதுதான் அவன் தெரிவித்த உண்மை.

ஆகவே தீமையை அறிஞர்கள் எல்லோரும் அபாய அறிவிப்புச் சின்னமாகவே பாராட்டுகின்றார்கள். இன்னும் சிலர் "செவிடுபட்டுக் கிடக்கும் உலகினைத் தட்டி எழுப்பும் தெய்வச்சங்கு" என்றும் பாவிக்கின்றார்கள்.

இப்படியாக மனித அறிவு வளருவதனாலே துன்பம் இருந்து கொண்டே இருக்கட்டும் என்று எண்ணுவதா என்று சிலர் கேட்கலாம். இந்த இடத்தில் ஒரு கதை ஞாபகத்திற்கு வருகின்றது.

சைனாவிலே ஒரு மனிதன். பன்றி மேய்ப்பது அவனுடைய தொழில். ஒரு நாள் வீட்டினுள்ளே பன்றிகளை அடைத்து விட்டு, மகனைக் காவல் வைத்துச் சென்றான். பயல் விளையாட்டுத்தனமாக வீட்டை நெருப்புக்கு இரையாக்கி விட்டான். அடைபட்டுக் கிடந்த பன்றிகளெல்லாம் வெந்து மாண்டன. ஒரு பன்றியினுடைய உடலை மகன் தனது கைவிரலால் குத்திப்

(Pain is God's megaphone to rouse the deaf-world) C.W. Louis.

பார்த்தான். சுறீர் என்று கையில் சூடு தைக்கவே, வாயினுள் விரலை இட்டான். விரலில் ஒட்டிக் கொண்டிருந்த மாமிசத்தின் சுவை தென்பட்டுவிட்டது. ருசி கண்ட பயல் விடுவானா? தின்ன ஆரம்பித்து விட்டான். வெளியே சென்ற தந்தை மீண்டுவந்ததும் அடங்காத கோபங் கொண்டான். ஆனால் பன்றிக் கறியின் சுவை அவனுடைய கோபத்தைத் தணித்து விட்டது. அம்மட்டோடு நின்று விட்டதா கதை? இல்லை. தினமும் இவ்வாறே வீட்டுக்குள் அடைத்து எரிக்க ஆரம்பித்து விட்டான். ஊரார் எல்லோரும் புகார் செய்தனர். வழக்கு விசாரணை செய்யப்பட்டது. விசாரணை செய்த மாஜிஸ்திரேட்டும் பன்றிக் கறியின் சுவையை உணர்ந்ததும் அவனை விடுதலை செய்து விட்டார்.

கதையிலுள்ள இறுதிப் பகுதி நமக்கு வேண்டாம். முற்பகுதியை மட்டிலும் எடுத்துக்கொள்வோம். தினமும் கூரை வேய்ந்து பன்றிக்குட்டியை எரிப்பது போல் வேண்டு மென்றே மனித அறிவை வளர்ப்பதற்குத் துன்பத்தை வருவித்துக் கொள்ளலாமா? அதெல்லாம் இல்லை. இருக்கிற நிலைக்கு ஒரு சமாதானம் தேட வேண்டும். அபரிய அறிவிப்புச் சின்னம் என்றும் தெய்வீகச் சங்கு என்றும் சொன்னதெல்லாம் சமாதானம் கூறும் முறையாகச் சொன்னவைகளாகும்.

சரி, அனுபவத்தைப் பெறுவதற்காகத் துன்பமும் வேண்டியது தான் என்று எப்படிக் கொள்ள முடியும் என்பதாக ஒரு சிலர் சொல்லாம். வேண்டாம். அந்தக் கட்சியை ஒதுக்கிவிடுவோம். ஆனாலும் உலகத்திலே துன்ப அனுபவம் ஒன்று இருக்கத்தானே செய்கின்றது. போ என்றால் போய்விடுமா? அதை எப்படிப் போக்குவது?

எட்டிப்பழத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தின்று, அப்பாலே முழுப் பழத்தையும் தின்னப்பழகி, உடம்பினுள்ளே விஷத்தை ஏற்றிவிட்டால், பின்னர் எந்த விஷமானலும் தாக்காது. அம்மாதிரியே துன்பத்தையும் ஏற்றுஏற்றுப் பழகிவிட்டால், பின்னர் எவ்விதமான துன்பம் வந்தாலும் சகித்துக் கொள்ளக் கூடிய மனத்தெம்பு ஏற்பட்டுவிடும் என்று ஒரு சமாதானம் சொல்லலாமா?

இங்கே எடுத்துக் கொண்ட விஷயம் துன்பத்தின் மர்மம் யாது என்ற ஆராய்ச்சிதானே யொழிய, துன்பத்தை எப்படிச் சகிப்பது என்பதில்லை. ஆகவே அதனை வேண்டாம் என்று தள்ளிவிடலாம்.

V

இன்னும் தீமையினுடைய பிணிப்பினின்றும் நீங்குவதற்கு ஏதாவது வழியிருக்கின்றதா என்று பார்ப்போம். பார்ப்பதற்குமுன் பூர்வாங்கமான சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். [இனிவரும் பகுதி அங்கங்கே மகான் தாகூருடைய கருத்தைத் தழுவி வருவதாகும்.]

ஒரு நதியை எடுத்துக் கொள்வோம். இருபக்கமும் கரை அமைத்து விட்டால், நதியிலுள்ள தண்ணீர் ஓடுவதற்கு மிகவும் அநுகூலமாயிருக்கும். அல்லாது போனல் தண்ணீரானது நாலபக்கமும் சிதறிவிடும். அம்மாதிரி பிரபஞ்சதருமம் என்னும் வெள்ளமானது நல்ல முறையான ஒரு கதியைத் தழுவி இயங்குவதற்குத் துன்பம் கரை போன்று சேவைபுரிகின்றது. ஆனலும் கரையை வைத்துக் கொண்டு வெள்ளத்தின் மர்மத்தை நிதானிப்பது எவ்வாறு சிறக்காதோ அவ்வாறுதான் துன்பத்தை வைத்துக் கொண்டு பிரபஞ்ச தர்மத்தின்

மர்மத்தை நிதானிப்பதும். வெள்ளத்திற்கும் கரைக்கும் என்ன சம்பந்தமோ அதே சம்பந்தந்தான் பிரபஞ்ச தர்மத்திற்கும் துன்பத்திற்கும். பிரபஞ்ச தர்மமாகிய வெள்ளம் நம்மை எங்கே இழுத்துச் செல்கின்றது? காரணகாரியங்கள் அனைத்தையும் உணர்ந்து, சும்மா இருக்கும் துய்ய நிலைக்கு, பூரணநிலைக்கு நம்மை இழுத்துச் செல்கின்றது.

மனிதன் ஒரு உண்மையைக் கண்டு கொண்டான். அது யாது? குறை என்பது நிறைக்கு விரோதமான தில்லை; அநித்தியம் என்பது நித்தியத்திற்கு விரோதமான தில்லை; ஆனால் குறை என்பது நிறையினுடைய பகுதி வெளியீடு; அநித்தியம் நித்தியத்தின் பகுதிவெளியீடு; பரிபூரணத்வமே முடிவாக முடிந்த கதி என்ற உண்மை தான் அவன் கண்டுகொண்ட உண்மை.

பரிபூரணத்வமாகிய கதி சித்திக்க வேண்டுமானால், முற்றமுழுக்க நன்மை மயமாக இருந்தால்தானே சித்திக்கும்; ஆனால் தீமையாகிய குறை இருக்கிறதே, அதற்கு என்ன சமாதானம் சொல்வது என்ற கேள்வி எழலாம். அதைத்தான் நாம் இனி ஆராயவேண்டும்.

இன்பம் நிலையான அம்சமுடையது. முடிவான தன்மை பெற்றது. ஆனால் துன்பம் அவ்வாறு இல்லை. அது நிலையற்றது.* நிலையில்லாத் தீவினையும் நீ தந்த தன்றே.'' சிருஷ்டி வரம்புக்குள்ளே அதற்கு நிலையான ஸ்தானம் கிடையாது. அறிவுப் பிழைக்கு (5ம் 3ம் 7 என்று உணரும் பிழை) என்ன பொருளோ அதே பொருள்தான் துன்பத்திற்கும். பிழை நிலையற்றது. உண்மையைத் தெரிந்து கொள்ளும் வரை பிழை நிலைக்கும். தெரிந்த அளவிலே பிழை மறைந்துவிடும். அம்

* கம்பர்

மாதிரியே துன்பமும். அது நிலையற்றது. உண்மை தெரியத்தெரிய அது அகன்றுவிடும். அதை நாம் என்ன கண்ணோடு பார்க்கின்றோமோ அந்தப் பார்வையைப் பொறுத்திருக்கிறது அதனுடைய நிலையும் அதற்கு அடிமையாகி நாம் நடுங்குவதும்.

உலகத்தில் நாளது தேய்திவரை மரித்துப்போன உயிர்களையும் அழுகிப்போன பதார்த்தங்களையும் கணக்கெடுத்தால், "ஐயோ கடவுளே! இவ்வளவு அழிவா" என்று நெஞ்சு பறையடிக்க ஆரம்பித்துவிடும். ஆனால் தீமையின் நிலை என்ன? அது நகர்ந்துகொண்டேயிருக்கின்றது. நாம் அதை நிறுத்திவைத்துக் கொண்டு, அதை மிகைப்படுத்தி நடுங்குகின்றோம். தீமைக்கு எவ்வளவோ வலிமை இருக்கத்தான் செய்கின்றது. ஆனலும் வாழ்க்கையின் போக்கை முற்றிலும் அணை கட்டித் தடுத்து விடுகின்றதா என்றால், இல்லை. எதனால் இல்லை என்றால், அதனால் முடியாது. அன்னக் காவடி 'அம்மா பிச்சை' என்று ஈனக்குரலில் கேட்கின்றான். அடுத்த வீட்டு ஐயா பரலோகம் போய்விட்டார் என்று சங்கு தெரிவிக்கின்றது. இந்த ஒலிகளுக்கு இடையில் 'குவ்வா குவ்வா' என்று அப்பொழுது பிறக்கின்ற குழந்தையின் குரலும் கேட்கின்றது. அலையும் அடிக்கத்தான், தீர்த்தமும் ஆடத்தான் என்ற போக்கிலேதான் வாழ்க்கைச் சகடம் இயங்குகின்றது. நிலையற்ற தீமைக்கு நிலையான வடிவம் கற்பித்து நடுங்குவதெல்லாம் நம்முடைய செயல். செத்தவர்களை மட்டிலும் கணக்கெடுத்துக்கொண்டு போனால், உலகம் சவக்குழியாகத் தோன்றும். பூதக்கண்ணாடி கொண்டு நமது ஆடையைப் பார்த்தால் இழைகளுக்கு இடையிலுள்ள இடைவெளி மிகப்பெரிதாகத் தோன்றும். கன்னக்கோலின் மர்மத்

தையே ஒருவன் ஆராய்ந்துகொண்டு போனால், அதனால் என்னென்ன தீமையெல்லாம் செய்ய முடியும் என்பதாக எண்ணி நடுக்கங் கொள்வான். அம்மாதிரியே துன்பத்தை மட்டிலும் பெரிதாக மதித்தால் நம்மால் தாங்கர்து.

பிறந்து வாழும் உலகத்தில் மரணத்தின் ஸ்தானம் யாது, ஆடைப்பரப்பிலே இழைகளுக்கு நடுவிலிருக்கும் இடை வெளியின் ஸ்தானம் எம்மட்டு, வீடுகளைக் கட்டி மக்கள் வாழும் வாழ்க்கையிலே கன்னக்கோலின் ஸ்தானம் எவ்வளவு என்பதை விரிந்த நிலையில் ஆராயப் புகுந்தால், நாம் பயந்த பயமெல்லாம் மித மிஞ்சிய பயமே என்பது தெரியவரும். இப்படியே வாழ்க்கையிலும் ஏதோ ஒரு குறிப்பிட்ட அம்சத்தையே மிகைப் படுத்திக் கொண்டு பார்ப்போமானால், வாழ்க்கையின் முழு இயல்பையும் உணராதவர்களாகி, நாம் எடுத்துக் கொண்ட குறிப்பிட்ட பகுதிதான் வாழ்க்கை என்பதாக நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ள வேண்டியதாக இருக்கும். நம்மைப் பயமுறுத்துவன பெரும்பாலும் நம்மால் கற்பிக்கப்பட்ட கற்பனை பூதங்களே.

நம்முடைய வாழ்க்கை படிந்த துறைகளையும், அந்தத் துறைகளில் நமக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களையும் தோல்விகளையும் பெரிதாக மதிப்பதே நமது வழக்கமாகப் போய்விட்டது. ஆனால் இவ்வாறு பெரிதாகப் பாவிக்கும் இந்த மனத்துக் குள்ளேயே இன்னொரு பண்பும் உதயமாகிறது. அதுதான் நம்மைக் கடவுள் முகமாகத் திருப்புகின்றது. நம்முடைய துன்பங்களையெல்லாம் ஒரு பொருட்டாக மதிக்கத் தூண்டுகிறதில்லை.

சில மதவாதிகள் வேண்டுமானால், பிறப்பே தீமை, வாழ்க்கை தீமை என்று முறையிட்டுக்கொண்டிருக்

கலாம். ஆனால் அவர்களுடைய முறையீட்டை மதிக்கின்றவர் எத்தனைபேர்? அவர்களுடைய கொள்கையெல்லாம் நம்பிக்கை வலியிழந்த மனோ நிலையின் தோற்றங்கள். வெறும் **வியாகூல ஞானம்.** வாழ்க்கை என்பது உண்மையிலேயே தீமையாயிருக்குமானால், அதை எடுத்துக் காட்ட ஒரு ஞானி தேவை இல்லை. ஆனால் உண்மையிலேயே தீமைதானா என்றால், இல்லை. இல்லவே இல்லை. நிறபேதங்கள், வடிவ பேதங்கள், இன்னும், ஒலி, சுவை, குணம் ஆகிய இவற்றால் உருவாகும் பேதங்கள், இவையெல்லாமும் அழகு, இன்பம் ஆகிய அருமைகளை உணர்த்த எத்தனை அளவில்துணை செய்கின்றன! இவைகளின் மர்மத்தை உணர முயன்றால், அப்பொழுது தெரியும், வாழ்க்கையில் இன்பத்திற்கு இடம் உண்டா அல்லது இல்லையா என்பது. மனிதனுக்கு மனிதன் வித்தியாசமில்லை, நிறத்துக்கு நிறம் வித்தியாசமில்லை, சுவைக்குச் சுவை வித்தியாசமில்லை, எல்லாம் ஒரேமயம் என்றிருக்குமானால், சகிக்கமுடியுமா என்பதைப் பார்க்கவேண்டும்? நிற்க.

நம்மிடம் இருவகை வாழ்க்கை உண்டு. புற வாழ்க்கை. அக வாழ்க்கை. புற வாழ்க்கைக்குத் துணைசெய்ய எண்ணில் பல கோடிப் பொருள்களிருக்கின்றன. அவற்றால் அந்த வாழ்க்கை சிறப்படைகின்றது. அது சிறப்படைவது போன்று அகவாழ்க்கையும் சிறப்படைய வேண்டாமா? நம்முடைய சங்கற்பம், நம்முடைய யோக்யதை ஆகிய இவைகளெல்லாம் திருத்தமுற வேண்டாமா? அவைகள் திருத்தமடைவதற்குத் தீமைகள் எவ்வளவோ துணைபுரிகின்றன. அதை நாம் உணரவேண்டும். இருகூறுபட்ட நமது வாழ்க்கையானது ஒரு கதியை நாடி இயங்கிக் கொண்

டிருக்கின்றது. அது நாடிச் செல்லும் கதியின் பெயர் **நன்மை**—அதனை நாடியே அது செல்லுகின்றது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு இனமும் பரிந்து பரிந்து நாடுவதெல்லாம் அந்த நன்மையைத்தான். அதனை எத்தனை தூரம் விரும்புகின்றோம் என்பது நமக்குத் தெரியும். இன்னும் அதனை நிலைநாட்ட முயலும் சிலர்களை நாம் எவ்வளவு தூரம் மதிக்கின்றோம் என்பதும் நமக்குத் தெரியும்.

இப்பொழுது நாம் பாராட்டுகின்ற **நன்மைக்கு** இலக்கணங்கூற வேண்டிய அவசியம் எழுகின்றது. முயற்சி செய்து பார்போம்.

தனக்கு மட்டிலும் இன்பத்தைத் தேடிக் கொள்வது நல்லதா அல்லது தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் இன்பத்தைத் தேடிக் கொள்வது நல்லதா, அல்லது 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே' என்றபடி உலகமாகிய குடும்பம் அனைத்தினுக்கும் இன்பத்தைத் தேட முயற்சி செய்வது நல்லதா? கேட்கவா வேண்டும்? உலகமாகிய குடும்பம் அனைத்திற்கும் இன்பத்தைத் தேட் முயல்வதுதான் சிறந்த **நன்மை**. ஞானிகளெல்லோரும் அதனையே நாடுகின்றனர்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்கிறார் ஒருவர். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைவதல்லால் ஏதும் அறியேன் பராபரமே" என்கிறார் இன்னொருவர்.

மனிதன் மானுடத்தின் தத்துவத்தைக் குறுக்கிக் கொள்ளவும் முடியும். விரித்துக் கொள்ளவும் முடியும். **நான்** என்ற ஆணவங் கொண்டவனாகவும் இருக்கலாம். இந்த ஞாலமெல்லாம் **தான்** என்று கொள்ளும் ஞானியாகவும் இருக்கலாம். கருப்பசாமி மகன் வெள்ளைச்சாமி

என்றும் எண்ணலாம் அல்லது,

"விண்ணில் தெரிகின்ற மீ னெலாம் நான்;
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்;
மண்ணில் கிடக்கும் புழுவெலாம் நான்;
வாரியிலுள்ள உயிரெலாம் நான்"
கம்பன் இசைத்த கவியெலாம் நான்;
கீ ருகர் தீட்டும் உருவெலாம் நான்;
இம்பர் வியக்கின்ற மாடம் கூடம்
எழில் நகர் கோபுரம் யாவுமே நான்"

என்றும் எண்ணலாம். எல்லாம் பாவனையைப் பொறுத்தது. மனிதன் எப்பொழுது தன்னை 'தன்னலம்' என்னும் கூண்டிலிருந்து விடுவிக்கின்றானே, இன்னும், 'தன்னலம்' என்ற நிலையைக்காட்டிலும் விரிந்தநிலை ஒன்றிருக்கிறது என்பதை எப்பொழுது உணருகின்றானே, அப்பொழுதுதான், அவன் தன்னுடைய ஆத்ம இயல்பையே அறிந்தவனாகின்றான். அப்பொழுதுதான் இருக்கும் நிலையை ஒதுக்கி இருக்கவேண்டிய நிலை யாது என்பதையும் தெரிந்துகொள்கின்றான். அதுவே உண்மை நிலை என்பதையும் உணருகின்றான். அவனுடைய காட்சி மாறுகின்றது. கருத்து மாறுகின்றது. நெகிழ்ந்த இச்சைகள் தொலைந்து திடமான சங்கற்பமே உருவாகின்றது.

இந்த நிலையில்தான் பெரிய ஒரு முரண்பாடும் திரள்கின்றது. என்ன முரண்பாடு அது?

தன்னலம் × உலகநலம்
இச்சை × சங்கற்பம்
உலக இன்பம் × ஆத்ம இன்பம்

இப்படியாகத் திரள்கின்றது முரண்பாடு. இந்த முரண்பாடு விரிய விரிய, அநித்திய நலன் எது, நித்திய

நலன் எது என்பதை யெல்லாம் அறிந்து கொள்ளமுடி-கின்றது. அறித்திய நலனை ஒதுக்கி நித்திய நலனை நாட்ட எதையெல்லாமோ மனிதன் தியாகம் செய்கின்றான்.

"உற்றமை யான் வேண்டேன், ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்;
கற்றமை யான் வேண்டேன், கற்பனவும் இனி அமையும்;
குற்றலத்(து) அமர்ந்துறையும் கூத்தாவின் குரைகழற்கே
கற்றவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்றெல்லாம் புலம்பத் தொடங்குகின்றான்.

தன்னலமான இன்பம் பெரிதா அல்லது பரோபகாரமான நன்மை பெரிதா என்றால், பரோபகாரமான நன்மையே பெரிது. இலக்கிய சித்திக்காக விரதமிருக்கின்றவன், நாட்டு நலன் உலக நலன் ஆகிய நலன்களுக்காகப் பாடுபடுபவன், அவனெல்லாம் வாழ்க்கை என்பதற்குக் கற்பிக்கின்ற பொருளே வேறு. அந்தப் பொருள் எத்தனை அளவுக்கு விசாலப்படுகின்றதோ அத்தனை அளவுக்கு வேதனை, துன்பம், கஷ்டம் ஆகிய இவைகள் எல்லாம் அவனுக்குப் பொருள்களாகத் தோன்ற மாட்டா. தன்னலமாகிய இன்பம் என்பதை மறந்து பரோபகாரமான நன்மையே பெரிது என்றாகி விட்டால், அந்த நன்மையை அடிப்படையாக் கொண்டு இன்பதுன்பங்களை மதிப்பிடும் போது, இன்பதுன்பங்களின் பொருளே மாறுபட்டுவிடும். இன்பத்தை ஒதுக்கித் துன்பத்தை வரவேற்கும் மனப்பான்மை உருவாகும்-மதத்திற்காகவும் தேசத்திற்காகவும் உயிரைக் கொடுத்த எத்தனையோ தியாகிகளின் வாழ்க்கையே அதற்குச் சான்று.

ஒரு குடம் தண்ணீரைத் தூக்கும்பொழுது நமக்கு அதனுடைய கனம் தோன்றுகிறது. ஆனால் ஆற்றில் நீராடும் பொழுது எத்தனை குட்டம் தண்ணீர் தலைக்கு மேலே கூடிப்போகின்றது? கனம் தெரிகின்றதா? அம்மாதிரியே தன்னலம் என்ற ஒன்று நமது மனத்தினுள்ளே இருக்கும்போது இன்பத்தின் கனத்தையும் உணருகின்றோம். துன்பத்தின் கனத்தையும் உணருகின்றோம். ஆனால் தன்னலம் என்பதை அறவே துறந்து விட்டு பரோபகார நலத்தில் மனம் திளைத்துவிடுமேயானால் இன்ப துன்பங்களின் கனமே நமக்குத் தென்படாது.

"நான் எனும் ஆணவந் தள்ளலும்—இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும்"

ஆகிய நிலையை எய்திவிட்டால்,

காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்;
நோக்குந் திசையெல்லாம் நாமன்றி—வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்" (பாரதி)

என்று பார்விக்கும் பாவனை முதிர்ந்து விட்டால், இன்பதுன்பங்களாகிய பிணிப்பினின்றும் நாம் விடுதலை அடைந்து விடுவோம்.

அந்த நிலையில்,

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா—நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா"

என்று சொல்லவே தோன்றும். தன்னைப் பிரபஞ்சத்திடையே காணும்படிக்கு எவன் ஒருவன் தனது உள்ளத்தை விரிக்கின்றானே அவனுக்குத் துன்பத்தின் தொல்லைகிடையாது என்றே புத்தபகவான் ஓதுகின்றார்.

இதுகாறும் பிரபஞ்சத்தினிடையே தன்னைக் காணும் அளவுக்கு மனத்தை விசாலப்படுத்தவேண்டும் என்பதைப் பார்த்தோம். அத்தோடு இன்னென்றையும் நாம் பார்வையிட வேண்டியதிருக்கிறது.

இரண்டொரு உதாரணங்களைப் பார்த்து விட்டு அப்பாலே அவற்றின் துணை கொண்டு அறிய வேண்டிய உண்மையை அறிந்து கொள்வோம்.

இறுகி இருப்பதனாலே தரையானது கடினமாக இருக்கின்றது. நடை பழகும் குழந்தை தவறி விழுந்து விட்டால் தரையானது குழந்தையின் காலைக் காயப் படுத்தி விடுகின்றது. ஆனால் அதே கடினத் தன்மை குழந்தை நடக்கவும் துணை செய்கின்றது. பலகையில் முட்டினால் தலையில் வலி உண்டாகின்றது. ஆனால் அதே கடினத் தன்மை பலகையால் உள்ள உபயோகத் திற்குத் துணை செய்கின்றது. ஆற்று வெள்ளம் நாம் ஏறும் தோணியைத் தாங்கிச்சென்று அக்கரை செல்லத் துணைபுரிகிறது. ஆனால் அதே வெள்ளம் தோணியைக் கவிழ்த்தும் விடுகின்றது.

மனிதனுக்குத் துணை செய்தாலும் மனிதனுடைய இச்சை வெறுப்புக்களை இயற்கையானது மதிக்கிறதாகத் தெரியவில்லை. மனிதன்தான் இயற்கையைத் தழுவி நடக்கவேண்டிய திருக்கிறதே யொழிய இயற்கையானது மனிதனைத் தழுவி நடக்கிறதாக இல்லை. அப்படியானால் அதனுடைய உட்பொருள் யாது? இயற்கையானது சில நியமான விதிகளைத் தழுவி இயங்கிக்கொண்டிருக் கிறது. அந்த விதிகளின் மர்மத்தை உணர்ந்து மனிதன் நடந்து கொள்ளவேண்டும். இதுதான் பொருள். இதனால் வரும் இலாபமென்ன என்று கேட்கலாம்.

நமது இயற்கையோ உண்மை யாது என்பதைத் தெரிவதாகும். நமது இஷ்டமே இயற்கையின் சட்டம் என்றில் லாததால், இயற்கைச் சட்டத்தின் மர்மம் என்ன என்பதை அறிவதற்குரிய ஆத்திரம் நம்மிடையே தோன்றுகிறது. அந்த ஆத்திரத்தைப் பூர்த்தி செய்வ தன் மூலம் நம்முடைய அறிவு விரிகின்றது. இந்த அறிவு நமக்கு உண்மையில் ஆனந்தத்தையே தரு கின்றது. ஏனென்றால் நமக்கும் இயற்கைக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் வழிவகைகளை நாம் அறிந்து கொள்கின்றோம். அவ்வாறு அறிந்து கொள் வதன் மூலம் அவைகளை நமக்கு உடைமை ஆக்குவ தோடு நம்முடைய எல்லையையும் நாம் விரிவடையச் செய் கின்றோம். நமது எல்லை நமது எல்லை என்கிறோமே, அதன் பொருள் யாது? நமது எல்லை யென்பது 52 அங்குல சுற்றளவுள்ள பூதவுடம்பின் எல்லையா என்றால் அது தான். அது விரிவடைவது எவ்வாறென்றால், மனம் காரணமாக விரிவடைகின்றது. பிரபஞ்சமே 'தான்' என்று பார்க்கும்படி விரிவடைவதற்கும். அந்த பாவனை தான் விரிவு.

மனிதன் தன்னலம் உள்ளவனாக இருக்கும் நிலையை உதறிவிட்டு எவ்வளவுக்கெவ்வளவு எல்லோரோடும் எல் லாவற்றோடும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கின் றானோ அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய ஆனந்தப் பெருகுகின்றது. இவ்வாறான ஆனந்தப்பெருக்கில் திளைக்க வேண்டுமென்றால், அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொது விதி யாது என்பதைத் தெரிந்து கொண்டால் தான் முடியும். அந்த விதியின் மர்மத்தை உணர்ந்து, அதை அனுசரித்துச் செல்வதன் மூலமே நாம் பெருமை அடைகிறோம். பிரபஞ்சத்தோடு நம்மை

ஐக்கியப்படுத்தவும் முடிகின்றது. நம்முடைய தனிப்பட்ட இச்சைகள், மேலே கூறிய பொது விதியோடு இணங்கி நடந்து முரண்படும் போதுதான், துன்பமெல்லாம் வருகின்றது. இணங்கி விட்டால் துன்பம் இல்லை. துன்பத்தை வெல்வதற்கு இது ஒரு வழியாகும். இன்னும் பார்ப்போம்.

ஒரு காலத்தில் இயற்கையானது நமது இச்சையைத் தழுவி இயங்கவேண்டுமென்று விரும்பி எத்தனை எத்தனையோ காரியங்களெல்லாம் செய்திருக்கின்றோம். தெளிவாகச் சொல்லப்போனால், எத்தனையோ முறையான வழிபாடுகளையெல்லாம் செய்திருக்கின்றோம். உதாரணமாக ஒன்றைப் பார்ப்போம். தொத்து நோய்கள் பரவுவதற்குரிய வசதிகளையெல்லாம், அறியாமையினாலும் தன்னலத்தாலும் ஏற்படுத்திக்கொண்டு, அப்பாலே அவைகளினுடைய கொடுமையினின்றும் தப்பிக்க தேவதைகளின் துணையை நாடி எத்தனை எத்தனையோ வழிபாடுகளைச் செய்து வந்திருக்கின்றோம். ஆனால் குறைபாடு எங்கே இருக்கின்றது, அதை அகற்றுவது வழி, இயற்கையின் இயல்பு என்ன, என்றுள்ள விஷயங்களையெல்லாம் இப்போது விஞ்ஞானம் உணர்த்தி வருகின்றது. பிரபஞ்ச தர்மத்தை நம்மால் ஒரு அணுக்கூட மாற்றமுடியாது என்பதையும் விஞ்ஞானம் மிக நன்றாக உணர்த்துகின்றது. நாம் பிரபஞ்சத்தினுடைய ஒரு அம்சமாக இருப்பதனால் பிரபஞ்ச தர்மம் நம்மை விட்டு விலகிய ஒன்று ஆகாது. அதற்கும் நமக்கும் தொடர்பு உண்டு. இன்னும் பிரபஞ்சத்தினுடைய ஒரு அம்சமாக நாம் இருப்பதனாலே, எந்த சக்தியானது பிரபஞ்ச இயக்கத்தை இயக்குவிக்கின்றதோ அந்த சக்தியும் நமது சக்தியோடு ஐக்கியப்பட்ட சக்தியேயாகும். இதை உணராதவரை நமக்குத் துன்பம் உண்டு. உணர்ந்துவிட்டால்

பெருமையும் உண்டு. ஆனந்தமும் உண்டு. நமக்கும் நமது உடலுக்கும் உண்டான தொடர்பை உணர்ந்து, எவ்வாறு 'என்னுடல், என்னுடல்' என்று சொல்லுகின்றோமோ, அவ்வாறே பிரபஞ்சத்திற்கும் நமக்கும் உண்டான தொடர்பை உணர்ந்து 'நானே பிரபஞ்சம்' என்று சொல்லவும் முடியும். மேலும் 'நானே பிரபஞ்சம்' என்று கொள்ளும் ஞானத்தைப் பெருக்குவதற்கு விஞ்ஞானமும் துணை செய்கின்றது. நோயையும் மரணத்தையும் வெல்ல நாம் இன்று முயன்று வருகின்றோம். பசியையும் துன்பத்தையும் வெல்ல இன்று எத்தனையோ பாடு படுகின்றோம். நமது சித்தம் வெற்றி பெற விஞ்ஞானம் செய்கின்ற துணைக்கு அளவே கிடையாது. இன்று மனிதனால் தனது காலை உலக எல்லைக்கு நீட்ட முடிகின்றது. பேசும் சக்தியை உலக எல்லைக்கு விரிக்க முடிகின்றது. கேட்கும் சக்தியையும் அப்படித்தான். அவ்வாறே பார்க்கும் சக்தியையும். அத்தனை தூரம் விஞ்ஞானத்தின் பெருமையால் மனிதன் விரிவடைந்து விட்டான். வீட்டு மனிதனாக இருந்தவன் இன்று உலக மனிதனாக விரிகின்றான். இதற்கெல்லாம் காரணம் விஞ்ஞானந்தான். இத்தனை தூரம் விரிந்தும் இன்னும் துன்பத்திற்கும் பிணிக்கும் சக்திக் குறைவுக்கும் ஆளாகி எதனால் வருந்துகிறான் என்றால், தானே பிரபஞ்சம் என்னும் விரிந்த நிலையோடு, தன்னலம் அஞ்ஞானம் ஆகிய இக் குறைகளாலான தனது குறுகிய நிலையை, இணைத்துச் செல்ல முடியாததனால்தான்.

மனிதனுடைய சுயநலத்தால் வருகின்ற துன்பத்திற்கும் நஷ்டத்திற்கும் அளவே கிடையாது. சமூக ஞானமெல்லாம் சீர்குலைகின்றது. சிலருக்கு மட்டிலும் பணம், சிலருக்கு மட்டிலும் பதவி, சிலருக்கு மட்டி

லும் பலிசு. இன்னும் அலைகளைக் காப்பாற்றுவதற்கு எத்தனை எத்தனையோ உட்பிரிவுகளைக் கொண்ட புத்தி சாதுர்யமான சட்டங்கள். போதாக்குறைக்கு சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர கணக்கற்ற பலாத்காரச் சின்னங்கள். இவ்வாறு எத்தனை எத்தனையோ விபரீதங்கள் தோன்றி மனித இனத்தையே அவமானப் படுத்துகின்றன. எல்லாம் சுயநலத்தால் வருங்கேடு. உலகத்தையே சுவர்க்கமாக மாற்றும் வழிகளை உணர்ந்த வுடன இருந்தும், மனிதப் பெருமையை எதனால் இவ் வாறு கொடும்பாவி கட்டி இழுக்கவேண்டும்? துன்பத் திற்கு மருந்து கிடையாதா? இருக்கின்றது.

அண்டமும் பிண்டமும் நானே என்ற ஞானம் உதய மாகிவிட்டால் போதும்.

"எண்ணமிட்டால் போதும்
எண்ணுவதே இவ்வின்பத்
தண்ணமுதை உள்ளே
ததும்பப் புரியுமடா"

என்று பாரதியார் சொன்னது போன்று, எண்ணமிட் டால் போதும். உள்ளூற உணர்ந்து நின்றால் போதும்.

"காவித் துணி வேண்டா
கற்றைச் சடை வேண்டா
பாவித்தல் போதும்
பரமநிலை எய்துதற்கே."

அந்த நிலை எய்திவிட்டால், 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்பதை உணரலாம்.

துன்பத்தினின்றும் காப்பாற்றப்படுவதி லில்லை மனித சுதந்திரத்தின் மாண்பு. தனது இன்ப அனுப வத்தின் ஒரு பகுதியாகத் துன்பத்தை ஏற்றுக்கொள்

வதில்தான் மாண்பு மிளிர்கின்றது. காதலுக்காக வேண்டித் தியாகம் செய்வதில் நமக்கு இன்பமில்லையா? அப்படியான இயல்பும் நமது மனத்துக்குள்ளே இருக்கத்தானே செய்கின்றது? அதைமட்டிலும் விரிவடையச் செய்துவிட்டால், அகண்ட பொருளைத்தை அடையும்படி செய்துவிட்டால், அகங்கையில் தானே அமரத்வம் அமர்ந்துவிடும். அப்பொழுது துன்பம் துன்பமாகத் தோன்றாது. இன்பத்தின் பிறழ்ந்த நிலையாகவே தோன்றும். கிட்டச் சென்று உற்றுப் பார்த்தால், இன்பமாகிய தலைவியிடம் இட்டுச் செல்வதற்குக் காத்திருக்கும் தோழியே துன்பம் என்பதை உணர்வோம்.

இவ்வாறு பாவிக்கின்றனர் தாகூர் போன்ற மேதாவிகள். இதுகாறும் நாம் பார்த்து வந்ததின் சாரம் பின்வருமாறு:

நதிக்குக் கரை அமைந்தது போன்று பிரபஞ்ச தர்மமாகிய வெள்ளத்திற்குத் துன்பமானது கரையாக அமைந்துள்ளது. இத் துன்பம் நிலையற்றது. இன்பமே நிலையுள்ளது. ஒருமுகமாகப் பார்ப்பதனாலேயே துன்பம் பெரிதாகத் தோன்றுகின்றது. பரந்த நிலையில் பார்க்கும்போது துன்பத்தின் ஸ்தானமும் பொருளும் விளங்கும்.

மனிதனிடம் ஒரு குணம் காணப்படுகிறது. அது மிகவும் சிறந்த குணம். உண்மையை நாடும் அவனுடைய இயல்பிற்கு அந்த குணத்தால் வருகின்ற இலாபம் மிக அதிகம். அவ்வாறான குணம் யாதென்றால், இருக்கும் நிலையை மறந்து இருக்கவேண்டிய நிலை யாது என்று உணர முற்படுதல். இப்படி உணரும்போது பரந்த உள்ளமே சித்திக்கும். நாளும் நாளும் அந்த

குணத்தை வளர்க்க வேண்டும். ஊனுடம்பின் எல்லை யளவே மனிதனுடைய உடம்பின் பரப்பு என்பதை மறந்து, இந்தப் பிரபஞ்ச எல்லையளவும் மனிதனுடைய உடல் அளவு வியாபிக்கின்றது என்பதை உணரவேண்டும். தன்னலமான இன்பத்தை மறந்து பரோபகாரமான நலத்தையே பெரிதாக மதிக்கவேண்டும். அவ்வாறு மதிக்கும்போது இன்ப துன்பங்களுக்குக் கற்பிக்கும் பொருளே மாறிவிடும். துன்பத்தையே மகிழ்ந்து ஏற்கக்கூடிய அளவுக்கு மனது திரும்பிவிடும். அன்று நீற்றறையில் வைத்து அப்பரைப் பொசுக்கும் பொழுது

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்று பாவிக்கும்படி அப்பருடைய மனம் திரும்பவில்லையா?

உலகத்தில் வாழும் மனிதன் இன்னொரு உண்மையையும் தெரிந்து கொள்ளவேண்டும். பிரபஞ்ச தர்மமானது மனிதனைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. மனிதன்தான் அதைப்பற்றி அக்கறை கொள்ளவேண்டும். அதனுடைய மர்மத்தை உணர்ந்து அதனோடு மோதாது தழுவிச் செல்லவேண்டும். தழுவிச் செல்வதே நல்லது. அவ்வாறு தழுவிச் செல்வதற்கு விஞ்ஞானமே எல்லையற்ற அளவில், இதுவரை உணராத மர்மங்களையெல்லாம் உணர்த்திக் காட்டி, உறுதுணை புரிகின்றது. நமது ஞானம் பெருகுகின்றது. நமது சக்தி பெருகுகின்றது. வீட்டு மனிதனாக இருந்தவன் உலக மனிதனாக விரிகின்றான். ஆனாலும் பிரபஞ்ச தர்மத்தோடு இணைந்து செல்லும் மதியை மனிதன் வளர்க்

கின்றனில்லை. தன்னலத்தாலேயே கெட்டழிந்து தொலை கின்றன். அதைமட்டிலும் அகற்றிவிட்டால் இன்பத் தின் பிறழ்ந்த நிலையே துன்பம் என்பதை உணர்ந்து கொள்வான். இதுவே இப்பொழுது பார்த்துவந்த பகுதியின் சாரம்.

இன்னும் இது விஷயம்பற்றி ஒரு சில வேதாந்திகள் கூறும் உண்மைகளைத் தெரிந்துகொண்டு முடிவுக்கு வந்துவிடுவோம். அவர்கள் கூறுவன பின்வருமாறு :

நன்மைக்கும் தீமைக்கும் திட்டவட்டமான வித்தி யாசம் கற்பித்துவிட முடியாது. ஏனென்றால் நன்மைக் குள்ளேயே தீமை பொதிந்து கிடக்கின்றது. தீமைக் குள்ளே நன்மை பொதிந்து கிடக்கின்றது. ஒரு உதார ணத்தைப் பார்ப்போம். ஒரு ஆளைத் தேள் கொட்டி விடுகிறது என்று வைத்துக்கொள்வோம். உடனே ஒருவன் விஷ வைத்தியனைத் தேடி ஓடுகின்றான். ஓடும் போது எத்தனை கிருமிகளைக் கொல்ல நேரிடுகின்றது. நல்ல செயலோடு இந்தத் தீச் செயலும் மருவிக் கிட்க கின்றது. இன்னும் ஒரு கெடுதல் வருகிறதென்று வைத்துக்கொள்வோம். உதாரணமாக குவெட்டா பூகம்பத்தை எடுத்துக்கொள்வோம். அது தீய காரி யந்தான். ஆனால் அதன்மூலம் ஒரு நன்மையும் சித்திக் கிறது. பூகம்ப அதிர்ச்சி நிகழும் எல்லைக்குள் வீடு கட்டு வதானால் எவ்வாறு கட்டவேண்டும் என்ற ஞானம் உதய மாகின்றது. இன்னும் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு உதவி செய்யும்படியான பரோபகாரச் சித்தம் தலையெ டுக்கின்றது. இந்த உதாரணத்தின் மூலம் தீமைக்குள் நன்மை பொதிந்து கிடக்கின்ற இயல்பைப் பார்க்கிறோம். ஆகவே மீண்டும் ஆதியில் சொன்னதைத்தான் இங்கே யும் சொல்லிக்கொள்ள வேண்டியதிருக்கிறது. நன்மைக்

கும் தீமைக்கும் திட்டவட்டமான வித்தியாசம் கற்பித்து விட முடியாது. ஏனென்றால் நன்மைக்குள்ளேயே தீமை பொதிந்து கிடக்கின்றது. தீமைக்குள்ளே நன்மை பொதிந்து கிடக்கின்றது. இதுவே ஆதியில் சொன்னது. இதையே இங்கு சொல்லிக்கொள்ள வேண்டும்.

அநேக மகரிஷிகள் நன்மை தீமைகளின் மர்மத்தை உணர்ந்துகொள்வதற்கு ஒரு சில வழிகளை உணர்த்துகின்றார்கள். அவைகளைப் பார்ப்போம். அவர்கள் கூறுவதன் சாரம் என்னவென்றால் கர்ம பலன்தான்.

நாம் செய்கின்ற ஒவ்வொரு கர்மமும் ஒரு காரணத்தைக் கொண்டே எழுகின்றது. அந்தக் காரணம் அல்லது அந்த நோக்கம் சிலருக்கு நன்மை தரக்கூடியதாக இருக்கலாம். அல்லது சிலருக்குத் தீமை தரக்கூடியதாக இருக்கலாம். அது நமக்கு விளங்கினாலும் விளங்கும், விளங்காது போனாலும் போகும். தெரிந்தாலும் தெரியும், தெரியாது போனாலும் போகும். ஆனால் நாம் செய்கின்ற கர்மத்தின் பயன் நன்மையோடோ தீமையோடோ மருவித்தான் இருக்கின்றது. ஒவ்வொன்றையும், நம்மை மட்டிலும் வைத்துக்கொண்டு, நாம் மதிப்பிடக்கூடாது. அப்படி மதிப்பிட்டால் அது குறைபாடு உடையதாகத்தான் தோன்றும். அநேக படிகளில் நின்று மதிப்பிட வேண்டும். அப்பொழுதுதான் உண்மை விளங்கும்.

இது ஒரு பக்கம் இருக்கட்டும். கர்மமும் பலனும் என்ற கட்சியை இன்னும் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

கர்மம் உண்டுமானால் கர்ம பலனும் உண்டு. வினை உண்டுமானால் விளைவும் உண்டு. செய்த கர்மத்தை மறப்பதற்கு முன் பலன் கிட்டிவிடுமேயானால், கிட்டிய

பலனை வெகுமதி என்றும் அழைப்போம், தண்டனை என்றும் அழைப்போம். ஒரு கர்மத்தைச் செய்தால் அதன் பலன் உடனே கிடைத்தாலும் கிடைக்கும். பல ஆண்டுகள் கடந்தாலும் கடக்கும். ஆனாலும் கர்ம பலன் விடாது. அது வந்தே தீரும். பௌதிக உலகத்திலும் அதுதான் சட்டம். ஆத்ம உலகத்திலும் அதுதான் சட்டம். துஷ்டனை வதைக்கிறதும் இல்லை. இஷ்டனைப் பரிபாலிக்கின்றதும் இல்லை. காற்று நல்லவனைக் கண்டால் தென்றலாகவும் தீயவனைக் கண்டால் சண்டமாருதமாகவுமா மாறிவிடுகின்றது. இருவரையும் சமமாகவே பாவிக்கின்றது. கடவுளும் அப்படித்தான். அவன் அவன் செய்கின்ற கர்ம பலன்தான் அவன் நன்மையாக அனுபவிப்பதும் தீமையாக அனுபவிப்பதும். ஆகவே காரண காரியத்தையும் கர்மபலனையும் கட்டுப்படுத்தும் சட்டத்தின் மர்மத்தை உணர்ந்துகொண்டால், கடவுளை நிந்திக்கவேண்டியதில்லை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அத்தோடு தீமையானது எங்கோ வெளியிலிருந்து கொண்டுவந்து புகுத்தப்பட்ட தில்லை என்பதும் தெளிவாகி விடுகின்றது. இதை இந்நிலையில் விட்டு விட்டு இதனோடு தொடர்புடைய அடுத்த படிக்குச் செல்வோம்.

இந்தப் பிரபஞ்சத்தினுள் காணப்படுகின்ற பௌதிக சக்தி, ஆத்மிக சக்தி ஆகிய எல்லாமும் ஒரே மூலசக்தியின் வெளியீடுகளாகும். அந்த மூலசக்தியானது நன்மை தீமை ஆகிய எல்லைக் கெல்லாம் அப்பாலுள்ளது என்னும் உண்மைகளை நாம் தெரிந்து கொண்டோமானால், இந்தப் பிரபஞ்சத்தின்கண் நன்மை தீமையாகிய பிரிவினைகளை நாம் காணமாட்டோம். பின்னர் எதனைக் காண்போ மென்றால், அந்த

மூலசக்தியின் தோற்றத்தையே காண்போம். அமுதத்திலும் அதனுடைய தோற்றத்தையே காண்போம். விஷத்தினிடமும் அதனுடைய தோற்றத்தையே காண்போம். தர்க்க சாஸ்திரம் நமக்கு ஒரு உண்மையை உணர்த்துகிறது. காரணத்தின் இயல்பிற்குத் தகுந்தபடியே காரியத்தின் இயல்பும் என்பதுதான் அது தெரிவிக்கும் உண்மை-இந்த நியாயத்தை இன்னும் கொஞ்சம் நீட்டிப்பார்க்க வேண்டும். இந்தப் பிரபஞ்சமாகிய காரியத்திற்குரிய காரணம் யாரென்றால் கடவுள். அவர் நன்மையும் தீமையுங் கடந்தவர் என்றால் அவருடைய காரியமாக விளங்கும் இந்தப் பிரபஞ்சமும் நன்மை தீமையாகிய பாகுபாட்டினைக் கடந்த ஒன்றுதான்.

நம்முடைய இச்சை வெறுப்பாகிய அளவைகளை வைத்துக் கொண்டு இந்தப் பிரபஞ்சத்தின் இயல்பை மதிப்பிடாது, மூலசக்தியின் வெளியீடே இந்தப் பிரபஞ்சம் என்னும் அளவையைத்தழுவி மதிப்பிடுவோமானால், நன்மை தீமை என்ற பாகுபாட்டினையே நாம் காணமாட்டோம். எங்கும் ஒருமை நிர்மையோடு இயங்குகின்ற பிரகிருதி தர்மத்தையே காண்போம். யார்மீதும் பழிசுமத்தும் படியான மனோபாவம் நம்பால் எழாது. நம்முடைய துன்ப மெல்லாம், இப்பிறவியிலோ, அல்லது இதற்கு முந்திய பிறவியிலோ செய்த கர்மத்தின் பலனே என்பதைத் தெரிந்து கொள்வோம்.

கடவுள்பால் நன்மையைக் கற்பிப்பதும் தீமையைக் கற்பிப்பதுமாகிய விபரீதங்க ளெல்லாம் நமது ஞானக் குறைவால் எழும் விபரீதங்களாகும். அவர் நன்மையையும் படைக்க வில்லை. தீமையையும் படைக்கவில்லை. யாருடைய புண்ணியத்தையும் கவர்ந்து கொள்வதில்லை, பாவத்தையும் கவர்ந்துகொள்வதில்லை. நல்லவரைக்

காப்பது மில்லை. தீயோரைக் காய்வது மில்லை. நன்மை அனுபவிப்பதும் தீமை அனுபவிப்பதும், எல்லாம், கர்ம பலன். கடவுள் நன்மை தீமையாகிய எல்லைகளைக் கடந்தவர். பூரணர். அவருடைய பூரணத்வத்தின் மகிமையை உணர்ந்து, அவரோடு மருவ முற்பட்டுவிட்டால், நன்மையும் இல்லை, தீமையும் இல்லை, ஒரே ஆனந்தமே நமக்கு.

இவ்வாறு போகின்றது சில வேதாந்திகளினுடைய கொள்கை. இதுதான் தெள்ளத் தெளிந்த முடிவு என்று திட்டவட்டமாக வரையறுத்துச் சொல்ல முடியாதபடி அத்தனை சிக்கலுடையது இந்த விஷயம். ஆதியிலிருந்து இதுவரை எழுதிவந்த அத்தனையும், இந்தப் பிரசினையைத் தீர்க்க எழுதிய விளக்க மில்லை, ஆனால் தீர்க்க முடியாது என்று காட்டும் இயலாமையின் விரிவுரை.

கம்பர் காட்டும் மதம்

மத சம்பந்தமாகச் சொல்லப் புகுவது, கொஞ்சம் இல்லை, மிகுந்த சிரமமான காரியம். ஏனென்றால் உண்மை அளவில் தர்க்கம் ஒன்றும் இல்லை. அபிமானிக்கின்ற அளவில் ஏக தகராறு. குறிப்பிட்ட மதங்கள் இத்தனை யென்று கணக்கெடுத்துச் சொல்வதற்கில்லை. ஒன்று இரண்டு என்றிருந்தால் ஏதோ கணக்கிட்டுச் சொல்லலாம். ஒவ்வொருவனுக்குமே ஒவ்வொரு மதம் உண்டு. அப்படியானால் எப்படிக் கணக்கெடுப்பது? ஆகையினாலேதான் ஒரு பெரியவர் மதத்திற்கு இலக்கணம் சொல்லப் புகுந்த காலத்தில், மதம் என்பது தன்னைப் பற்றியும், இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும், அதனுள் தனக்குரிய ஸ்தானம் யாது என்பதைப் பற்றியும் கொள்ளும் மனப்பான்மையே ஆகும் என்று தெளிவாகச் சொல்லி விட்டார்.

அது ஒருபுறம் இருக்க இனி கம்பருடைய மதக் கொள்கையை ஆராய்வோம். கம்பருடைய காவியத் தலைவனாகிய இராமன் மானுட வடிவு தாங்கியே காவியப் பரப்பு முழுவதிலும் உலவுகின்றான். என்றாலும், அவன் கடவுள் அவதாரம். பரம்பொருள். ஆகவே தெய்வ நிச்சயத்தைப் பற்றிய தத்துவங்கள், தெய்வ அம்சங்களைப் பற்றிய தத்துவங்கள், இன்னும் ஜீவாத்மா பரமாத்மா ஆகிய இவை பற்றிய தத்துவங்கள் எல்லாவற்றையும், வேண்டும் வேண்டும் இடங்களில் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் கம்பருக்கு ஏற்படுகின்றது. அவருடைய மதக்கொள்கை எதுவாகத்தான்

இருக்கமுடியும் என்பதை அறுதியிட முனையுங் காலத்து, காவியத்தினுள் அவருடைய கூற்றுகப் பரிமளிக்கும் வாசகங்களைக் கொண்டுதான் நாம் நிச்சயம் செய்ய வேண்டும். இங்கு 'அவருடைய கூற்றுகப் பரிமளிக்கும் வாசகங்கள்' என்று வரும் தொடரை விரிந்த முறையில் பொருள் செய்துகொள்ள வேண்டும்.

ஆராய்ச்சியாளர்கள் கம்பருக்குப் பல பட்டங்களைச் சூட்டுகின்றார்கள். ஒரு சாரார் அவரை வைஷ்ணவர் என்று அழைக்கின்றனர். சிலர் அவர் சைவரே என்று சாதிக்கின்றனர். இன்னும் சிலர் அத்வைதி என்றும் விசிஷ்டாத்வைதி என்றும் சொல்லி வருகின்றனர். எவர் கூற்று உண்மை? அவரவர் கூற்றுக்கு மட்டிலுமே ஆதாரம் இருக்கின்றதா அல்லது வேறு அபிப்பிராயம் கொள்வதற்கும் ஆதாரம் இருக்கின்றதா? எல்லாம் கம்பருடைய நூலுக்குள் புகுந்தால் வெட்ட வெளியாகிவிடும்.

கம்பருடைய காவியத்தினுள்ளே புகுந்து விருப்பு வெறுப்பு அற்ற முறையில் ஆராய்ச்சி செய்யும்போது ஒரு உண்மை தெளிவாகப் புலப்படுகின்றது. கம்பர் பொது நோக்குடையவர் என்பதே அந்த உண்மை. ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும்.

விஷ்ணுமூர்த்திக்கு ஏற்றம் சொல்லியிருக்கின்றார். உண்மைதான். ஏனென்றால் காவியத்தின் தலைவன் விஷ்ணுவின் அவதாரமே. என்றாலும் சிவஸ்துதிகளும் இருக்கின்றன. சிவமூர்த்தியை ஒரு சில இடங்களில் தாழ்த்திச் சொல்கின்றாரே யென்றால், விஷ்ணுமூர்த்தியையும் ஒரு சில இடங்களில் தாழ்த்திச் சொல்கின்றார். ஆகவே இப்பொழுது ஒரு முடிவு கட்டலாம். கம்பர்

எந்த மூர்த்தியின்பாலும் துவேஷம் பாராட்டவில்லை என்பதே நாம் கொள்ளும் முடிவு.

இன்னும் வேதங்களில் கூறப்படும் கொள்கைகளையும் தத்துவங்களையும் வாரிக் கொட்டுகின்றார். திரிமூர்த்திகளைப் பற்றிய உண்மைகளை உணர்த்தி அவர்களுக்கு அற்புதமான பாஷையில் துதி பாடுகின்றார். போதாக்குறைக்கு அவன் பெரியவன் இவன் பெரியவன் என்று வாதாடுகின்ற பொருளற்ற விவாதத்தை நிந்தனை செய்கின்றார். எனவே அவர் மூர்த்திகளின் மீது துவேஷம் பாராட்டுகின்றாரில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

கடவுள் ஒப்பற்ற பரம்பொருள். அப் பரம்பொருளின் அம்சங்களே திரிமூர்த்திகளும். பிரபஞ்ச இயக்கத்திற்குரிய முத்தொழில்களையும் நடத்துவதால் மும்மூர்த்திகளாகக் கொள்ளப்படுகின்றனர். அவரவர்களுடைய கிரியைகளுக்கு ஏற்ப அவர்களுக்கு நிறங்களும் குணங்களும் உண்டு. எந்த மூர்த்தியினிடமும் துவேஷம் காட்டினால், அவ்வாறு காட்டப்படும் துவேஷமானது அந்த மூர்த்தியை அடைவதோடு, அதே மூர்த்தியின் ஆதியான பரம்பொருளையும் சென்று அடையும். நாம நபங்களில் ஈடுபாடு கொள்வது ஓளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதானாலும், ஈடுபட்டு மயங்கி உண்மை நிலையை விட்டு ஒதுங்குவது வருந்தத்தக்கதாகும். நாம நபங்களின் எல்லைகளையெல்லாம் தாண்டி நிற்பவர்களுக்கு எவ்விதமான துவேஷத்திலும் உடன்பாடு கிடையாது. அவ்வாறு நிற்பதே பெருந்தன்மையாகும்.

இதுவரை மேலே குறிப்பிட்டு வந்த கொள்கைகளே மகான் கம்பருடைய கொள்கைகள் என்ற உண்மை நன்றாகப் புலனாகின்றது.

(1) "யாரினும் உயர்ந்த மூலத்(து) ஒருவராம் இருவர்"

(2) "செங்கண்மால் நான்முகன் சிவனென் றேகொலாம்
எங்கள் நாயகனையும் நினைத்தது"

(3) "அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன்
என்றுரைக்கும் அறிவில்லோர்க்குப்
பரகதி சென்(று) அடைவரிய பரிசே போல்"

என்று வரும் அடிகளே தக்க சான்று.

இனி ஒரு சில பெரியார்களுடைய அபிப்பிராயங் கூட மட்டிலும் இலேசாகச் சுட்டிக்காட்டிவிட்டு முடிவுக்கு வந்துவிடுவோம்.

கம்ப ராமாயண சர்ரத்தின் ஆசிரியரும் முதுபெரும் புலவரும் ஆகிய ராவ்சாஹெப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களுடைய அபிப்பிராயம் பின் வருமாறு:

"ஓர் ஏனந் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத் தொருவன்"

எனச் சிவனை விட்டுணுவினும் உயர்த்தியும்,

"கடவுட் கங்கை நீர் முடிந்தான் இரவொழித்த நீ"

என விட்டுணுவைச் சிவனிலும் உயர்த்தியும் அவ்வச் சமயத்துக்கு ஏற்றவாறு இருபெருங் கடவுளில் ஒருவரை ஏற்றமாகப் பல இடங்களில் கூறும் வில்லிபுத் தூரார் பாரதம் போலக் கம்பராமாயணமும் சைவ வைணவ பாரபட்சமில்லாத இதிகாசம் என்பது அதனை முற்றப் படிப்போர்க்குத் தெற்றெனப் புலப்படும். "ஆதியந்தம் அரி" என்னும் பாட்டில் கம்பர் விட்டுணுவை உயர்த்திக் கூறியவாறே, தாடகைப் படலம் 3-ம் பாட்டில் சிவன் யாகிருந்த காமனைச்ரம வருணனையில்,

"பற்(று) அவா வோரொடும் பசைஅறப் பிறவிபோய்
முற்றவால் உணர்வுமேல் முடுகினர் அறிவுசென் (று)
உற்றவானவன்"

எனச் சிவனே மேம்படுத்திக் கூறியுள்ளார். இவ்வாறு விட்டுணுவை ஓரிடத்தும் சிவனே ஓரிடத்தும் சிறப்பித்துக் கூறியவர் சிவவிட்டுணுக்களைப் பற்றிப் பொதுப்படக் கூற நேர்ந்த சமயங்களில்,

"யாரினும் உயர்ந்த மூலத்(து) ஒருவாரம் இருவர்"

என்று இருவரையும் சமமாகக் கூறுவர்.

மேற்கூறிப் போந்ததனால், கம்பர் சைவ வைணவ சமயங்களை ஏற்றத்தாழ்வில்லாத இரண்டு கண்களைப்போலக் கருதினரென்னலாம்.'

இனி நாம் பார்க்கப் போவது ஸ்ரீமான் செல்வக் கேசவராய முதலியார் அவர்களுடைய அபிப்பிராய மாகும். அது பின்வருமாறு :

"கம்பர் சைவரோ வைஷ்ணவரோ என்பதைத் துணிகின்றதில் இருதலைக் கொள்ளியிடை எறும்புபோல இடர்ப்பட வேண்டுவதா யிருக்கின்றது. கம்பர் பிள்ளையின் பெயர் அம்பிகாபதி என்பது உலகப் பிரஸித்தம். ஏரெழுபதில் விநாயக வணக்கம் வைத்திருக்கின்றது. இராமாயணத்தில் சிவபெருமானைக் குறிக்கின்ற இடங்கள் பெருமையாகவே குறித்திருக்கின்றன.

..... கடிமணப்படலத்தில்

1. "என்று நான்முகன் முதல் யாரும் யாவையும்
நின்றபேர் இருளினை நீக்கி நீள்நெறி
சென்று மீளாக்குறி சேரச் சேர்த்திடு
தன்திரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே"

என்றும், பரதன் சூள் செய்கின்ற இடத்தில்,

2. "தழைத்த தண் துளவினேன் தலைவன் அல்லனென்
றழைத்தவன்"

என்றும், விராதன் துதியில்,

3. "மழு வாளிக் கன்றளித்த
ஐயத்தால் சிறிதையம் தவிர்ந்தாரும் உளர்ஐயா"

என்றும், சரபங்கர் பிறப்புநீங்கு படலத்தில், இராமனை இந்திரன் துதிசெய்வதில்,

"எல்லே வலயங்கள் நின்னுழை யென்(று) அந்நாள்
எரியோனைத் தீண்டி எழுவர் என நின்ற
தொல்லை முதல்முனிவர் சூளுற்றபோதே
தொலைநின்ற ஐயம் துடைத்திலையோ எந்தாய்"

என்றும், கவந்தப் படலத்தில்,

"மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமே" என்றும்,

இன்னும் பல இடங்களிலும் விஷ்ணுவுக்குப் பரத்வம் கற்பித்திருக்கின்றார். இங்கே எடுத்துக் காட்டப்பட்ட எல்லாம் சைவருக்கு நிஷ்டூரம் உண்டாகாமல் கம்பர் வேண்டுமானால் தாமே தவிர்த்திருக்கக் கூடிய பாகங்கள் அன்றோ? நாலாயிரப் பிரபந்த வியாக்யானங்கள் கம்பருடைய பிரயோகங்களில் சில எடுத்துக் காட்டியிருக்கின்றன. கம்பர் இராமாயணம் பாடு முன்னர் சைவராயிருந்தவர் பின் வைணவராயினர் எனச் சில தமிழ் வித்வாமிசர்கள் கூறுகின்றனர். ஆயினும், ஸ்ரீரங்கத்திலே கம்பர் கட்டுவித்த மண்டபத்திலே சக்ரவர்த்திக்குரிய ஆடம்பரங்களுடனே கம்பரைப்போல் சிலர் விக்கிரகம் இயற்றி வைத்திருப்பதனால், இராமாயணத்தைக்

"கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றினனே"

என்பதாலும், ஸ்ரீமத் நாதமுனிகள் முதலியோரால் கவிச்சக்ரவர்த்திப் பட்டம் அளிக்கப் பட்டா ரென்பதா

உம் உண்மையாவது மன்றி இவர் வைணவர் என்பதை வற்புறுத்துகின்றன. எப்படியும் மேற் காட்டினவற்றல் கம்பர் வைணவராகவே இறந்து விட்டனர் என்பது தேற்றமேயாம் இவர் நாட்டரசன் கோட்டையில் வைணவ சம்பிரதாயப் படி சமாதி செய்யப்பட்டிருக்கின்றனர்; இதனை இன்றுங் காணலாம்.''

இன்னும் தமிழ்ப் பேரறிஞராகிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்களது அபிப்பிராயத்தையும் பார்ப்போம். அது பின்வருமாறு :

''இராமயாணம் பாடிய ஒன்றினைக் கொண்டு இவரை வைஷ்ணவ மதத்தினர் என்று சொல்வதற்கு இடமில்லை. மதச் சார்பெல்லாம் இக்காலத்திலேயன்றி முற்காலத்தில் இல்லை என்பது நிச்சயம். அதனைச் சங்கத்தார் காலம் முதல் நன்றாக அறியலாம். அப்படியே இவரும் இருந்தாரெனத் தெரிகின்றது.....இராமாயணத்தில் சிற்சில இடங்களில் சிவதூஷண முடைய பாடல்கள் உளவே என்னில், கவிஞர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட கதாநாயகனைச் சிறப்பித்து மற்றை யோரைத் தாழ்த்திக் கூறுவது வழக்காதலால், அங்ஙனமே இவரும் கூறியிருக்கலாம்; அன்றிப் பிற்காலத்தில் மதப்பற்றுடைய சிலர் சில பாடல்களை அப்படியே பாடி இடையில் செருகியு மிருக்கலாம்; இதனல் இவர் வைஷ்ணவரென்று சொல்வதற்கிட மில்லை.''

இனி முடிவை நாடிச்செல்வோம். கம்ப ராமாயணத்தில் பல இடங்களில் விஷ்ணுவுக்குப் பரத்வம் கூறப்படுகின்றது. உண்மைதான். ஆனல் ஒன்றை மனதில் நன்றாக இருத்திக் கொள்ளவேண்டும். விஷ்ணுவின்

அவதாரமாகிய இராமனே கதாநாயகனாக விளங்குவதால் அவனுக்கு ஏற்றங்கூறிப்போவது இயற்கை.

திரு அவதாரப் படலத்தில் தெய்வசபை கூட்டப் பெற்று அதன்கண் சிவன், பிரம்மா இன்னும் ஏனைய தேவர்கள் எல்லோரும் கூடியிருக்கும் போது, சபா நாயகரான திருமால் கருடன் மீது ஊர்ந்தவராக அங்கே வரவும், யாவரும் எழுந்து வணக்கம் செலுத்தினர் என்று சொல்லப்படுகிறது.

(1) "கருமுகில் தாமரைக் காடு பூத்து நீடு(டு)
இருசுடர் இரு புறத்தேந்தி ஏடலர்த்
திருவொடும் பொலிய ஓர் செம் பொற்குன்றின் மேல்
வருவபோல் கலுழன் மேல் வந்து தோன்றினன்"

கலுழன் = கருடன்.

இப்பாடல் திருமாலின் வருகையைக் குறிக்கின்றது. இனிவரும் பாடல் சிவனும் பிரம்மாவும் தேவர்களும் வணக்கம் செய்ததைக் குறிப்பிடுகின்றது.)

(2) "எழுந்தனர் கறைமிடற்(று) இறையும் தாமரைச்
செழுந் தவிசு உகந்த அத்தேவும்; சென்றெதிர்
விழுந்தனர் அடிமிசை விண்ணுளோ ரொடும்;
தொழுந்தொறும் தொழுந்தொறும் களி துளங்குவார்"

தேவர்கள் வணங்கியதை இங்கே எடுத்துகொள்ள வேண்டாம். சிவனும் பிரம்மாவும் திருமாலுக்கு வணக்கம் செய்த செய்தியை மட்டிலும் இங்கே எடுத்துக்கொள்வோம். அடியவர்கள் என்ற காரணத்தினால் வணங்கினர்களா, அல்லது தாங்கள் எல்லோருமே ஏற்றுக்கொண்ட லோகோபகாரமான காரியத்தைத் திருமால் செய்யப் புகுந்ததனாலே, அதை மதித்து அதற்குரிய நாயகன் என்ற முறையில் வணங்கினர்களா என்பதைப் பார்க்க

வேண்டும். சிவனையும் பிரம்மாவையும் அடைமொழி கள் கொடுத்து விலக்குவதன் மூலம் அந்த இரு மூர்த்தி களையும் கம்பர் தாழ்ந்தவர்களாகக் கருத வில்லை யென் பது நன்றாகத் தெரிகிறது. சிலர் இதை ஒப்புக்கொள் ளாது 'கறைமிடற்று இறை' என்ற தொடருக்குப் பதி லாக 'கறையடிக் கிறை' என்ற பாட பேதத்தைக் கூறி இந்திரன் என்பதாகப் பொருள் கொள்ளுவர். அப்படி யாயின் இரணியன் வதைப்படலத்தில்,

"என்றுங்கியம்பி இமையாத வெண் கணனும்
வன்றுன மழுவோனும் யாரும் வணங்கினரால்"

என்று வருதற்கு என்ன சமாதானம் கூறுவது என்று தேர்ன்றும்.

விருத்தாந்த நீதியிலே சொல்லிப் போவதனாலே, சமய சந்தர்ப்ப நீர்மைகளை ஒட்டி, ஏற்றியும் இறக்கியும் சொல்லிப் போகவேண்டியது வந்துதான் தீரும். இவ்வாறுக சமாதானம் கூறிவிடலாமா என்றால் அப்படி யும் கூறுவதற்கில்லை. இன்னும் விருத்தாந்த நீதியாகச் சொல்லும் போதே மேலே காட்டியதற்கு மாறுகச் சொல்லும் இடங்களையும் பார்க்கின்றோம். இராவணனுக் கும் அனுமனுக்கும் வாக்குவாதம் நிகழும் போது, ஸ்ரீராமன் பரம் பொருளின் தோற்றமே என்பதை அனுமன் நன்றாக எடுத்துக் காட்டுகின்றான்.

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத்தாய
காலமும் கணக்கும் மீத்த காரணன், கையில் ஏந்தி
சூலமும் திகிரிசங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொறுப்பும்விட் டயோத்தி வந்
தான்"

என்பதே அனுமனுடைய வாக்கு. இதன் மூலம் ஆதிப் பரம் பொருள் ஒருவரே, அவரே திருமால் சிவன் பிரம்மா

ஆகிய மூர்த்திகளின் வடிவங்களைத் தொழில் பற்றி ஏற்றுக் கொண்டார் என்பது நன்றாகத் தெரிகின்றது.

இப்படி முன்னுக்குப் பின் முரணாக இருப்பதனாலே என்ன முடிவுக்கு வருவது என்பதை இனிப் பார்ப்போம்.

முதல் முதல் பாடுகின்ற கடவுள் வணக்கத்தை எடுத்துக் கொள்வோம். அதை வைத்துக் கொண்டு அவருடைய கொள்கை எதுவாகத்தான் இருக்கும் என்பதை உணரலாம். ஏனென்றால் முற்றிலும் தாமே பொறுப்பாளியாகவும் தமக்கே உரிய வாக்காகவும் கொண்டே அதனை வெளியிடுகின்றார். வரும் வரும் கருத்தெல்லாம் அதை ஒட்டியே இருக்குமானால் அதுவே அவருடைய கோட்பாடு என்பதாக அறுதியிட்டு விடலாம்.

கடவுள் வணக்கத்தை எடுத்துக் கொள்வோம்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே"

கடவுளே முத்தொழிலையும் நடத்துகின்றவர் என்ற பொருள் இதன் மூலம் கிடைக்கின்றது. மேலே அனுமன் வாக்காகச் சொல்லப்பட்ட பாட்டில் இதே பொருளை விரித்துக் கூறுகின்றார். ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு மூர்த்தியுண்டு, முத்தொழில்களையுஞ் செய்கின்ற மும்மூர்த்திகளும் பரம்பொருளின் அம்சங்களே யாவர், அந்தப் பரம்பொருளே இராமனாக அவதரித்து அயோத்திக்கு வந்துள்ளார்என்பது மிகநன்றாகத் தெரிகின்றது. இனி இந்தக் கொள்கைக்கு நல்ல ஆதாரங்கள் கிடைக்கின்றனவா என்று பார்க்கவேண்டும்.

1. "முத்தேவரின் மூல முதற் பொருளாம்
அத்தேவர் இம் மானிடராதலினல்
எத் தேவ ரொடெண்ணுவது"

(ஆ. கா. சடாயுவதை)

2. "மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ"

(கவந்)

3. "சிவனே அல்லன் நான் முகன் அல்லன் திருமாலாம்
அவனே அல்லன் மெய்வரம் எல்லாம் அடுகின்றுன்
தவனே என்னில் செய்து முடிக்குந் தரன் அல்லன்
இவனே தான் அவ்வேத முதற் காரணன் என்றுன்"

(இராவணன் வதை)

சரபங்கர் பிறப்பு நீங்கு படலத்தில் இந்திரன் துதி பாகவரும் ஒரு சில பாடல்களைப் பார்ப்போம்.

1. "தோய்ந்தும் பொரு ளனைத்தும் தோயாது நின்ற
சுடரே, தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி
நீந்த அரிய நெடுங்க ருணைக் கெல்லாம்
நிலையமே, வேதநெறி முறையினேடி
ஆய்ந்த உணர்வின் உணர்வே, பகையால்
அலைப்புண்டு அடியேம் அடிபோற்ற அந்நாள்
ஈந்தவரம் உதவ எய்தினையே, எந்தாய்,
இருநிலத் தவோநின் இணையடித் தாமரைதாம்."

2. "ஒன்றுகி மூலத்து, உருவம் பலவாகி,
உணர்வும் உயிரும் பிறிதாகி, ஊழி
சென்(று) ஆசறுங் காலத்(து) அந்நிலையதாகி,
நிறத்துலகம் தானுகி, செஞ்சுவே நின்ற
நன்முய ஞானத் தனிக் கொழுந்தே, நங்கள்
நவை தீர்க்கும் நாயகமே, நல்வினையே நோக்கி
நின்றுரைக் காத்தி, அயற்பேரைக் காய்தி,
நிலையில்லாத் தீவினையும் நீ தந்த தன்றே".

மேற்கூறிய இரண்டு பாடல்களும் இராமனுடைய பரம்பொருள் மேம்பாட்டை இனிதாக விளக்குகின்றன.

இன்னும் பிரம்மாத்திரப் படலத்தில் தேவர் துதியாக வரும் பாடல் ஒன்றை நாம் கவனிப்போம்.

"அண்டம் பலவும், அனைத்துயிரும்
அகத்தும் புறத்தும் உளவாக்கி,
உண்டும் உமிழ்ந்தும் அளந்திடந்தும்
உள்ளும் புறத்தும் உளையாகிக்,
கொண்டு சிலம்பி தன் வாயில்
கூர்நூல் இயையக் கூடியற்றி
பண்டும் இன்றும் அமைக் கின்ற
படியை ஒருவாய் பரமேட்டி"

(சிலம்பியானது தனது வாயினாலேயே நூல் சமைத்துக் கூடு கட்டுகின்றது. அப்பாலே அந்த நூலை மீண்டும் வாயாலேயே இழுத்துக் கொண்டு மறைத்து விடுகின்றது. பரம்பொருளே யும் அப்படித்தான்)

இந்தப் பாடலும் ஸ்ரீராமனின் பரம்பொருள் மேம் பாட்டையே வற்புறுத்துகின்றது.

இன்னும் பிரமனும் சிவனும் எவ்வாறு துதிக்கின் றார்கள் என்பதைப் பார்ப்போம்:

பிரமன் கூறுகின்றன்:

"என் உருக்கொடு (இ)வ்வுலகினை ஈனுதி, இடையே
உன் உருக்கொடு புரந்துநின் றேம்புதி, உமையோன்
தன் உருக்கொடு துடைத்தி,மற் றிதுதனி அருக்கன்
முன் உருக்கொடு பகல்செயுந் தரத்தது முதலோய்"

(மீட்சிப் படலம்)

சிவன் கூறுகின்றான் :—

"என்னு மாத்திரத்(து) ஏறமர் கடவுளும் இசைத்தான்,
உன்னீ நீ யொன்றும் உணர்ந்திலை போலுமால் உரவோய்,
முன்னீ ஆகியாம் மூர்த்தி நீ, மூவகைக் உலகின்
அன்னீ சீதையாம் மாது நின் மார்பின்வந் தமைந்தாள்."

இன்னும் இப்பாடலை அடுத்து வருகின்ற பாடலில் ஒரு அடி காணப்படுகின்றது. அது நம்மைத் திகைக்க வைக்கலாம். ஆனாலும் அதையும் பாரபக்ஷமற்ற முறையோடுதான் பார்க்கவேண்டும். "ஜானகி உன்னால் நீக்கப்படுந் தன்மையள் அல்லள். அவள் லோகமாதா. அவள் தவறிழைத்தால் உலகமே உருவழிந்து விடும். ஆகையால் அவளை இகழாமல் ஏற்றுக்கொள்" என்று சிவன் உபதேசிக்கின்றான். அப்பாடல் பின்வருமாறு:

"துறக்குந் தன்மையள் அல்லளால்; தொல்லை எவ்வுலகும்
பிறக்கும் பொன்வயிற் றன்னை, இப்பெய்வளை பிழைக்கின்,
இறக்கும் பல்லுயிர்; இராம நீ, இவள் திறத்(து) இகழ்ச்சி
மறக்குந் தன்மைய(து) என்றனன் வரதற்கும் வரதன்"

'வரதற்கும் வரதன்' என்பது பாட்டு நிற்கும் நிலையில் இவனையே குறிப்பதாகத் தெரிகின்றது. வேண்டுமென்றே சிவனை உயர்த்தியும் விஷ்ணுவைத் தாழ்த்தியும் பாட்டு எழுதுகின்றாரா கம்பர் என்றால், அப்படிக் கொள்வதைக் காட்டிலும் கேவலமான முறையில் கம்பருடைய இதய நிலத்திற்கு அவமரியாதை செய்யமுடியாது. அவரோ பொது நோக்குடையவர். காவியப் போக்கினிலே கட்டங்களின் நீர்மைக்கு ஏற்ப எந்த எந்த இடங்களில் எந்த எந்த மூர்த்திக்கு ஏற்றம் கொடுக்க வேண்டுமோ அந்த அந்த இடங்களில் அவ்வாறே கொடுத்துப் போகின்றார். உள்ளத்தில் இருக்கின்றதை

என்றால் இல்லை. பின்னர் உரையில் காண்பது எதனால் என்றால் காவிய அவசியத்தினால்.

விஷ்ணுவுக்கு ஏற்றங் கூறிவந்த கம்பர் சிவனுக்கும் ஏற்றங் கூறுமல் போகவில்லை.

கைகேசி சூழ்வினைப் படலத்தில் வருகின்ற ஒரு செய்யுளைப் பார்ப்போம். பொழுது விடிகின்றது. சூரிய உதயத்தினால் தாமரை மலர்கின்றது. மலரின் மலர்ச்சி எவ்வாறிருந்த தென்றால் பின்வருமாறு :

மூவரர்கி, அம்மூவர்க்கும் ஆதி முதலாகி, இன்னும் அண்ட சராசரங்கள் அனைத்துமாகி விளங்குகின்ற தேவன் சிவன். அவனுடைய தனுசை ஒடித்த இராமன் இன்று பட்டம் சூடப்போகின்றான் என்ற மகிழ்ச்சியை முகம் எங்களும் தேக்கியிருக்கின்றார்கள் பெண்கள். தாமரையின் மலர்ச்சி அப் பெண்களுடைய முக மலர்ச்சி போன்றே காணப்பட்டதாம்.

"மூவராய், முதலாகி, மூலமதாகி ஞாலமும் ஆகியத்
தேவ தேவர் பிடித்த போர் வில் ஒடித்த சேவகர் சேணிலம்
காவல் மாமுடி சூடுபேரெழில் காணலாம் எனும் ஆசைகூர்
பாவையார் முகம் என்ன முன்னம் மலர்ந்த பங்கய ராசியே"

இந்தச் செய்யுளில் மிக நன்றாகவே சிவனுக்கு ஏற்றம் கூறப்படுகின்றது.

இவ்வாறாகப் பல பாடல்களையும் கொண்டு ஆராயும் போது, மூர்த்தி விரோதம் பாராட்டாதவர் கம்பர் என்ற கொள்கை நன்றாக ஸ்தாபிக்கப்படுவதை நாம் காணலாம்.

கம்பர் கல்வியில் பெரியவர். மகா மேதாவி. நாம் உணர்வதைவிட எத்தனையோ மடங்கு மேலாக உணரக் கூடிய பேராற்றல் வாய்ந்தவர். பொது நோக்கானது சமய விரோதமாகாது, இன்னும் மேலானது, மற்றும் வேண்டுவதும் அதுவே என்ற உண்மை நமக்கே படுமானால், மகாஞகிய கம்பருக்கும் படாமலா போகும். இந்தக் கொள்கையை யாரும் வலிந்து திரட்டுவதற்கு இடமில்லாதபடி எத்தனையோ இடங்களில் தமது இதயத்தையே விரித்து விரித்துக் காட்டுகின்றார். காணும் கண்ணோடு காண்பார்க்கு உண்மை விளங்கும்.